
முத்துலட்சுமி ராகவன்
எங்கிருந்தோ ஆசைகள்...
பாகம் - 6

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# எங்கிருந்தோ ஆசைகள்...

பாகம் - 6

**லட்சுமி பாலாஜி பதிப்பகம்**

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி. நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் : bchandar24@yahoo.com

website : www.muthulakshmiraghavan.com

**முத்துலட்சுமி ராகவன் எழுதிய**

**எங்கிருந்தோ ஆசைகள்...** *பாகம் - 6*

உரிமை : **ஆசிரியருக்கு**

| | | |
|---|---|---|
| பொருள் | : | நாவல் |
| மொழி | : | தமிழ் |
| முதல் பதிப்பு | : | டிசம்பர் 2013 |
| வெளியீடு | : | **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி. நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |
| நூலின் அளவு | : | 1x8 கிரவுன் |
| தாள் | : | 11.6 kg புக் பிரிண்ட் |
| அச்சு எழுத்து | : | 11 புள்ளி |
| மொத்தப்பக்கங்கள் | : | 400 |

**விலை : ₹ 200/-**

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **பாரதி அச்சகம்,** சென்னை–6

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது.... இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்...

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ... திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்...

இப்படிக்கு
முத்துலட்சுமி ராகவன்

# ஆசிரியர் கடிதம்...

## வசப்பட்ட வானமும்.. வசப்படாத வாழ்க்கையும்..

'வானம் வசப்படும்' என்ற நாவலின் தலைப்பைப் பார்த்து விட்டு என் சிநேகிதி ஒருத்தி சொன்னாள்...

"நீ வானத்தை வசப்படுத்திருவடி.. ஆனா.. வாழ்க்கையைத் தான் உன்னால வசப்படுத்த முடியல.."

உண்மைதான்.. என் கதைகளில் வரும் கதாநாயகிகள் எதையும் ஜெயிக்கும் வல்லமை பெற்றவர்களாக இருப்பார்கள்.. அவர்களை நான்தான் படைக்கிறேன்.. ஆனால் அந்த வல்லமையை எங்கே நான் தொலைத்தேன்..? எனக்குள் இருந்த அந்த வல்லமையை பிடுங்கி எறிந்தவர்கள் யார்.?

'வல்லமை தாராயோ...' என்று அந்த மகாகவி பாரதியே புலம்பித் தவித்திருக்கும் போது.. நான் வல்லமையைத் தேடித் தவிப்பதில் ஆச்சரியம் ஏதுமில்லைதான்...

சின்ன வயதில்.. சின்ன வயதென்றால் மிகவும் சின்ன வயது.. அப்போது என் தாத்தா எனக்கு ஒரு பேப்பருடன் கூடிய மேஜிக் அட்டையை பரிசாக அளித்திருந்தார்.. அந்தப் பேப்பரில் எதை எழுதி.. அதைத் தூக்கினாலும் எழுத்துக்கள் மாயமாக மறைந்து விடும்.. முழு ஆண்டு விடுமுறைக்காக தாத்தாவின் வீட்டுக்குப் போயிருந்த நாள் அது.. அங்கே எங்களைப் போலவே விடுமுறையைக் கழிக்க வந்த உறவினர்களின் குடும்பத்தார்களும் இருந்தார்கள்...

அந்த மேஜிக் அட்டையில் நான் மகிழ்ந்து போயிருந்தேன்.. திரும்பத்திரும்ப அதில் எழுதிப் பார்த்து.. அழித்துப் பார்த்து ஆனந்தம்

கொண்டிருந்தேன்.. தூங்கும் போது அதை என் கையில் இறுக்கிப் பிடித்து அதில் முகம் வைத்து அழுத்தியபடி தூங்கிப் போனேன்.. விழித்து எழுந்த மறுநாள் காலையில் அந்த மேஜிக் அட்டை என்கையணைவில் இல்லை...

உறவினர் வீட்டுச் சிறுவன் ஒருவன் அதிகாலையில் அவன் ஊருக்குக் கிளம்பினபோது என் அட்டையைக் கைப்பற்றிக் கொண்டு போனதாகச் சொன்னார்கள்.. நான் அதிர்ந்து போனேன்.. என் கண்ணீரைக் கண்ட என் தாத்தா வேறு ஒரு அட்டை வாங்கித் தருவதாகக் கூறி என்னைச் சமாதானப் படுத்த முயன்றார்.. என் மனம் சமாதானம் ஆகவில்லை.. என் கைப்பொருள் களவாடப் பட்டதன் துயரத்தின் வலியை இப்போதும் நான் உணர்கிறேன்...

அதற்குப் பின்னால் அது போன்ற மேஜிக் அட்டைகளை நான் விரும்பவே இல்லை.. தாத்தா வாங்கிக் கொடுத்ததை மறுத்து வேறு ஒரு சிறுமிக்கு கொடுக்க வைத்தேன்...

என் பதினாறு வயதுப் பிராயத்திலே.. கண்ணாடி வளையல் களை அணிவதில் எனக்கு ஆர்வம் இருந்தது.. கலர் கலரான கண்ணாடி வளையல்களை வாங்கி நான் சேகரிக்கத் துவங்கினேன்.. எந்தக் கலரில் தாவணி அணிகிறேனோ அதே கலரில் வளையல்களை போட்டுக் கொள்வேன்.. கலகலக்கும் அந்தக் கண்ணாடி வளையல்களில் என் மனமும் கலகலக்கும்...

என் வளையல்களை அடுக்கி வைக்கவென்று ஒரு பெட்டியை வைத்திருந்தேன்.. புத்தகங்களை சுருட்டி.. அதில் வளையல்களை வரிசையாக அடுக்கி.. அவைகளை பெட்டிகளில் நிரப்பி வைத்தேன்.. அடிக்கடி அந்தப் பெட்டியைதிறந்து பார்ப்பேன்.. பெட்டி நிறைய இருக்கும் வளையல்களின் அணிவகுப்பில் என் மனதில் இனம் புரியா மகிழ்வு ஏற்படும்..

ஒரு நாள்.. எங்கள் வீட்டுக்கு உறவினர் குடும்பம் ஒன்று வந்தது.. அந்தக் குடும்பத்தில் என் வயதையொட்டிய வயதுப் பெண் ஒருத்தி இருந்தாள்.. என் வளையல் பெட்டியை பொறாமையுடன் பார்த்தாள்...

அப்புறம் என்ன..? அதே இரவு.. அதே அதிகாலைப் பயணம்.. தூங்கி எழுந்த நான் என் வளையல் பெட்டியைக் காணாமல் தேடிய போது அந்தப் பெண் அதை எடுத்துச் சென்று விட்டதாக என் வீட்டில் கூறினார்கள்...

பறிகொடுத்த அதிர்வு மீண்டும் என் மனதில் வந்தது.. திரும்பவும் அதே போல வளையல்களை வாங்கிச் சேகரித்துக் கொள்ளலாம் என்று என் வீட்டில் சமாதானம் சொன்னார்கள்.. என் மனதின் அதிர்வை அவர்கள் உணர்ந்து கொள்ளவே இல்லை...

அதற்குப் பின்னால் நான் கண்ணாடி வளையல்களை என் கைகளில் அணிவதை விட்டு விட்டேன்.. இன்றும் என் கைகளை ஒற்றை வளையல்தான் அலங்கரிக்கின்றது.. கை நிறைய கண்ணாடி வளையல்களைப் போட்டுக் குலுக்கி மகிழ்ந்த அந்த தாவணிப் பருவத்தை நினைத்துப் பார்க்கும் போது.. என்னைக் கேட்காமல் என்னிடமிருந்து அதை அபகரித்துக் கொண்டு போன அந்த தினமே நினைவுக்கு வருகிறது...

இவையெல்லாம் சின்ன நிகழ்வுகள்தான்.. ஆனால் மனதைக் கிள்ளும் நிகழ்வுகள்.. இதைத் தட்டி விட்டுப் போக என்னால் முடியவில்லை.. என் மனதில் ஆழத்தில் அழுந்தப் பதிந்து கிடக்கும் சம்பவங்கள் இவை...

அதற்குப் பின்னால் எந்தப் பொருளின் மீதும் பற்று வைக்க நான் பயந்தேன்.. என் பயத்தை மெய்ப்பிப்பதைப் போல நான் பாசம் வைக்கும் சிநேகிதிகள் என்னை விட்டுப் பிரிந்து சென்று விடுவார்கள்..

இவ்வளவு ஏன்..? நான் வெகுவாக விரும்பி வேலைசெய்த அலுவலகக் கிளைகளில் என்னால் பணி புரிய முடியாமல் போய் விடும்.. எந்தக் கிளை வேண்டாமென்று நினைப்பேனோ.. அதில் பணிபுரிய வேண்டிய இக்கட்டு ஏற்பட்டுவிடும்..

இந்த என் மன வேதனைகளையே 'என்னவென்று நான் சொல்ல..?' மாலினியின் மனபயமாக நான் சித்தரித்தேன்.. இன்றும் யாரிடமும் அதிகத் தோழமை கொள்ள நான் பயப்படுகிறேன்.. அதிகப் பிரியம் வைத்தால் அவர்களை பிரிய நேரிடும் என்பது இந்த வாழ்க்கை எனக்குக் கற்று தந்த பாடம்...

யாரிடமாவது எனக்கு துவேசம் இருந்தால்... அவர்களை விட்டு விலகி விடுவேன்.. அவர்களின் நிழலைக்கூடத் திரும்பிப் பார்க்க மாட்டேன்.. ஆனால்.. என் மேல் துவேசம் கொண்டவர்கள்.. எனக்குப் பின்னால் குழி பறித்துக் கொண்டே.. என் கதைகளின் அத்தனை நிகழ்வுகளையும் அவர்களின் சொந்தம் போலக் கையாள்வது ஆச்சரியத்தைத் தருகிறது...

நமது சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த் அவர்களின் ஸ்டைலைப் பற்றிக் கேள்வி கேட்டபோது அவர் அதை வடநாட்டு நடிகர் சத்ருக்கன் சின்ஹாவைப் பார்த்து அதைப் போல செய்து காட்டியதாகச் சொன்னார்...

'முள்ளும்.. மலரும்..' திரைப்படத்தை எடுத்த மகேந்திரன் அவர்கள்.. அந்தக் கதையை ஒரு நாவலில் இருந்து உருவாக்கியதாக வெளிப்படையாக தெரிவித்தார்.. இந்த நாவலின் கதையை இந்த வரிகள் வரை எடுத்துக் கொண்டு.. அதற்குப் பின்னால் வந்த வரிகளில் என் கற்பனையை சேர்த்து படமாக்கினேன் என்று அவர் சொன்னார்...

அவர்கள் பெரிய மனிதர்கள்..!

என் கதைகளைத் தழுவி வேறு சில படைப்புகள் உருவான போது நான் அவர்களிடம் பணம் கேட்கவில்லை.. அந்தப் படைப்பின் மூலகதை இன்னாருடையது என்று என் பெயரை உலகுக்குத் தெரியப் படுத்துங்கள் என்று மட்டுமே சொன்னேன்...

ஒரு படைப்பை உருவாக்குகிறவர்களுக்குத் தெரியும் அதன் வலியும்.. வேதனையும்.. சிற்பத்தை செதுக்கும் சிற்பியின் வேலையைப் போன்றது ஒரு படைப்பாளியின் வேலை...

பேசிப் பிரயோஜனமில்லை.. தூங்குகிறவர்களை தட்டி எழுப்பலாம்.. தூங்குவதைப் போல நடிக்கிறவர்களை தட்டி எழுப்ப முடியாது.. இந்த நான்கு வருடங்களில் என் கதைகள் வெளி வந்த பின்னால்.. அவர்களின் படைப்புக்கள் என் கதைகளின் யுக்திகளையும்.. வசனங்களையும் மையமாகக் கொண்டே வர ஆரம்பித்திருக்கின்றன..

இது வரலாறாலும், அவர்களாளும் மறுக்க முடியாத உண்மை..!

இதற்கு அவர்கள் எனக்கு கொடுக்கும் வெகுமதிகளில் மனம் நெகிழ்ந்திருக்கிறேன்.. அவர்கள் என் முன் படைக்கும் குரு தட்சணைகளில் பிரமித்துப் போயிருக்கிறேன்.. என்ன ஒரு மரியாதை..! என்ன ஒரு மனித நேயம்..!

ஆஹா..! மனிதர்கள் என்றால் இவர்கள் அல்லவா மனிதர்கள்..!

நன்றாக இருக்கட்டும்...!

– நட்புடன் –

**முத்துலட்சுமி ராகவன்**

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
website : www.muthulakshmiraghavan.com

# முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# 'எங்கிருந்தோ ஆசைகள்'

*பாகம் - 6*

**179**

*மண்ணின் மலர் வாசனையை...*

*நீயறிய ஆசைகொண்டேன்...*

**அ**திகாலையின் வெளிச்சம் அடிவானில் பரவ ஆரம்பித்திருந்தது.. ஜன்னலின் கண்ணாடியில் சாய்ந்திருந்த காவ்யா முகம் விலக்கி விலகி அமர்ந்தாள்.. எதிர் சீட்டில் அமர்ந்திருந்த கண்ணதாசன் அவளைப் பார்த்து புன்னகை செய்தான்.. அவனது கூர்மையான பார்வை தங்கையின் முகத்தின் மீது படிந்தது...

காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டு எழுந்து முகம் கழுவப் போனாள்.. சீரான வேகத்துடன் ரயில் ஓடிக் கொண்டிருந்ததை கதவின் அருகே நின்று கவனித்தாள்.. அவள் முகம் கழுவி விட்டுத் திரும்பி வந்தபோது கண்ணதாசன் காப்பியுடன் அவளுக்காக காத்திருந்தான்.. அவள் எழுந்து முகம் கழுவ அந்தப் பக்கம் போனதும் இந்தப் பக்கம் ரயில்வே சிப்பந்தியை அழைத்து காபி கொண்டு வரச் சொல்லியிருக்கிறான் என்ற நினைவில் அவள் மனம் நெகிழ்ந்தது...

முகம் துடைத்துக் கொள்ளத் துவாலையைத் தேடி அவள் பையைத் தொட முனைந்த போது..

“இந்தாப்பா..” என்று தயாராக வைத்திருந்த சிறிய துவாலையை அவன் நீட்டினான்..

“ஏண்ணே.. நான் வந்து எடுத்துக்க மாட்டேனா..?” சங்கடத்துடன் அவள் அதை வாங்கிக் கொண்டாள்...

“எனக்காக எடுத்தேன்ப்பா.. கூடவே உன்னோட துண்டையும் சேர்த்து எடுத்து வைச்சுக்கிட்டேன்.. இது ஒரு சிரமமாப்பா..?” கண்ணதாசன் இதமாக பேசினான்..

இவனுக்கு எதுவும் சிரமமில்லையென்று அவள் நினைத்துக் கொண்டாள்...

அவளுக்காக செய்யும் எந்தக் காரியத்தையும் அவன் சிரமமாக எடுத்துக் கொள்ளவே மாட்டான்... அவள் கேட்டவுடன் பிறந்த ஊரை விட்டுவிட்டு திருநெல்வேலிக்கு மாறுதல் வாங்கியதும் அவனுக்குச் சிரமமில்லை.. திரும்பவும் மதுரைக்கே போய் விடலா மென்றதும் மதுரைக்கு திரும்புகிறானே.. இதிலும் அவனுக்குச் சிரமமில்லை.. இவை அனைத்தையும் புன்னகையுடன் அவளுக்காக அவள் அண்ணன் செய்கின்றான்..

காவ்யாவின் கண்கள் கலங்கின.. அதை அண்ணன் பார்த்து விடாமலிருக்கும் பொருட்டு அவள் சாமான்களை சரிபார்ப்பதைப் போல தலையைக் குனிந்து கொண்டாள்..

“ராத்திரி பூரா ஜன்னல் கண்ணாடியில சாய்ந்துக் கிட்டே வந்தியா காவ்யா..?” கண்ணதாசன் வினவினான்...

அவளுக்குத் தெரியும்.. அவனும் தூங்கியிருக்க மாட்டான் என்பது.. தன் மனச்சுமையை அண்ணனின் மனதிலும் ஏற்றுகிறோமே என்ற கழிவிரக்கம் மேலோங்க..

“வேடிக்கை பார்த்தேன்.. அப்படியே தூங்கிட்டேன் போல..” என்று முணுமுணுத்தாள் காவ்யா...

“தூங்கினியா..? நல்லாச் சொன்ன போ.. நான் எழுந்து பார்த்தப்பல்லாம் நீ கண்ணை விரிச்சுக்கிட்டு இருட்டுக்குள்ளே எதையோ துழாவிக்கிட்டு இருந்த..” வேடிக்கையைப் போல பேசினான் கண்ணதாசன்..

காவ்யா மீண்டும் உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. இருளுக்குள் எதை அவள் தேடினாள்..? தொலைந்து போன அவளின் கடந்த காலத்தையா..? மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குப் போகும் போதும் அதைத்தானே அவள் தேடினாள்..? இப்போது மதுரைக்கே திரும்பி வருகிறாள்.. இப்போதும் அந்த நிலை மாறவில்லையே...

*“இந்த நிலை மாறுமோ..*
*இன்பம் வந்து சேருமோ..*
*அன்பு கொண்ட எந்தன்..*
*மனதின் பாசம்..*
*உனக்கும் வேசமோ..?*
*வாழ்ந்தது போதுமடா..*
*வாழ்க்கை இல்லையே...”*

அடுத்த இருக்கையிலிருந்த பெரியவரின் கையிலிருந்த எப்.எம்மில் பாடல் ஒலித்தது.. கண்ணதாசன் மனதில் பாரமேற்றான்.. அவன் தங்கையின் முகத்தில்

கவிழ்ந்திருந்த சோகத்தில் அவன் மனம் கனத்தது.. அது மாற வேண்டுமென்று மனதார அவன் விரும்பினான்..

எப்படி அது சாத்தியமாகும்..?

*"சின்னஞ்சிறு கிளியே...*
*சித்திரைப் பூவிழியே..*
*உன்னையெண்ணி நானும்..*
*உள்ளம் தடுமாறும்.."*

பாடல் ஒலித்துக் கொண்டிருக்க கண்ணதாசன் தன் சின்னஞ்சிறு தங்கையின் முகத்தைப் பார்த்தான்.. சோகம் விரவிக் கிடந்த அந்த மலர் முகத்தின் மலர்ச்சியைத் திருடிக் கொண்டு போன அந்தக் கள்வன் யார் என்ற கோபம் அவன் மனதில் எழுந்தது...

அவன் தங்கையின் மனம் கவர்ந்த கள்வனான அர்ஜீனை நினைத்து அவன் பல்லைக்கடித்த அதே நேரத்தில் காவ்யாவின் மனமும் அவனைத்தான் நினைத்துக் கொண்டிருந்தது..

அவளருகே அவனிருந்தால் போதும் என்ற அவளின் நினைவையும்.. நிலையையும் அறிந்த பின்னாலும் விலகிச் சென்றவனை நினைத்து அவள் மனம் ஏங்கியது.. இது நியாயமா என்று கேள்வி கேட்டது...

*"நாடகம் ஏனடா..?*
*நியாயத்தைக் கேளடா.."*

மனதுக்குள் அவனிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த போது

“மதுரை வந்தாச்சுப்பா..” என்றான் அவளின் அன்பு அண்ணன்..

காவ்யா சோகையாக எழுந்தாள்.. பெட்டிகளை எடுத்து அவள் ஒழுங்கு படுத்த முனைந்த போது...

“விலகுப்பா..” என்று அவளை விலக்கிவிட்டு.. தானே பெட்டிகளை அடுக்கி ஒழுங்கு படுத்த ஆரம்பித்தான் கண்ணதாசன்..

அவனின் அன்பின் அரணுக்குள் நின்றவளுக்கு மீண்டும் கண்ணைக் கரித்தது.. அதை உணர்ந்தவனைப் போல அவளை நிமிர்ந்து பார்க்காமல் பேசினான் கண்ணதாசன்..

“அம்மாவைப் பத்தி உனக்கே தெரியும்டா..”

“அதுக்கென்னண்ணே..”

“அதுக்கொன்னுமில்ல.. உன் முகம்தான் மாறிப் போயிருக்கு.. அப்பாவுக்குத்தான் திருக்குறளைத் தவிர வேற எதையும் தெரியாது.. அம்மா அப்படியில்ல.. ஓடுகிற தண்ணியில ஒன்பது சுளிவக் கண்டு பிடிச்சிடற ஆளு.. அதனால..”

“அதனால...?”

“சிரிச்ச முகமா இருப்பா.. இத்தனை மாசமா அம்மா அப்பாவப் பிரிஞ்சு இருந்துட்டு வந்திருக்கோம்.. திரும்பவும் அவங்க கிட்டயே வந்துட்ட சந்தோசம் உன் முகத்தில தெரிய வேணாமா..?”

'ஆமாமில்ல..' குற்ற உணர்வுடன் உதட்டைக் கடித்துக் கொண்டாள் காவ்யா...

இப்போதெல்லாம் அடிக்கடி இதையேதான் செய்து வைக்கிறாள் என்ற நினைவு அவள் மனதில் எழுந்தது.. அண்ணனும் தங்கையும் மதுரையை விட்டுக் கிளம்பிய போது அன்னபூரணி எந்த அளவுக்கு வருந்தினாள் என்பதை அவள் நன்கு அறிவாள்...

"வீடு.. வீடா இருக்குமா கண்ணதாசா.." மகனிடம் புலம்பினாலும்.. பெற்றபிள்ளைகள் மனச்சங்கடமில்லாமல் போய் வரட்டும் என்று அதை மறைத்து விடை கொடுத்தவள் அந்தத் தாய்..

ஊடே அவருளும் சிவதாணுவும் திருநெல்வேலிக்கு வந்து போனார்கள்தான்.. ஆனாலும் ஒரு வாரத்திற்கு மேல் அவர்களால் திருநெல்வேலியில் தங்கியிருக்க முடியவில்லை..

அந்தத் தாய் தந்தையரிடம் அவர்கள் திரும்பியிருக் கிறார்கள்.. அந்தச் சந்தோசத்துடன் அவர்களை வரவேற்க அவள்தாய் காத்திருக்கிறாள்.. அந்தச் சந்தோசத்தில் துளியளவு கூட பெற்ற மகள் முகத்தில் இல்லையென்றால் அவள் என்ன நினைப்பாள்..?

"ஸாரிண்ணே.." வருத்தத்துடன் சொன்னாள் காவ்யா...

"உன்னைக் கண்டிக்கன்னு இதைச் சொல்லலைப்பா.. நீ தெரிந்துக்கனும்னுதான் சொன்னேன்.. முகத்தை

சரியா வைச்சுக்க.. ரயில் நிக்கப் போகுது..” கண்ணதாசன் எச்சரித்தான்...

ரயில் மெதுவாக வேகம் குறைந்து மதுரை ஜங்சனில் நின்றது.. சிவதாணு வாசலருகே வந்து...

“கண்ணா.. கண்ணா..” என்று அழைத்தார்..

“அப்பா கூப்பிடறதைப் போலவே இருக்கே..” காவ்யா சொல்ல..

“அட.. ஆமாம்..” என்று கண்ணதாசன் திரும்பிப் பார்த்தான்..

அதற்குள் சிவதாணு வாசலருகே ஒட்டப் பட்டிருந்த பெயர் பட்டியலில் அவன் பெயரைப் படித்து விட்டவராக ரயிலுக்குள் வந்து விட்டார்...

“நீங்களாப்பா..?” கண்ணதாசன் ஆச்சரியமானான்..

எப்படி அவர் திருக்குறளை மறந்து.. அவர்களைத் தேடி வந்தார் என்ற கேள்வி அவன் மனதில் முளைத்தது..

“நானேதான்.. விலகு சொல்றேன்..”

காவ்யாவிடம் கண்ணதாசன் சொன்னதை கண்ணதாசனிடம் சிவதாணு சொன்னார்..

‘என்னதான் வாட்ட சாட்டமா வளர்ந்த ஆம்பளைன்னாலும் பெத்தவருக்கு மகன் என்னைக்குமே கைப்புள்ளதான்...’

கண்ணதாசன் மனதுக்குள் சிரித்தபடி இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொண்டு பிளாட்பாரத்தில்

இறங்கினான்.. பெட்டிகளை வைத்தான்.. சிவதாணு கொண்டு வந்த பெட்டிகளை வாங்கி பிளாட்பாரத்தில் வைத்தான்.. காவ்யா இறங்க கை கொடுத்தான்.. அவர்கள் மூவரும் பெட்டிகளை சரிபார்த்து நிமிரவும் ரயில் நகரவும் சரியாக இருந்தது...

“போர்ட்டரை கூப்பிடலாம்ப்பா..” கண்ணதாசன் சொன்னான்..

“அது என்ன தேவைக்கு.. ஆளுக்கு நாலு பொட்டிகளைத் தூக்கிக்கிட்டா வாசல்ல நிக்கிற கார் டிக்கியில கொண்டு போயி சேத்துரலாமே..”

“ஆளுக்கு நாலா..?”

கைகள் இரண்டுதானே என்று கண்ணதாசன் குழம்பிப் போனான்... இரண்டு கைகள் நான்கு சாமான்களைத் தூக்குவதா..? எப்படி அது சாத்தியமாகும்..

“அந்தா.. உங்கம்மாவும் வந்திட்டா பாரு...”

கணவர் ரயிலோடு ஓடிப் பிள்ளைகளைத் தேடிக் கண்டுபிடித்து இறங்கும் வரை பிளாட்பாரத்தில் போடப் பட்டிருந்த பெஞ்சுகளில் ஒன்றில் கால் நீட்டி அமர்ந்திருந்த அன்னபூரணி எழுந்து அவர்களுக்கு அருகே விரைந்து வந்து கொண்டிருந்தாள்...

“காவ்யா...”

உனக்கு மகன்தான் உயர்த்தியென்று யாரைக் காவ்யா பிறந்தது முதல் சொல்லிக் காண்பித்துக் கொண்டிருந்தாளோ.. அந்த அன்னபூரணி.. அவளுக்கு

சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தைத்தேடித் தந்த மகனை விட்டுவிட்டு மகளை பாசத்துடன் அழைத்தாள்...

"அம்மா..."

காவ்யா அன்னபூரணியின் விரிந்த கைகளுக்குள் புகுந்து கொண்டாள்... அன்னபூரணியின் இறுகிய அணைப்பில் தாய் பறவையின் சிறகுகளுக்கடியில் குஞ்சைக் கொண்டு வந்து விட்ட நிம்மதி தெரிந்தது..

"என்னடா இளைச்சுப் போயிட்ட.. இங்கேயிருந்தாவாவது முருங்கைக்காயைப் போல இருப்ப.. அங்கே போனதும் வத்திக்குச்சியப் போலயில்ல மாறிப்புட்ட..?"

அன்னபூரணியின் ஆதங்கம் பொய்யில்லையென்று கண்ணதாசனுக்குத் தெரியும்.. காவ்யா மெலிந்துதான் இருந்தாள்.. அவளது மெலிவிற்கான காரணம் உணவல்ல.. உணர்வு என்பது அன்னபூரணிக்கு எப்படித் தெரியும்..? கண்ணதாசனுக்கல்லவா அது தெரியும்.. இருந்தும் அவன்..

"ஒழுங்காச் சாப்பிடறதில்லம்மா.." என்று அன்னையிடம் புகார் செய்தான்...

"அதானே பாத்தேன்.. இவ பக்கத்தில நின்னு அரட்டி உருட்டி சாப்பிட வைக்கனுமேடா மகனே..."

"எனக்கு எங்கேம்மா அதுக்கெல்லாம் நேரமிருக்கு..? இருபத்தி நாலு மணி நேரமும் ஆபிசில உட்கார்ந்தாலும் வேலை ஓய மாட்டேங்குது..."

கண்ணதாசன் போலியாக அலுத்துக் கொண்டான்.. அந்த வேலைப் பளுவிலும் அவன் மூன்று நேரமும்

காவ்யாவை சாப்பிட வைத்து விட்டுத்தான் சாப்பிடுவான் என்ற நினைவில் காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

மகளையும்.. மகனையும் கண்டுவிட்ட சந்தோசம் அந்தப் பிள்ளைகளைப் பெற்றவர்களின் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.. அவர்கள் ஒருவருக்கொருவர் கலகலப்பாக பேசியபடி ஆளுக்கு இரண்டு பெட்டிகளைத் தூக்கிக் கொள்ள.. சிவதாணு மட்டும் ஆறு பெட்டிகளைக் கைப்பற்றி கண்ணதாசனை அயர வைத்தார்...

“அப்பா..” கண்ணதாசன் மலைக்க..

“என்னாப்பா.. உன் பொட்டிகளையும் சேர்த்து தூக்கிக்கவா..?” என்று அவர் தோள் தட்டினார்...

“வேண்டாம்ப்பா.. வேண்டாம்...”

காரின் டிக்கியில் பெட்டிகளை அடுக்கிப் பூட்டிவிட்டு.. காரில் ஏறியவர்கள் சளசளத்தபடி வீட்டை நோக்கிக் கிளம்பினார்கள்...

காவ்யாவின் முகத்தில் தெரிந்த தெளிர்ச்சியில் கண்ணதாசன் கொஞ்சமாக நிம்மதியை அடைந்தான்.. இனி அவன் மட்டும் காவ்யாவைச் சுற்றி வந்து சந்தோசத்தை ஊட்ட வேண்டிய தேவையில்லை.. அன்னபூரணியின் துணையும் சேர்ந்து விட்டது என்ற நினைவில் அவன் மனம் சாந்தி கொண்டது..

# 180

## என்கையில் உனை நிறுத்த...
## ஏகாந்த ஆசைகொண்டேன்...

அர்ஜீன் நாற்காலியில் ஓர்முறை சுழன்று நெட்டி முறித்தான்.. அடுத்தடுத்து கேள்வி கேட்டதில் அவனுக்கே அலுப்பு ஏற்பட்டிருந்தது...

'ஒரு கம்பெனியின் இன்டர்வியூக்கு வருகிற மாதிரியா வந்து தொலைக்கிறாங்க..? என்னவோ டைம் பாஸீக்கு வர்ற மாதிரியில்ல வர்றாங்க..' எரிச்சல் பட்டான்..

போனவாரம் வரை இந்த இன்டர்வியூவிற்கான தேவை அவனுக்கு ஏற்படவில்லை.. அவனுடைய செக்கரட்டரியாகப் பட்ட தீபா மிகப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட்டு அந்த வேலையைத் திறம்படச் செய்து கொண்டிருந்தாள்.. திடிரென்று அவள் காதல் திருமணம் செய்து கொண்டு போய் விடுவாள் என்று அர்ஜீன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை...

"ஐ ரிசைன் மை ஜாப் சார்..."

போனில் அவள் சொன்னபோது அர்ஜீனுக்கு தலையும் புரியவில்லை.. காலும் புரியவில்லை..

“வாட்..?”

“யெஸ் சார்.. நான் என் வேலையை விடறேன்..”

“வாட் ஸ் தி ரீசன்..? காரணம் எதுவாக இருந்தாலும் வேலையை விடுகிறதைச் சொல்கிற முறை இதுவா..? நீங்க பெர்பெக்ட் வொர்க்கராச்சே மிஸ் தீபா.. உங்களிடமிருந்து இது போன்ற செயல்பாட்டை நான் எதிர்பார்க்கலை..”

“ஸாரி சார்.. சிச்சுவேசன்..”

“என்ன சிச்சுவேசன்..?”

“நான் இப்ப மிஸ் தீபா இல்லை சார்.. மிஸஸ் தீபா தாமஸ்..”

“வாட்..?”

இன்றைக்கு பொழுது என்ன பொழுதாக விடிந்தது என்று தலையைப் பிடித்துக் கொண்டான் அர்ஜீன்...

இப்படியா ‘வாட்..’ ‘வாட்..’ என்று கேட்டுக் கொண்டிருப்பான்..?

“நேற்று ஈவினிங் கூட உங்க மேரேஜைப் பற்றி நீங்க சொல்லையே தீபா...”

மிகக் கவனமாக ‘மிஸ்’ஸைத் தவிர்த்து விட்டு அவன் கேள்வி கேட்டான்..

“திடிர் கல்யாணம் சார்.. நேற்று நைட்தான் டிசைட் பண்ணினோம்..”

"என்னங்க இது.. ஒரு நாள் நைட்டில் டிசைட் பண்ணி மேரேஜ் நடத்தி விடுவாங்களா..? மாப்பிள்ளை உங்களுக்குச் சொந்தமா...?"

"இல்லை சார்.. அவர் அன்னியம்.. பெயர் தாமஸ்.."

"கிறிஸ்டியனா..?"

"ம்ம்ம்.. லவ் மேரேஜ் சார்.."

"அப்ப மேரேஜை டிசைட் பண்ணியது..?"

"நானும்.. தாமஸீம்தான் சார்..."

'சுத்தம்...' அர்ஜீனுக்கு சிரிப்புத்தான் வந்தது...

காதலர்கள் தீர்மானித்த திருமணத்தை அவர்களைப் பெற்றோர்கள் தீர்மானித்த திருமணமாக அவன் நினைத்துக் கொண்டானா...?

"எங்க வீட்டில் எனக்கு அலையன்ஸ் பார்க்கிறாங்க சார்.. தாமஸின் வீட்டிலயும் அப்படித்தான்.. ஸோ.. நோ அதர்வே.. இன்றைக்கு மார்னிங்கில் நாங்க ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம்...."

'வெரி சிம்பிள்..' என்று பாராட்டத் தோன்றியது அர்ஜீனுக்கு...

இந்த தீபாவுக்கு இருக்கும் தெளிவும்.. துணிச்சலும் காவ்யாவிடம் ஏன் இல்லாமல் போனது..? அன்றைக்கே அவன் கேட்டானே.. 'ஊம்' என்ற ஒரு வார்த்தை சொல்லு.. கோவிலில் வைத்துத் தாலிகட்டி திருமணத்தை பதிவும் பண்ணி விட்டு கையோடு உன்னை அழைத்துக் கொண்டு

கனடாவுக்கு பறக்கிறேன் என்று சொன்னானே.. அவள் மறுத்து விட்டாளே...

'அன்றைக்கு மட்டும் நான் சொன்னதை அவ கேட்டிருந்தா..' அர்ஜீன் பெருமூச்சு விட்டான்...

"இட்ஸ் யுவர் பெர்சனல் தீபா.. மேரேஜ் முடிந்து விட்டது.. ஓ.கே.. தேவைப்படுகிற அளவுக்கு லீவ் எடுத்துக் கொள்ளலாமே.. வேலையை ஏன் ரிசைன் பண்றீங்க..?"

"தாமஸ் நியுஜெர்ஸியில் வொர்க் பண்றார் சார்.. நானும் அவரோட அப்ஃஸ்ராடு போறேன்.. பாஸ் போர்ட் விசாவெல்லாம் ரெடியாய் இருக்கு.."

'தெளிவுதான்..' அர்ஜீனுக்கு கோபம் வந்தது...

இவ்வளவு தெளிவாக இருக்கிறவள்.. அவளுடைய எதிர்காலத் திட்டத்தைப் பற்றி மூச்சுக்கூட விட வில்லையே... வேலையை விட நினைப்பவள்... அதைப் பற்றி மறைமுகமாக ஒர்சொல் அர்ஜீனிடம் சொல்லியிருக்கலாமே.. அவன் அதற்கான ஆளை நியமித்திருப்பானே...

"வெல்.. கன்கிராஜீலேசன்ஸ் மிஸஸ் தீபா.. உங்க ரெஸிக்னேசனை நான் அக்செப்ட் பண்ணிக்கறேன்.. உங்க அக்கவுண்ட்ஸ் செட்டில் பண்ணி உங்களுக்குச் சேர வேண்டிய தொகையை கம்பெனி விரைவில் அனுப்பி வைக்கும்.."

உடனடியான பதிலைச் சொன்னான் அர்ஜீன்.. இதுபோன்ற நிகழ்வுகளுக்காக எல்லாம் அவன் அவனுடைய பொன்னான மணித்துளிகளை வீணடிக்க முடியாது...

'தீபா இல்லைன்னா ஒரு ஷீபா...'

அர்ஜீன் பெர்ஸனல் மேனேஜரைக் கூப்பிட்டு தீபாவின் ராஜினாமைப் பற்றிச் சொன்னான்.. அவளுக்குச் சேர வேண்டிய அனைத்து நிலுவைத் தொகையையும் அன்று மாலைக்குள் செட்டில் பண்ணி செக் அனுப்பி வைத்துவிட வேண்டுமென்ற கண்டிப்பான உத்தரவைப் போட்டான்.. மறுநாள் காலையிலேயே தீபாவின் இடத்துக்கான 'வால்க் ஆன் இண்டர்வியூ' நடத்த விளம்பரம் கொடுக்கச் சொன்னான்.. அதற்காக வந்திருந்தவர்களைத் தான் அவன் அன்று இன்டர்வியு நடத்தி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான்.. அவன் எதிர்பார்த்த திறமைசாலி அதுவரை வரவேயில்லை...

அறைக்கதவு லேசாக தட்டப்பட..

“யெஸ் கமின்..” என்றபடி அடுத்த நபரைச் சந்திக்கத் தயாரானான் அர்ஜீன்...

உள்ளே வந்தவளைக் கண்டதும் அவன் கண்களில் ஆச்சரியம் வந்தது...

“ஹாய் பாவனா.. ஹவ் ஆர் யு..?” என்றான்..

“ஃபைன் சார்...” என்றவளின் முகத்திலிருந்த மலர்ச்சி காணாமல் போயிருந்தது...

“எனி திங் ராங்...?” புரியாமல் விசாரித்தான் அர்ஜீன்..

“இது உங்க கம்பெனியா சார்..?” விளக்கெண்ணை -யைக் குடித்தவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டு அவள் கேட்டாள்..

“யெஸ்...” அர்ஜீனின் புருவங்கள் இடுங்கின...

வெளிநாடுகளில் பல கிளைகளைக் கொண்ட....

‘ஆர்ச் கம்யூட்டர் சொலுசன்..’ கம்பெனிக்குள் நுழைந்தவர்கள் அங்கே வேலை செய்யும் செக்யூரிட்டியைக் கூட மிக பிரமிப்புடன் பார்ப்பார்கள்..

பாவனாவோ.. அந்தக் கம்பெனியின் முதலாளியிடமே.. வரக்கூடாத இடத்திற்கு வந்து விட்டதைப் போல கேள்வி கேட்டு வைத்தாள்...

“ஐ ஆம் ஸாரி சார்.. இது உங்களுடைய கம்பெனின்னு எனக்குத் தெரியாது.. ஆர்ச் கம்ப்யூட்டர் சொலுசனில் வேலை பார்க்கிறேன்னு சொன்னாலே எல்லோரும் கண்ணை விரிப்பாங்கடின்னு என் பிரண்டு சொன்னா.. அதை கேட்டுக்கிட்டுத்தான் ஆசையாசையாய் இண்டர்வியுக்கு வந்தேன்...”

“இப்ப உங்க அபிமானம் கெட்டுப் போகிற அளவுக்கு என்ன நடந்து போச்சு..?” உக்கிரமாக வினவினான் அர்ஜீன்...

“என்ன சார் நீங்க... தெரியாததைப் போலக் கேட்கறிங்களே.. உங்களிடம் வேலை பார்க்க முடியாதுன்னு

வேலையை விட்டவ நான்.. இங்கே மட்டும் வேலையில் சேர முடியுமா...?"

"வெயிட்.. வெயிட்.. உங்களை வேலையில் சேரச் சொல்லி நான் கேட்கவேயில்லையே.. இண்டர்வியுவே ஆரம்பிக்கலை.. அதுக்குள்ள செலக்ட் பண்ணிட்டதைப் போல பில்ட் அப் கொடுக்கறிங்களே.. மிஸ் பாவனா, ஆர்ச் கம்ப்யூட்டர் சொலுசனில் வேலை கிடைக்கிறதுங்கிறது ஒன்னும் அவ்வளவு ஈஸியானதில்லை.. அண்டர்ஸ்டான்ட்.. இது மதுரைக் கடையில்லை..."

"அதுவும் உங்களுடையதுதானே சார்..?"

"அப்ஃகோர்ஸ்.. கடலுக்கும்.. கிணற்றுக்கும் இடையில் இருக்கிற வித்தியாசத்தை நீங்க புரிந்து கொள்ள டிரை பண்றது பெட்டர்.. இரண்டும் என்னுடையதுதான்.. ஆனாலும் இரண்டுமே வேறு.. வேறு.."

"எனக்கு இதைப் பற்றிச் சொல்லத் தெரியவில்லை சார்.. பட்.. உங்களிடம் வேலை செய்ய என்னால் முடியாது.."

பாவனா எழுந்து கொள்ளப் போனாள்...

"சிட்.. டவுன்.." அர்ஜீன் உறுமினான்...

அவனது கோபத்தில் சட்டென்று உட்கார்ந்து விட்டாள் பாவனா..

"என்ன சார் இப்படிக் கோபிக்கறிங்க...?"

“பின்னே.. நீங்க பேசுகிற பேச்சுக்கு கை கொடுப்பாங்களா..? என்னிடம் வேலை செய்ய முடியாதுன்னா என்ன அர்த்தம்..? நானென்ன பெண்கள் கிட்ட வம்பு வளர்க்கிறவனா..?”

பொம்பளைப் பொறுக்கியா என்பதை நாசுக்காக அவன் கேட்டதில் சங்கடப்பட்டுப் போனாள் பாவனா..

“என்ன சார் இப்படிக் கேட்டுட்டிங்க...?”

“அதை நான் சொல்லனும்...”

“வார்த்தைகளைக் கொட்டினா அள்ள முடியாது சார்.. தயவு செய்து இப்படிப் பேசாதீங்க.. நான் உங்க மேல மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கேன்... யு ஆர் எ பெர்பெக்ட் ஜென்டில்மேன்...”

“ரொம்ப சந்தோசம்.. எனக்கு இந்த கிரெடிட் டெல்லாம் தேவையில்லை.. மதுரைக் கடையில் என் டாடியும்.. நேகாவும் ஈஸியா நுழைய முடிந்தது.. இங்கே அப்படியில்லை.. என்னைத்தவிர வேறு யாருக்கும் இங்கே இம்பார்டன்ஸ் கொடுக்க மாட்டாங்க.. என்டாடி வந்தால் என்னிடம் கேட்காமல் உள்ளே அனுப்பி வைக்க மாட்டாங்க.. நேகா உள்ளே நுழையவே முடியாது..”

“ஈஸிட்..?” குதுகலமானாள் பாவனா...

அந்தக் காரணங்களினாலேயே அவளுக்கு அந்தக் கம்பெனியை பிடித்து விட்டது.. அப்போதுதான் புதிதாகப் பார்ப்பதைப் போல அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டவள் அதன் ஒவ்வொரு அங்குலத்திலும்

வெளிப்பட்ட செல்வச் செழிப்பில் பிரமித்துப் போய் விட்டாள்...

“நம்பவே முடியலை சார்...” குழந்தை போல கூறினாள்...

“எதை..?” உக்கிரம் தணிந்தவனாக சிரிப்புடன் கேட்டான் அர்ஜீன்...

“நீங்க இவ்வளவு பெரிய கம்பெனிக்கு எம்.டிங்கிறதை..”

“ஓ.. வேற என்னவாக இருப்பேன்னு நினைச்சீங்க..?”

“பணக்காரர்ன்னு தெரியும்.. இவ்வளவு பெரிய கோடிஸ்வரர்ன்னு தெரியாது... ஏதோ ஒரு துக்கடாக் கம்பெனியை நடத்திக்கிட்டு இருக்கீங்கன்னு நானும் காவ்யாவும் பேசிக்குவோம்..” உண்மையைச் சொல்லி விட்டாள் பாவனா...

“அவதானே.. அவ எப்படி வேண்டும்னாலும் சொல்லுவா.. மதுரைக் கடையையே ஒன்றுக்குமத்த ஓட்டைக் கடைன்னு சொன்னவளாச்சே..” காதலியின் நினைவில் அர்ஜீனின் முகத்தில் வெளிச்சம் பரவியது...

“ஆமாமாம்...” பாவனாவும் அவனது நினைவுகளில் இணைந்து கொண்டாள்...

“செம வாய்..”

“அதுவும் ஏகாம்பரத்தைக் கிண்டல்பண்றதுன்னா நாங்ககூட்டணி போட்டுக்கிட்டு தூள் பரத்துவோம் சார்..”

“நீங்க எப்படி இங்கே வந்திருக்கீங்க..?”

“அப்பாவுக்கு டிரான்ஸ்பர்.. நாங்க இப்ப சென்னை வாசிகள்..”

“ஓ.. வெல்கம் டு சென்னை...”

“தேங்க்ஸ்.. அப்படியே ஒரு வேலையையும் போட்டுக் குடுத்திட்டிங்கன்னா நல்லாயிருக்கும்...”

“யாரோ இங்கே வேலை பார்க்க மாட்டேன்னு சொன்னதா ஞாபகம்..?”

“அது சும்மா உல்லுலாங்காட்டிக்கு சார்..”

“ஈஸிட்..?”

“யெஸ் சார்...”

பாவனா படு பவ்யமாக முகத்தை வைத்துக் கொண்டு இறைஞ்சல் பார்வை பார்க்கவும் அர்ஜீன் சிரித்து விட்டான்...

“உங்க பயோடேட்டாவைக் கொடுங்க...”

“அதுதான் உங்களுக்குத் தெரியுமே சார்..”

“திரும்பவும் பார்க்கனுமே.. அந்த பயோ டேட்டா அந்தக் கடைக்கு பெரிதா இருந்திருக்கலாம்.. இங்கெல்லாம் ஜீஜிபி...”

“அதனாலதானே சார் அடக்கி வாசிக்கறேன்.. நீங்க பாட்டுக்கு நான் இந்த வேலைக்கு குவாலிஃபைடு இல்லைன்னு சொல்லிட்டா.. நான் எங்கே போவேன்..? என்ன செய்வேன்...?”

பாவனா வராத கண்ணீரை கைக்குட்டையால் துடைத்துக் கொள்ள வாஞ்சையுடன் சிரித்தான் அர்ஜீன்.. அவன் மனக்கண்ணில் காவ்யா வேலையை விட்ட அடுத்த நிமிடம் அவளுக்காக வேலையை விட்ட அன்றைய பாவனா தோன்றினாள்.. தோழிக்காக அவள் பார்த்தசாரதியையும்.. நேகாவையும் கேட்ட கேள்வியை நினைத்துப் பார்த்தவனின் நெஞ்சம் நெகிழ்ந்தது...

“யு ஆர் அப்பாயிண்ட்டெட் பாவனா..” என்றான் அவன்..

## 181

*நீரோடும் வைகைக் கரையில்...*
*நாம் உலாவ ஆசைகொண்டேன்...*

“**கா**வ்யா...” அன்னபூரணி அழைத்தாள்.. வாசல்படியில் உட்கார்ந்து.. போர்டிகோவில் காரைத் துடைத்துக் கொண்டிருந்த சிவதாணுவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த காவ்யா..

“என்னம்மா..” என்று கேட்டாள்...

“எங்கேயிருக்க..?” என்றபடி வாசலுக்கு வந்த அன்னபூரணி சிவதாணுவைக் கண்டதும் முகவாயில் கை வைத்து அதிசயதித்தாள்...

“யாருடி இது..? உங்கப்பாவா..?”

காரைத் துடைத்துக் கொண்டிருந்த சிவதாணு மனைவியைப் பார்த்து..

“ஏண்டி.. உனக்கு அடையாளம் தெரியலையா..?” என்று கேட்டார்..

“எப்புடித் தெரியும்..?”

“வெளியில சொல்லிப்புடாதே.. கட்டிக்கிட்ட.. புருசனை அடையாளம் தெரியலைன்னு சொல்ற பொம்பள உலகத்திலேயே நீயாத்தாண்டி இருப்ப..”

“பொண்டாட்டியை விட்டுப்புட்டு.. திருக்குறளைக் கட்டிக்கிட்ட ஆம்பளையும் உலகத்திலேயே நீங்களாத் தான் இருப்பீங்க... என்ன ஆச்சு..? குறளை மறந்துட்டு காருப்பக்கம் வந்திருக்கீங்க...”

“இத்தனை நாளா புள்ளைக ரெண்டும் வெளியூரில இருந்துச்சுக.. காரும் தூசும்.. தும்புமா கவனிப்பாரில்லாம மூலையில நின்னுக்கிட்டு இருந்துச்சு.. இப்ப அப்படியா.. என்புள்ளைக பொறந்த ஊருக்கே திரும்பி வந்திருச்சுகள்ல.. இனிக் காரைக் கவனிக்காம இருக்க முடியுமா..?”

சிவதாணுவின் மனதிலும்.. பிள்ளைக்களுக்கான தேடல் இருக்கக் கூடும் என்பதை அன்றுதான் கண்டாள் அன்னபூரணி.. அதுநாள்வரை உலகப் பொதுமறையை கட்டிக் கொண்டிருக்கும் மகராஜனைக் கட்டிக்

கொண்டதில் அவள் மனதிலிருந்த மனக்குறை சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்று ஓடிவிட்டது..

“பசங்க வந்துட்டதில இந்த மனுசருக்கு வந்திருக்க பகுமானத்தப் பாரேண்டி..” பெருமையுடன் சிரித்துக் கொண்டாள் அன்னபூரணி...

அது கட்டிய கணவன் குடும்பத்தின் மீது காட்டும் அக்கறையில் எழுந்த பெருமை..

“ஏண்டி.. எனக்குப் பகுமானம் வரக்கூடாதா..? நான் யாரு தெரியுமா..?”

“இவரு யாராம்டி காவ்யா..? அலங்காநல்லூரு ஜல்லிக்கட்டில யாருக்கும் அடங்காத காளய அடக்கின வீரனா..?”

“ஏண்டி நான் காளய அடக்க மாட்டேனா..?”

“அடக்குவீக.. அடக்குவீக...”

“இந்த வருச ஜல்லிக்கட்டுக்கு வந்து பாருடி...”

“எதை..? ஓரமா நீங்க ஒளிஞ்சுக்கிட்டு நின்னு ஜல்லிக்கட்ட வேடிக்க பாக்கிற வேடிக்கயவா வந்து பாக்கச் சொல்றீக..?”

“அடங்காத காளய அடக்கறத வந்து வேடிக்கை பாருடி...”

“அட.. என் மாமனுக்கு வீரம் பொத்துக்கிருச்சே..”

“இது புதுசா வர்ற வீரமில்லடி.. எனக்குள்ள புதைஞ்சு கிடக்கிற வீரம்..”

“நான் பாத்தாலும் பாத்தேன்.. இப்புடி ஒரே நாளில வள்ளுவதாசன் தடாலடியா விருமாண்டிய மாறின சங்கதிய இப்பத்தான் பாக்கறேன்.. அடியே காவ்யா.. கற்பூரத்த கொளுத்தி எடுத்துட்டு வாடி...”

“எதுக்கும்மா..?”

“உங்கப்பாவுக்கு சுத்திப் போடத்தான்.. ஆத்தி.. எங்கண்ணே பட்டுரும் போல இருக்கே...”

அன்னபூரணியின் விகடப் பேச்சை ரசித்தபடி காரைத் துடைத்து முடித்த சிவதாணு.. தோட்டத்துக் குழாயில் முகம் கழுவி.. தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்தபடி...

“ஸ்ஸ்.. அப்பாடி..” என்று ஆசுவாசமாக மகளின் பக்கத்தில் வந்து அமர்ந்தார்...

“ஒரு காரைக் கழுவித் துடைச்சதுக்கு இம்புட்டு அலுப்பாசாமி..? இந்த லட்சணத்தில இந்த இளந்தாரி ஆம்பள அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டில அடங்காத காளையை அடக்கப் போறாராமில்ல.. பாத்துக்கடி காவ்யா..”

அன்னபூரணி கேலியாக நொடித்தபடி வீட்டுக்குள் போனாள்.. மனைவியைத் திரும்பிப் பார்த்துவிட்டு...

“இவ எங்கே போறா..?” என்று மகளிடம் கேட்டார் சிவதாணு...

“தெரியலையேப்பா..” கையை விரித்தாள் காவ்யா..

சற்று நேரத்தில் எண்ணையில் வெங்காயம் வறுபடும் நறுமணமும் காபியின் மணமும் ஒன்று சேர்ந்து நாசியைத் துளைத்ததில் அன்னபூரணி எதற்காக வீட்டுக்குள் போனாள் என்ற விவரம் அவர்களுக்குத் தெரிந்தது...

"உங்கம்மா வட சுட்டா... ஊரே மணக்குமே.." மனைவியின் கைப்பக்குவத்தில் மெச்சிப் போனார் சிவதாணு...

காவ்யா பதில் சொல்லாமல் புன்னகை செய்தாள்... அந்திவானில் பறவைகள் கூடு தேடி பறந்து கொண்டிருந்தன.. கூட்டுக்குத் திரும்பும் பறவைகளின் கலவையொலி அவள் காதுகளில் சங்கீதம் போல் ஒலித்தது... மெலிதான வெளிச்சத்தில் உடல் தழுவிய தென்றல் காற்றில் மனதுக்குள் படிந்திருந்த வேதனையின் தளையிலிருந்து கொஞ்சமாக விடுபட்டாள் காவ்யா...

அன்னையின் மடியும்.. தகப்பனின் நிழலும் அவள் மனத்துயரை குறைத்தன.. அன்னபூரணி வடையையும்.. காபியையும் வாசலுக்கே கொண்டு வந்தாள்.. அவர்கள் பேசியபடி அவற்றைக் காலி செய்ய ஆரம்பித்தார்கள்.. காவ்யாவின் வலப் பக்கமாக சிவதாணு அமர்ந்திருக்க.. இடப் பக்கம் அன்னபூரணி உட்கார்ந்திருந்தாள்.. கணவரை அவள் பகடி பேச.. அவர் அதற்கு சளைக்காமல் பதில் கொடுக்க என்று அங்கே அரட்டைக் கச்சேரி களை கட்டியதில் காவ்யா மனதுக்குள் சிறிதளவான உற்சாகம் துளிர் விடுவதை உணர்ந்தாள்..

பேச்சென்று வந்து விட்டால் அன்னபூரணிக்கு நிகர் அன்னபூரணியேதான்.. அவளுக்கும் பதில் கொடுக்கும் அளவில் சிவதாணு பேசியதில் அவளுக்கு வேடிக்கை பார்க்கும் சுவராஸ்யம் தானாகத் தோன்றி விட்டது...

“என்னவாம்..? நான் வர்றப்ப.. அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு காளய அடக்கற இளந்தாரி ஆம்பள.. மககிட்ட எதையோ சொல்லிக்கிட்டு இருந்தாரே...”

“ஏண்டி.. என்னப் பாத்தா உனக்கு இளந்தாரியாத் தெரியலையா.? இன்னைக்கும் எங்க ஊரு முச்சந்தியில கெடக்கிற இளந்தாரிக்கல்லத் தலக்கு மேலே தூக்கிக் காட்டற தாட்டியமான ஆம்பளடி நானு..”

“அதான் தெரியுமே.. போனதடவ ஊர் திருவிழாவுக்கு போனப்ப.. உங்க அத்தமக ரத்தினத்துக்கு அந்த இளந்தாரிக் கல்லத் தூக்கிக் காட்டித்தானே ரூட்டு போட்டிக.”

“அவளுக்கு ரூட்டு போட்டுட்டாலும்.. கழுத.. வெளங்கிரும்.. அவளே ஐஞ்சு புள்ளயப் பெத்துப் போட்டு அதுக்கு மாப்பிள்ளயத் தேடிக்கிட்டு இருக்கிறா.. சொல்லறதும் சொல்ற.. அமசமா ஒரு ஆளப் பாத்துச் சொல்லுவியா.. அதவிட்டுட்டு கிழவியப் போயி எங்கூட இணை கூட்டறவ..”

“அவதான் கிழவி.. ஐயா யாரு..?”

“இளந்தாரிச் சிங்கம்டி..”

“ஊருக்குள்ளே இப்படித்தான் சிலபேரு அலைகிறாக..”

“அதில நானும் ஒருத்தனாக்கும்..?”

“பின்னே இல்லையா..? உங்களுக்கு ஜோடி பிடிச்சு விடத்தான் நான் உங்க கையில தாலி வாங்கிக்கிட்டேனா..?”

“நீதானேடி ஆரம்பிச்சு வைச்ச..?”

“ஓஹோ.. நான் கோட்டப் போட்டேன்.. ஐயா ரோட்டப் போட்டிங்களாக்கும்...”

“ஆமா.. நான் பொண்டாட்டி கோடு கிழிச்சா அதுக்குக் கட்டுப்படற உத்தம புருசன்டி..”

“அதக் கோட்டத் தாண்டாம உள்ளார நிக்கிற உத்தமபுருசன் சொல்லனும்.. கோட்டப் போட்டவுன்னே ரோட்டப் போட ஓடுற புருசன் சொல்லக் கூடாது...”

“விடுடி.. இதெல்லாம் ஒரு பேச்சா..?”

“பின்னே இது பேச்சு இல்லையாங்கிறேன்.. ஆம்பளைக ஆயிரம் பொண்ணைப் பாப்பீங்க.. அதில யாரு உங்களுக்குப் பொருத்தமான பூங்கொடின்னு வீட்டுப் பொம்பளகிட்ட வந்து விளக்கம் கேட்பீக.. நாங்களும் வரிஞ்சு கட்டிக்கிட்டு பொருத்தம் பாத்துச் சொல்லனும்.. இதையெல்லாம் செஞ்சாத்தானே எங்களுக்கு கற்புக்கரசி பட்டம் கொடுப்பீக..? கண்ணகி சிலைக்குப் பக்கத்தில எங்களுக்கும் சிலை வைப்பீக..?”

அன்னபூரணி போட்ட போட்டில் காவ்யாவே ஆச்சரியப்பட்டுப் போனாள்.. மேடையேறிப் பேசும்

பெண்ணியவாதிகளின் பிரச்சாரத்தைப் பற்றி ஏதுமறியாத.. வீட்டின் நான்கு சுவர்களுக்குள் தன்னைத்தானே சிறை வைத்துக் கொண்டிருக்கும் அன்னபூரணியா இந்த விளாசு.. விளாசுவது..?

“கை கொடும்மா.. சூப்பரா போட்டுத்தாக்கற...” கை நீட்டினாள் காவ்யா...

“உங்க அம்மா பேசறதப் பாராட்டறதுக்கு கை குலுக்கனுமுன்னா நீ ஆயுசு பூராவும் கைகுலுக்கிக்கிட்டே இருக்கனும்.. இவ பேச்சு அப்படியாப்பட்டது... உங்கையிதான் வலிச்சுப் போகும்.. அதனால கையை மடக்கிக்கிட்டு பேசாம விட்டிரும்மா...” மகள் மேல் அக்கறைப் பட்டார் சிவதாணு...

“ஏனாம்..? வாயிலே பாராட்டினாக் கூட உங்களுக்கு குறைஞ்சு போயிருமோ..” சண்டைக்கு வந்தாள் அன்னபூரணி...

“நீ பேசறதுக்கு பாராட்டனும்னா வருசம் பூராவும் பாராட்டிக்கிட்டே இருக்கனும்டி.. பாவம்.. என் மக தொண்டத் தண்ணி வத்திப் போயிறாதா..? பாராட்டிப் பாராட்டி.. அதுவாயி வலிச்சுப் போயிராதா..?” நியாயம் கேட்டார் சிவதாணு...

வாசலில் கார் வந்து நின்றது.. கண்ணதாசன் இறங்கினான்.. மகனின் அலுவலகக் கார் வந்து விட்டதில் சிவதாணுவும்.. அன்னபூரணியும் தற்காலிகமாக பேச்சை நிறுத்தினார்கள்.. கார் டிரைவரிடம் எதையோ சொல்லி

விட்டு காம்பவுண்டு கேட்டைத் திறந்து உள்ளே வந்த கண்ணதாசன்.. பெற்றவர்களுக்கு மத்தியில் முகத்தில் மெலிதான புன்முறுவலோடு அமர்ந்திருந்த தங்கையைக் கண்டான்.. அவள் முக வெளிச்சத்தில் அவன் முகத்தில் வெளிச்சம் பரவியது...

“என்னம்மா.. அப்பா என்ன சொல்றாரு..?” புன்னகையுடன் கேட்டான்...

“ஏம்ப்பா.. இந்த வீட்டில எதையாச்சும் சொல்லனும்னா உங்கம்மாதான சொல்லுவா..? என்ன ஏம்ப்பா வம்பக்கட்டி இழுக்கற..?” என்று கேட்டார் சிவதாணு..

“இல்லையே.. இன்னைக்கு தெரு முனையிலயே உங்க சத்தம் என் காதில விழுந்துருச்சே..” கண்ணதாசன் விடவில்லை...

“அங்க வரைக்கும் கேட்டுருச்சா..? அது ஒன்னுமில்லடா தம்பி.. ஒங்கப்பா வாயே திறக்காம வருசக் கணக்கா திருக்குறளப் படிச்சிக்கிட்டு இருப்பாரு.. திடிர்ன்னு குடும்பத்தாளுக நினப்பு வந்து பேச ஆரம்பிச்சுட்டா வருசக் கதையையும் ஒரே நாள்ல பேசித் தீர்த்துப் புடுவாரு.. அந்தப் பேச்சையும் எட்டூருக்கும் கேக்கறதப் போல வெங்கலத் தொண்டையிலதான் பேசி வைப்பாரு.. பழமொழியே இருக்கேடா தம்பி.. என்னைக்கும் சிரிக்காதவ.. திருவிழாக் கடையில சிரிச்சாளாம்ன்னு.. அந்தக் கதைதான் உங்கப்பா கதை...” அன்னபூரணி சிரிக்காமல் விளக்கம் சொன்னாள்...

அதைக் கேட்ட கண்ணதாசன் சிரித்தானோ இல்லையோ.. காவ்யா பொங்கிச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பில் கண்ணதாசனின் மனமும் பொங்கியது...

மகனுக்கு காபி பலகாரம் கொடுப்பதற்காக அன்னபூரணி எழுந்து உள்ளே சென்றாள்.. காவ்யா அவளைப் பின்தொடர்ந்தாள்.. மகனிடம் அலுவலக நிலவரங்களை விசாரித்தபடி சிவதாணுவும் உள்ளே போனார்.. கண்ணதாசன் குளித்து உடை மாற்றி விட்டு வருவதற்காக மாடியேற.. சிவதாணு ஹாலில் உட்கார்ந்து டிவியை உயிர்ப்பித்தார்.. கண்ணதாசன் வந்தவுடன் அவனுக்கு காபி பலகாரத்தைக் கொடுத்த அன்னபூரணி...

“காவ்யாவும் நானும் கோவிலுக்குப் போயிட்டு வரோம்ப்பா..” என்றாள்..

“எப்படிப் போவீங்க..? காரை எடுக்கவா..?”

“உங்கப்பாவ கார எடுக்கச் சொன்னாப் போச்சு.. நீ இப்பத்தான் ஆபிசில இருந்து வந்திருக்க.. உங்கப்பா லீவு போட்டுட்டு வீட்டிலதான இருந்தாரு.. நாங்க அவரக் கூப்பிட்டுக்கிட்டு போயிட்டு வரோம்.. நீ ரெஸ்ட் எடு...”

“கோவிலுக்கு போயிட்டு வர எம்புட்டு நேரமாகப் போகுது..? இருங்க.. நானும் வர்றேன்.. சேர்ந்தே போகலாம்...”

அன்னபூரணிக்கு அதில் பரம சந்தோசம்.. நீண்ட நாள் கழித்து குடும்பத்தோடு கோவிலுக்குப் போவதில் அவள் மனம் மகிழ்ச்சி கொண்டது.. மீனாட்சி சுந்தரேஸ்வரர்

கோவிலில் பிள்ளைகளின் பெயர்களில் அர்ச்சனை செய்து.. இறைவனையும்.. இறைவியையும் தரிசனம் செய்தபின் அவர்கள் பிரகாரத்தை வலம் வந்தார்கள்... அவர்களைக் கடந்து போன பெண் தயங்கி நிற்க... அன்னபூரணி அவளைப் பார்த்துவிட்டு..

“என்னம்மா தேன்மொழி..? சௌக்கியமா இருக்கியா..?” என்று கேட்டாள்...

காவ்யாவிடம் தாழ்ந்த குரலில் எதையோ பேசிக் கொண்டிருந்த கண்ணதாசன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.. அப்போது அவன் கண்களில் தெரிந்த தேடுதலுடன் கூடிய மின்னலை காவ்யா கண்டு கொண்டாள்...

## 182

***உன் மனதின் பெட்டகத்தில்...***
***என் நினைவிருக்க ஆசைகொண்டேன்...***

**கா**வ்யா இமை கொட்டிக் கண்ணதாசனின் முகம் பார்த்தாள்... அவனது பார்வையைக் கவனிக்காமல் தேன்மொழியைப் பார்த்துக் கொண்டிருந்த கண்ணதாசனின் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றை அவள் கவனித்தாள்...

தேன்மொழி அன்னபூரணியின் கேள்விக்குப் பதில் சொல்லியபடி.. ஓரக்கண்ணால் கண்ணதாசனை பார்த்தாள்.. அவள் விழிகளில் தெரிந்த ஆவலையும்.. பரபரப்பையும் காவ்யா பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்..

இனம்... இனமறியும்...!

காதல் கொண்ட பெண்ணின் காதலனைத் தேடும் தேடுதலை மற்றொரு காதல்வயப்பட்ட பெண் எளிதில் கண்டு பிடித்து விடுவாள்...

தேன்மொழியின் பரபரப்பிற்குக் குறையாத பரபரப்பை கண்ணதாசனின் முகத்தில் கண்டவளுக்கு...

‘இது எனக்கு எப்படித் தெரியாமல் போச்சு..?’ என்று ஆச்சரியமாக இருந்தது..

கண்ணதாசனின் மனதிலும் காதல் வரக்கூடும் என்று அன்றுதான் உணர்ந்தாள் காவ்யா.. அதுவரை அவன் தங்கைக்கொரு கீதம் பாடும் பாசப்பறவை மட்டும் தான் என்ற நினைவில் இருந்தவளுக்கு.. அவனும் ஒரு பெண்ணை அம்பிகாபதி அமராவதியைப் பார்த்ததைப் போல பார்த்து வைப்பான் என்பது அதிசயமான ஒன்றாக இருந்தது...

“சௌக்கியம்தான் அத்தே.. நீங்க எப்படி இருக்கீங்க..?”

இந்தக் கேள்வியை கண்ணதாசனைப் பார்த்தபடி தேன்மொழி கேட்டாள் என்பதை காவ்யா ஊன்றிக்

கவனித்தாள்.. பதிலுக்கு கண்ணதாசனின் இமைகள் மூடித்திறந்தையும் சேர்த்தேதான் கவனித்தாள்..

'என்னடா இது.. இங்கே நலம்தானா பாட்டு நடக்குது..' அவள் மனது கேட்டது..

மறந்தும் அன்னபூரணி உன்னைப் பெற்றவர்களும்.. உன் கூடப் பிறந்தவனும் சௌக்கியமா என்று தேன்மொழியிடம் கேட்கவில்லை.. அதை தேன்மொழியும் உணர்த்திருக்க வேண்டும் அவள் முகத்தில் முள்ளின் மீது நிற்பதைப் போன்ற சங்கடம் நிலவியது...

"வரட்டுமா அத்தை..."

இப்போதும் அவள் வார்த்தையில் அன்னபூரணி-யிடமும்.. பார்வையில் கண்ணதாசனிடமும் தான் விடைபெற்று விட்டு விரைந்தாள்..

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த அன்னபூரணி...

"ம்ஹீம்.. இது நல்ல புள்ளதான்.. பொறந்த வீடுதான் சரியில்லாத வீடாப் போயிருச்சு.." என்றாள்...

"அதச்சொல்லு.." சிவதாணு ஆமோதித்தார்...

"அந்தத் துரியோதனன் குணக்காரனாத்தான் இருந்தான்.. பெத்து வைச்சிருக்கான் பாரு.. மகன்ங்கிற பேருல ஒரு தறுதலய.. அவன் பண்ற வேலை.. இவனும் அவன்கூடச் சேர்ந்துக்கிட்டுக் கெட்டுக் குட்டிச் சுவராப் போயிட்டான்.."

சிவதாணு பேசப்பேச.. கண்ணதாசன் முகம் சுளித்தான்...

“விடுங்கப்பா.. கோவிலுக்குள்ள நின்னுக்கிட்டு.. ஆகாவழிப்பயலுகளப் பத்தின பேச்சப் பேசிக்கிட்டு.. வாங்க.. அந்தப் பக்கமா போயி உக்காரலாம்...”

அவன் கைகாட்டிய மண்டபத்தின் படிக்கட்டுகள் முன்னே சென்று கொண்டிருந்த தேன்மொழியைப் பார்ப்பதற்கு தோதாக இருந்ததை மனதுக்குள் கணக்கிட்டாள் காவ்யா..

அவர்கள் மண்டபத்தில் அமர்ந்தார்கள்.. அன்னபூரணியும் சிவதாணுவும் உறவினர் வீட்டு நிலவரங்களைப் பேசிக்கொண்டிருக்க.. கண்ணதாசன் மட்டும்.. தொலைவில் தெரிந்த தேன்மொழியை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்...

‘இளைச்சிருக்கா...’

அவள் மெலிவில் அவன் மனம் வருந்தியது.. கோவிலை விட்டுப் போக மனமில்லாதவளாய் அவள் தொலைவிலிருந்த மண்டபத்தில் அமர்ந்து இவன் பக்கம் பார்த்ததில்.. இவன் கிளம்பும் வரை அவளும் கிளம்ப மாட்டாள் என்று கண்ணதாசனுக்கு புரிந்து விட்டது...

கோவிலின் விளக்கொளியில் தேவதை போல் தெரிந்த அவளின் வடிவத்தில் அவன் மனம் லயித்தது...

இதுதான் அது என்று தெளிவாகத் தெரியாத ஒரு பந்தத்திற்காக ஏன் அவள் உருக வேண்டும் என்று அவன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.. அவளுக்குத்

தெரியும்.. கண்ணதாசன் அவளிடம் காதல் சொல்லிவிட மாட்டான் என்பது...

தெரிந்திருந்தும் அவள் எதற்காக அவன் முகத்தை ஏக்கத்துடன் பார்க்க வேண்டும்..?

பூங்காற்றைப் போன்ற அந்தப் பெண்ணின் மனதில் அவன் மீதான சலனம் ஏற்பட்டதற்கு அவன் எவ்வகையில் காரணமானான் என்று அவனுக்கே பிடிபடவில்லை...

ஒருவேளை.. இதுதான் பெண்மனம் என்பதோ...

மனதுக்குப் பிடித்த ஒருவனை மனதுக்குள்ளே வரித்துவிட்டு.. அவன் முகம் பார்க்க ஏங்கி நிற்கும் பூந்தளிர் மனம்.. அவள் மனமோ..?

அவளுக்குப் பிடித்த வகையில் அவன் இருக்கிறான் என்பதில் அவன் மனதில் ஆண்மைக்கே உரித்தான கர்வம் நிரம்பியது...

"போகலாமாப்பா..?"

அன்னபூரணியின் கேள்வி காதில் விழுகாதவனாக அவன் தொலைவில் தெரிந்த தேன்மொழியின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்..

"ஆத்தி.. என் மகன் என்னத்துக்கு இந்த முழி முழிக்கிறான்..."

மகனை அந்த நிலைமையில் என்றுமே பார்த்திராத அன்னபூரணி பதட்டமடைந்தாள்..

“கோவிலுக்குள்ள உக்காந்துக்கிட்டு என்ன பேச்சு பேசறவ.. புள்ளைக்கு ஆபிசில ஆயிரம் சோலியிருந்திருக்கும்.. அந்த நினைப்பு மனசுக்குள்ள ஓடிக்கிட்டிருக்கும்.. பொறு போகலாம்.. இப்ப வீட்டுக்குப் போயி என்னத்த வெட்டி முறிக்கப் போறவ..?” சிவதாணு மனைவியை அதட்டினார்..

பெற்றவர்களுக்கு இடையில் நடந்த பேச்சு வார்த்தையை காதில் வாங்கிக் கொள்ளாதவனாய் கண்ணதாசன் தனியே ஒர் மாயஉலகில் பிரவேசித்-திருந்தான்.. அவன் மனம் முழுவதும்.. அவன் பக்கம் பார்வை வீச்சுக்களை அனுப்பிக்கொண்டிருந்த அந்த மென்மையான பெண்ணின் மீதே இருந்தது...

காவ்யா.. முழங்கால்களைக் கட்டி அமர்ந்து அந்த பார்வைப் பரிமாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தாள்..

அவளறிந்த அவளது அண்ணன் கர்ம வீரன்.. கடமை தவறாதவன்.. பாசமலர்.. தாயையும்.. தந்தையையும் காக்கும் தனயன்.. தங்கைக்கொரு கீதம் பாடுபவன்...

குடும்பத்துக்காக வாழ்ந்தவன்.. தனக்காகவென்று காட்டிய தனிப்பட்ட அந்த உணர்வுகளில் காவ்யாவின் மனம் நெகிழ்ந்தது...

அதை ஏன் அவன் வெளிக்காட்டிக் கொண்டதில்லை..?

அவர்களைக் கடந்து போனவர்களில் ஒருவன் திரும்பிப் பார்த்து கண்ணதாசனுக்கு வணக்கம் வைத்தான்.. அவன் பார்வை காவ்யாவின் மீதே இருந்தது...

"வணக்கம் சார்..."

இனிய கனவு கலைந்தவனாக நிமிர்ந்து பார்த்த கண்ணதாசனின் புருவங்கள் சுருங்கின...

"எப்படியிருக்கீங்க தங்க ராஜ்..?" அவன் எழுந்து கொண்டான்...

"சௌக்கியம் சார்.. நீங்க.. காவ்யா மேடம்.. அப்பாம்மா சௌக்கியங்களா..?"

"அதான் பாக்கறிங்களே..."

கண்ணதாசனுக்கு அதற்கு மேல் பேச்சை வளர்க்க விருப்பமில்லை.. காவ்யாவின் மனதில் பழைய நினைவுகள் வந்துவிடுமோ என்று அவன் சஞ்சலப்பட்டான்...

அவன் பயந்ததைப் போலத்தான் நடந்தது...

"காவ்யா மேடம் வேலையை விட்டதும் பாவனா மேடமும் வேலையை விட்டுட்டுப் போயிட்டாங்க.. கடையே வெறிச்சோடிப் போயிருக்கு.. முதலில எல்லாம் அடிக்கடி முதலாளி வந்துட்டுப் போவாரு.. இப்ப ஆடிக்கொரு தரம்.. அம்மாவாசைக்கு ஒருதரம்ன்னு வந்துட்டுப் போறாரு.. பழைய கலகலப்பு காணாமல் போயிருச்சுங்க சார்..."

தங்கராஜ் வருத்தப் பட்டுப் பேசிவிட்டுப் போய் விட்டான்.. காவ்யாவின் முகம் வாடிவிட்டது...

"அதுக்காக என்மக ஆயுசு பூரா அந்தக் கடையில வேல பாத்துக்கிட்டு இருக்க முடியுமா..? வந்துட்டானுக

வரிஞ்சு கட்டிக்கிட்டு குசலம் விசாரிக்க.. நாங்களே வம்பாடு பட்டு இவ மனசை மாத்தி வேலையை விடவைச்சிருக்கோம்.. இவனுக அது புரியாம குசலம் விசாரிக்கிறானுக.. இந்தா பாரு காவ்யா.. இவன் சொல்றான்னு வேலைக்குப் போகனும்ன்னு திரும்பவும் முருங்கை மரத்திலே ஏறினேன்னு வைய்யி.. நானு நானா இருக்க மாட்டேன்.. பாத்துக்க...”

“ஏம்மா.. கூட வேல பாத்தவன்.. வழியில பாத்தா நல்லதா நாலு வார்த்த பேசிட்டுப் போறது சகஜம்தான.. இதுக்குப் போயி தங்கச்சி மேல ஏன் கோவிச்சுக்கற..?”

“உனக்குத் தெரியாது கண்ணதாசா.. இவ மதிலு மேல பூனை ரகம்.. எந்த நேரம் எந்தப் பக்கம் பாய்வான்னு யாராலேயும் சொல்ல முடியாது...”

‘நிஜம்தான்..’ என்று நினைத்துக் கொண்டான் கண்ணதாசன்..

அர்ஜீனை மறக்க வேண்டுமென்று திருநெல்-வேலிக்குப் போனவள்.. அங்கே அவனைக் கண்டதும் விலகியல்லவா வந்திருக்க வேண்டும்..? அதை விட்டு விட்டு.. அவன் சென்னைக்குத் திரும்பி விட்டான் என்று அழுது வைத்து.. மருக்கொழுந்துவையும் அழ வைத்தவளாயிற்றே அவன் தங்கை..

அவர்கள் பேச்சு ஞாபகத்தில் தேன்மொழியைக் கடந்து செல்ல... அவன் விழிகளில் அவளுக்கான விடைபெறுதலின் சமிக்ஞையைத் தேடித் தோற்றுப் போனது தேன்மொழியின் உள்ளம்...

அவன் அவளைக் கண்டு கொள்ளவே இல்லை.. தேன்மொழி என்ற ஒருத்தி அங்கே அமர்ந்திருக்கிறாள் என்ற உணர்வு துளிக்கூட இல்லாமல் ஏதோவொரு சிந்தனையுடன் அவளைக் கடந்து போனான்...

தேன்மொழி மனதுக்குள் நொறுங்கிப் போனாள்...

எந்தவித அடிப்படையும் இல்லாமல் அவள் கட்டிய காதல் கோட்டை கடைசியில் கடல் நீரில் கரையும் மணல் வீடாக ஆகிப் போனதா..?

பரிதவிப்புடன் அவள் பார்த்துக் கொண்டிருந்த போது.. கோவிலின் வாசலை அணுகிவிட்ட கண்ணதாசன் அவசரமாக அவளைத் திரும்பிப் பார்த்தான்...

அந்த ஒரு நொடியில் உயிர்த்தெழுந்தாள் தேன்மொழி.. அவள் எதை எதிர்பார்த்து காத்திருந்தாளோ.. அந்த ரகசிய சமிக்ஞை அவளுக்கு கிடைத்து விட்டது..

லேசான தலையசைவை கண்ணதாசன் அவளுக்கு உணர்த்தியே விட்டான்...

மீனாட்சியம்மன் கோவிலின் ஆலய மணி ஒலிக்க.. தேன்மொழி சந்தோசத்தில் கண்கலங்கி விட்டாள்...

“ஆரு அது..? தேன்மொழியா..? ஏன்த்தா.. உங்க அப்பா அம்மா இல்லாம தனியாவா கோவிலுக்கு வந்த..?”

தெரிந்த பெண்மணியொருத்தி நின்று கேள்வி கேட்டாள்.. அவளுக்குப் பதில் சொல்லியபடியே

தேன்மொழி திரும்பிப் பார்த்தபோது கண்ணதாசன் தங்கையிடம் எதையோ வினவியபடி வெளியே சென்று கொண்டிருந்தான்...

"ஆமா அப்பத்தா.. அம்மாவுக்கு காய்ச்சல்.. அதான் தனியா கோவிலுக்கு வந்தேன்.." தேன்மொழி விளக்கம் சொன்னாள்...

"பொழுது சாஞ்சிருச்சு.. காலாகாலத்தில வீட்டுக்கப் போயி சேரு தேனு... காலம் கெட்டுக்கிடக்கு..."

"நம்ம ஊருக்குள்ள நாமளே பயந்தா எப்படி அப்பத்தா..?"

"அடியாத்தி.. செல்வி பெத்த மக.. மணிமணியால்ல பேசுது.. இருக்கட்டும் ஆத்தா.. நம்ம ஊராவே இருந்தாலும்.. வயசுக்கு வந்த புள்ள நேரத்தில வீடு வந்து சேரலைன்னா உங்க ஆத்தாக்காரி கவலப் பட மாட்டாளா..? அதுக்காகவாவது வெரசா வீடு போயி சேராத்தா.."

'இனி வெரசா போகாம என்ன செய்யப் போறேன்..?'

தேன்மொழி மனதுக்குள் கேட்டுக் கொண்டாள்.. யாருக்காக அவள் தேங்கி நின்றாளோ.. அவனே கோவிலை விட்டுக் கிளம்பி விட்டான்.. இனி அவளும் கிளம்ப வேண்டியதுதானே...

மனம் இனிக்க அவள் வீட்டை நோக்கி எட்டி நடைபோட்டாள்..

# 183

## எனக்காக நீ காத்திருக்க...
## என் மனதில் ஆசைகொண்டேன்...

“இன்னைக்கு மெயில் செக் பண்ணிட்டிங்களா..?”

கையில் குறிப்பேடும்... பேனாவுமாக நின்ற பாவனாவிடம் வினவினான் அர்ஜீன்..

“யெஸ் சார்.. அர்ஜன்ட் மெயிலை உங்க ‘பெர்சனல் ஐ.டி’க்கு ஃபார்வர்டு பண்ணியிருக்கேன்.. யூசுவல் மெயில்ஸீக்கு ரிப்ளை பண்ணிட்டேன்.. போஸ்டில் அனுப்ப வேண்டிய ரிப்ளைஸை பிரிண்ட் அவுட் எடுத்து உங்க சைனுக்காக டேபிள்மேல் வைத்திருக்கேன்..” பணிவான குரலில் பதில் சொன்னாள் பாவனா..

“குட்.. ஸீபீடா வேலையைக் கத்துக்கிட்டிங்க..” பாராட்டியபடி கம்ப்யூட்டரை உயிர்ப்பித்தான் அர்ஜீன்...

அவனுடைய இன் பாக்ஸில் வந்திருந்த மெயில்களைப் பார்வையிட்டவன்.. அவற்றுக்கான பதில்களை வேக.. வேகமாகச் சொல்ல.. அவசரமாக அதை குறிப்பெடுத்துக் கொண்டாள் பாவனா.. அவள் அடுக்கி வைத்திருந்த பேப்பர்களை மின்னல் வேகத்தில்

படித்தவன்.. ஒரிரு கடிதங்களில் திருத்தம் சொல்லித் திருப்பிக் கொடுத்தான்.. மற்றவற்றில் கையெழுத்திட்டு அவளிடம் கொடுத்தான்..

அவற்றை வாங்கிக் கொண்ட பாவனா அறையை விட்டு வெளியேறாமல் தயங்கி நிற்க.. அவன் புருவங்கள் உயர்ந்தன...

"வாட்'ஸ் தி மேட்டர்..?"

"காவ்யா போன் பண்ணியிருந்தா சார்.."

பாவனா தயக்கத்துடன் சொல்ல.. அர்ஜீனுக்குள் ஒர்விதமான பொறாமை கலந்த கோப அலை பரவியது...

அவனும்தான் தினம் தினம் அவளுடைய போன் காலை எதிர்பார்க்கிறான்.. அவனிடம் பேசாதவள்.. அவளுடைய தோழியிடம் மட்டும் பேசுகிறாள்..

"ஓ..." ஒற்றைச் சொல்லில் பதிலளித்தான்...

"இத்தனை மாசமா பேசாதவ.. நேத்துத்தான் பேசினா சார்..."

"வாட்..?" ஆச்சரியமாக நிமிர்ந்தான் அர்ஜீன்...

பாவனாவிடம் காவ்யா பேசவே இல்லையா..?

"ஆர் யு ஷ்யூர்..?" அவனால் நம்ப முடியவில்லை...

"நிஜம்தான் சார்.. அவ வேலையை விட்டுப் போனதும் நான் போன் பண்ணினேன்.. ஸ்விட்ச் ஆஃப்ன்னு வந்தது.. லேண்ட் லைனுக்குக் கூப்பிட்டேன்.. அவளோட அண்ணன் எடுத்தார்.. காவ்யா மனசளவில நொறுங்கிப்

போயிருக்கா.. அதனால கொஞ்ச நாளைக்கு யாரும் அவளை டிஸ்டர்ப் பண்ண வேணாம்ன்னு சொன்னார்.. அதனால அவளை வீட்டில கூட போய் நான் பார்க்கல.. அப்பாவுக்கு டிரான்ஸ்பர் வந்ததும் அவளிடம் சொல்லிட்டுப் போகலாம்ன்னு வீட்டுக்குப் போனேன்.. பட்.. கண்ணதாசன் சாருக்கு திருநெல்வேலிக்கு டிரான்ஸ்பர் ஆகிருச்சு.. காவ்யாவும் அவ அண்ணன்கூடப் போயிட்டான்னு அவளோட அம்மா சொன்னாங்க.. என்கிட்டக்கூடச் சொல்லாம வெளியூருக்கு போயிட்டாளேங்கிற கோபத்தில நானும் அவளுக்கு போன் பண்ண டிரை பண்ணாம சென்னைக்கு வந்துட்டேன்...”

“ஓ.. ஐ.. ஸீ...”

“திடிர்ன்னு நேத்து அவ போன் பண்ணினதும் எனக்கு மனசே தாங்கலை.. நல்லாத் திட்டி விட்டேன்...”

அர்ஜீன் மௌனமாக பாவனா சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.. காவ்யாவைப் பற்றிய பேச்சில்.. அவளருகில் இருப்பதைப் போன்ற இதமான உணர்வு அவன் மனதில் படிந்தது...

“அவ பேசாம இருந்தா.. அப்புறமா எனக்கே பாவம்ன்னு தோணிப் போச்சு...”

“இங்கே என்னிடம் வேலை பார்க்கறிங்கன்னு அவளிடம் சொல்லீட்டிங்களா..?”

“இல்லை சார்.. எதற்கும் உங்ககிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிட்டுச் சொல்லலாம்ன்னு நினைச்சேன்...”

“சொல்ல வேண்டாம்..” சிந்தனையுடன் சொன்னான் அர்ஜீன்...

“ஏன் சார்..?” புரியாமல் கேட்டாள் பாவனா..

“காரணமாத்தான்..”

“இப்பவே அவகிட்ட சொல்லாம இருக்கிறதில கில்ட்டியா ஃபீல் பண்றேன் சார்.. இனியும் மறைக்கனும்னா எனக்குக் கஷ்டமா இருக்கும் சார்.. ஷி இஸ் மை பெஸ்ட் ஃபிரண்ட்...”

“ஸோ வாட்..? இதனால நீங்க அவளுக்கு கெடுதல் பண்றதா அர்த்தமில்லையே.. இதில நீங்க கில்ட்டியா ஃபீல் பண்ண எதுவுமேயில்லை பாவனா.. சம் ரீசன்ஸ்.. இப்போதைக்கு நீங்க இங்கே வேலை பார்க்கறிங்கன்னு அவளிடம் சொல்ல வேண்டாம்...”

“என்னவோ சார்.. ரொம்ப நாளைக்குப் பின்னாலே அவ பேசியிருக்கா.. அவகிட்டப் போயி முக்கியமான விவரத்தை மறைக்கிறோம்ன்னு உறுத்தலா இருக்கு...”

“நீங்க இதைச் சொன்னீங்கன்னா.. அவ திரும்பவும் உங்களிடம் பேசாம மௌனியா ஆனாலும் ஆகிருவா.. பரவாயில்லையா..?”

“அச்சச்சோ.. என்ன சார் இப்படிக் கேட்டுட்டிங்க..? இதுக்கு பரவாயில்லைன்னு நான் பதில் சொல்வேனா சார்..?”

“தெரியுதில்ல.. அதனால எதையும் பேசாதீங்க..”

"இது அநியாயம் சார்.. இதைப் பேசாதீங்கன்னு சொன்னீங்க.. ஓகேன்னு கேட்டுக்கிட்டேன்.. இப்ப என்னடான்னா எதையும் பேசாதீங்கன்னு சொல்றீங்க.. எதையும் பேசாம எப்படி சார் அவகிட்ட நான் பேச முடியும்..?"

"ஆல்ரைட்.. ஆல்ரைட்.." தலையை ஆட்டிச் சிரித்தான் அர்ஜீன்...

அவன் புன்னகையில் தெரிந்த வசீகரத்தில்.. காவ்யா கொடுத்து வைத்தவள் என்று நினைத்துக் கொண்டாள் பாவனா...

"எப்படியிருக்காளாம்..?" இயல்பாக கேட்பதைப் போல அர்ஜீன் கேட்டதில் பாவனாவுக்கு சிரிப்பு வந்தது..

"இதைக் கேட்டுட்டு உண்மையிலேயே அவ எப்படியிருக்கான்னு தெரிஞ்சுக்கிறதில உங்களுக்கு ஆர்வமில்லைன்னு நான் நினைத்துக்கனுமாக்கும்..?" புருவங்களை உயர்த்தினாள்..

"திஸ் இஸ் எ யூசுவல் என்கொயரி மிஸ் பாவனா.."

"நம்பிட்டேன்.."

இப்போது அவள் வாய் விட்டு சிரிக்க அவனும் கூடவே சிரித்தான்.. சிரித்து முடிந்ததும்.. கண்களில் யோசனையுடன்..

"உங்க பிரண்ட் என்னதான் சொல்றா..?" என்று கேட்டான்...

“நலம் விசாரிச்சா... நான் சென்னையில இருக்கிறதைச் சொன்னேன்... நீயும் என்னை விட்டுத் தொலைதூரமா விலகிப் போயிட்டியான்னு கேட்டா..”

அதைக் கேட்ட அர்ஜீனின் மனம் கனத்தது.. அந்த வார்த்தைகளில் ஒளிந்திருந்த சோகத்தில் அவன் துக்கப் பட்டான்.. அதில் தொனித்த தனிமையுணர்வில் மனம் கரைந்தான்...

“பிடிவாதக்காரி... திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேங்கிறா.. கிட்டப் போனா முறைச்சுக்கறா.. எட்ட வந்தா அழுது புலம்பறா.. பாடாய் படுத்தறா..” தன் போக்கில் சொன்னான்...

“அதிகமான காதலை உங்க மேல வைச்சிட்டாள்ல.. அதுதான்... அப்படி பிஹேவ் பண்றா... அன்பைக் கொடுக்கறதில அவ வள்ளல் சார்...” தோழியின் நினைவில் மனம் கனியச் சொன்னாள் பாவனா..

அர்ஜீன் புரிதலுடன் கூடிய பார்வையை பார்த்தான்.. ஓர் பெருமூச்சுடன் தோளைக் குழுக்கியவன்...

“டாடி பேசினது சரின்னு நான் சொல்லலை.. அதுக்காக.. என் காதலை வேண்டாம்ன்னு ஏன் அவ சொல்லனும்..? டாடி பேசினதை மறக்க முடியுமான்னு கேட்கிறா.. நான் மறக்கச் சொல்லலை.. அதுக்காக நான் அவளையும்.. அவ என்னையும் மறக்க முடியுமா பாவனா..?”

“முடியாது தான்...”

“வேற என்ன சொன்னா..?”

"என்னைப் பார்க்கனும் போல இருக்குன்னா..."

'என்னைப் பார்க்கனும் போல அவளுக்கு இல்லையா..?'

அர்ஜீன் மனதுக்குள் கேட்டுக் கொண்டான்.. அவளின் நினைவில் அவள் மீதான தேடுதல் அவன் மனதில் உற்பத்தியானது.. தொலைவிலிருந்தாவது அவளைப் பார்த்து விட வேண்டும் என்ற வேகம் தோன்றியது...

"சென்னைக்கு வான்னு சொல்ல வேண்டியது தானே.." தாபத்துடன் சொன்னான் அர்ஜீன்...

அதைப் புரிந்து கொண்ட பாவனையுடன் சிரித்தாள் பாவனா...

"அவளாவது.. சென்னைக்கு வருகிறதாவது.. அவ வீட்டைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டே கேட்கறிங்களே சார்.."

"பின்னே.. எப்படித்தான் அவ உங்களைப் பார்ப்பாளாம்..."

"அவ சென்னைக்கு வந்தாத்தான் நான் அவளைப் பார்க்க முடியுமா.? நான் மதுரைக்குப் போனாலும் அவளைப் பார்த்து விடுவேனே..."

"ஓ.. அப்படியொன்று இருக்கில்ல..."

"ஆமாம் சார்.. அதனால சித்திரைத் திருவிழாவுக்கு வான்னு அவ என்னை அழைச்சிருக்கா சார்..."

"சித்திரைத் திருவிழாவா..?"

“யெஸ்.. என்ன சார் மதுரையில கடை வாங்கியிருக்கீங்க.. சித்திரைத் திருவிழாவைப் பற்றித் தெரியாம இருக்கீங்க.. அது ஃபேமஸான திருவிழா சார்.. சுத்துப் பட்டி ஊரெல்லாம் மீனாட்சி கல்யாணத்தையும்.. அழகர் ஆத்தில இறங்கறதையும் பார்க்க மதுரையில கூடிரும் சார்...”

“ஐ ஸீ.. அப்படிப்பட்ட திருவிழாவா அது..?”

“ம்ம்ம்.. காவ்யா அதை விரும்பிக் கொண்டாடுவா.. தினமும் கோவிலுக்குப் போயிருவா...”

“ஐ ஸீ..”

மீண்டும் ஒரு ‘ஐ ஸீ’யை உதிர்த்தவன்.. தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தான்.. எதையோ நினைத்துக் கொண்டாவனாக...

“அந்தத் திருவிழா எப்போது வரும்..?” என்று கேட்டான்...

“என்ன சார் இப்படிக் கேட்டுட்டிங்க..? அதுக்குப் பெயரே சித்திரைத் திருவிழா.. சித்திரை மாதம் எப்போ வரும்..? மே மாதம் வரும் சார்...”

“ஓகே.. அப்ப உங்களுக்கு லீவ் கன்பர்ம்.. நீங்க உங்க பிரண்டைப் பார்க்க சித்திரைத் திருவிழாவுக்கு போய் விட்டு வரலாம்...”

“நிஜமாத்தான் சொல்கிறீங்களா சார்...”

“சந்தேகமிருந்தா உங்க கையைக் கிள்ளிப் பார்த்துக்கங்க...”

“வலிக்குமே..”

“வலிக்கனுமே.. அப்பத்தானே இது கனவில்லை.. நிஜம்ன்னு உங்களுக்கு கன்பர்ம் ஆகும்..?”

“வேலையில ஜாயின் பண்ணினவுடனே பத்து பதினைந்து நாள்களுக்கு சேலரியோடு லீவா.. ஐ கான்ட் பிலிவ் திஸ்...”

“என்னது.. பத்துப் பதினைந்து நாள்களா..?”

அர்ஜீனுக்கு தூக்கிவாரிப் போட்டது.. அது தெரியாமல் அவன் வாய் விட்டு விட்டது புரிந்து போக...

“அதானே பார்த்தேன்..” என்றாள் பாவனா...

“எதைப் பார்த்தீங்க..?”

“என்னடா.. சார்.. தாராளம் தண்ணிபட்ட பாடா... வேலையில ஜாயின் பண்ணினவுடனே.. இந்தா பிடிச்சுக் கோன்னு அநாசயமா பத்துப் பதினைந்து நாள்களுக்கு லீவை அள்ளிக் கொடுக்கிறாரேன்னு நினைச்சேன்.. இதான் விசயமா..? ஏன் சார்.. திருவிழான்னதும் நீங்க ஒருநாளோடு முடிஞ்சிரும்ன்னு நினைச்சீங்களா..?”

அர்ஜீன் பதில் சொல்லாமல் சிரித்தான்.. அவன் சிரிப்பே அவன் அப்படித்தான் நினைத்திருந்தான் என்பதைச் சொல்லிவிட...

“என்ன சார் இது..? நீங்க மதுரையில கடையை வாங்கி அதோட தொடர்ச்சியா.. மதுரையில பிறந்து வளர்ந்தவளையும் காதலிச்சு வருசம் ரெண்டாகப் போகுது..

இன்னும் சித்திரைத் திருவிழா எத்தனை நாள் நடக்கும்கிற விவரம் உங்களுக்குத் தெரியாதுன்னா எப்படி சார்..?"

"எனக்கு இது போல திருவிழாவுக்கு போயெல்லாம் பழக்கமில்லை பாவனா.. திருவிழான்னா ஒருநாள் நடக்கும்.. போக ஒரு நாள்.. வர ஒரு நாள்ன்னு மூன்றுநாள் லீவ் கொடுத்தால் போதும்ன்னு நினைச்சேன்..."

"நல்லா நினைச்சீங்க போங்க.. அப்படியெல்லாம் இல்லை.. மதுரையில நடக்கிற சித்திரைத் திருவிழா ஆற அமர ஒருவாரத்துக்குமேலேயே நடக்கும்.. இப்ப என்ன செய்யப் போகிறிங்க..? கொடுத்த லீவைப் பிடுங்கிக்கப் போகிறீங்களா..?"

# 184

## *தேரோடும் வீதியிலே...*
## *நீவரவே ஆசைகொண்டேன்...*

"**ஊ**ஹீம்.. கொடுத்ததை திரும்ப வாங்கிக்கிறவன் இல்லை இந்த அர்ஜீன்..."

"அப்பாடி.. பிழைச்சேன்.. அதிகப்படியா சந்தோசப் பட்டுட்டோமோன்னு பயந்தே போனேன்.. ஹீரோஸ் அல்வேஸ் ஹீரோஸ்தான்.. தேங்க் யு சார்..."

பாவனா குதூகலமாக அறையை விட்டு வெளியேறி விட்டாள்.. அர்ஜீன் செல்போனை எடுத்து.. அதில் பாதுகாக்கப் பட்டிருந்த படங்களில் காவ்யாவின் படத்தை வரிசைப் படுத்திப் பார்த்தான்..

ஒரு படத்தில் மஞ்சளும்.. சிகப்பும் கலந்த கண்டாங்கி புடவையின் சாயலில் உள்ள ஜரிகைக் கரையிட்ட பட்டுப் புடவையுடுத்தி.. மல்லிகைப் பூ தோளில் வழிய அவள் நின்று கொண்டிருந்தாள்..

'அசத்தறா..' அர்ஜீன் அனல் பெருமூச்சை விட்டான்..

அந்தப் புடவையை அவனுக்காகத்தான் அவள் கட்டிக் கொண்டு வந்தாள்.. ஒரு பாடலில்.. 'சின்னாளப் பட்டியிலே கண்டாங்கி எடுத்து, என் கையாலே கட்டி விடவா..?' என்ற வரிகள் வந்தன.. அவன் இளங்கோவிடம் அந்தச் சேலை எப்படியிருக்கும் என்ற சந்தேகம் கேட்டுக் கொண்டிருந்தான்.. அப்போதுதான் காவ்யா அவனிடம் நேரடியாக பேச மாட்டாளே.. இளங்கோ அவனுக்குத் தெரிந்த வகையில் விளக்கம் சொன்னான்.. மறுநாளே அவள் அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு கடைக்கு வந்தாள்...

அர்ஜீன் செல்போனில் அந்த பாடலை ஒலிக்கவிட்டான்...

*"அடி அஞ்சாறு ரூபாய்க்கு மணி மாலை..*
*உன் கழுத்துக்கு பொருத்தமடி..*

*அடி நம்முரு ராசாவும் பார்த்தாலே..*
*அவன் கண்ணுக்கு வருத்தமடி..*
*அடி சின்னாளபட்டியில கண்டாங்கிச் சேல*
*என் கையால கட்டி விடவா..?*
*என் அத்த.. அவ பெத்த.. என் மெத்த..*
*அடி ராக்கம்மா.. கொத்தோடு முத்தம் தரவா..?"*

அறையில் தவழ்ந்து நெறிந்த பாடல் வரிகளில் அவன் மனம் சிக்கித் தவித்து ஊசலாடியது.. அந்த வார்த்தைகளின் ரம்யத்தில் அவன் மனம் கரைந்து போக விரும்பினான்..

அவளுக்கென்று அவன் வைர மாலை வாங்கிக் கொடுப்பான்.. அது அவள் கழுத்துக்கு பொருத்தமாக இருக்கும்.. அவள் விரும்பிய வண்ணத்தில் பட்டெடுத்துக் கொடுத்து.. அதை அவன் கையால் கட்டி விடவும் செய்வான்...

அந்த நொடிகளில் உணரும் அவனது ஸ்பரிசத்தில் அவள் எப்படி மயங்கிப் போவாள்..?

அர்ஜீன் மனக் கண்ணில் அந்தக் காட்சியைக் கொண்டுவந்து நிறுத்தினான்.. அவளுக்கு அவன் சேலை கட்டி விட முனைகிறான்... அப்போது பார்த்து அவன் மனச்சாட்சி.. கனவுக் காட்சியை நிறுத்தி வைத்து விட்டு.. அவனைப் பார்த்து கேட்டு வைத்தது...

'டேய்.. முதலில் உனக்கு சேலை கட்டி விடத் தெரியுமா..? அதைச் சொல்லு...'

அர்ஜீன் பேந்தப் பேந்த விழிக்க.. கனவுக் காட்சி.. பேக்-அப் ஆனது.. அர்ஜீன் வாய் விட்டுச் சிரித்தான்...

"ஹா.. ஹா.."

அவன் சொன்ன மெயிலை தயார் பண்ணிக் கொண்டு வந்த பாவனா.. அறையில் ஒலித்த பாடலிலும்.. அதில் கலந்த அவன் சிரிப்பிலும்.. வியந்து நின்றாள்..

"சார்..?!..."

***"அடி.. என்னடி ராக்கம்மா..***
***பல்லாக்கு நெளிப்பு..***
***என் நெஞ்சம் குலுங்குதடி..***
***சிறு கண்ணாடி மூக்குத்தி..***
***மாணிக்கச் சிகப்பு...***
***மச்சானை மயக்குதடி..."***

அவன் செல்போனில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலை உன்னிப்பாக கேட்டவளின் முகத்தில் ஆச்சரிய குறிகள் அணிவகுத்து நின்றன..

அர்ஜீனைப் போன்ற மேலை நாடுகளில் சுற்றும் நாகரிகப் பழக்கம் கொண்ட மேல்தட்டு கோடிஸ்வர தொழிலதிபன் இது போன்ற பாடலையும் ரசித்துக் கேட்பான் என்று அன்றுதான் அவள் அறிந்தாள்...

அர்ஜீன் பாடலை அணைத்து விட்டு.. அவள் நீட்டிய பேப்பர்களை வாங்கி சரிபார்த்துக் கையெழுத்திட்டான்..

"முதல்ல சேலை கட்டி விடக் கத்துக்கனும்.." ஏதோ ஓர் நினைவில் அவன் சொல்ல...

“சார்..?!...” என்று மீண்டும் வியப்பில் வீழ்ந்தாள் பாவனா...

“நத்திங்.. வேற ஒரு நினைவு..” அர்ஜீன் சமாளித்தான்...

அவள் நம்பாத பார்வை பார்த்துவிட்டு வெளியேறினாள்.. என்ன நினைத்துக் கொண்டிருப்பாள்.. என்று அவன் யோசித்தான்.. வரவர நம்ம பாஸ் ஒரு மார்க்கமாகத்தான் மாறிக்கிட்டு இருக்கிறார் என்று நினைத்திருப்பாளோ என்று நினைத்தவனுக்கு சிரிப்பு வந்தது...

‘ஏண்டி என்னை இப்படி படுத்தற..?’ மனதுக்குள் காவ்யாவை அழைத்து நியாயம் கேட்டான்...

**ஆ**னந்தி போனில் பேசிக் கொண்டிருந்தாள்.. அவள் முகபாவத்தையும் பேசும் வார்த்தைகளையும் கவனித்தபடி.. பரபரப்பான மனநிலையுடன் அமர்ந்திருந்தாள் சுந்தரி...

“ஈஸிட்..? சித்தியுமா..?” என்றாள் ஆனந்தி...

“என்னடி சொல்கிறாங்க.. உன் சித்தியை ஏன் இழுக்கிற..?” சுந்தரி கேட்டாள்..

“சித்தப்பா சரின்னு சொல்லிட்டாரா..?” ஆனந்தி குரலில் வியப்பைக் காட்டினாள்..

“எதுக்குடி உன் சித்தப்பா சரின்னு சொன்னார்..?” சுந்தரி ஆவலுடன் கேட்டாள்...

"ஆனாலும் பாட்டி.. உங்களுக்கு இப்பத்தான் இளமை திரும்புதுன்னு நினைப்பு.." ஆனந்தி கேலியாக சொன்னாள்..

"எதுக்குடி பாட்டியை கேலி பண்ற..?" சுந்தரி கடிந்து கொண்டாள்..

"தூள் கிளப்பப் போறிங்கன்னு சொல்லுங்க.." ஆனந்தி கட்டிலில் வாகாக உட்கார்ந்து மடிமீது தலையணையை வைத்து அதில் கையை ஊன்றிக் கொண்டாள்...

அவளுக்கு எதிரில் அமர்ந்து.. திருநெல்வேலியில் இருக்கும் அம்புஜத்துடன் ஆனந்தி அப்படியென்ன பேச்சு வார்த்தையை நடத்திக் கொண்டிருக்கிறாள் என்று ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்த சுந்தரிக்கு.. மகள் பேசும் பேச்சின் சாராம்சம் எதுவென்று புரியவில்லை.. அதனால் அவள் தலைமுடியை பிய்த்துக் கொள்ளாத குறையாக ஆர்வத்துடன் கேள்வி கேட்க... அதற்கு பதில் சொல்லாமல் பொறுமையாக இருக்குமாறு சைகை செய்தபடி பேச்சைத் தொடர்ந்தாள் ஆனந்தி...

"ஆக.. சித்திரைத் திருவிழாவுக்கு மதுரைக்குப் போகனும்னு நீங்களும் சித்தியும் பிளான் போட்டுட்டிங்கன்னு சொல்லுங்க..." ஆனந்தி.. சுந்தரியைப் பார்த்துக் கண் சிமிட்டியபடி அம்புஜத்திடம் பேச...

"ஓ..." என்று முகம் முழுவதும் வெளிச்சத்தை வாங்கினாள் சுந்தரி...

“கதை இப்படிப் போகுதா..?”

தாயின் கேள்வியைக் கேட்காமல் அம்புஜத்திடம் பேச்சைத் தொடர்ந்து கொண்டிருந்தாள் ஆனந்தி...

“எப்ப கிளம்பப் பேறிங்க பாட்டி..?”

“.....”

“யார்.. யார்.. கிளம்பறிங்க..?”

“......”

“ஆமாமில்ல.. நீங்களும் சித்தியும் போறிங்கன்னு சொன்னீங்கள்ல.. அதுக்குள்ள மறந்துட்டேன் பாருங்க...”

“......”

“உங்களைப் போல வருமா பாட்டி..? இந்த வயதிலயும் நீங்க அபார ஞாபக சக்தியோடதான் இருக்கீங்க.. எனக்கு அது வரலைதான்.. என்ன செய்றது..?”

“......”

“வல்லாரகீரைதானே.. மார்க்கெட்டில வலை போட்டு தேடி வாங்கிட்டு வரச் சொல்லிட்டாப் போச்சு...”

“......”

“உங்க பேரனை அனுப்புறேனா...? நோ.. நோ.. வேலைக்கு இருக்கிற பெண் போய் வாங்கிட்டு வருவா.. மத்தபடி உங்க பேரனை வேலை வாங்குவேனா பாட்டி..”

“......”

“வல்லாரக் கீரையை விடுங்க.. சித்திரைத் திருவிழாவுக்கு வாங்க.. நீங்களும் சித்தியும் மட்டும் தனியாப் போகிறதுன்னா.. எப்படிப் போவீங்க...?”

“......”

“அது தெரியுது பாட்டி.. பிளைட்டா..? டிரெயினா..? காரான்னு கேட்டேன்...”

“......”

“கார்த்திக் வரமாட்டான்னு சொன்னீங்க..?”

“......”

“உங்களை விட்டுட்டு திரும்பிருவானா..?”

“......”

“ஓகே பாட்டி.. நீங்க சொல்கிறதைக் கேட்கும் போது எங்களுக்கும் சித்திரைத் திருவிழாவுக்கு வரனும்னு ஆசையாய் இருக்கு...”

“......”

“அப்படியா சொல்கிறிங்க..? அதுவும் சரிதான்.. அர்ஜீன் எப்படியும் மதுரைக் கடையைப் பார்க்கப் போவான்... அப்ப அம்மாவும்... நானும்... அவன்கூடத் தொற்றிக்கப் போறோம்...”

“......”

“குழந்தைகள் இல்லாமலா...? அதுகளுக்கு மே வெகேசன் டைம்தான பாட்டி.. அவங்களும் ஹாலிடேஸை என்ஜாய் பண்ணுவாங்கள்ல...”

“......”

“வருசாவருசம் மே வெகேசனுக்கு ஃபாரின் டூர்தான் அடிக்கிறோம்.. ஜஸ்ட் எ சேன்ச்.. இந்த வருச மே வெகேசனுக்கு மதுரையில நடக்கிற சித்திரைத் திருவிழாவுக்கு டூர் அடிக்கலாமே...”

“......”

“ஆகட்டும் பாட்டி.. ஸீ யு.. பை...”

ஆனந்தி செல்போனை அணைத்து விட்டு.. சுந்தரியைப் பார்த்துக் கட்டை விரலைத் உயர்த்திக் காட்டினாள்...

“டன் மாம்...”

ஓரளவிற்கு விவரம் புரிந்தாலும்.. முழுதாக விவரங்களைக் கேட்கும் பரபரப்பில்....

“சொல்லு.. சொல்லு..” என்று பரபரத்தாள் சுந்தரி..

“மாம்... பாட்டியும்.. சித்தியும்.. மதுரையில நடக்கிற சித்திரைத் திருவிழாவுக்கு.. காவ்யாவோட வீட்டுக்கு கெஸ்டா போகப் போறாங்க...” சந்தோசத்துடன் சொன்னாள் ஆனந்தி...

“காவ்யாவோட வீட்டுக்கா..?”

“யெஸ் மாம்.. சித்தப்பாவும் ஓகேன்னு சொல்லிட்டாராம்.. கார்த்திக் அவங்க கூடப் போய் மதுரையில் விட்டுவிட்டு பிளைட்டில் திருநெல்வேலிக்கு ரிட்டர்ன் ஆகிருவானாம்... கார்.. டிரைவரோட.. பாட்டிக்காவும் சித்திக்காவும்.. மதுரையிலேயே இருக்குமாம்.. அவங்க

திரும்பி வர்றப்ப.. கார்த்திக் பழையபடி பிளைட்டில மதுரைக்கு வந்து.. அவங்களைக் கூப்பிட்டுக்கிட்டுப் போவானாம்...”

ஆனந்தி விளக்கமாகச் சொல்லச் சொல்ல.. சுந்தரி யோசனையானாள்...

“என்னம்மா..?” புருவங்களை உயர்த்தினாள் ஆனந்தி...

“இல்ல.. உன் சித்தப்பா.. இப்படியெல்லாம்.. பழகினவங்க வீட்டுக்கு.. வீட்டுப் பெண்களை விருந்தாளியாய் போக விட மாட்டாரே.. இப்ப எப்படி இதுக்குச் சம்மதிச்சார்..? அதுவும் உள்ளூரில் இல்லாம.. வெளியூருக்கு.. ஊர் விட்டு ஊர் திருவிழான்னு போகிறாங்க.. அதான்.. எப்படின்னு யோசிக்கறேன்...”

“எனக்கும் அது புரியலைத்தான்ம்மா...”

“என்னவோ போ.. நமக்கு என்ன வேண்டும்..? உன் பாட்டிகூட அந்தப் பெண்ணுக்கு இருக்கிற பழக்கத்தை வைத்து.. அவகூட நாமும் பேசிப் பழகியாகனும்...”

“அதுக்கு நாமளும் சித்திரைத் திருவிழாவுக்கு போயாகனும்...”

“டன்...” என்றாள் சுந்தரி...

ஆனால் அது அவ்வளவு எளிதான ஒன்றாக அவர்களுக்கு அமைந்துவிடவில்லை.. பார்த்தசாரதிக்கு மனைவியான பின்பு.. எதையும் எளிதாகச் செய்துவிட சுந்தரியால் முடியுமா..?

# 185

*சின்னச் சின்னப் பார்வையிலே...*
*நீயெனை சிறைபிடிக்க ஆசைகொண்டேன்...*

இரவு நேரத்தின் ஆகாயம் நிர்மலமாக பரந்து விரிந்திருந்தது.. அதன் கருநீலப் பரந்த வெளியில் கார்த்திகைத் திருநாளின் அகல் விளக்குகளைப் போல நட்சத்திரங்கள் ஒளிர்ந்து கொண்டிருந்தன.. அவற்றின் மையத்தில் வட்ட வடிவ வெள்ளித் தட்டினைப் போல முழுநிலவு பவனியைத் தொடங்கியிருந்தது...

கண்ணதாசன் மொட்டை மாடியின் தனிமையில் உலவிக் கொண்டிருந்தான்.. மெலிதான கொழுசின் சப்தத்தில் அவன் நடைறின்றது.. மாடிப் படிகளை கேள்வியுடன் பார்த்தான்.. அங்கே காவ்யா வந்து கொண்டிருந்தாள்..

‘இந்நேரத்தில இது எதுக்கு மாடிக்கு வருது..?’

தங்கை ஒருவேளை தனிமையை நாடி வந்திருப்பாளோ என்று அவன் நினைத்தான்.. அவனைக் கண்டதும் அப்படியே நின்று விடுவாள்.. அல்லது.. திரும்பிப் போய் விடுவாள் என்று நினைத்திருந்தவனின் அருகில் வந்த காவ்யா.. வெகு இயல்பாக...

“நினைச்சேன்.. நீ இங்கேதான் இருப்பேன்னு..” என்று சொல்லி விட்டு புன்னகை செய்தாள்...

அவனைத் தேடித்தான் அவள் வந்திருக்கிறாள் என்றதும் கண்ணதாசனின் புருவங்கள் முடிச்சிட்டன.. தங்கை என்ன பேசப்போகிறாள் என்ற யோசனையுடன் அவன் ...

“சொல்லுப்பா.. என்ன விசயம்..?” என்றான்..

காவ்யா உடனடியாக அவனது கேள்விக்கான பதிலைச்சொல்லி விடவில்லை.. மொட்டை மாடியின் அகன்ற சுற்றுச்சுவரில் சாய்ந்து அமர்ந்தவள்...

“சிலுசிலுன்னு காத்து வருதில்ல..?” என்று தமையனிடம் கேட்டாள்...

கண்ணதாசனுக்கு வியப்பாக இருந்தது...

‘தங்கச்சியென்ன காத்து வாங்கவா மொட்டை மாடிக்கு வந்திருக்குது..?’

அதை நம்ப அவன் தயாராக இல்லை.. அதுவும் கோவிலில் தங்கராஜைப் பார்த்த பின்பும்.. அவன் சொன்னதைக் கேட்ட பின்பும்.. அவள் காற்றாட மொட்டை மாடிக்கு வருவாள் என்று கனவிலும் அவன் நினைக்க மாட்டான்...

இருந்தும் அவன் காவ்யாவின் அருகிலிருந்த சுற்றுச் சுவரில் ஏறி அமர்ந்தான்.. இரவு நேரத்தின் இதமான காற்றை அனுபவித்து ரசித்தபடி...

“ஆமாம்ப்பா..” என்று சொன்னான்...

காவ்யா அண்ணாந்து வானத்தைப் பார்த்தாள்.. நட்சத்திரங்களை எண்ணுபவள் போல அதை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தவள்..

“பாரதியார் கவிதை நினைவுக்கு வருதில்லண்ணே..” என்று கேட்டாள்...

அப்போதிருந்த மனநிலையில் கண்ணதாசனுக்கு பாரதியாரின் கவிதைகளில் எந்தக் கவிதையும் நினைவுக்கு வரவில்லை...

“எந்தக் கவிதைப்பா..?” என்று அவன் கேட்டுவிட்டான்..

*“பட்டுக் கருநீலப் புடவை..*
*பதித்த நல்வயிரம்...*
*நட்ட நடுநிசியில் தெரியும்..*
*நட்சத்திரங்களடி...*
*சுட்டும் விழிச்சுடர்தான்..*
*கண்ணம்மா..*
*சூரிய சந்திரரோ...?”*

காவ்யா கவிதை வரிகளை அழகாகச் சொன்னாள்.. அதை அனுபவித்துக் கேட்டவனுக்கு அந்த கவிதைப் பறிமாற்றம் புதுமையாகவும்.. இனிமையாகவும் இருந்தது..

“அற்புதம்...” என்றான் கண்ணதாசன்...

“எப்படித்தான் இப்படி ரசிச்சு.. உணர்ந்து எழுதி வைச்சிருக்காரோ.. பாரதிக்கு நிகர் பாரதிதான்ப்பா...” என்று தொடர்ந்து சொன்னான்...

"ஆமாண்ணே.. கண்ணம்மாவைப் பத்திப் பாடனும்னா அவருக்கு கரும்பு சாப்பிடறதைப் போல அவ்வளவு இனிப்பா இருக்கும் போல... சந்தமும்.. சொந்தமும்.. போட்டி போட்டுக்கிட்டு நீ முந்தி.. நான் முந்தின்னு.. முன்னால வந்து கொட்டும்..."

"நீ சொல்றது சரிப்பா.. அவரோட 'சின்னஞ்சிறு கிளியே...'வை மறக்க முடியுமா..?"

"அதுகூட குழந்தையைக் கொஞ்சற பாட்டுண்ணே.. அவர் கண்ணம்மாவை காதலியா நினைச்சுப் பாடற பாட்டுக்கள்தான் தூள் பரத்தும்..."

"ஆமாம்ப்பா.. காற்று வெளியிடை கண்ணம்மான்னு ஒரு பாட்டு எழுதியிருப்பாரே..."

*"நீயென தின்னுயிர் கண்ணம்மா...*
*எந்த நேரமும் நிந்தனைப் போற்றுவேன்..*
*துயர் போயின.. போயின.. துன்பங்கள்..*
*நின்னைப் பொன்னென கண்டபொழுதிலே..*
*எந்தன் வாயினிலே அமுதூறுதே...*
*கண்ணம்மாவென்ற பேர்*
*சொல்லும் போதிலே...*
*எந்தன் வாயினிலே அமுதூறுதே..*
*உயிர் தீயினிலே வளர்சோதியே..*
*என்றன் சிந்தனையே.. என்றன் சித்தமே..*
*இந்தக் காற்று வெளியிடை கண்ணம்மா...*
*நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்..."*

காவ்யா மெல்லிய குரலில் பாடிக் காண்பிக்க.. ரசித்துக் கேட்டான் கண்ணதாசன்...

“நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி கண்ணம்மான்னும் பாடியிருப்பாரே...”

“நிறையப் பாடியிருக்கார்.. கண்ணம்மா அவருக்கு காதலி.. ஆனா அண்ணே.. ஒன்னை நினைச்சுப் பாத்தியா..?”

“என்னப்பா..?”

“கண்ணம்மா கற்பனையில மட்டும்தான் அவருக்குச் சாத்தியப்பட்டா.. நிசத்தில.. செல்லம்மாதானே அவருக்கு மனைவியா வாய்ச்சாங்க...?”

“காவ்யா...?”

“இரண்டு பேரும் ஒன்னு போல மனதோட வாழ்ந்தாங்களாண்ணே.. செல்லம்மா சராசரிப் பெண்.. அவங்களோட எதிர்பார்ப்புகளும்.. தேவைகளும் வேறு.. மத்தவங்களைப் போல அவங்க புருசனும் நிறைய சம்பாதிக்கனும்.. ஊர் மெச்ச வாழ்ந்து காட்டனும்.. அவங்களையும் குழந்தைகளையும் நல்ல முறையில பார்த்துக்கனும்.. இப்படி அவங்களுக்கான எதிர்பார்ப்புகள் எல்லாமே ஒரு சராசரிப் பெண்ணோட எதிர்பார்ப்புகளா இருந்தது.. அதை நிறைவேத்த பாரதியால முடியல.. மத்தவங்ககிட்டயிருந்து மாறுபட்ட புருசனின் மனதைப் புரிஞ்சுக்க முடியாம.. அவங்க திண்டாடினாங்க.. அவங்க மனசைப் புரிஞ்சுக்காம பாரதியும் கவிதையில மூழ்கிப் போயிட்டாரு...”

"ஆமாம்ப்பா..."

"கற்பனைக் காதலியோட கவிதைகளில் வாழ்ந்துட்டு அவர் போயிட்டாரு.. அந்த நிலைமை உனக்கும் வர வேண்டாம்ண்ணே..."

"காவ்யா..."

கண்ணதாசனின் மனதிலிருந்த புதிர் அவிழ்ந்து விடை வெளிப்பட்டு விட்டது... எதற்காக அவனைத் தேடிக் காவ்யா மொட்டை மாடிக்கு வந்து நின்றாள் என்ற விவரம் அவனுக்கு விளங்கி விட்டது..

'ஆனா.. இது எப்படி என் மனசைக் கண்டு பிடிச்சது..?'

அவன் வானத்தைப் பார்த்தான்.. கண்சிமிட்டிய நட்சத்திரக் கூட்டம்.. அவன் மனதிலிருந்த கேள்விக்கு விடையளிக்கவில்லை.. காவ்யா மெதுவான குரலில் பேசினாள்...

"தேனு அருமையான பொண்ணுண்ணே..."

"யாரு இல்லைன்னு சொன்னது..? அதப்பத்தி நமக்கென்னப்பா..?"

"அது மனசு பூவைப் போல மென்மையானதுண்ணே.."

"இல்லைன்னு நான் சொல்லலை யேப்பா.. அது மனசைப் பத்தி நாம ஏன் பேசனும்னுதான் கேக்கறேன்.."

"ஏன்னு உனக்குத் தெரியாதா..?"

காவ்யாவின் ஆழ்ந்த குரலின் கேள்வியில் அமைதியிலிருந்தான் கண்ணதாசன்.. இதற்கு அவன் என்ன பதிலைக் கூறுவான்..?

அலைபாயும் அவன் மனதை காவ்யா அறிவாளா...? அவன் மனதில் தேன்மொழியின் மீது ஒரு ஈர்ப்பு தோன்றியிருப்பது என்னவோ உண்மைதான்.. அதை ஒப்புக் கொண்டால் அந்த ஆசை மிக எளிதாக நிறைவேறி விடக்கூடிய ஒன்றுதான்.. என்னதான் துரியோதனனும்.. தேவராஜனும் அடாவடிக்காரர்களாக இருந்தாலும்.. தேன்மொழி மிகவும் தன்மையான பெண் என்று அன்னபூரணியே சொல்லியிருக்கிறாள்...

“சேற்றில் மலர்ந்த செந்தாமரை...”

சிவதாணுவும் சான்றிதழ் கொடுத்திருக்கிறார்...

விவரம் அறிந்தால் அவர்கள் கொஞ்சமாக யோசித்தாலும் கண்ணதாசனின் விருப்பத்தை உடனடியாக நிறைவேற்றி விடுவார்கள்... தூரத்துச் சொந்தமான கண்ணதாசனுக்கு தேன்மொழியைப் பெண் கேட்டால்.. துரியோதனனும் நடந்ததையெல்லாம் மறந்துவிட்டு.. விழுந்தடித்துக் கொண்டு பெண்ணைத் தந்து விடுவார்...

‘ஆனால்...?’

கண்ணதாசனின் மனம் இறுகியது...

“சொல்லுண்ணே..”

“எதைச் சொல்லப்பா..?”

“உன் மனசில தேன்மொழி இல்லைன்னு சொல்லு..”

"இதெல்லாம் என்ன பேச்சுன்னு பேசறப்ப..? அது பாவம்.. கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணு..."

"யார் கூட கல்யாணம் ஆக வேண்டிய பொண்ணுண்ணே..?"

கண்ணதாசனால் பதில் சொல்ல முடியவில்லை.. அவன் நிராகரித்தால் தேன்மொழிக்கு வேறு ஒருவனுடன் திருமணம் நடந்து விடும்தான்...

அதை நினைத்துப் பார்க்க அவனால் முடியவில்லை..

"இப்ப எதுக்காகப்பா இந்தப் பேச்சைப் பேசனும்.. வா.. தூங்கப் போகலாம்..."

"இல்லைண்ணே... எனக்கொரு முடிவு தெரிஞ்சாகனும்..."

என்னடா இது வம்பாப் போய் விட்டது என்று தலை நோவு கொண்டான் கண்ணதாசன்.. இதில் முடிவு தெரிய என்ன இருக்கிறது.. இல்லை.. முடிவைத் தெரிந்து கொண்டு காவ்யா என்னதான் செய்யப் போகிறாள்..?

"ஏம்ப்பா.. நம்ம வீட்டுப் பேச்சுக்கு ஒரு முடிவு தெரியனுமுன்னு நீ சொன்னா அதில ஒரு அர்த்தமிருக்குது.. அடுத்த வீட்டுப் பேச்சுக்கு ஒரு முடிவு தெரியனும்னா அதில என்னப்பா அர்த்தமிருக்கு..?"

"அடுத்த வீட்டுப் பேச்சா..? இல்ல.. அது அடுத்த வீட்டுப் பொண்ணா..?"

"ரெண்டும் ஒன்னுதானப்பா..?"

கண்ணதாசன்.. எங்கோ.. தொலைவில் தெரிந்து தொடுவானத்தை உற்று நோக்கியபடி சொன்னான்...

“உன் மனசைத் தொட்டுச் சொல்லுண்ணே.. அது அடுத்த வீட்டுப் பொண்ணா..?”

“நீ இப்படிக் கேக்கிறத அந்தத் துரியோதன் கேட்டு வைச்சாருன்னா.. வீச்சருவாளத் தூக்கிக்கிட்டு சண்டைக்கு வந்திருவாருப்பா.. அதனால.. வேற பேச்சு இருந்தாப் பேசு..”

“இதப் பேசத்தான் நான் வந்தேன்... அந்தத் துரியோதனன் ஒன்னும் வீச்சரிவாளத் தூக்க மாட்டாருண்ணே.. அதுக்குப் பதிலா தாம்பூலத் தட்டத் தூக்கிக்கிட்டு நம்ம வீட்டுக்கு சம்பந்தம் பேச வருவாரு..”

“அவர யாரும் இங்கே வெத்திலை பாக்கு வைச்சு அழைக்கலை.. நீ எழுந்திரு.. கீழே போகலாம்...”

“நீ போ.. நான் வரலை...”

காவ்யா பிடிவாதமாக முழங்கால்களைக் கட்டிக் கொண்டு அங்கேயே அமர்ந்து விட்டாள்.. அவளை எப்படி எழுப்பி அழைத்துச் செல்வது என்று புரியாமல் திகைத்தான் கண்ணதாசன்..

“என்னப்பா.. இப்படி அடம் பிடிக்கற...?”

அவன் கேள்விக்கு தலை நிமிர்ந்து பார்த்த காவ்யாவின் கண்களில் மின்னிய கண்ணீர் துளிகள் அந்த இருளிலும் பளபளத்தன...

# 186

## *வைகைக் கரையினிலே – நீ..*
## *வந்துறங்க ஆசைகொண்டேன்...*

“**எ**ங்கே.. என் தலைமேல கை வைச்சுச் சொல்லு.. உனக்கு தேன்மொழி மேல ஆசையில்ல..?”

காவ்யா முழந்தாளிட்டு கண்ணதாசனின் கரம் பிடித்து தன்தலை மேல் வைத்துக் கேட்டாள்...

கண்ணதாசன் கையை உறுவிக் கொண்டான்.. பதில் சொல்லவில்லை.. கனத்த மௌனம் ஒரு போர்வையாக அவர்கள் மீது விழுந்து கவிந்தது..

பாசக்கார அண்ணன் அவன் மனதிலிருக்கும் காதலை வெளியில் சொல்லாமல் மறைப்பதற்கு தான்தான் காரணமோ என்ற குற்ற உணர்வில் காவ்யா தவித்துப் போனாள்...

காதல் தோல்வியால் மனம் நொந்து போயிருக்கும் தங்கை அவன் மனதிலிருக்கும் காதலைப் பற்றிக் கவலைப் படுகிறாளே என்று கண்ணதாசன் தவித்துப் போனான்...

“இதப்பாருடா..” கண்ணதாசன் மௌனத்தைக் கலைத்தான்..

“இன்னார்க்கு இன்னார்ன்னு விதி எழுதி வைச்சிருக்கு.. இதில நீயும் நானும் குழம்பிக்கறதில ஒரு அர்த்தமுமில்ல.. வாம்மா.. தூங்கப் போகலாம்...”

“படுத்தா உறக்கம் வரனும்.. அப்ப தூங்கப் போகனும்னு நீ சொல்றதில ஒரு அர்த்தமிருக்கும்.. உனக்கும் சரி.. எனக்கும் சரி.. படுத்தா உறக்கம் வரப் போறதில்ல.. அதுக்கப்புறமும் எதுக்காகண்ணே.. தூங்கப் போகலாம்.. தூங்கப் போகலாம்ன்னு அடம் பிடிக்கிற..?”

“நீ அடம் பிடிக்கறன்னு நான் சொன்னதுக்கு பதிலுக்கு பதில் சொல்றியா..?”

“அப்படியே வைச்சுக்க.. எனக்கென்ன ஆச்சு..? அண்ணே.. உனக்குத்தான் தேனைப் பிடிச்சிருக்கில்ல.. நான் அம்மா.. அப்பாகிட்டப் பேசறேன்.. அவங்க உனக்காக தேன்மொழியைப் பொண்ணு கேப்பாங்க.. கல்யாணத்தைப் பண்ணிக்கண்ணே.. அது முகத்தைப் பாத்தா பாவமா இருக்குண்ணே.. அதுவும் பெரிய வீட்டில பிறந்த பொண்ணுதான்.. துரியோதனன் கடையை வித்தாலும்.. புதிசா ஒரு கடையைத் தொடங்கிட்டுத்தான் கடையை வித்தாரு.. உள்ளூரில இன்னமும் பேராத்தான் பொழைக்கிறாரு.. கிராமத்தில தோப்பும்.. துரவும் எள் அளவும் குறையாம அப்படியேதான் இருக்கு.. நிரக்க சீர் செய்வாங்கண்ணே...”

இது சீர் பற்றிய பிரச்னையா என்று கண்ணதாசன் தலையைப் பிடித்தான்.. தேன்மொழியைப் போன்ற

பெண்ணிற்கு சீர் வேண்டும் என்று கேட்க அவனென்ன முட்டாளா..?

"ஏம்ப்பா.. உனக்கு நம்ம வீட்டில எம்புட்டுச் சீர் செய்வாங்கன்னு அந்த அர்ஜீன் உன்மேல மனசை வைச்சிருக்கான்..?" கண்ணதாசன் கேட்டேவிட்டான்...

அவனும்தான் எத்தனை நேரத்துக்கு தலை நோவைப் பொறுக்க முடியாமல் தலையைத் தலையைப் பிடித்துக் கொள்வான்..?

"அண்ணே..." காவ்யா பதில் பேச முடியாமல் வாயடைத்துப் போனாள்...

"தேன்மொழி மாதிரி மனசு பூரா அன்பை நிரப்பி வைச்சிருக்கிற பொண்ணுக்கு சீர் செனத்தி எதுக்கும்மா..?"

"பின்ன எதுக்காக கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிற..? உன் காதலுக்குத்தான் எந்தத் தடையுமில்லையே.. உன் மனதை நீ சொன்னா அம்மா அப்பா மறுத்துப் பேசப் போறதில்ல.. நீ பொண்ணு கேட்டவுடனே துரியோதனன் தவ்விக்கிட்டுப் பொண்ணைக் கட்டிக் கொடுக்கப் போகிறாரு.. அதுக்கப்புறமும் எதுக்காக அண்ணே மனசுக்குள்ள வைச்சுக்கிட்டே அல்லாடற...?"

காவ்யா எடுத்துச் சொன்னாலும் அவள் குரலில் தொனித்த ஏக்கத்தையும்.. அது பிரதிபலித்த அவள் மனதின் வலிமையும் கண்ணதாசன் மிகத் தெளிவாகப்

புரிந்து கொண்டான்.. அவன் மனம் பதறியது.. இதற்காகவா அவன் இத்தனை பாடுபடுகிறான்...

“காவ்யா...” அவன் அதட்டினான்...

“என்னண்ணே...”

“அதைக் காதல்ன்னு சொல்லாதே.. நான் அந்தப் பெண்ணை நிமிர்ந்து கூடப் பார்த்தில்ல.. முகம் பாத்து பேசினதில்ல.. அது மனசில நானிருக்கலாம்.. அது வெறும் யூகம்தான்.. அந்தப் பொண்ணு வாய்திறந்து எதையும் சொன்னதில்ல...”

“வாயிலதான் சொல்லலை.. ஆனாக் கண்ணால் கூடச் சொல்லலையா..? நான் கவனிக்கலைன்னா நினைக்கிற..? அது கண்ணுரெண்டும் கதை பேசுதே... உன் கண்ணு ரெண்டும் பதில் சொல்லுச்சே...”

“என்னத்தப் பேசுச்சு..? நான் என்னத்த பதிலச் சொன்னேன்..?”

“நலம்தானா.. நலம்தானான்னு அது கண்ணு கேட்குது.. நலம்தான்.. நலம்தான்னு உன் கண்ணு பதில் சொல்லுது..”

காவ்யாவின் பேச்சில கண்ணதாசனின் இதழ்களில் முறுவல் படர்ந்தது.. தங்கையின் நுட்பமான பார்வையை மனதுக்குள் அவன் சிலாகித்துக் கொண்டான்.. காவ்யா புத்திசாலியென்று அவனுக்கு நன்றாகவே தெரியும்.. இருந்தும்.. மின்வெட்டும் நேரத்திற்கு அவன் கண்ணில்

வந்து போன உணர்வுகளை அவள் எப்படி இனம் கண்டு கொண்டாள் என்று அவனுக்கு வியப்பாக இருந்தது...

“நல்லாத்தான் யோசிக்கற.. தேன்மொழி யாரும்மா.. தெரியாத வீட்டுப் பொண்ணா..? சொந்த பந்தம்தான..? இப்பத்தான் முதன் முதலா அதப் பார்க்கறேனா..? உறவு மொறையில கல்யாணம் காட்சின்னு கலந்துக்கப் போனப்ப பாத்திருக்கேன்.. நல்ல பொண்ணு.. தேவராஜனப் போலத் தில்லுவாரிப் பயலுக்கு இப்பேறப்பட்டத் தங்கச்சியான்னு மனசுக்குள்ள தோணும்.. மத்தபடி நின்னு பேசினதில்ல..”

“ஏதோ ஒன்னு.. அது நல்ல பொண்ணுன்னு உன் மனசுல பட்டுச்சா இல்லையா..?”

“அது ஒரு குத்தமாப்பா..? அத வைச்செல்லாம் அது மேல எனக்குக் காதல் வந்திருமா.. இல்லப்பா.. அர்ஜீன் கனடா போனதும் அவனோட அப்பா கடைக்கு வந்து குதிச்சாரில்ல..?”

இப்போது எதற்காக இந்தப் பேச்சு வருகிறது என்று காவ்யா முகம் சுளித்தாள்.. அவளுக்கு பார்த்தசாரதியைப் பற்றி நினைக்கவே பிடிக்கவில்லை.. அவரை நினைத்தால்.. அதைத் தொடர்ந்து அவர் பேசிய பேச்சுக்கள் நினைவுக்கு வரும் என்பதினால் பேசாமல் இருந்தாள்...

அது புரிந்தவனாக கண்ணதாசனும் அவள் பதிலை எதிர்பார்க்காமல் பேச்சைத் தொடர்ந்தான்..

“அப்பச் சமயத்தில பெருமாள் கோவிலுக்குப் போயிருந்தப்ப அங்கே தேன்மொழியும் வந்திருந்துச்சு..”

பேச்சு தடம் மாறியதில் காவ்யாவின் முகச் சுளிப்பும் மாறியது...

“ஓ.. அப்பத்தான் கதை ஆரம்பிச்சுச்சா..?”

“நீ நினைக்கறதப் போல ஒரு கதையும் ஆரம்பிக்கல.. அதுதான் எங்கிட்ட வந்து பேசனும்னு சொல்லுச்சு...”

“பாருடா.. தேனுக்கு அவ்வளவு தைரியமிருக்கா..?”

“ஊஹீம்.. இப்பவும் அந்தத் தைரியம் நீ நினைக்கறதப் போல தைரியமில்ல.. அது பேச வந்ததே வேற...”

கண்ணதாசன் திரும்பவும் மறுத்தான்.. காவ்யா அதை நம்பாத பாவனையில் தலையை ஆட்டிச் சிரித்தாள்..

“என்னத்த பேச வந்துச்சாம்..? நாட்டு நடப்பப் பத்திப் பேச வந்துச்சா..? போண்ணே.. எனக்கு காது குத்தப் பாக்காதே.. உனக்கும்.. எனக்கும் நம்ம அப்பாம்மா காதணி விழா நடத்தி காது குத்தி தாய்மாமன் வீட்டு மொய் பணத்தயும் வசூல் பண்ணி முடிச்சிட்டாங்க... மறந்துட்டுப் பேசாதே...”

“அது நாட்டு நடப்பப் பத்திப் பேச வரலைப்பா.. நம்ம வீட்டு நடப்பப் பத்திப் பேச வந்துச்சு...”

“புரியலை...”

“பார்த்தசாரதி தானா மதுரைக்கு வந்து குதிக்கலை.. அந்த தேவராஜன் பயதான் வந்து குதிக்க வைச்சிருக்கான்.. அதச் சொல்லத்தான் தேன்மொழி வந்துச்சு...”

“அண்ணே...” காவ்யாவின் குரல் நடுங்கியது...

அவள் வாழ்வில் இத்தனை சூதுவாது விளையாடிக் களித்திருக்கிறதா..? ஏன்..? அவள் என்ன தவறு செய்தாள்..? யார் குடியை கெடுத்தாள்..? யார் உண்ணும் உணவில் மண்ணை அள்ளிப் போட்டாள்..?

கண்ணதாசன் பொறுமையாக அனைத்தையும் எடுத்துச் சொன்னான்... காவ்யா அசைவற்று அமர்ந்திருந்தாள்..

இது தேவராஜனின் வேலைதானா..? அவன் மட்டும் பார்த்த சாரதியை தூண்டி விடாமல் இருந்திருந்தால்.. அர்ஜீன் கனடாவிலிருந்து திரும்பி வந்து அவன் காதலைப் பற்றிச் சொல்லும் வரை அவருக்கு விவரம் தெரிந்திருக்காது.. அர்ஜீன் நினைத்ததை சாதிப்பவன்.. பார்த்தசாரதியிடம் கோபம் காட்டி.. அவரையும் அவன் குடும்பத்தையும் அழைத்துக் கொண்டு வந்து அவளைப் பெண் கேட்டிருப்பான்...

இப்படிப் பார்த்தசாரதியின் பெயரை நினைத்தால் காவ்யாவின் மனம் எரியும் உணர்வு ஏற்பட்டிருக்காது...

“ஏண்ணே இப்படிச் செஞ்சான்..?”

அது எதற்கு என்பதை அறிந்தும் மனம் தாளாமல் காவ்யா மனம் குமுறினாள்.. அதைத் தெரிந்திருந்த கண்ணதாசன் அதட்டினான்..

“விடுப்பா.. அவன் எதுக்கு செஞ்சான்னு நமக்குத் தெரியாதா..? பழைய குப்பைய இப்ப எதுக்கு கிளரனும்..? தேன்மொழி என்கிட்ட பேச வந்தது இதத்தான்.. அதச் சொல்லத்தான் இதையும் நான் சொன்னேன்.. இல்லேன்னா

சொல்லியிருக்க மாட்டேன்.. அது நல்ல பொண்ணுப்பா.. பெத்தவனும்.. கூடப் பிறந்தவனும் அடுத்த வீட்டுப் பொண்ணுக்கு செய்ய நினைச்ச கெடுதலை அது சொல்லிட்டுப் போச்சு.. மறைக்கனும்னு நினைக்கலை.. அந்த குணம்தான் எனக்குப் பிடிச்சிருந்துச்சேயொழிய மத்தபடி அது மேல எனக்குக் காதல்ன்னெல்லாம் தோணினதே இல்லை.. அன்னைக்கு பாத்த பொண்ண இன்னைக்குத்தான் திரும்பவும் பாக்கறேன்.. அந்த நினப்புல அதுவும் பாத்திருக்கும்.. நானும் பாத்திருப்பேன்.. இதைப் போயி பெரிசா எடுத்துக்கிட்டுத் தோரணம் கட்டனுமா..?”

“பின்னே.. வேணாமா..?”

“வேணாம்ப்பா.. என் மனசில அப்படியொரு நினப்பில்ல...”

“தேனு மனசில அப்படியாப்பட்ட நினைப்பில்லன்னு உன்னால சொல்ல முடியுமாண்ணே..?”

காவ்யாவின் கேள்வியில் கண்ணதாசன் திகைத்தான்.. இல்லையென்று எப்படி அவன் சொல்லுவான்..? அவள்தான் விழிகளாலே அவனிடம் காதல் வரத்தை இறைஞ்சிக் கொண்டிருக்கிறாளே...

உறவினர் வீட்டுத் திருமண வைபவகங்களில்.. யதேச்சையாக அவளைப் பார்க்க நேரும்போது... அவள் விழிகள் அவனைத் தேடிச் சுழல்வதை அவன் உணர்ந்திருக்கிறான்... அந்த உணர்தலை அவன் இல்லையென்று சொல்லிவிட முடியுமா..?

“மத்தவங்க நினப்பப் பத்தி நமக்கு எதுக்கும்மா கவலை..? நம்மளப் பத்திக் கவலைப்பட யாரிருக்கா..? நாம நம்ம பிழைப்பை மட்டும் பாப்போம்...”

கண்ணதாசன் திரும்பவும் தலையைப் பிடித்தபடி.. எரிச்சலுடன் சொன்னான்...

“ஏண்ணே.. நம்மளப் பத்திக் கவலைப்பட தேன்மொழியில்லையா..? அது கவலைப் பட்டதினால தான... பெத்த தகப்பன்னும்... கூடப்பிறந்தவன்னும் பாக்காம.. அவங்க ரெண்டு பேரையும் உன்கிட்டக் காட்டிக் கொடுத்துச்சு..? அது மட்டும் அப்படிச் செய்யலைன்னா.. உனக்கு எதனால இப்படியெல்லாம் நடந்துச்சுங்கிற விவரம் தெரிஞ்சிருக்குமா..?” காவ்யா தேன்மொழிக்காக வாதாடினாள்...

“இப்ப உனக்கு என்னதான் வேணும்ப்பா..?” தலை நோவு பொறுக்க முடியாமல் கண்ணதாசன் கேட்டு விட்டான்...

அவனும்தான் எத்தனை நேரத்துக்கு தலையைப் பிடித்துக் கொண்டிருப்பான்..? எதற்கும் ஒரு அளவு வேண்டாமா..?

“நீ தேன்மொழியை கல்யாணம் பண்ணிக்கனும்..” காவ்யாவும் ஒரு முடிவோடுதான் இருந்தாள்..

அவளுக்காக.. பார்த்துப் பார்த்து அவள் அண்ணனும் காதலை இழந்து நிற்பதா..? அவனாவது விரும்பிய பெண்ணை திருமணம் செய்து கொண்டு ஆசைப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து முடிக்கட்டுமே...

“சரிம்மா.. கல்யாணம் பண்ணிக்கறேன்...”

கண்ணதாசன் சம்மதித்ததில் காவ்யா அயர்ந்து போய்விட்டாள்..

“அண்ணே...” அவள் குரலில் சந்தோசம் தளும்பியது..

ஆசைப்பட்டவனை அடைய முடியாத நிலையிலிருக்கும் தங்கை.. அவன்மீது ஆசைப்படும் பெண்ணிற்காக வாதாடி... அவன் திருமணத்திற்குச் சம்மதித்ததும்... உற்சாகமடைந்ததில் அவன் இதயம் இளகியது...

“ஆனா.. ஒரு கண்டிசன்..” அவன் பீடிகை போட்டான்...

“என்னண்ணே..?” அவன் எதைக் கேட்டாலும் செய்து விடும் உற்சாகத்துடன் காவ்யா கேட்டாள்...

“என் கல்யாணத்தில நாத்தனார் முடிச்சை.. உன் புருசன் பக்கத்திலே நின்னுக்கிட்டு நீ போடனும்.. அப்படி நடக்கறதாயிருந்தா.. என் கல்யாணமும் நடக்கட்டும்...”

“அண்ணே...”

“அதுக்கு நீ சம்மதிச்சா... இதுக்கு நானும் சம்மதிக்கிறேன்... போதுமா...? இப்பவாவது தூங்கப் போகலாமா..? எனக்குக் கண்ணைச் சுழட்டுது.. விடிஞ்சா நிறைய வேலையிருக்கு...”

கண்ணதாசன் வாய் வார்த்தையில் அழைக்காமல் கைபிடியாக காவ்யாவை அழைத்துக் கொண்டு படியிறங்கி விட்டான்...

# 187

*எனைப் பார்த்த ஞாபகத்தை..*
*உன் கண்கள் சொல்ல ஆசைகொண்டேன்..*

**ம**துரை மாநகரத்தின் விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தான் அர்ஜீன்.. கூட பாவனாவும் இருந்தாள்.. அவனுடன் விமானபயணம் செய்த பிரமிப்பு அவள் விழிகளை விட்டு அகலவில்லை.. விமானநிலையத்தின் வாசலில் அவனுக்காக காத்திருந்த காரில் ஏறிய போது..

“என்னவோ.. போங்க சார்.. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீரில் கொஞ்சம் புல்லுக்கும் பாயுதுன்னு புரியுது.. ஆனாலும் பாருங்க.. இது நிஜமா.. இல்லையான்னு மனது கிடந்து அடிச்சுக்குது..”

“ஒரு பிளைட் ஜர்னிக்கு இத்தனை எக்சைட்டிங்கா..?”

“இல்லைதான்... பிளைட் ஜர்னி எனக்குப் புதுசில்லைதான்.. ஆனாலும் பாருங்க.. அதெல்லாம் ஆர்டினரி டிக்கெட்டில போய் வந்தது.. இப்படி ஹைகிளாஸ் டிக்கெட்டில போய் வர்றது இதுதான் முதல் தடவை.. ம்ஹீம்.. நீங்கள்ளாம் கொடுத்து வைத்தவங்க..”

“நீங்க சொல்கிறதும் உண்மைதான்.. என் மனசை அந்த வாயாடிகிட்டக் கொடுத்துத்தானே வைத்திருக்கேன்..?”

எந்தவொரு தருணத்திலும் காவ்யாவை மறக்காமல் நினைவு கூரும் அவனின் காதலை எண்ணி பாவனாவுக்குள் பொறாமை வந்தது...

“எனக்கென்னவோ இந்த விசயத்தில காவ்யாதான் கொடுத்து வைச்சிருக்கான்னு தோணுது...” பொறாமையுடன் அவள் சொன்னாள்..

“ஈஸிட்..?” தோள்களைக் குலுக்கினான் அர்ஜீன்...

கார் பெருங்குடியைத் தாண்டி.. மதுரை நகரத்துக்குள் நுழைந்தது.. அர்ஜீன் பாவனாவைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான்...

“காவ்யா வீட்டிலதான ஸ்டே பண்ணப்போறிங்க..?”

“அப்படிப் பிளான் போட்டுத்தானே கிளம்பி வந்திருக்கேன்.. வேண்டும்னா பிளானை மாத்தி உங்ககூட ஸ்டே பண்ணிக்கட்டுமா..?”

“நோ.. சான்ஸ்...” என்று சொன்னான் அர்ஜீன்...

“காவ்யா வீட்டில உங்களை இன்வைட் பண்ணியிருக்கிறாங்கன்னு நீங்க சொன்னதாலதான் நான் உங்களை என்னுடன் அழைத்துக்கிட்டு வந்தேன்.. ரிமம்பர் இட்...”

“நல்லா நினைவிருக்கு சார்.. அதை நீங்க திரும்பத்திரும்ப நினைவு படுத்த வேண்டாம்...” பாவனாவுக்கு கோபம் வந்து விட்டது...

"ஓகே.. லீவ் இட்.. லன்ச் முடித்துட்டுப் போகலாமா..?"

"நீங்களும் காவ்யா வீட்டுக்கு வரப் போறிங்களா..?" அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்...

"ஏன்..? நான் வரக்கூடாதா..? வந்தால் ஆகாதா..?"

"நான் ஏன்சார் உங்களை வர வேண்டாம்ன்னு சொல்லப்போறேன்..? நீங்க வந்தா எனக்கு ஏன் ஆகாம இருக்கப் போகுது..? அவளுக்குதான் அது ஆகாது.."

"அப்படியா..? அதையும் பார்த்து விடலாமே..."

அர்ஜீன் எப்போதும் அவன் தங்கும் நட்சத்திர ஹோட்டலுக்கு காரை விட்டான்.. பாவனாவை ரிசப்சனில் காத்திருக்கச் சொல்லி விட்டு.. அவன் தங்கும் அறையில் அவனுடைய பெட்டிகளை வைத்து விட்டு வந்தான்.. மறந்தும் அவளை கூடவரும்படி அவன் அழைக்கவில்லை..

அவனது அந்தக் கட்டுக் கோப்பான கண்ணியத்தில் வசீகரிக்கப் பட்டாள் பாவனா.. இயல்பாக முகம் கழுவக் கூட அவன் அறைக்கு அவளை அவன் அழைக்கவில்லையே..

திரும்பிவந்தவன் அவளிடம்..

"ஸாரி.." என்று காத்திருக்க வைத்ததிற்காக மன்னிப்பையும் கேட்டான்...

"ஸார்.. நீங்க என் பாஸ்.." பாவனா விழிவிரித்தாள்...

"அது சென்னையில்.. இங்கே வி ஆர் ஜஸ்ட் எ பிரண்ட்ஸ்.. அங்கே வாஷ் ரூம் இருக்கு.. பிரஷ்ஷாகிட்டு வர்றீங்களா.. நான் இங்கே வெயிட் பண்றேன்..."

அர்ஜீன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் ரிசப்சனில் இருந்த சோபாவில் அமர்ந்து பேப்பரை கையில் எடுத்து விட.. பாவனா அவனின் அந்தச் செய்கையையும் வியந்தபடி முகம் கழுவச் சென்றாள்.. அவள் திரும்பி வந்ததும் அவர்கள் கீழ் தளத்தில் இருந்த உணவகத்தில் உணவருந்தச் சென்றார்கள்...

பாவனாவின் பக்கம் மெனுகார்டை நகர்த்திவிட்ட அர்ஜீன்..

"உங்களுக்குப் பிடித்ததை ஆர்டர் பண்ணுங்க.." என்றான்..

"நீங்க சார்..?"

"நீங்க சொன்னதும் சொல்கிறேன்.."

பாவனா மெனுகார்டை அலசி ஆராய்ந்து அவளுக்குப் பிடித்ததை வரிசைப் படுத்தி ஒப்பித்தாள்.. அதை பேரர் கேட்டுக் கொண்டதும் அர்ஜீன் அவனுக்கு வேண்டியதைச் சொன்னான்.. அவை பாவனா சொன்னதற்கு நேர் எதிராக இருந்தன...

"இதெல்லாம் காவ்யாவுக்கும் பிடிக்கும் சார்..."

பேரர் போனதும் பாவனா வியப்புடன் சொன்னாள்..

"தெரியும்.." என்றான் அர்ஜீன்..

"எப்படி..? அவதான் நீங்க கனடா போகிறதுக்கு முதல்நாள்வரை அவ காதலை ஒப்புக்கவே இல்லையே.. நீங்க திரும்பி வந்தப்ப சண்டை வந்துருச்சே..."

“காதலிக்கிறவங்களுக்கு ஒருநாள் கிடைச்சாலும் போதும்...” அமர்த்தலாகச் சொன்னான் அர்ஜீன்...

“அதுசரி.. இதைப்பத்தி எனக்கென்ன தெரியும்.? முன்னப்பின்ன காதலிச்சிருக்காதவளுக்கு.. சந்துக்குள்ள சிந்து பாடற வித்தையைப் பத்தித் தெரியாதுதான்...” கேலியாகச் சொன்னாள் பாவனா...

“ஏன் காதலிக்கலை..?”

பாவனா மிகப் பெரிய தவறை செய்து விட்டதைப் போல விசாரித்து வைத்தான் அர்ஜீன்.. பாவனாவுக்கு பற்றிக்கொண்டு வந்தது..

“ஏன்னா.. எனக்கு யார் மேலயும் காதல் வரலை.. அதனால காதலிக்கலை.. நீங்க இப்படிக்கூட கேள்வி கேட்டு வைப்பீங்களா சார்..?”

“ஸாரி.. நான் அதை மீன் பண்ணலை... அழகா இருக்கீங்க.. காவ்யா போல மூடியா இல்லாம கலகலன்னு இருக்கறீங்க.. அவளப் போல முசுட்டுத்தனமா முறைக்காம எல்லோர் கிட்டயும் சிரிச்ச முகமா பழகறிங்க.. நீங்க காதலில் விழலைன்னா ஆச்சரியம்தான்...”

அர்ஜீன் விவரித்த விதத்தில் இது புகழ்ச்சியா.. இல்லை கால் வாரலா என்று புரியாமல் திகைத்துப் போனாள் பாவனா..

“அது அப்படித்தான் சார்.. காவ்யா மாதிரி ஊமை வேசம் போடறவங்கதான் எளிதா காதலில் விழுந்துருவாங்க.. என்னைப் போல வாயில் வந்ததை-

யெல்லாம் வைச்சுத் தள்ளறவங்க, இப்படித்தான்.. மத்தவங்களை ஜோடி சேத்து விட்டு.. அட்சதை போட்டு ஆசிர்வாதம் பண்ணிக்கிட்டே இருப்போம்..” எரிச்சலுடன் சொன்னாள் பாவனா...

“ஹ.. ஹா...”

அர்ஜீன் சிரித்துக் கொண்டிருந்த போது உணவு வகைகள் வந்துவிட.. பாவனா சாப்பாட்டில் கவனமானாள்.. ஊடே எதையோ கேட்ட அர்ஜீனின் பேச்சையும் அவள் கவனிக்கவில்லை.. சாப்பிட்டு முடித்ததும் அதைப்பற்றி அர்ஜீன் சொன்ன போது..

“வயிற்றுக்கு உணவில்லாதபோது செவிக்கும் கொஞ்சம் ஈய வேண்டும்ன்னு வள்ளுவரே சொல்லி-யிருக்கார் சார்..” என்று ஈரவாயை டிஷ்யூ பேப்பரால் துடைத்தபடி சொன்னா பாவனா..

“அதுசரி.. வள்ளுவரையும் விட்டு வைக்கலியா..?”

அர்ஜீன் சிரித்தபடி காரைக் கிளப்பினான்.. அவர்கள் காவ்யாவின் வீட்டுக்குப் போன போது.. வீட்டு வாசலில் சிவதாணு நின்று கொண்டிருந்தார்.. யாருடனோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தவர்.. வாசலில் வந்து நின்ற காரைக் கண்டதும் பேச்சை நிறுத்திவிட்டு காரைக் கவனித்தார்..

அர்ஜீன் இறங்கியதும்.. அவனது நேர்த்தியான உடையிலும்.. தோற்றத்திலும் கவரப்பட்டவர்..

“வாங்க.. வாங்க.. கண்ணதாசன் வீட்டில் இல்லையே...” என்று வரவேற்றார்..

அவனைக் கண்ணதாசனின் நண்பர்களில் ஒருவனாக அவர் நினைத்திருக்கக் கூடும் என்பதை யூகித்த அர்ஜீன்..

“நான் அவரைப் பார்க்க வரலை..” என்று கரம் குவித்தான்...

“அப்படிங்களா..?”

இவன் வேறு யாரைப் பார்க்க வந்தான்..? என்ற நினைவுடன் எதையாவது சொல்லி வைக்க வேண்டு மென்பதற்காக சொல்லி வைத்தார் சிவதாணு...

“இவங்க இங்கே வரனும்னு சொன்னாங்க.. நான் இவங்களை இங்கே டிராப் பண்ணிட்டு போக வந்தேன்..”

அர்ஜீன் காரின் பக்கம் கைகாட்டிச் சொல்ல.. அந்த ‘இவங்க..’ எவங்க என்று அறியும் ஆவலில் காரின் பக்கம் பார்வையைச் செழுத்தினார் சிவதாணு...

“ஹாய் அப்பா..” என்றபடி காரின் பின்சீட்டிலிருந்து இறங்கினாள் பாவனா...

‘இந்தப் புள்ளக்கு இவரு சொந்தக்காரரு போல..’

அர்ஜீன் யாரென்று கண்டுபிடித்து விட்டதைப்போல உற்சாகத்துடன்..

“வாம்மா.. வா..” என்று வரவேற்றார் சிவதாணு...

“தம்பி.. உங்கூட வந்த தம்பியா..? உள்ளார வாங்க தம்பி.. அன்னபூரணி.. அன்னபூரணி.. யாரு வந்திருக்காங்கன்னு வந்துபாரு..”

அன்னபூரணி அடுக்களையை விட்டுவிட்டு யார் வந்திருப்பது என்று பார்க்க வந்து சேர்ந்தாள்...

“உட்காருங்க தம்பி..” என்று என்னவோ காலம் காலமாய் அர்ஜீனைத் தெரிந்து வைத்திருக்கிறவரைப் போல அவரை உட்கார வைத்து அளவளாவிக் கொண்டிருந்தார் சிவதாணு..

அர்ஜீனை யார்.. எவர் என்று அன்னபூரணிக்குத் தெரியவில்லை.. அவள் பாவனாவைக் கவனிக்காமல்.. கணவரை...

“ஸ்ஸ்.. ஸ்ஸ்..” என்று அழைத்தாள்...

சிவதாணு மனைவியைக் கவனிக்காமல் சுற்று முற்றும் பார்த்துவிட்டு..

“இஸ்.. இஸ்ன்னு ஒரு சத்தம் கேட்டாப்புல இல்ல..?” என்று அர்ஜீனிடம் சந்தேகம் கேட்டார்...

அர்ஜீனுக்குச் சிரிப்பு வந்தது.. அருமையான மாமனார் என்று மனதுக்குள் சான்றிதழ் கொடுத்தபடி...

“அவங்க வந்திருக்காங்க..” என்று அன்னபூரணியின் பக்கமாக கை காட்டினான்...

வீட்டிற்குள் வந்திருக்கும் ‘அவங்க’ எவங்க என்று பார்த்த சிவதாணு.. மனைவியைக் கண்டதும்..

“ஹி.. ஹி.. நீதானா அன்னபூரணி..?” என்று வழிந்தார்...

‘வந்திருக்கிற மனுசன் முன்னால வழியறதப் பாரு..’ அன்னபூரணி கடுப்பாகிப் போனாள்...

“நானேதான்...”

“இப்போ கொஞ்ச நேரத்துக்கு முன்னால.. இஸ்ஸீ.. இஸ்ஸீன்னு சத்தம் வந்துச்சே.. நீதான் கூப்பிட்டியா..?”

சிவதாணு கேட்டார்.. அர்ஜீனின் கண்களில் தெரிந்த சிரிப்பைக் கண்ட அன்னபூரணி மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டாள்..

‘இளந்தாரி வயசு மனுசனை எதுக்க வைச்சுக்கிட்டு இந்த மனுசன் பேசற பேச்சப் பாரு..’ கண்களில் கனல் தெரிய கணவரை முறைத்தவள்..

“நான்தான் கூப்பிட்டேன்.. நீங்கதானே என்னைக் கூப்பிட்டிங்க..? பதிலுக்கு நான் உங்களைக் கூப்பிடக் கூடாதா..?” என்று பல்லைக் கடித்தபடி சொன்னாள்..

“தம்பி யாருன்னு தெரியுதா..?” சிவதாணு அர்ஜீனை அறிமுகப் படுத்தி வைக்க..

‘சொன்னாத்தானே தெரியும்..’ என்று கணவனின் புத்திசாலித்தனத்தில் நொந்து போனாள் அன்னபூரணி..

“தெரியலையே..” வந்திருப்பவனின் மரியாதையான தோற்றத்தில் ஈர்க்கப் பட்டவளாக.. சேலை முந்தானையை இழுத்துப் போர்த்துக் கொண்டு... பதவிசாக பதில் சொன்னாள் அன்னபூரணி..

“எல்லாம் நம்ம தம்பிதான்...”

சிவதாணு சொல்லிக் கொண்டிருந்ததை கேட்டபடி மாடியிலிருந்து இறங்கிவந்த காவ்யா.. அந்த நல்ல தம்பி யாராக இருக்கும் என்ற நினைவுடன் ஹாலில் காலடி வைத்தாள்...

# 188

> *நித்திரையில் என்கனவில்...*
> *நீ வரவே ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவிற்கு ஹாலில் அமர்ந்திருப்பது யார் என்று தெரியவில்லை.. அர்ஜீனின் முதுகுப்புறம் மட்டும்தான் அவளுக்குத் தெரிந்தது.. அது உணர்த்திய அறிமுகத்தில் அவள் மனம் சலனப்பட்டாலும்.. அர்ஜீனாவது.. அவள் வீட்டுக்கு வருகிறதாவது என்ற எண்ணத்துடன் அதை சமனப் படுத்திக் கொண்டாள்...

சிவதாணு நம்ம தம்பிதான் என்று சொன்ன தம்பியை உற்று உற்றுப் பார்த்த அன்னபூரணிக்கு.. அந்தத் தம்பியை அதற்கு முன்னால் பார்த்த ஞாபகமே இல்லை...

அதை அர்ஜீனின் முகத்துக்கு நேரே சொல்ல முடியாமல் மௌன கோபத்துடன் பல்லைக் கடித்தபடி..

மரியாதையான புன்முறுவல் ஒன்றை முகத்தில் படற விட்டாள் அன்னபூரணி..

“காபி கொண்டு வரட்டுங்களா..?”

அந்தச் சாக்கில் தம்பியைக் கண்டு பிடிக்கும் வேலையிலிருந்து தப்பித்து விட நினைத்தவளை...

“இல்லைங்க.. வேண்டாம்.. இப்பத்தான் நானும்.. பாவனாவும் லன்ச் முடிச்சிட்டு இங்கே வர்றோம்...” என்ற அர்ஜீனின் குரல் தடுத்து நிறுத்தியது...

இயல்பாக அங்கே வந்து கொண்டிருந்த காவ்யாவின் நடை நின்று விட்டது.. அந்தக்குரலை அவள் அடையாளம் கண்டுகொண்டாள்..

‘அவனா வந்திருக்கான்..?’

அவள் உடலில் ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் பாய்ந்தது.. எவன் முகத்தைத் திரும்பவும் பார்க்க முடியுமா என்று அவள் அல்லும் பகலும் துடித்துக் கொண்டிருக்கிறாளோ.. அந்த ‘அவன்’ அவள் வீட்டு ஹாலின் சோபாவில் கால் மேல் கால் போட்டு.. மாப்பிள்ளை போல தோரணையாக சாய்ந்து அமர்ந்திருக்கிறான்...

‘இது எப்படி சாத்தியம்..?’

அறிவு கேள்வி கேட்டது... மனது அதை பொருட்படுத்தாமல் அவன் முகம் பார்க்கத் துடித்தது.. பெற்றவர்கள் அங்கே நிற்கும் நினைவு அதைத் தடுத்தது..

காவ்யா தனக்குள் போராடிக் கொண்டிருந்த போது..

“காவ்யா..” என்ற பாவனாவின் உற்சாகக் குரல் கேட்டது..

“பாவனா...” காவ்யா திரும்பிப் பார்த்தாள்...

ஹாலில் இருந்த ஷோ கேஸில் வைக்கப் பட்டிருந்த காவ்யாவின் குழந்தைப்பருவ போட்டோவை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த பாவனா.. போட்டோவும் கையுமாக தோழியிடம் ஓடி வந்தாள்..

“அப்படியே இப்ப இருக்கிறதைப் போல.. அதே குண்டுக் கன்னமும்.. மொச்சைக் கொட்டை முழியுமா அப்பவும் இருக்கடி...”

பாவனா கையிலிருந்த போட்டோவை ரசித்துப் பார்க்க...

“எங்கே கொடுங்க.. நானும் பார்க்கிறேன்..” என்று இயல்பாக கை நீட்டி அதை வாங்கிப் பார்த்தான் அர்ஜுன்..

அவன் திரும்பிய போது.. காவ்யாவின் விழிகளும்.. அவன் விழிகளும் சந்தித்துக் கொண்ட அந்த நொடிப் பொழுதில் இருவரின் கண்களிலும் அவர்களுக்கே உரித்தான பிரத்யேக மின்னல் வெட்டியது.. காவ்யாவின் கைவிரல்கள் பரவசத்தில் நடுங்க ஆரம்பித்தன.. அவளை ஊடுறுவும் பார்வை பார்த்தபடி போட்டோவுடன் திரும்பிக் கொண்டான் அவன்...

“இந்தத் தம்பி கூடத்தான் நம்ம பாவனா வந்திருக்குது...”

சிவதாணு ஒருவழியாக அன்னபூரணிக்கு அர்ஜீனை அறிமுகப்படுத்தி விட்டார்...

‘ஒஹோ..’ என்று சொல்லப் போன அன்னபூரணி நிதானித்தாள்.. அர்ஜீனின் நடையுடை.. பாவனை.. அவளை அவ்வாறு சொல்ல விடவில்லை.. அதனால்...

“அப்படிங்களா..?” என்று பவ்யத்துடன் கேட்டு வைத்தவள் பாவனாவிடம்...

“தம்பி உனக்கு சொந்தமாப்பா..?” என்று கேட்டு வைத்தாள்..

‘சபாஷ்.. சரியான கேள்வி..’ அர்ஜீன் வருங்கால மாமியாரின் புத்தி கூர்மையை மனதுக்குள் மெச்சிக் கொண்டான்..

ஆரியக் கூத்தாடினாலும்.. காரியத்தில் கண்ணாக இருக்கும் மாமியாரின் கண்டிப்பை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது..

‘சும்மாவா என் ஆளு சரவெடியாய் வெடிச்சுத் தள்ளரா..? இப்படியாப் பட்ட அம்மாவுக்கு பொண்ணாப் பிறந்தவ.. விட்டு விளாச மாட்டாளா..?’

அவன் அடிக் கண்ணால் காவ்யாவைப் பார்த்தான்.. அதைக் கவனித்த பாவனாவிற்கு வழக்கம் போல பற்றிக் கொண்டு வந்தது...

அவளா.. அவனை துணைக்குக் கூப்பிட்டாள்..? அவள் பாட்டுக்கு டிக்கெட் புக் பண்ணி விட்டு.. தேமே என்று கிளம்ப இருந்தவளை தடுத்து நிறுத்தி.. வாங்கிய

டிக்கெட்டையும் கேன்சல் பண்ண வைத்து விமானத்தில் அழைத்துக் கொண்டு வந்தது அவன்தானே...

‘இவன் காதலிக்கு நூல் விடறதுக்காக.. என் கூட துணைக்கு வர்றாப்புல வீட்டுக்குள்ள வந்து கால்மேல் கால் போட்டு உட்கார்ந்திருக்கிறானே.. கொஞ்சமாவது காவ்யாவோட அம்மா கேட்கிற கேள்விக்கு நான் என்ன பதிலைச் சொல்வேன்னு யோசிச்சுப் பார்க்கிறானா..? அதை விட்டு விட்டு அவங்களுக்கு நான் என்ன பதிலைச் சொல்லப் போறேன்னு வேடிக்கையில்ல பார்க்கிறான்..’ கொதித்துப் போனாள் பாவனா...

“இல்லேம்மா.. சார்தான் நான் வேலை பார்க்கிற கம்பெனியோட எம்.டி...”

இதைக் கேட்டதும் அன்னபூரணியின் முகம் சுருங்கும் என்பதை பாவனா எதிர்பார்த்தாள்தான்.. கூடவே காவ்யாவின் முகமும் சேர்ந்து சுருங்கும் என்று கொஞ்சம் கூட அவள் எதிர்பார்க்கவில்லை...

‘இவ இவனோட கம்பெனியிலதான் வேலை பார்க்கிறாளா..?’

காவ்யாவுக்கு அந்த செய்தி புதிது.. பாவனாவுடன் அவள் போனில் பேசியபோது அவள் அதைச் சொல்லவில்லை என்பதை மனதிற்குள் குறித்துக் கொண்டாள் காவ்யா...

“எம்.டின்னா..?” அன்னபூரணி வினவ...

“முதலாளிம்மா..” என்று பதில் சொன்னாள் பாவனா..

‘இவ முதலாளி கூடவா.. சென்னையில இருந்து தனியா வந்தா..?’

அன்னபூரணி பாவனாவை பார்த்தபார்வை சரியாக இல்லை.. சிவதாணுவுக்கு அதைப்போன்ற எண்ணங்க-ளெல்லலாம் இல்லை.. கலகலப்பான பாவனாவிடம் என்றுமே அவர் குற்றம் கண்டதில்லை.. அதனால்.. வாத்சல்யத்துடன் பாவனாவை பார்த்தவர்..

“நல்லவேலை செய்தே போ.. தூரம் தொலைவுக்கு தனியா வராம.. துணையோட வந்திருக்கே..” என்று பாராட்டினார்...

‘நல்லாயிருக்கு.. இவர் பேசற நியாயம்.. இந்தா இருக்கிற சென்னையில நைட்டு டிரெயினைப் பிடிச்சா.. விடியறதுக்குள்ள மதுரைக்கு வந்து சேர்ந்திரலாம்.. ராத்திரி பயணம் வேணாமுன்னா.. இருக்கவே இருக்கு வைகை எக்ஸ்பிரஸ்ஸீ... பட்டப் பகல்லயே.. ஜம்முன்னு கொண்டாந்து மதுரையில சேர்த்துப்புடும்.. அத விட்டுப்புட்டு.. முதலாளிய துணைக்கு கூப்பிட்டுக்கிட்டு வந்திருக்கிறா.. இவள என்ன செஞ்சாத் தேவலாம்...’

மகளின் தோழியை எதுவும் செய்ய முடியாது என்பதினால் எதற்கும் அவளிடம் காவ்யாவை பார்த்துப் பழகச் சொல்ல வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டாள் அன்னபூரணி...

அவள் மனதின் தீர்மானத்தை முகத்தில் படித்து விட்ட அர்ஜீன்.. அதற்கு மேலும் பாவனாவுக்கு சோதனையைத்

தரக்கூடாது என்று தீர்மானித்தவனாக.. அன்னபூரணியிடம் மரியாதையான குரலில் பேச ஆரம்பித்தான்...

“உங்களுக்குத் தெரிந்திருக்கும்.. பாவனாவின் அப்பாவுக்கு சென்ட்ரல் கவர்ண்மென்ட் வேலை... லீவ் கிடைக்கலை.. அவங்க அம்மாவுக்கு ஹெலத் பிராப்ளம்.. இரண்டு பேராலும் பாவனாவுக்கு துணை வர முடியலைன்னு என்னிடம் ஹெல்ப் கேட்டாங்க.. ஏன்னா.. நானும் மதுரைக்கு கிளம்பிக்கிட்டிருந்தேன்.. இங்கே ஒன் மன்த் ஸ்டே பண்ணிப் பார்க்க வேண்டிய அளவுக்கு எனக்கு வேலையிருக்கு.. நீங்களும் மதுரைக்குத்தானே போகிறிங்க.. பாவனாவை அவளோட பிரண்ட் வீட்டில் சேர்த்திருங்கன்னு அவங்க பேரண்ட்ஸ் சொன்னதினால ஓகேன்னு ஒப்புக்கிட்டேன்...”

அர்ஜீனின் அந்த நீளமான பதிலினாலும் அன்னபூரணியை சமாதானப் படுத்த முடியவில்லை.. அவள் பழைய

‘ஓஹோ..’ என்ற நம்பாத பார்வையை பார்த்தபடி..

“உங்ககிட்ட வேலை பாக்குற அத்தனை பேரோட குடும்பமும் உங்களுக்கு பழக்கமோ..” என்று கேட்டு வைத்தாள்...

‘சபாஷ் மாமியாரே..’ மனதுக்குள் மறுபடியும் மாமியாரை மெச்சிக் கொண்ட அர்ஜீன்..

“இல்லையில்லை.. பாவனாவோட பேமிலி மட்டும் தான் பழக்கம்.. அவங்க பேமிலியை வருசக் கணக்கா எனக்குத் தெரியும்...” என்று சொல்லி வைத்தான்...

எப்படியும் அவன் சொல்வது உண்மைதானே.. பொய்யில்லையே.. அழகர் கோவிலில் நடந்த இளங்கோவின் திருமணத்திற்கு போகும் போதே.. பாவனாவின் தாய் தந்தையரைச் சந்தித்துப் பேசியிருக்கிறானே.. அப்போதிருந்தே அவர்களை அவனுக்குத் தெரியும் தானே..

“உன் மச்சான் செம கோல் போடுறார்டி.. சிக்சர்தான் போ... இளங்கோவுக்கு இப்ப கையில பிள்ளையிருக்கு.. அப்ப அவன் கல்யாணத்துக்கு நாம போயி வருசக்கணக்காகும்தான..?”

எல்லா விளையாட்டுக்களையும் ஒன்று சேர்த்து ஒருங்கிணைத்து பேசித் தள்ளிய பாவனாவின் கையைப் பிடித்துக் கிள்ளி...

“ஸ்ஸ்..” என்று அடக்கினாள் காவ்யா...

“அப்படிங்களா..” ஒரு வழியாக திருப்தியானாள் அன்னபூரணி...

“அப்ப நான் கிளம்பட்டுங்களா..?” அவளைப் போலவே பவ்யமான குரலில் பேசி விடைபெற யத்தனித்தான் அர்ஜீன்...

“அதெப்படி சார்.. எங்க வீட்டுக்கு வந்த புள்ளய இம்புட்டுத் தொலைவு பத்திரமாக் கூப்பிட்டுக்கிட்டு வந்து சேர்த்தீருக்கீங்க.. உங்களுக்கு ஒரு தம்ளர் மோரு கூடக் கொடுக்காம அனுப்பி வைச்சா நல்லாயிருக்கும்ங்களா..?” அவனிடமே நியாயம் கேட்டார் சிவதாணு..

நல்லாயிருக்காது என்று எப்படி அவன் சொல்வான்..? லேசான புன்முறுவலுடன் அவன் அன்னபூரணியைப் பார்த்து வைக்க.. அவளும் கணவரை ஆமோதித்தவளாக..

"அதானே.." என்று சொன்னாள்..

அர்ஜீன் கிளம்ப முனைந்ததை விட்டுவிட்டு சாய்ந்து அமர.. அன்னபூரணி.. மோரைக் கொண்டுவர சமையலறையைத் தேடிப் போனாள்..

அர்ஜீன் சிவதாணுவிடம் பேசியபடி.. மேல் பார்வையால் காவ்யாவை மேய்ந்தான்.. அவன் பார்வையில் தடுமாறியவள்.. அவன் பார்வையின் வேகத்தை தாங்க மாட்டாதவளாய் உதட்டைக் கடித்தாள்.. அந்த உதடுகளில் அவன் பார்வை படிந்ததில் உடல் சூடேற.. கன்னம் சிவந்தாள்..

"நீயென்னடி நினைக்கிற..?"

காவ்யாவின் பார்வைப் போராட்டத்தைக் கவனிக்காமல் தன் போக்கில் எதையெதையோ பேசிக் கொண்டிருந்த பாவனா விளக்கம் கேட்க..

"எதைக் கேட்கிற..?" என்று திக்கித் திணறினாள் காவ்யா..

அவளையும்.. அர்ஜீனையும் ஒரு மார்க்கமாக பார்த்த பாவனா..

"அதுசரி.. இப்பப் போயி உன்கிட்ட கேனச்சியப் போல நான் பேசித் தள்ளறேன் பாரு.. என்னைச் சொல்லனும்.. உனக்கு இப்ப என் நினப்பா மனசில

நிற்கும்..? எதிரே உட்கார்ந்து உன்னைக் கடிச்சுத் திங்கிறதைப் போலப் பார்த்துக்கிட்டு இருக்கானே... அவன் நினைப்புத்தான் உன் மனசில நிற்கும்...” என்று நொடித்தாள்..

“சும்மாயிருடி..” பதட்டமாக முணுமுணுத்தாள் காவ்யா..

அப்போது அவன் காவ்யாவைக் கடித்துத் தின்று விடுவதைப் போல்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் பார்வையின் தீர்க்கத்தை தாங்க முடியாமல் அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.. அவளால் அவனை தைரியமாக பதில் பார்வை பார்க்க முடியவில்லை.. அவன் முன்னால் அவளுடைய அப்பா உட்கார்ந்திருந்தார்.. அவளுடைய அம்மாவோ மோர் தம்ளருடன் வந்து கொண்டிருந்தாள்..

‘பார்க்காதே..’ அவள் பார்வையால் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.. அவன் அவளுடைய கெஞ்சுதலை சட்டை செய்யாமல் பார்வையில் அவளை மேய்ந்து கொண்டிருந்தான்..

காவ்யாவுக்கு கருப்பு வெள்ளை திரைப்படத்தின் பாடல் காட்சியொன்று நினைவுக்கு வந்தது..

***‘அழைக்காதே.. நினைக்காதே...***
***அவைதனிலே எனை.. ஏராசா..***
***ஆருயிரே.. மறவேனே..’***

அவளும் அவையில்தான் நின்று கொண்டிருக்கிறாள்.. அவளைச் சுற்றி.. அவளைப் பெற்றவர்களும்.. தோழியும்

இருக்கிறார்கள்.. அவர்களின் மத்தியில் அவன் அவளை பார்வையால் அழைத்தால்... அவள் பாவம் என்ன செய்வாள்..?

*'இதம் தரும் சோலையை..*
*மறந்திடுவேனோ..*
*எனை மனம் நாடிடும்..*
*சமயம் இதுதானா..?'*

அவள் மனம் கேட்டுக் கொண்டிருந்ததை உணர்ந்தும் உணராதவனைப் போல.. பருகு.. பருகென்று.. சிவதாணு அறியாமல் அவளைப் பார்த்து வைத்தவன்.. அன்னபூரணியின் வரவைக் கண்டதும் சமர்த்துப் பிள்ளையாக.. பார்வையை திருப்பிக் கொண்டான்..

## 189

*கள்வனைப்போல என்மனதை...*
*நீ கவர்ந்து செல்ல ஆசைகொண்டேன்...*

'**க**ள்ளன்...'

இதிலெல்லாம் அவன் செம விவரம் என்ற நினைவில் காவ்யாவின் இதழ்களில் மந்தகாசப் புன்னகை படர்ந்தது.. அதை அப்போதுதான் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்த கண்ணதாசன் ஆச்சரியத்துடன் கவனித்தான்..

அர்ஜீன் காரைக் காவ்யாவின் வீட்டு வாசலில் இருந்து சற்றுத் தள்ளி.. விலக்கி நிறுத்தியிருந்தான்.. அதனால் கண்ணதாசன் வந்தபோது அவன் பார்வையில் அர்ஜீனின் கார் தென்படவில்லை.. இயல்பாக அலுவலகக் காரை விட்டு இறங்கி.. அதை அனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தவன்.. ஹாலில் அமர்ந்திருந்த அர்ஜீனைக் கவனிக்கவில்லை.. எப்போதும் போலத் தன்னிச்சையாகத் தங்கையைக் கவனித்தவனின் முகத்தில் ஆச்சரியம் படர்ந்தது..

‘காவ்யாவா இது...?!’

கண்ணதாசன் தங்கையின் மனதை நன்கு அறிந்தவன்.. அவள் மனதில் இருப்பதை முகத்தில் பிரதிபலிக்கக் கூடியவள் என்ற நுட்பத்தை அறிந்தவன்.. இயல்பாக இருப்பவள்.. மனதில் ஒன்று.. முகத்தில் ஒன்று என்று எப்போதுமே உணர்வுகளை மாற்றிப் பிரதிபலிக்க மாட்டாள் என்பதை அறிந்து வைத்திருப்பவன்..

அதனால் காவ்யாவின் இன்றைய புன்னகைக்கான காரணத்தைத் தேடி அவன் விழிகள் சுழன்றன.. காவ்யாவின் பக்கத்தில் நின்ற பாவனாவைக் கண்டதும்.. இதுதான் அந்தக் காரணமா என்ற நினைவில் பாவனாவை வரவேற்கும் பாவனையில் லேசாகச் சிரித்தவனுக்கு அது உறைத்தது..

காவ்யாவின் பார்வை பாவனாவிடம் மையம் கொண்டிருக்கவில்லை.. அவள் பாவனாவைப் பார்க்காமல் ஓரக் கண்ணால் ஹாலில் அமர்ந்திருந்த யாரோ ஒரு

ஆடவனைப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தவனின் புருவங்கள் உயர்ந்தன..

'யார் அது..?'

உன்னிப்பாக அவனைக் கவனித்துக் கொண்டே அவன் முன்னால் சென்ற கண்ணதாசனின் விழிகள் அகன்றன...

'இவனா..?..!'

கண்ணதாசன் அர்ஜீனை அங்கே.. அவன் வீட்டில்.. அந்த நேரத்தில் கொஞ்சம்கூட எதிர்பார்த்திருக்கவில்லை.. புருவங்கள் முடிச்சிட அர்ஜீனை முறைத்தபடி அவனுக்கு எதிராக சோபாவில் கால்மேல் கால் போட்டுத் தோரணையாக அமர்ந்தான்.. ஏற்கனெவே அது போன்ற தோரணையுடன் அமர்ந்திருந்த அர்ஜீன் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.. காவ்யாவின் முகத்திலிருந்த மந்தகாசப் புன்னகை மட்டும் அண்ணனைக் கண்டதும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி மறைந்து விட்டது..

"கண்ணா.. வா.. தம்பி.. இப்பத்தான் வர்றியா..?" அர்ஜீனோடு அளவளாவிக் கொண்டிருந்த சிவதாணு உற்சாகமாக வினவினார்..

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க..?" கண்ணதாசன் கடுப்போடு கேட்டான்..

'இவன்கூட இவருக்கு என்ன கொஞ்சலும்.. குலாவலும் வேண்டிக்கிடக்கு..?' என்ற கடுப்பு அவனுக்கு..

அது புரியாத சிவதாணு.. மகன் எதற்காக இந்த அளவுக்கு கோபப்படுகிறான் என்று தெரியாதவராக குழம்பிப் போனார்.. பண்பட்ட அவர் மகன் வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளியை மதித்து அவனை வரவேற்காமல்.. அவன் முன்னிலையிலேயே தகப்பனாரிடம் கோபம் காட்ட மாட்டானே என்றிருந்தது அவருக்கு..

"என்னப்பு.. இம்புட்டு கோவமா இருக்க.. ஆபிசில ஏதாச்சும் பிரச்னையோ..?"

ஆதரவாக பேசுவதாகத்தான் அவர் நினைத்துக் கொண்டார்.. ஆனால் அவர் மகன் அப்படி நினைத்துக் கொள்ளவில்லை என்பது அவனுடைய காட்டமான பதிலில் இருந்தே தெரிய வந்தது..

"ஆமாம்னு சொன்னா என்ன செய்யப் போறிங்க..?"

மிளகாயின் காரத்தோடு வந்த பதிலில் எதற்காக மகன் இந்த அளவுக்கு கோபப் படுகிறான் என்று தவித்துப் போனார் சிவதாணு.. கண்ணதாசன் அவருடைய தவிப்பை கண்டு கொள்கிறவனாக இல்லை.. அவரை விட்டுவிட்டு அவன் அர்ஜீனை முறைத்துக் கொண்டிருந்தான்.. அதிலும் சிவதாணுவுக்கு ஆச்சரியம் வந்தது.. மகன் எதற்காக வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளியை பகையாளியை முறைப்பதைப் போல முறைத்துக் கொண்டிருக்கிறான் என்ற விவரம் அவருக்கு பிடிபடவில்லை...

'என்னவோ நம்ம வீட்டுச் சொத்தக் கொள்ளயடிச்சவன முறைக்கிறதப் போலயில்ல இவன் முறைச்சுக்கிட்டு உக்காந்திருக்கான்...?'

சிவதாணு அது போன்ற செய்கைகளை அதற்கு முன்னால் மகனிடம் பார்த்ததில்லை.. அதனால் குழம்பிப் போய் விட்டார்.. ஒருவேளை.. வந்திருப்பது யாரென்று தெரியாமல்தான் மகன் வந்திருக்கும் விருந்தாளியை முறைத்துக் கொண்டிருக்கிறானோ என்ற எண்ணத்தில் அவர் அர்ஜீனை மகனுக்கு அறிமுகப் படுத்தி விடும் வேலையை ஆரம்பித்து வைத்தார்...

“கண்ணா..” அவர் அன்பாக அழைக்க...

“சொல்லுங்க..” என்று எதிரிக்காரரிடம் பேசுவதைப் போல கறாராக பேசி வைத்தான் கண்ணதாசன்..

‘இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இவன் இப்படி கடிக்கிறான்..? கண்ணான்னுதான சொன்னேன்..?’

சிவதாணு தலையால் தண்ணீர் குடிக்கும் நிலைக்கு ஆளானார்.. இருந்தும் எடுத்த காரியத்தை முடிக்காமல் விடுவதில்லை என்ற வீர சபதத்தை மனதில் ஏற்றவராக...

“சார் யாருன்னு தெரியுமா..?” என்று கேட்டார்...

“சொன்னாத்தானே தெரியும்..?” கண்ணதாசன் இப்போது அர்ஜீனை விட்டுவிட்டு அவரை முறைக்க ஆரம்பித்தான்...

“இல்லப்பா.. நம்ம காவ்யாவோட பிரண்டுப்பா...” மகனின் முறைப்பில் சிவதாணுவிற்கு வார்த்தைகள் தந்தியடித்தன..

அவரும்தான் என்ன செய்வார்..? என்ன தவறு செய்தார் என்று மகன் சொன்னால்தான் அவருக்குத்

தெரியும்..? எதையும் சொல்லாமல் மகன் ‘வெட்டவா..? குத்தவா..?’ என்று அவரையும்.. வீட்டுக்கு வந்திருக்கும் விருந்தாளியையும்.. சேர்த்து வைத்து முறைத்தால் அவருக்கு வார்த்தைகள் தந்தியடிக்காதா..?

“காவ்யாவோட பிரண்டா..? யாரு..? இவரா..?” கண்ணதாசன் கொதிப்பாக கேட்க...

“இல்லப்பா.. இல்ல..” என்று அலறிவிட்டார் சிவதாணு...

“இவரு பாவனாவோட முதலாளிப்பா.. பாவனாதானே நம்ம காவ்யாவோட பிரண்டு..?”

“அது எங்களுக்கும் தெரியும்.. இவர் பாவனாவின் முதலாளின்னா நம்ம வீட்டுக்கு வந்து உட்காரனும்னு ஏதாச்சும் சட்டமிருக்கா..?”

சிவதாணுவுக்கே கண்ணதாசனின் அந்தக் கேள்வியைக் கேட்கப் பிடிக்கவில்லை.. அவர் லேசாக முகம் சுளித்தார்...

“என்ன கண்ணா இது..? நீ பெரிய படிப்பாளி.. கவர்ண்மென்டில் பெரிய உத்தியோகம் பாக்கிறவன்.. எனக்கும் உன் அம்மாவுக்கும் புத்தி சொல்ற தகப்பன் சாமி.. இப்படின்னுதான இதுநாள் வரைக்கும் நினைச்சிருந்தேன்..”

“நானா உங்கள இப்படியெல்லாம் நினைங்கன்னு சொன்னேன்..?”

“ஏம்ப்பா.. நீ பேசறது உனக்கே நல்லாயிருக்கா..?”

“இல்லதான்.. ஆனாப் பாருங்கப்பா.. சில பேரு செய்யறது மட்டும் நல்லாவா இருக்கு..?”

“நீ யாரைச் சொல்ற..?”

“யாரையோ...”

“அதைவிடு.. பாவனா சென்னையிலிருந்து தனியாவந்திருக்கு.. அந்தப் புள்ளயோட முதலாளிக்கும் மதுரையில வேலையிருந்திருக்கு.. பாவனாவோட அப்பாம்மாவுக்கும் உடம்பு சரியில்லயாம்.. அவங்கதான் இந்தத் தம்பி மதுரைக்குப் போறாரே.. உனக்குத் துணையாய் இருப்பாரேன்னு சொன்னாங்களாம்.. அதனால இவங்க சேர்ந்தே வந்தாங்களாம்..”

“அதாவது.. இவரு.. பாவனாவை நம்ம வீட்டில் ஒப்படைச்சுட்டுப் போக வந்திருக்காருன்னு சொல்றீங்க..?”

“ஆமாம்பா ஆமாம்...”

சிவதாணு தொண்டைத் தண்ணீர் வற்றி விட்டதால்.. அதை நனைக்க.. தண்ணீர் செம்பைத் தேட ஆரம்பிக்க.. கண்ணதாசன் இது உன் உபாயம்தானா என்று அர்ஜீனை முறைக்க ஆரம்பித்தான்...

“ஸோ.. இந்த வீட்டுக்குள்ள வந்துட்ட..?” அடிக்குரலில் அர்ஜீனிடம் கேட்டான்...

“யெஸ்..” அமர்த்தலான குரலில் பதில் சொன்னான் அர்ஜீன்...

“இனி என்ன செய்வதா உத்தேசம் பண்ணியிருக்க..? திரும்பவும் என் தங்கச்சியின் மனசை கூறு போட்டு

குமிச்சுட்டு.. சென்னைக்குப் பறந்து போகலாம்ன்னு நினைச்சேன்னு வைய்யி.. மாப்பிள்ள உனக்குத் திருவிழாதாண்டி...”

“அதுக்குத்தானே வந்திருக்கிறேன்...”

“எதுக்கு..?”

“சித்திரைத் திருவிழாவுக்கு...”

“அதுக்கும்.. உனக்கும்.. என்னடா சம்பந்தம்..?”

“மாமனார் வீட்டு ஊருல திருவிழான்னா... மருமகனுக்கு அதில சம்பந்தம் இருக்காதா மிஸ்டர் கண்ணதாசன்..?”

“ஊஹீம்.. நானு பேனாவக் கீழே போட்டுட்டு வீச்சரிவாளத் தேட வேண்டியதுதான்...”

“எதுக்கு மச்சான்..? எனக்கு இளநீர் வெட்டித் தரவா அருவாளைத் தேடறிங்க..?”

“டேய்ய்.. நீ அடங்கவே மாட்டியா..?”

“ஊஹீம்...”

“யாருக்கு.. யாரு மச்சான்..?”

“நீங்கதான் எனக்கு மச்சான்.. உங்க ஊருல வொய்ஃபோட அண்ணனை அப்படித்தான் கூப்பிடு வாங்களாம்.. காவ்யா சொல்லியிருக்கா..”

“அது அதை மட்டுமா சொல்லிச்சு..? உன் முகத்தில் முழிக்க பிடித்தமேயில்லைன்னும் சொல்லியிருக்குமே...”

"சொன்னா.." அர்ஜீனின் முகம் இறுகியது.. அதை திருப்தியாகப் பார்த்தான் கண்ணதாசன்...

'வாடா மாப்பிள்ள.. மாமனார் வீட்டில திருவிழா கொண்டாட வந்தியா..? கொண்டாடு.. தாராளமா கொண்டாடு.. அதுக்கு முன்னால என் தங்கச்சி மனசில தைச்சிருக்கிற முள்ள பிடுங்கியெறிஞ்சிட்டு கொண்டாடு.. அத விட்டுட்டு என்னமோ கள்ளழகர் அவரு ஜோடியப் பாக்கிறதப் போல காதல் பார்வை பார்த்து என் தங்கச்சி மனசைக் கலைச்சேன்னு வைய்யி.. நான் மனுசனா இருக்க மாட்டேன்...'

"எதுக்கு முறைக்கறிங்க கண்ணதாசன்... உங்க தங்கை என்னை வேண்டாம்ன்னு தூக்கியெறிஞ்சா.. ஒதுங்கிப் போறதுக்கு நான் ஒன்றும் வழியில் போகிற வழிப் போக்கனில்லை.. அவ வாழ்க்கையே நான்தான்..."

"அப்படின்னு நீயாய் சொல்லிக்கிட்டு அலையக் கூடாது.. என் தங்கச்சியும் சொல்லனும்..."

"அவ வாய்விட்டு அதைச் சொல்லலைதான்.. நான் ஒப்புக்கறேன்.. பட்..."

"பட்..?"

"அவ மனசில நான் இல்லைன்னு உங்களாலே நிச்சயமாய் சொல்ல முடியுமா கண்ணதாசன்..? அப்படி நீங்க சொல்லிட்டா.. நான் என் வழியைப் பார்த்துக்கிட்டுப் போயிடறேன்..."

அர்ஜீன் நிதானமாக கண்ணதாசனின் விழிகளுக்குள் ஊடுறிவிப் பார்த்தபடி பேச.. கண்ணதாசன் பல்லைக் கடித்தான்...

அதை இல்லையென்று அவன் எப்படிச் சொல்லுவான்..?

“அந்தத் தெனாவெட்டிலதான நீ எங்க வீட்டுக்கே வந்து கால் மேல கால் போட்டு மாப்பிள்ளை போல உக்காந்திருக்க...” கண்ணதாசன் பொருமினான்...

“தெனாவெட்டு..? இதுக்கு என்ன மீனிங்ன்னு தெரியலை.. காவ்யாகிட்டதான் கேட்கனும்.. அதைக் கேட்டா அவ சண்டைக்கு வருவா...”

“என்னவோ தாலிகட்டின பொண்டாட்டியப் பேசறதைப் போல.. அவ.. இவன்னு என்கிட்டயே பேசறிங்க.. நான் காவ்யாவோட அண்ணன்காரன்... அத நினப்பில வைச்சுக்கிட்டுப் பேசுங்க.. வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளியாச்சேன்னு பாக்கறேன்...”

“விருந்தாளியா..? நானா..? இல்லை மிஸ்டர் கண்ணதாசன்... நான் உங்க வீட்டுக்கு வந்திருக்கிற மாப்பிள்ளை... உங்க பேரண்ட்ஸீக்குத்தான் இது தெரியாது... உங்களுக்குமா இது தெரியாது..?”

கண்ணதாசனின் அனல் பார்வையை லட்சியம் செய்யாமல் அர்ஜீன் பேசிக்கொண்டிருக்க.. ரகசியக் குரலில் பேசும் அவர்கள் இருவரையும் சிவதாணு வியப்புடன் பார்த்தார்...

# 190

*நீ சொன்ன வார்த்தைகளை...*
*நினைத்துப் பார்க்க ஆசைகொண்டேன்...*

**அ**க்கினி நட்சத்திரம் போல முறைத்துக் கொண்டிருந்த அந்த இருவரின் இடையினில் நடந்து கொண்டிருக்கும் ரகசிய உரையாடல் என்னவாக இருக்கக் கூடும் என்று மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்ட சிவதாணு.. அதை அறிந்து கொள்ளும் ஆவல் மேலிட்டவராக...

"என்ன பேசிக்கறிங்க..?" என்று மகனிடம் கேட்டார்...

"ஊம்..? நாட்டு நிலவரம் இப்படியிருக்கே.. நாளைக்கு என்னவாகுமோ.. ஏது ஆகுமோன்னு பேசிக்கிட்டு இருந்தோம்..." என்றான் அவர் மகன்...

சிவதாணுவுக்கு முகத்தில் ஈயாடவில்லை...

'ம்ஹீம்.. என்னைக்கும் சிரிக்காதவ.. திருவிழாக் கடையில சிரிச்சு வைச்சாளாம்.. அந்தக் கதையாயில்ல.. என் மகன் கதையும் இருக்கு.. என்னைக்கும் இப்படி எகனைக்கு மொகனையாய் பேசாதவன்

திருவிழாவுக்குன்னு வீட்டில விருந்தாளிக வந்து இறங்கியிருக்கிற சமயத்தில இப்புடிப் பேசி வைக்கிறானே..' அவருக்கு ஆற்றாமையாக இருந்தது..

மகன் வந்து விட்ட சேதி அறிந்தவளாக அங்கே விரைந்து வந்த அன்னபூரணியின் முகத்தை.. தாய் பசுவைக் கண்டு விட்ட கன்றைப் போல அவர் பார்த்து வைக்க.. அவன்னபூரணிக்கு தூக்கிவாரிப் போட்டது...

அவள் வருவதற்கு முன்னால் அங்கே நடந்த உரையாடலைப் பற்றி அவளுக்கு என்ன தெரியும்..? அதனால்...

'இந்த மனுசன் என்னதுக்கு இப்புடிப் பருகு.. பருகுன்னு பாத்து வைக்கிறாரு..' என்று கணவனை அவள் முறைத்தாள்..

"ஆத்தி... எம்புள்ள இத்தனை நாளையில இன்னைக்குத்தான் இம்புட்டு விரசா வீடு திரும்பியிருக்கு.." மகிழ்ந்தபடி...

"காபி கொண்டு வரவா கண்ணா..?" என்று மகனிடம் கேட்டாள்...

அதற்கு அவன் எக்குத் தப்பாகத்தான் ஏதாவது ஒரு பதிலைச் சொல்வான் என்று சிவதாணு எதிர்பார்த்திருக்க.. கண்ணதாசன் அவர் எதிர்பார்ப்பை சுத்தியல் இல்லாமல் சுக்கு நூறாய் உடைத்து விட்டு..

"கொடும்மா..." என்று தன்மையாக பதில் சொல்லி வைத்தான்...

‘இவனுக்குள்ள இம்புட்டு ஓரவஞ்சனையா..?’

மனதுக்குள் மருகிப் போனார் சிவதாணு.. அவர் மகன் ஒரு கண்ணில் வெண்ணையும்.. இன்னொரு கண்ணில் சுண்ணாம்பையும் வைப்பானா..?

அன்னபூரணி காபி தம்ளர்களை அடுக்கிய தட்டைக் கையில் கொண்டு வந்தாள்.. மறக்காமல் மகனுக்குத்தான் முதல் தம்ளரைக் கொடுத்தாள்...

‘இப்படித்தான் மகனைக் கைக்குள்ள நிறுத்தி வைச்சிருக்கா போல.. எனக்கு இது தெரியாம போச்சே... என்னத்தை குறளைப் படிச்சேன்..? இதையில்ல படிச்சிருக்கனும்..?’

சிவதாணு மனைவியின் அணுகு முறையை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பிக்க.. அதையறியாத அன்னபூரணி அடுத்த தம்ளர் காபியை அர்ஜீனிடம் நீட்டினாள்...

‘இப்பவும் என் கையில காபிதம்ளரைக் கொடுக்க மாட்டேங்கிறாளே...’

சிவதாணு புகைந்து கொண்டிருக்க.. அர்ஜீன் மறுக்காமல் காபியை வாங்கிக் கொண்டான்...

‘இப்பத்தான கொஞ்ச நேரத்துக்கு முன்னால இவன் காபியை வேணாமுன்னு சொன்னான்..?’ சிவதாணு யோசித்துக் கொண்டிருந்த போது...

“எப்பப் பாத்தாலும் குறளைப் பத்தியே நினைச்சுக்கிட்டு இருக்காம.. கொஞ்சம் குடும்பத்தைப்

பத்தியும் நினைச்சுப் பழகுங்க...” என்று அதட்டலாக கூறியபடி அவர் கையில் காபித் தம்ளரைத் திணித்தாள் அன்னபூரணி...

அந்த மட்டிலும் மூன்றாவது தம்ளர் காபியை அவருக்குக் கொடுத்து மூன்றாவது இடத்தையாவது அவள் தந்தாளே என்று மகிழ்ந்து போன சிவதாணு...

‘இப்ப நானு குறளைப் பத்திதான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்னு.. எதை வைச்சு இவ சொல்றா...’ என்ற பலத்த யோசனைக்கு ஆளானார்..

காவ்யாவிடமும்... பாவனாவிடமும் காபித் தம்ளர்களை கொடுத்த அன்னபூரணி.. மகனிடம் எதையோ தாழ்ந்த குரலில் கேட்டாள்.. அவன் அதைக் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தபோது.. அர்ஜீனின் பார்வை.. காவ்யாவின் மீது தாவியது...

அவளோ... அவன் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல்.. ஏதோ ஒரு திக்கில் வெறித்துப் பார்த்தபடி.. பாவனாவுடன் பேசியபடி காபியை குடித்துக் கொண்டிருந்தாள்..

‘இவ அண்ணன் இருந்தா என்பக்கம் திரும்பிக் கூட பார்க்க மாட்டாளா..?’ அர்ஜீனுக்குள் சினம் மூண்டது...

ஏதோ ஒரு வகையில் கண்ணதாசனின் முன்னால் தோல்வியைத் தழுவியதைப் போல அவன் உணர்ந்தான்..

அன்னபூரணியிடம் பேசியபடி அவனைக் கண்ணதாசன் கண்காணித்துக் கொண்டிருப்பதை அர்ஜீன்

கண்டு கொண்டிருந்தான்.. அப்படியிருக்கையில்.. அவன் பார்வையைச் சந்திக்காத காவ்யாவின் பார்வையைக் கண்டதும்.. கண்ணதாசனின் முகத்தில் ஏளனம் தவழாதா என்று அர்ஜீன் எரிச்சலடைந்தான்...

“ஓகே பாவனா.. நான் கிளம்பறேன்...”

அர்ஜீன் எழுந்து கொள்ள யத்தனித்தபோது... ஏதோ ஒரு திக்கில் வெறித்துக் கொண்டிருந்த காவ்யா அவசரமாகத் திரும்பி அவன் பார்வையைச் சந்தித்தாள்...

அர்ஜீனின் முகத்தில் வெளிச்சம் படர்ந்தது...

‘பார்த்தாயா..?’ என்ற வெற்றிக் குறியீட்டுடன் கண்ணதாசனை அவன் பார்த்தான்..

கல்லைப் போல இறுகியிருந்த கண்ணதாசனின் முகத்திலிருந்து அவனால் எதையும் அறிய முடியவில்லை..

“ஓகே சார்.. ஸீ யு லேட்டர்..” பாவனா விடை கொடுத்து விட..

‘இவளை யார் இவ்வளவு அவசரமாக ‘பை’ சொல்லச் சொன்னது..?’ என்று மனதுக்குள் திட்டித் தீர்த்தபடி வேறு வழியின்றி அந்த வீட்டை விட்டுக் கிளம்பினான் அர்ஜீன்...

“அடிக்கடி வந்துட்டுப் போங்க...”

உபசாரமாக சொல்லி விட்டு.. மகனின் பலத்த கண்டனப் பார்வைக்கு ஆளானார் சிவதாணு...

‘இப்ப நான் என்னத்தை சொல்லிப்புட்டேன்னு.. இந்தப்பய என்ன இந்த முறை முறைக்கிறான்..?’ திரும்பவும்

மனதுக்குள் ஆதங்கப் பட்டுக் கொண்டவருக்கு.. அது எதனால் என்ற மர்மம் மட்டும் விளங்கவேயில்லை...

“போயிட்டு வாங்க..” ஒற்றை வார்த்தையோடு நிறுத்திக் கொண்ட அன்னபூரணியை கண்ணதாசன் பாசமாக பார்த்து வைக்க..

‘இவ அப்படி என்னத்தச் சொல்லிப்புட்டான்னு இந்த பயபுள்ள பாசப் பறவைய பறக்க விடறான்..?’ என்று பொறாமைப் பட்டுப் போனார்...

அர்ஜீன் வாசலுக்கு விரைந்தான்.. அவன் பின்னாலே காவ்யாவின் பார்வையும் விரைந்தது... புருவங்கள் முடிச்சிட... அதைக் கவனித்தபடி வாசலுக்கு வந்தான் கண்ணதாசன்.. காரில் ஏறப்போன அர்ஜீன் அவன் பக்கம் திரும்பி...

“அவ என்னை மறக்க மாட்டா..” என்றான்...

“ஏய்.. யேய்.. இந்தத் தெனாவெட்ட விட்டுட்டு.. உன்மேல மனசை வைச்சிருக்க என் தங்கச்சி கழுத்தில தாலியக் கட்டுடா பாக்கலாம்.. அத விட்டுட்டு.. அது மனசைக் கலைக்கிற வேலையையெல்லாம் இங்கே வைச்சுக்காதே..” கண்ணதாசன் உருமினான்...

“மனதைக் கலைக்கிறேனா..? நானா..? நெவர் மிஸ்டர் கண்ணதாசன்.. காவ்யாவின் மனதை யாராலும் கலைக்க முடியாது.. ஆனாலும் உங்க சவாலை நான் ஏத்துக்கிறேன்.. இந்தச் சித்திரைத் திருவிழா முடிகிறதுக்குள்ள அவ கழுத்தில தாலியைக் கட்டலைன்னா.. என் பெயர் அர்ஜீன் இல்லை..” அர்ஜீன் சூளுரைத்தான்...

“போதும்டா டேய்... இதைப் போல எத்தனை வீரவசனத்தை நீ பேசி.. நான் கேட்டிருப்பேன்.. இங்கிட்டு நீ வீரவசனம் பேசுவ.. அங்கிட்டு உங்க அப்பாவும் உங்க வருங்காலப் பொண்டாட்டியும் வந்து ஆட்டத்தை கலைச்சுட்டுப் போவாங்க.. இதுதானே உங்க பிழைப்பு..? அன்னைக்குக் கூடத்தான் நீ சொன்ன.. கனடாவில இருந்து திரும்பி வந்ததும் உன் குடும்பத்தோட வந்து என் தங்கச்சிய பொண்ணு கேட்கிறேன்னு.. முடிஞ்சதா..? அப்பவும் இப்பப் போலத்தான் பெரிசா சவால் விட்ட.. அப்படி நடக்கலைன்னா.. உன்னை யாருன்னு கேக்கச் சொல்லி.. நானும் கேட்டேனில்ல..? நீ யாருன்னு கேட்டேனில்ல..? அதுக்கப்புறமும் என்னத்துக்குடா அத்தைக்கு மீசையை முளைக்க வைக்கனும்னு இந்த பாடு படற..?” கண்ணதாசன் சொல்லிக் காட்டினான்...

“பேசுங்க கண்ணதாசன்.. இது உங்க டர்ன்..” முகம் இறுகப் பதில் சொன்னான் அர்ஜீன்...

“நானும் ஒர்நாள் பேசுவேன்.. அந்தக் காலம் நிச்சயமாய் வந்தே தீரும்... அப்ப நீங்க கேட்கிற இத்தனை கேள்விகளுக்கும் ஒட்டு மொத்தமா பதிலைச் சொல்றேன்..”

“அப்படிங்கற...?”

“யெஸ் மிஸ்டர் கண்ணதாசன்..?”

“அப்ப... இந்தச் சித்திரைத் திருவிழாவில என் தங்கச்சி கழுத்தில நீ தாலியைக் கட்டிருவேங்கிற..?”

“ஷ்யூர்...”

“அதையும் பாக்கலாம்...”

“பாக்கத்தானே போறிங்க...”

அர்ஜீன் காரில் ஏறினான்.. இயல்பாக தலை உயர்த்தி மாடியைப் பார்த்தான்.. அவன் நினைத்தபடி மாடியறையின் ஜன்னல் கம்பிகளின் ஊடே காவ்யாவின் முகம் தெரிந்தது.. அர்ஜீனின் மனம் கனிந்தது...

‘எனக்காக அங்கே போய் நின்னிருக்கா..’ அவன் காதல் கர்வம் கொண்டது..

‘வருவேண்டி.. உன்னை சிறையெடுக்க வருவேன்.. அப்பப் பார்க்கிறேன்.. யார் என்னைத் தடுக்கிறாங்கன்னு.. நீ என்னை மேரேஜ் பண்ணிக்க மாட்டியா..? பார்க்கலாம் எப்படி நீ மாட்டேன்னு சொல்கிறன்னு...’

அர்ஜீன் புயல் வேகத்தில் காரைக் கிளப்பி சாலையில் பறந்தான்.. அவன் மனம் முழுவதும்... கண்ணதாசனின் வீட்டிலேயே மையம் கொண்டிருந்தது..

*“அடித் தப்பாமல் நான்..*
*உன்னைச் சிறையெடுப்பேன்..”*

காரில் பாடல் ஒலித்தது.. அர்ஜீனின் கண்களில் தீர்க்கம் வந்தது.. அவன் புருவங்கள் முடிச்சிட.. மனதுக்குள் திட்டம் தீட்டியபடி காரில் பறந்தான்...

ஹோட்டல் அறையை அவன் அடைந்த போது அவன் செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பார்த்தான்.. ‘ஆனந்தி அழைக்கிறாள்..’ என்று

சின்னத்திரை சொன்னது.. போனை உயிர்ப்பித்து காதுக்கு கொடுத்தவன்..

“அக்கா..” என்றான்...

“ஏண்டா... என்னிடம் சொல்லாம மதுரைக்கு ஓடிட்டயே.. நானும்.. அம்மாவும்.. குழந்தைகளும் எப்படி மதுரைக்கு வந்து சேர்வோம்ன்னு கொஞ்சமாவது நீ நினைத்துப் பார்த்தியா..?” மறுமுனையில் பொரிந்து தள்ளினாள் ஆனந்தி...

“வெயிட்.. வெயிட்.. நீயும்.. அம்மாவும் மதுரைக்கு வருகிறதா இருந்தீங்களா..?” அர்ஜீன் திகைத்தான்..

“ஆமாம்...” கோபமாக சொன்னாள் ஆனந்தி...

“எதுக்கு..?” அர்ஜீனுக்குப் புரியவில்லை...

“எதுக்கா..? மதுரையைச் சுற்றிப் பார்க்க.. ஃபாரின்ல இருந்தெல்லாம் ஆள் வந்து போறாங்க.. இதோ இருக்கிற சென்னையில இருக்கிற எனக்கும் அம்மாவுக்கும் அந்த ஆசை இருக்கக் கூடாதா..?”

“ஆர் யு ஷ்யூர்..?”

“நிஜமாத்தான் சொல்றேன்.. இந்த வெகேசனுக்கு குழந்தைகளைக் கூப்பிட்டுக்கிட்டு மதுரைக்கு வருகிறதாகத் தான் இருந்தோம்.. அங்கே இப்பச் சித்திரைத் திருவிழா நடக்குமாமே.. அது வெர்ல்டு லெவலில பேசப்படற திருவிழாவாமே..?”

“அப்படித்தான் சொல்லிக்கிறாங்க...”

"உனக்கு அதுவும் தெரியாதா..?"

"ஊஹீம்..."

"வெளியில சொல்லிராதே.. மதுரையில கடையை வாங்கியவன் கூடவே காதலையும் சேர்த்து வாங்கிட்டு.. சித்திரைத் திருவிழாவைப் பத்தி எதுவும் தெரியாதுன்னு வந்து நிற்கிறான்.." ஆனந்தி சிரித்தாள்..

# 191

*பனி போன்ற உன் பார்வையிலே..*
*இளைப்பாற ஆசைகொண்டேன்...*

**அ**ர்ஜீன் காவ்யாவின் உபயத்தால் ஒரு பழைய பாடலை அடிக்கடி கேட்டிருக்கிறான்...

*'நான் காற்று வாங்கப் போனேன்..*
*ஒரு கவிதை வாங்கி வந்தேன்...'*

என்ற பாடல்தான் அது.. அந்தப் பாடலைத்தான் ஆனந்தி அன்று மாற்றிப் பாடிக்காட்டினாள்...

*"நீ கடையை வாங்கப் போனாய்..*
*காதல் வாங்கி வந்தாய்...*
*அதைக் கேட்டு வாங்கிப் போனாள்..*
*அந்தக் கன்னி என்னவானாள்..?"*

“இந்நேரத்துக்கு என் வொய்பா.. உன் தம்பி வொய்பா.. அம்மாவுக்கு அருமையான மருமகளா.. நம்ம வீட்டிலே இருந்திருப்பா.. எங்கே..? உன் அருமை அப்பாதான் அதை நடக்க விடாம செய்துட்டாரே..” அர்ஜீன் அலுத்துக் கொண்டான்...

“போனதை விடுடா.. இனி நடக்கிறதைப் பாரு..”

“பார்க்கத்தான் போகிறேன்...”

“நீ என்ன பார்க்கிறேன்னு நாங்களும் பார்க்க வருகிறோம்...”

“எப்ப..?”

“நாளைக்கு மார்னிங் பிளைட்டில...”

சொன்னபடி.. மறுநாள் காலையில்.. மதுரை விமான நிலையத்தில் ஆனந்தியும்.. சுந்தரரியும்.. சரண்.. சாராவோடு வந்து இறங்கி விட்டார்கள்..

“ஏய்ய்.. வாலுகளா..! இந்த இயர் வெர்ல்டு டூர் என்னவாச்சு..?” குழந்தைகளை அள்ளியபடி கேட்டான் அர்ஜீன்...

“நம்ம நாட்டைச் சுத்தாம உலகத்தைச் சுத்திப் பார்த்து என்ன ஆகப் போகுதுன்னு கேட்டாங்க...” சரண் பெரிய மனிதனைப் போல முகத்தை வைத்துக் கொண்டு சொன்னான்...

“யாரு கேட்டது...?”

“மம்மிதான்...”

“ஓ.. அதுக்கு சார் என்ன சொன்னீங்க..?”

“ஐ அக்ரி வித் யுவர் வொர்டுஸ்ன்னு சொன்னேன் அங்கிள்...”

“குட் மம்மி.. குட்சன்...”

அர்ஜீன் தங்கியிருந்த ஹோட்டலிலேயே அவர்களுக்கும் அறைகளை ஏற்பாடு பண்ணியிருந்ததால்.. அவர்கள் நேராக ஹோட்டல் அறைக்கு போய் விட்டார்கள்.. ஆனந்தியின் அறையும்... சுந்தரியின் அறையும்... அர்ஜீனின் அறைக்குப் பக்கத்திலேயே அமைந்து விட்டதால்... குழந்தைகள் மூன்று அறைகளிலும்.. மாறி மாறி ஓடி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.. குளித்து உடைமாற்றியவர்களை சாப்பிட அழைத்துச் சென்றான் அர்ஜீன்...

“ரெஸ்ட் எடுங்க.. ஈவினிங்கில் கோவிலுக்குப் போகலாம்...” என்று சொல்லி விட்டு கடைக்கு போய் விட்டான்...

மாலையில் அவர்கள் கோவிலுக்குப் போனார்கள்.. இறைவனையும்.. இறைவியையும் தரிசனம் செய்து விட்டு.. கோவிலை வலம் வந்த போது.. எதிரே கண்ணதாசன் குடும்பத்துடன் கோவிலுக்குள் வந்து கொண்டிருந்தான்.. அவர்களுடன் வந்த பாவனா...

“ஹலோ சார்..” என்று உரத்த குரலில் அழைத்ததும் திரும்பிப் பார்த்த அர்ஜீனின் கண்கள் மின்னின...

காவ்யா அவனை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள்...

“ஹாய் பாவனா...”

வாய்ப்புக் கிடைத்தால் அதை நழுவவிட அர்ஜீன் என்ன முட்டாளா..? அவன் உற்சாகமாக பாவனாவுடன் பேசுவதைப் போல அங்கே தேங்கி நின்றுவிட.. அவன் கூடவந்த ஆனந்தியும்.. சுந்தரியும் நின்றார்கள்.. சரணும்.. சாராவும் ஓட ஆரம்பிக்க...

“நோ.. சரண்..” என்று ஆனந்தி குரல் கொடுததாள்..

அந்தக் குரலில் தலை உயர்த்தி அவளை ஆவலுடன் பார்த்த காவ்யாவின் விழிகளில் எதைக் கண்டாளோ.. ஆனந்தியின் முகத்தில் யோசனை வந்தது...

‘யார் இந்தப் பெண்..?’

சரணையும்.. சாராவையும் மறந்து அவள் காவ்யாவின் முகத்தை உற்றுக் கவனித்தாள்.. அவள் பார்வையில் முகம் சிவந்த காவ்யாவின் முகப் பொழிவு அவளுக்கு எதையோ உணர்த்த..

“யாருடா இவ..?” என்று அர்ஜீனின் காதோரம் வினவினாள்...

“இவதான் அவ...” இரண்டே வார்த்தைகளில் காவ்யா யாரென்பதை உணர்த்தி விட்டான் அர்ஜீன்...

“ஓ...!”

ஆனந்தியின் பார்வை இப்போது சொந்தத்துடன் காவ்யாவை அளவெடுக்க ஆரம்பித்ததில் காவ்யாவின் சிவந்த முகம் மேலும் சிவந்து...

“ம்மா...”

ஆனந்தி சுந்தரியின் காதோரமாக சரிந்து முணுமுணுக்க.. கண்களில் ஆயிரம் கோடி அகல் விளக்குகளின் பிரகாசத்தோடு காவ்யாவை பார்வையிட்டாள் சுந்தரி...

அர்ஜீனின் அம்மாவும்.. அக்காவும் வந்திருக்கிறார்கள் என்று பாவனா சொன்னதால் அவர்களை ஆர்வத்துடன் பார்த்த காவ்யா.. சுந்தரியின் பார்வையைக் கண்டதும் மனம் படபடக்க தலை குனிந்தாள்...

அந்தி நேரத்து கோவிலின் இதமான தெய்வீகச் சூழலில்.. முதன் முதலாக.. அவள் மகனின் மனம் கவர்ந்த பெண்ணை ஆவலுடன் பார்த்த சுந்தரியின் பார்வை.. காவ்யாவின் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அங்குலம்.. அங்குலமாகப் பரவிப் படர்ந்தது...

“அப்படியே பெண் பார்க்க வந்திருக்கிற மாப்பிள்ளையோட அம்மா பார்க்கிறதைப் போலவே இருக்குடி...”

பாவனா காவ்யாவின் காதோரமாக கிசுகிசுக்க... அவள் முகம் குங்குமமானது.. அந்த வெட்கச் சிகப்பில் சுந்தரியின் மனம் நேகாவையும்.. காவ்யாவையும் ஒப்பிட்டுப் பார்த்தது...

பெண்மையின் பொழிவோடும்.. மிளிர்வோடும்.. நின்றிருந்த காவ்யா எங்கே.. அரேபிய குதிரையின் ஆணவத்தோடும்.. அலட்சியத்தோடும்.. இகழ்ச்சியாக பார்த்து வைக்கும் நேகா எங்கேயென்று அவள் மனம் கேட்டது...

அர்ஜீனும்.. பாவனாவும்.. பேச்சு வார்த்தைக்கு தயாரானார்கள்.. இருவருக்குமே தெரியும்.. இருபக்க குடும்பத்தாரையும் நிறுத்தி வைக்க வேண்டுமானால்.. அவர்கள் பேச்சு வார்த்தையைத் தொடங்க வேண்டும்...

"என்ன சார்.. கோவிலுக்கு வந்தீங்களா..?" அறிவார்ந்த கேள்வியைக் கேட்டுவிட்டு...

'எப்புடி..?' என்று காவ்யாவைப் பார்த்துக் கண்சிமிட்டினாள் பாவனா...

"அக்கட சூடு.." காவ்யா முணுமுணுத்தாள்...

அவளுக்குத்தானே தெரியும்.. அர்ஜீன்.. நக்கலும்.. நையாண்டியும் கைவரப் பெற்றவன் என்பது...

"இல்ல பாவனா.. சும்மா தியேட்டரில படம் பார்க்க வந்தோம்.. இல்லம்மா..." என்று சிரிக்காமல் பதில் சொன்னான் அர்ஜீன்...

"உன் ஆளுக்கு இருக்கிற தெனாவெட்டையும்.. லொள்ளையும் பாத்தியாடி.. தேவையாடி இது எனக்கு..?" காவ்யாவிடம் பொருமினாள் பாவனா...

"இதை அங்கே சொல்லு.. என்கிட்ட எதுக்குச் சொல்ற..?" அக்கறையில்லாதவளைப் போல முகத்தை வைத்துக் கொண்டாள் காவ்யா...

பாவனாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது.. வெட்டிக் கிடக்கும் அந்தக் காதலர்களின் உறவை மீண்டும் ஒட்ட வைப்பதற்கு அவள் அவற்றை இணைத்துப் பற்ற

வைத்தால்.. பதிலுக்கு அவள் தோழி பாவனாவின் மனதில் எரிச்சலைப் பற்ற வைப்பாளா..?

“நல்லாயிருக்குடி உன் நியாயம்.. உன்னையும்... உன் ஆளையும் கோந்து போட்டு ஒட்டவைச்சா.. எனக்கென்ன சிலையா வைக்கப் போறிங்க..?” அடிக்குரலில் காவ்யாவிடம் சீறினாள்...

“தெரியுதில்ல.. அதுக்கப்புறமும் எதுக்காக கோந்து பாட்டில கையில வைச்சுக்கிட்டு அலையற..? விட்டுரு..” ஒற்றை வரியில் முடித்துக் கொண்டாள் காவ்யா..

அப்படிச் சொன்னவள் உறவை முடித்துக் கொள்கிறவளாகத் தெரியவில்லை.. அவள் பார்வை ஆர்வத்துடன் சுந்தரியின் மீதும் ஆனந்தியின் மீதும் படிந்து.. படிந்து மீண்டது.. அவர்கள் இருவரும் அர்ஜீனின் அக்காவும்.. அம்மாவும்.. என்பதினால்.. அவளின் மனதில் பொங்கியெழுந்த பாச உணர்வை பாவனாவினால் புரிந்து கொள்ள முடிந்தது...

‘இந்த லட்சணத்தில இவளுக்கு இவங்க கூட ஒட்டுறவு இல்லயாம்.. விட்டுரனுமாம்...’

பாவனா கடுப்பாகிப் போனவளாக அர்ஜீனை ஏறிட்டாள்...

“அப்படியா சார்.. நான் கூட நீங்க வைகையாத்தில குளிக்க வந்தீங்களோன்னு நினைச்சேன்...” பதிலுக்கு ஒரு போடு போட்ட பாவனா...

“இல்லையாடி காவ்யா..” என்று தோழியையும் துணைசேர்த்துக் கொண்டாள்...

காவ்யா பதறிப் போனாள்.. அவளுடைய அம்மாவும், அப்பாவும் அங்கே இருக்கிறார்கள்.. அர்ஜீனின் அக்காவும், அம்மாவும் அருகே நின்று கொண்டிருக்கிறார்கள்.. இத்தனைக்கும் மேலாக கனல் வீசும் பார்வையுடன் கண்ணதாசன் நின்றிருக்கிறான்... இத்தனை பேரின் முன்னிலையிலும்.. அர்ஜீனிடம் பகடி பேச.. காவ்யாவை பாவனா துணைக்கு அழைக்கலாமா..?

அவள் அரண்டு போனவளாக பாவனாவின் கையைப் பிடித்து ‘நறுக்’கென்று கிள்ளினாள்..

“ஸ்ஸ்... வலிக்குதுடி குரங்கே...”

வலியின் வேதனையை வெளியில் சொல்ல முடியாமல் தோழியிடம் ரகசியமாகத் திட்டினாள் பாவனா...

“என்னாச்சு பாவனா.. எறும்பு கடிச்சிருச்சா..?” அக்கறையாய் வினவினான் அர்ஜீன்..

‘இதையெல்லாம் உணக்கையாய் நோட் பண்ணிருவானே..’ காவ்யா ரகசியமாக அவனை முறைத்தாள்..

என்னதான் வலியின் வேதனையை ஒரளவிற்கு மேல் மறைக்க முடியாமல் பாவனா முகத்தில் பிரதிபலித்து விட்டாலும்.. அவன் அத்தனை அக்கறையுடன் விசாரணையை மேற்கொள்ள வேண்டுமா என்ற ஆத்திரம் அவளுக்கு..

“இது எறும்புக்கடியில்லை சார்.. இரும்புக்கடி...” கிள்ளுப் பட்ட கையைத் தடவிக் கொடுத்தபடி சொன்னாள் பாவனா..

“அடடா.. அடிபட்ட இடம் வலிக்குமே.. எதுக்கும் இதோ ஓடிக்கிட்டு இருக்கிற வைகையாத்தில கையை நனைச்சுக்கங்க.. வலி அவ்வளவாத் தெரியாது...” வழி சொல்லிக் கொடுத்தான் அர்ஜீன்...

“இப்பவும் ளொள்ளு குறையுதான்னு பாரேன்..” பாவனா முணுமுணுத்ததில் காவ்யாவுக்கு சிரிப்பு வந்தது.. அடக்கிக் கொண்டாள்..

“அப்படிங்களா சார்.. அதுக்கு முன்னாலே நீங்க இந்தா ஓடிக்கிட்டு இருக்கிற இந்த வைகையாத்தில குதிச்சு... இக்கரையில இருந்து நீச்சலடிச்சு போயி அக்கரையை தொட்டுவிட்டு வாங்க.. அதுக்குப் பின்னால நான் கையை நனைச்சுக்கறேன்..” பாவனா இடக்காக பதில் சொன்னதும்..

“கை கொடுங்க பாவனா..” என்று மனதார அவளைப் பாராட்டினான் கண்ணதாசன்...

‘மச்சானுக்கு என்னை வாருகிறவங்களைக் கண்டா சக்கரையைக் கண்டதைப்போல இனிப்பாய் இருக்குமே..’

அர்ஜீன் முகம் மாறாமல் கண்ணதாசனைப் பார்க்க.. கிடைத்தது வாய்ப்பென்று பாவனா சட்டென்று கண்ணதாசனிடம் கை நீட்டி விட்டாள்.. அன்னபூரணியின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல மாறி வைக்க...

“என்னது இது..?” என்று பின்வாங்கினான் கண்ணதாசன்..

"நீங்கதானே சார் கை கொடுக்கச் சொன்னீங்க..?" அறியாப் பெண்ணைப் போல முகத்தை வைத்துக் கொண்டு விளக்கம் சொன்னாள் பாவனா...

"அதுசரி.. நீங்க யாரு..? சொன்னதை கப்புன்னு பிடிச்சுக்கிற அறிவு ஜீவியாச்சே.. உங்ககிட்ட யோசித்துப் பேசியிருக்கனும்.."

கண்ணதாசனின் பேச்சை ரசித்துக் கொண்டிருந்த சுந்தரி.. மகளிடம்

"பரவாயில்லையே... பெண்ணோட அண்ணன் பதவிசா இருக்காரே... இந்தக் காலத்துலே எந்த இளம் வயசுக்காரங்க... தானாக் கை கொடுக்க வருகிற பெண்ணுகிட்ட இருந்து தள்ளி நிப்பாங்க..?" என்று அவனை சிலாகித்துப் பேசவும் செய்தாள்...

"மேடம் யாரு சார்..?"

எந்தக் கேள்வியை பாவனா கேட்டு அவன் பதில் சொல்ல வேண்டும் என்று காத்திருந்தானோ.. அந்தக் கேள்வியை ஒரு வழியாக பாவனா கேட்டு வைக்க.. அர்ஜீன்..

"இவங்க என் அம்மா.. இது அக்கா.. அவங்க என் அக்கா பசங்க..." என்று சட்டென்று அன்னபூரணியிடம் அறிமுகப்படுத்தி வைத்துவிட்டான்..

பாவனாவிடம் சொல்ல வேண்டியதை எதற்காக அன்னபூரணியிடம் சொல்கிறான் என்று அறியாதவளாக அவளும் கைகுவித்து வைத்தாள்...

# 192

*மதுரைக்குள்ளே மருக்கொழுந்தாய்...*
*நீ மணம்பரப்ப ஆசைகொண்டேன்...*

**சு**ந்தரியும்.. ஆனந்தியும் சொந்தம் சொல்லும் புன்னகையுடன் பதிலுக்கு கரம் குவித்தார்கள்...

அவர்களின் பட்டுச் சேலையின் கெட்டி ஜரிகையையும்.. அணிந்திருந்த நகைகளின் ஒளிர்வையும் மனதுக்குள் கணக்கிட்ட அன்னபூரணிக்கு.. அவர்கள் காட்டிய இணக்கத்தில் ஆச்சரியம் வந்தது...

'பட்டும்.. வைரமுமா ஜொலிக்கிறவங்க.. இவ்வளவு தன்மையா வணக்கம் சொல்றாங்களே...'

அவளின் எண்ணவோட்டத்தை அறியாதவனாக.. அர்ஜீன்.. காவ்யாவையும்.. அவள் குடும்பத்தையும்.. சுந்தரிக்கும்.. ஆனந்திக்கும் அறிமுகப் படுத்தி வைக்க ஆரம்பித்தான்...

"அம்மா... அக்கா.. இவர்தான் கண்ணதாசன்.. பாவனாவோட பிரண்டோட அண்ணன்..."

"அப்படியா அர்ஜீன்.. வணக்கம் தம்பி..."

சுந்தரியின் வாத்சல்யமான புன்னகைக்கு பதில் புன்னகையைத் தரவில்லையென்றாலும்.. அர்ஜீனை முறைத்ததைப் போல அவர்களையும் முறைக்க முடியாமல் உணர்வுகள் துடைத்த முகத்துடன் பதில் வணக்கம் சொன்னான் கண்ணதாசன்...

“இவங்கதான் பாவனாவோட பிரண்ட்.. காவ்யா...”

அர்ஜீன் அவள் பெயரை அழுத்தி உச்சரித்த போது மனதுக்குள் இனிப்பு பரவுவதை உணர்ந்தாள் காவ்யா.. அவனுக்கும் அந்த உணர்விருந்ததை கிறக்கம் கொண்ட அவன் கண்கள் காட்டிக் கொடுத்தன.. காதலித்துக் கொண்டிருந்த காலத்தில் அவன் பாடிய பாரதியின் பாடல் அவள் நினைவுக்கு வந்து வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகளை பறக்க விட்டது..

***“என்றன் வாயினிலே அமுதூறுதே...***
***காவ்யாவெனும் பேர் சொல்லும் போதிலே...”***

என்று கண்ணம்மாவிற்குப் பதில் காவ்யாவை புகுத்தி அவன் பாடுவான்.. அவள் அதை சுட்டிக் காட்டினால்...

“கண்ணம்மா பாரதியோட காதலிடி.. காவ்யாதானே என்னோட காதலி...” என்று கண்சிமிட்டுவான்..

அந்த நினைவுகள் தந்த இதமான சுகத்தை இழந்து விட்ட துயரம் அவள் கண்களில் படர்ந்தது...

“பாவனாவோட பிரண்டா..? லட்சணமா இருக்கா..” சுந்தரி பாராட்டிய போது அன்னபூரணியின் முகம் மலர்ந்துவிட்டது...

“நான் நினைச்சேன்.. நீங்க சொல்லிட்டிங்க...” ஆனந்தி தாயின் பேச்சை ஆமோதித்ததில் அவள்மீது அன்னபூரணிக்கு தனிப்பிரியம் ஏற்பட்டது...

மகளின் அழகைப் புகழ்கிறவர்களின் மீது எந்தத் தாய்க்குத்தான் பாசம் ஏற்படாது..?

“நீயும் அழகாத்தான் இருக்கேம்மா..” என்று வாஞ்சையுடன் கூறியவள்.. சரணையும்.. சாராவையும் பார்த்து...

“பசங்க.. துறுதுறுன்னு இருக்கிறாங்க...” என்றும் பாராட்டி வைத்தாள்...

“ஆமாம் ஆண்ட்டி.. ஒரு இடத்தில நிற்க மாட்டாங்க...” வெகுநாள் பழகியவளைப் போலப் பேச ஆரம்பித்து விட்டாள் ஆனந்தி..

“மதுரையில சொந்தக்காரங்க இருக்காங்களா..?” அன்னபூரணி கேட்டபோது...

“ஏன்.. நீங்க எங்களுக்கு சொந்தமில்லையா..?” என்று உறவு கொண்டாடி வேறு வைத்தாள்...

‘தூள் கிளப்பறக்கா..’ அர்ஜீன் கண்களாலேயே பாராட்டினான்...

ஆனந்தியின் உரிமையான பேச்சில் அன்னபூரணியின் ஒட்டாத சுபாவம்கூட ஓடி விட்டது...

யாரிடம் பேசிப் பழகுவதென்றாலும்... ஒரு தடவைக்கு.. நான்கு தடவையோசித்துப் பேசிப் பழகும் அன்னபூரணி.. சிரிக்கக் கூலி கேட்கும் அன்னபூரணி..

அன்னியரிடம் அவ்வளவு சீக்கிரத்தில் பேசிவிடாத அன்னபூரணி.. ஆனந்தியிடம் சட்டென்று சிநேகிதமாகி விட்டாள்...

“சொந்தமில்லைன்னு யார் சொன்னது..? இப்ப பாவனா சித்திரைத் திருவிழாவுக்காக எங்க வீட்டுக்கு வந்திருக்குதே.. இந்தப் புள்ளைய நாங்க அன்னியமாவா நினைக்கிறோம்..? சொந்தம்ன்னுதான நினைக்கறோம்.. அதப்போல நீங்களும் எங்களுக்கு சொந்த பந்தம் தான்..” மனதாரச் சொன்னாள் அன்னபூரணி...

“அட... பாவனாவும் எங்களைப் போல சித்திரைத் திருவிழாவைப் பார்க்க மதுரை வந்தவள்தானா..?” போலியாக ஆச்சரியப் பட்டாள் ஆனந்தி...

“ஓ.. நீங்க சித்திரைத் திருவிழாவைப் பார்க்க வந்திருக்கீங்களா...?”

“ஆமாம் ஆண்ட்டி.. அர்ஜீனுக்கு இங்கே ஒரு மாதம் தங்கியிருந்து பார்க்க வேண்டிய வேலையிருக்குன்னு சொன்னான்... பசங்களுக்கு வெக்கேசன்.. எப்பவும் வெர்ல்டு டூர்தான் போவோம்.. இந்த வெக்கேசனுக்கு ஜஸ்ட் எ சேன்ச்சா.. மதுரைக்கு வரலாமேன்னு தோணிச்சு.. அவர்கிட்டயும் அம்மாகிட்டயும் சொன்னேன்.. ஓகே.. உங்க அம்மாவும்.. தம்பியும் துணைக்கிருக்கிறாங்கள்லன்னு எனக்கு பெர்மிசன் கொடுத்திட்டார்.. காலை பிளைட்டில தான் வந்து இறங்கினோம்...”

“தம்பி நேத்தே வந்திட்டாரே...”

“அவனுக்கு நாங்க போட்ட திடிர் புரோக்ராமைப் பற்றித் தெரியாது ஆண்ட்டி.. சர்ப்ரைஸ் விசிட் கொடுத்திருக்கோம்...”

“எங்க தங்கியிருக்கீங்க...?”

“தம்பி தங்கியிருக்கிற ஹோட்டலில்தான் தங்கியிருக்கோம்.. அவன் ரூம்க்கு பக்கத்து ரூம்களே கிடைச்சிருச்சு...”

“பரவாயில்ல.. எங்க ஊரு திருவிழாவுக்கு வந்திருக்கீங்க.. கட்டாயமா எங்க வீட்டுக்கு விருந்து சாப்பிட வந்துட்டுப் போகனும்...”

“அதுக்கென்ன ஆண்ட்டி.. இவ்வளவு வேண்டியவங்களா இருக்கீங்க.. உங்க வீட்டுல சாப்பிடாம நாங்க மதுரையை விட்டுக் கிளம்ப மாட்டோம்.. இல்லம்மா...?”

“அதுதானே.. எங்க ஆனந்தி சொல்கிறதுதான் சரி.. நாங்க குடும்பத்தோட உங்க வீட்டுக்கு விருந்து சாப்பிட வர்றோம்.. என்னைக்குன்னு நீங்க சொல்லுங்க.. அன்னைக்கு எந்த வேலை இருந்தாலும்.. தள்ளி வைச்சுட்டு உங்க வீட்டுக்கு வந்துடறோம்.. என்னடா அர்ஜீன்..?”

“ஆகட்டும்மா...”

கண்ணதாசனை கலந்து கொள்ளாமலே அங்கே.. அர்ஜீனின் குடும்பத்திற்கான அன்னபூரணியின் வீட்டு விருந்து உறுதி செய்யப்பட்டு விட்டது...

அவர்கள் பேசியபடி கோவில் மண்டபத்தில் அமர்ந்தார்கள்.. சுந்தரியும்.. ஆனந்தியும்.. காலம் காலமாக பழகியவர்களைப் போல பிரியத்துடன் அளவளாவித் தள்ள.. பதிலுக்கு அன்னபூரணி அவள் பங்குக்கு பாசப் பறவையை பறக்க விட்டாள்.. காவ்யாவும்.. அர்ஜீனும்.. ரகசியப் பார்வைகளைப் பார்த்துக் கொள்ள.. கண்ணதாசன் அதை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்...

பேசியபடியே அவர்கள் எழுந்து கோவில் வாசலுக்கு வந்தார்கள்.. அங்கே கால் மாற்றி.. நின்றபடி பேசித் தள்ளினார்கள் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கண்ணதாசன்.. தாங்க முடியாத கால்வலி மேலிடவும்...

“அம்மா...” என்று அபயக் குரல் எழுப்பினான்..

“என்னப்பா..?” பாசத்துடன் கேட்டாள் அவன் தாய்..

“வீட்டுக்குப் போகனும்மா...”

அடுத்த வீட்டுப் பெண்களின் முன்னால் அதைவிட அழுத்தமாக எப்படிச் சொல்வது என்று கண்ணதாசனுக்குத் தெரியவில்லை..

“போகலாம்ப்பா..”

அன்னபூரணி திரும்பவும் பேச்சை ஆரம்பித்து விட..

‘என்னடா இது..’ என்று கண்ணதாசனுக்கு தலை வேதனையாக போய் விட்டது...

அவனுடைய அம்மாவா இது..?

காவ்யாவை பார்த்தான்.. அவள் அவனுடைய பார்வையைக் கவனிக்காமல்.. அடிக்கண்ணால் அர்ஜீனுடைய பார்வையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்..

‘இது தேறாத கேஸ்...’ என்ற நினைவோடு பாவனாவை கூட்டுச் சேர்க்க அவன் நினைத்தால்.. அவள் அவன் பக்கம் திரும்புவேனா என்று.. அன்னபூரணி அடித்துக் கொண்டிருந்த அரட்டையில் சங்கமித்திருந்தாள்..

‘ம்ஹீம்.. இவ சும்மாவே வாயடிப்பா.. இத்தனைப் பொம்பளைக ஒன்னாக் கூடிப் பேசறப்ப சும்மாவா இருப்பா..? அதிலயும் அதில ரெண்டு பேரு இவளோட முதலாளி குடும்பத்துப் பொம்பளைக.. பாசப்பயிரை வளர்த்து அறுவடை செஞ்சிர மாட்டாளா..?’ நொந்து போனவன் சிவதாணுவை முடுக்கி விடலாமென்ற நோக்கத்துடன்..

“அப்பா..” என்றான்...

“ம்ஹீம்.. இப்பவாவது என்ன இவங்களுக்கு அறிமுகப் படுத்தி வைக்கனுமுன்னு உனக்குத் தோணிச்சேப்பா..” என்று மகிழ்ந்து போனார் அவர்...

‘இது வேறயா..’ கண்ணதாசன் பல்லைக் கடித்தான்..

அவன் என்ன சொல்ல நினைக்கிறான்..? அவர் என்ன சொல்லி வைக்கிறார்..?

“இப்ப அதான் முக்கியமா...?”

“பின்னே இல்லையா..? ஏம்ப்பா.. குடும்பத் தலைவன் குத்துக்கல்லப் போல நிக்கிறேன்.. என்னை

விட்டுட்டு உங்கம்மாவ மட்டும் அறிமுகப் படுத்தி வைச்சா என்ன அர்த்தம்...?"

"ஊம்.. இது மதுரைன்னு அர்த்தம்.. இங்கே மீனாட்சியோட ஆட்சிதான் நடக்கும்.. நீங்க முன்னால நிக்கனும்னு நினைச்சா சிதம்பரத்துக்கு குடி போங்க.."

"இதென்னப்பா வன்கொடுமையா இருக்கு... அறிமுகப் படுத்திவைக்கச் சொன்னா.. அதுக்கு நீ ஊரை விட்டு போகச் சொல்லுவியா..?"

"அப்பா.. ப்ளீஸ்.. அடுத்த வீட்டுப் பொம்பளை கள்லாம் இருக்காங்க.. கொஞ்சம் அடக்கி வாசிங்க..."

"என்னையே அடக்க வந்திரு.. நானும் நேத்து சாயங்காலத்தில இருந்து பாத்துக்கிட்டுத்தான் இருக்கேன்.."

"எதை..?"

"நீ ஒரு மார்க்கமா இருக்கிறதை..."

சிவதாணு முறுக்கிக் கொள்ள.. இருக்கிற வேலைகள் போதாது என்று இவரைச் சமாதானப் படுத்தும் வேலையும் சேர்ந்து கொண்டதே என்று சோர்ந்து போனான் கண்ணதாசன்..

அவனுக்கு கால்வலி வந்ததைப் போல... அந்தப் பெண்களுக்கும் ஏன் வரவில்லையென்று அவனுக்கு திகைப்பாக இருந்தது..

அவர்கள் அதைப் பற்றியெல்லாம் நினைத்துப் பார்க்காதவர்களாய் சுவராஸ்யமாக கதை பேசிக் கொண்டிருந்தார்கள்.. அவர்களின் பேச்சு.. சித்திரைத்

திருவிழாவில் ஆரம்பித்து எங்கெங்கோ பயணம் செய்து கொண்டிருந்தது..

“மலயதுவஜ பாண்டியன்னு ஒரு ராசா...”

“உம்..”

“அவருக்கு குழந்தையில்ல.. யாகம் வளர்த்து குழந்தை வரம் கேட்டிருக்காரு.. மூணு வயசுக் குழந்தையா.. யாகத்தில இருந்து உதிச்சு வந்ததுதான் எங்க மீனாட்சியம்மன்..”

“மார்வலஸ்...”

“இவங்களை ஆணுக்கு.. ஆணா.. பொண்ணுக்கு பொண்ணா வளர்த்தாரு ராசா.. மீனாட்சியும் வளர்ந்து நாட்டுக்கே ராணியாகிருச்சு.. எல்லா பக்கமும் படையெடுத்துப் போய் ஜெயிச்சுட்டு வந்துச்சு... அப்புடி மேலோகத்துக்கும் படையெடுத்துப் போனப்ப சிவபெருமான்... சோமசுந்தரக் கடவுளா எதிரே வந்தாராம்.. எங்க மீனாட்சி அவரைப் பாத்ததும் சொக்கிப் போயிருச்சாம்.. அதனாலதான் அவருக்கு மீனாட்சியையே சொக்கவைத்த நாதன்ங்கிற அர்த்தத்தில சொக்கநாதன்னு பெயர் வந்துச்சாம்...”

அன்னபூரணி அள்ளி விட்டுக் கொண்டிருக்க...

‘அப்படியா..?’ என்று கேட்கத் தோன்றியது கண்ணதாசனுக்கு...

இப்படியொரு கதை சொல்லும் திறன் அவனைப் பெற்றதாய்க்குள் ஒளிந்து கிடந்ததை அன்றுதான் அவன் உணர்ந்தான்...

“அப்புறம்..?” சுந்தரி சுவராஸ்யமாக கதை கேட்டாள்..

அவள் காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்தவள்.. தெய்வங்களின் மீதான பக்தியும்.. நம்பிக்கையும் அவள் ரத்தத்தில் ஊறிப் போயிருந்தன.. காஞ்சி காமாட்சியை வணங்கி வளர்ந்தவளிடம்.. மதுரை மீனாட்சியைப் பற்றிச் சொன்னால்.. அன்னமும்.. தண்ணீரும்.. அதுவே என்று எண்ணி ஆவலுடன் கதை கேட்க மாட்டாளா..?

“அப்புறமென்ன..? யார்கிட்டயும் மயங்காத மீனாட்சி.. சொக்கநாதன்கிட்ட மயங்கிப் போனதில மீனாட்சி.. சொக்கநாதனோட கல்யாணம் முடிவாகிருச்சு.. இதை திருவிழாவில நடத்திக் காண்பிப்பாங்க..”

“எதை..?”

“திக்குவிஜயத்தில் எங்க மீனாட்சியம்மன் அம்பு விட்டு சண்டை போடறதை...”

“ஆஹா.. அற்புதம்...”

“இதுக்கே அசந்து போனா எப்படி..? திக்கு விஜயத்தில் மீனாட்சி அம்மனுக்கு எதிரா சொக்கநாதன் வருவாரு.. அம்மா அம்பு விடறதை நிப்பாட்டிருவாங்க..”

“தெய்வீகக் கல்யாணமில்ல இது...!”

“ஆமா.. மீனாட்சி கல்யாணத்துக்கு சிவ பெருமானோட பூத கணங்கள் வந்து இறங்கினாங்களாம்.. எங்க ஊரு மீனாட்சிக்கு ராணிங்கிற பெருமையும்.. பவுசும் ஜாஸ்தி.. அந்தப் பவுசிலயும்.. பெருமையிலயும்.. கல்யாணச் சாப்பாடு குமிஞ்சு கிடக்கு.. உங்க பக்க ஆளுக

எத்தனை பேரு வந்தாலும் மிச்சம்.. மிச்சமா இருக்கும்ன்னு சொல்லியிருக்கு...”

இதைச் சொல்லிய அன்னபூரணியிடம் கண்ணதாசனின் கால்வலியைப் பற்றி யாராவது சொல்ல மாட்டார்களா என்று ஏக்கப்பட்டுப் போனான் கண்ணதாசன்..

## 193

### *கானக் குயில் பாட்டை...*
### *நீ கேட்க ஆசைகொண்டேன்...*

**ம**கனின் கால்வலியைப் பற்றி அறியாதவளாக அன்னபூரணி சித்திரைத் திருவிழாவின் நிகழ்வுகளை சுந்தரியிடம் பிட்டுப் பிட்டு வைத்துக் கொண்டிருந்தாள்...

“சொக்கநாதன் பாத்தாரு.. இம்புட்டுப் பெருமையா உனக்குன்னு.. பூதகணங்களைக் கூப்பிட்டு.. கல்யாணச் சாப்பாட்டை ஒரு கை பாருங்கப்பான்னு சொல்லிட்டாரு..”

“இதைப் படிச்சிருக்கேன்...”

“படிச்சிருப்பீங்க.. படிக்காம இருக்க முடியுமா..? அத்தன பூத கணமும்.. கல்யாணச் சாப்பாட்ட ஒரு கட்டு கட்டி உள்ளே தள்ளி ஏப்பம் விட்டுட்டு தண்ணி.. தண்ணின்னு பறந்துச்சுக.. அதுகளுக்கு தண்ணி கொடுத்து

மாளாதுன்னு மீனாட்சி கையை பிசைஞ்சுக்கிட்டு நிற்க... சொக்கநாதன்.. 'கை வை'ன்னு சொன்னாராம்.. அப்படி கையை வைச்சதில பெருகி வந்ததுதான் வத்தாத வைகையாறு.. 'கை வை'ன்னு சொக்கன் சொல்லி வந்ததினால.. அதுக்கு 'வைகை'ன்னு பேரு வந்துச்சாம்.."

"கேட்கும் போதே சிலிர்த்துப் போகுது..."

"இன்னும் கேளுங்க.. மீனாட்சி கல்யாணத்துக்கு அவளோட அண்ணன் சீர் கொண்டு வரனும்... அவர் வருகிற வழியில் புதிதாக உருவாக்கிய வைகையாறு ஓடியதால அவரால் கல்யாணத்துக்கு வர முடியாம அக்கரையிலேயே தங்கிருவாரு.. அதான்.. அழகர் ஆத்தில இறங்கற திருவிழா..."

அன்னபூரணி சொல்லிக் கொண்டிருந்தபோது அர்ஜீனின் மனம்.. முதன் முதலாய் காவ்யாவை சந்தித்த அந்த நாளை நினைத்துக் கொண்டது...

"அழகரைத் தெரியாதா...?"

அவள் கேட்ட கேள்வியை நினைத்துக் கொண்டவன் அவளைப் பார்க்க.. அவள் விழிகளும் உயர்ந்து அவனைப் பார்த்தன.. அவர்கள் மனம் அழகர் கோவிலில் அவர்கள் சேர்ந்து வலம் வந்த அந்த ஒருநாளை நினைத்துக் கொண்டன..

*"ஒருநாள்.. உன்னோடு ஒருநாள்..*
*உறவினில் ஆட...*
*புதுமைகள் பாட..*
*காண்போமே எந்நாளும் திருநாள்..."*

அருகிலிருந்த கடையில் பாடல் பாடியது.. மதுரையும் பாடலும் இணை பிரியாதவை என்று நினைத்துக் கொண்டான் அர்ஜீன்.. ஒர்விதமான உயிர்ப்பை உணர்த்தும் மதுரை மாநகரின் பரபரப்பான ஜன சந்தடியை வேடிக்கை பார்த்தவனுக்கு அந்த ஊர் மக்களின்மீது பொறாமை ஏற்பட்டது...

அது தூங்கா நகரம் என்பதினால் மட்டுமல்ல.. கோவில் நகரம் என்பதனால் மட்டுமல்ல.. கோபம் வந்தால் சினத்தையும்.. சந்தோசம் வந்தால் சிரிப்பையும்.. வெளிப்படையாகக் காட்டும் மனிதர்களைக் கொண்ட நகரம் அது என்பதினால் விளைந்த பொறாமை அது...

“எங்க ஊர் திருவிழாவுக்கு வந்துட்டிங்கள்ல.. இனி வருசா வருசம் வந்து நிக்கனும்னு உங்களுக்கே தோணிப் போகும்.. என்ன கண்ணா நான் சொல்றது...?”

அன்னபூரணி கேட்க.. கால்வலியோடு நின்றிருந்த கண்ணதாசன் பூம்பூம் மாட்டைப் போல தலையை ஆட்டிவைத்தான்..

“அப்ப நாங்க கிளம்பறோம்...”

ஒருவழியாக சுந்தரி விடைபெற்றுக் கொள்ள...

‘அப்பாடி..’ என்றிருந்தது கண்ணதாசனுக்கு..

இனியாவது வீட்டுக்குப் போய் சேரலாமே...

பாவனாவும்.. காவ்யாவும் கிசுகிசுத்தபடி அமர்ந்திருக்க.. அன்னபூரணி அவர்கள் பேச்சைக் கவனிக்காமல் அர்ஜீனின் குடும்பத்தைச் சிலாகித்துக் கொண்டிருந்தாள்..

"என்ன மாதிரியான மனுசங்க பாத்திங்களா..?" சிவதாணுவிடம் அவர் கேட்க...

"யாரு பாத்தது..?" என்று விட்டேற்றியாக அவர் பதில் சொன்னார்..

அவர் கோபம் அவருக்கு...

"இவருக்கு என்னடா தம்பி ஆச்சு..?" மகனிடம் விசாரித்தாள் அன்னபூரணி...

"அந்த மெட்ராஸ்கார விருந்தாளிகளுக்கு இவரை அறிமுகப் படுத்தி வைக்கலியாம்.." காரோட்டியபடி பதில் சொன்னான் கண்ணதாசன்...

"நாயம்தானே..." கணவன் பக்கம் சாய்ந்தாள் அன்னபூரணி...

"இந்த நியாயத்தை அறிமுகப் படுத்தி வைச்ச ஆளுகிட்டப் போயிக் கேளுங்க..." கடுப்பாகப் பதில் சொன்னான் கண்ணதாசன்...

"ஏம்ப்பா.. அந்தத் தம்பி என்ன வேணும்னேவா உங்க அப்பாவ அறிமுகப் படுத்தி வைக்க மறந்திருப்பாரு..? பேச்சு வாக்கில விட்டிருப்பாருப்பா..." அர்ஜீனின் பக்கமாகவும் நியாயம் பேசினாள் அன்னபூரணி...

"அதெப்படி அவ்வளவு கரெக்டா சொல்ற...?" காரை வளைவில் திருப்பியபடி கேட்டான் கண்ணதாசன்...

"நேத்துத்தான் பாத்தேனே.. உங்க அப்பாகூட அம்புட்டு நேரத்துக்கு எந்த மனுசரும் உக்காந்து பேசி

நான் பாத்ததில்லப்பா.. நேத்து பொறுமையா உக்காந்து பேசினாரே...” காரணம் சொன்னாள் அன்னபூரணி...

“அது அப்பா செஞ்ச ஓரவஞ்சனைம்மா...”

“என்னப்பா சொல்ற...?”

“ஆமாம்மா.. இத்தனை நாளா.. யாரு இவருகிட்டப் பேச வந்தாலும்.. திருக்குறள் புத்தகத்த தூக்கிக் காண்பிச்சே ஓட வைச்ச என்னைப் பெத்த அப்பா... நேத்து மட்டும் குறளை சுத்தமா மறந்தே போயிட்டாரும்மா.. அதான்.. அந்த மனுசர் இவருகூட அம்புட்டு நேரம் உக்காந்து பேசியிருக்காரு... இவரு மட்டும் குறளோவியம் வரைஞ்சிருந்தாருன்னு வைய்யி.. கதை கந்தலாகியிருக்கும்...”

பாவனாவின் முன்பான கண்ணதாசனின் அந்த விமரிசனத்தை சிவதாணு விரும்பவில்லை.. சின்னப்-பெண்ணின் முன்னால் மகன் அவரைக் கேலி பேசலாமா என்ற கோபம் அவருக்குள் துளிர் விட்டது... தவிரவும் அன்று அவர் பாவனாவுக்கு திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவு ஒன்றை ஆற்றுவதாக இருந்தார்.. அதையறியாத கண்ணதாசனின் விமரிசனத்தைக் கேட்ட பின்பு பாவனா அவராற்றும் சொற்பொழிவை காது கொடுத்து கேட்பாளா என்ற ஆற்றாமையில் அவர் கோபத்தை அடக்கிக் கொண்டு மௌன குருவாகி விட்டார்...

அன்றைய இரவு உணவுக்கு பின்பு.. காவ்யாவும்.. பாவனாவும் சன்னக்குரலில் பேசியபடி காவ்யாவின்

அறையில் தூங்குவதற்காக போய்விட.. கண்ணதாசன் ஹாலில் அமர்ந்து தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.. கோபத்தை மறக்க வேண்டுமானால்.. தூங்க வேண்டும் என்ற நினைவோடு சிவதாணு எழுந்து கொள்ளப் போனார்...

"என்னங்க..." என்றபடி அன்னபூரணி அங்கே வந்துவிட..

"ஏண்டி..?" என்றபடி அவர் உட்கார்ந்துவிட்டார்...

அவர்கள் குடும்ப நிலவரங்களைப் பேசிக் கொண்டிருந்த போது.. கண்ணதாசனின் போன் ஒலித்தது.. எடுத்துப் பேசினான்..

"கண்ணா.. எப்படிப்பா இருக்க..?" மறுமுனையில் அம்புஜம் கேட்டாள்..

"நல்லா இருக்கேன் பாட்டி..." டிவியின் ஒலி அளவைக் குறைத்தபடி சொன்னான் கண்ணதாசன்...

"நாங்க நைட்டு கிளம்பி.. காலையில மதுரைக்கு வந்து இறங்கிருவோம்ப்பா.."

அம்புஜம் சொன்னதும் டிவியை மொத்தமாக அணைத்து விட்டான் கண்ணதாசன்..

இதை எப்படி அவன் மறந்தான்..? திருநெல்வேலியை விட்டுக் கிளம்பி வரும்போது சித்திரைத் திருவிழாவுக்கு வரும்படி அம்புஜத்தையும்... அவள் குடும்பத்தையும் அழைத்தது அவன்தானே... அதை மறக்கலாமா..? எத்தனை தினங்கள் காவ்யா அம்புஜத்தின் வீட்டில்

சாப்பிட்டிருப்பாள்..? கிளம்பி வந்த அன்று கண்ணதாசனும் சேர்ந்து போய் சாப்பிட்டு விட்டு வந்தானே.. அந்த நன்றிக்கடனை கழிக்க வேண்டாமா..?

“வாங்க பாட்டி.. இப்பத்தான் அம்மாகிட்ட நான் சொல்லிக்கிட்டிருந்தேன்..”

கண்ணதாசன் சொன்னதும்.. இவன் என்னத்தைச் சொல்லிக் கொண்டிருந்தான் என்று புரியாதவளாக அன்னபூரணி அவனைத் திரும்பிப் பார்த்தாள்...

“ஆமாம் பாட்டி.. தினமும் உங்க பேச்சுத்தான்...”

‘யாரப் பத்தி பேசினான்..?’

“அம்மாவுக்கு ஒரே ஆவல்..”

எதைப்பற்றி என்று அறியும் ஆவல் அன்னபூரணியின் முகத்தில் உதித்தது...

“எப்படா பாட்டி வருவாங்கன்னு அம்மா என்ன அரிச்சு எடுத்திருச்சுன்னா பாருங்களேன்...”

‘இது எப்போ..?’

“தினமும் பாட்டி இதைச் சொல்வாங்க.. பாட்டி அதைச் சொல்வாங்கன்னு நானும்.. காவ்யாவும் சொல்லிக்கிட்டே இருப்போமா...”

‘இதுக மூச்சுக் கூடவிடலையே...’

“அதைக் கேட்டுக் கேட்டு.. பாட்டியை எப்படா பாப்போம்ன்னு அம்மாவும் காத்திருக்கு பாட்டி...”

‘நானா காத்திருக்கேன்..?’

"மதுரையில நுழைஞ்சதும் சொல்லுங்க.. நான் அட்ரஸைச் சொல்றேன்..."

'யாரு வரப் போறது...?'

கண்ணதாசன் போனை அனைத்துவிட்டு அன்னபூரணியைப் பார்த்தான்.. சிவதாணு கோபத்தை மறந்து போனவராக என்னதான் விவரம் என்று அறியும் ஆர்வத்தில் மகனின் முகத்தையும்.. மனைவியின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார்...

"அம்மா..." தயக்கத்துடன் அழைத்தான் கண்ணதாசன்...

அவர்கள் வீட்டிற்கு வருடா வருடம் திருவிழா பார்க்கவென்று உறவினர்கள் வந்து சேர்வார்கள்.. அப்படியிருக்கும் போது.. இன்னும் சில விருந்தினர்கள் வரப் போகிறார்கள் என்று எப்படி அவன் சொல்வது..?

"சொல்லுப்பா.." மகனை ஊக்கப் படுத்தினாள் தாய்..

"இல்லைம்மா.. இப்ப போனில் பேசின பாட்டி.. திருநெல்வேலியில பழக்கமானவங்க.. நம்ம காவ்யாவ சொந்தப் பேத்தி போல பாத்துக்கிட்டவங்க..."

"இப்ப அவங்கதான் போனில பேசினாங்களா..?"

"ஆமாம்மா.. சித்திரைத் திருவிழாவுக்கு வாங்கன்னு நான்தான் கூப்பிட்டேன்.. அவங்களும் கிளம்பி வர்றாங்க.."

"வரட்டுமேப்பா.. இதுக்கா மென்னு முழுங்கற...?"

"அம்மா..."

“கண்ணா.. எனக்குக்கூட ஆளு பாத்து பழகத் தெரியாது.. நீ அப்படியில்ல.. பத்தையும் யோசிச்சு பாத்து பழகறவன்.. நீயே ஒரு குடும்பத்த திருவிழாவுக்கு வரச் சொல்லியிருக்கைன்னா அவங்க நிச்சயமா உசந்த குணமுள்ள மனுசராத்தான் இருப்பாங்க.. இதுக்கு ஏண்டா தம்பி யோசிக்கிற..?”

“இல்லம்மா.. வர்றவங்க குணத்தில மட்டுமில்லாம பணத்திலயும் பெரிய மனுசங்க.. அவங்களை நல்ல முறையில கவனிச்சு அனுப்பனும்...”

“அதுக்கென்னப்பா.. பாத்துப் பாத்துச் செய்ய நானாச்சு.. நீ கவலையை விடு...”

“அவங்க தங்குறதுக்கு..?”

“மாடியில ஒரு ரூமை பூட்டித்தான வைச்சிருக்கோம்..? அதில அவங்க தங்கட்டும்.. நம்ம சொந்த பந்தம் எப்பவுமே கீழ் வீட்டோடு புழக்கத்தை நிறுத்திக்குவாங்க.. மாடிப்பக்கம் வர மாட்டாங்க.. அப்புறமென்ன..?”

“தேங்க்ஸ்ம்மா...”

மிகப் பெரிய கவலை அகன்று விட்டதைப் போல உணர்ந்தான் கண்ணதாசன்.. அந்த நிறைவில் சிவதாணுவிடம் எதையும் பகிர்ந்து கொள்ளாமல் அவன் எழுந்து போக...

‘இவன் என்ன நினைச்சுக்கிட்டு இருக்கான்..? எதுக்கெடுத்தாலும்.. அம்மா.. அம்மான்னா.. அப்பான்னு

ஒருத்தன் எதுக்கு இருக்கேன்..?' என்ற கோபம் அவருக்குள் சேர்ந்து கொண்டது...

எப்போதும் இப்படி அவன் இருந்ததில்லை.. என்னதான் அன்னபூரணியை விவரமானவள் என்று அவன் நினைத்தாலும் அப்பாவிடம் தான் முதலில் எதையும் சொல்ல வேண்டும் என்ற வளமை தெரிந்தவன்...

அப்படிப்பட்ட மகன்.. இரண்டு நாள்களாக அந்த வளமையை மறந்தது ஏன் என்ற கேள்வி அவர் நெஞ்சிலே சுழன்றது...

# 194

*மைவிழியின் மயக்கத்தையே...*
*நீ உணர்ந்து கொள்ள ஆசைகொண்டேன்..*

**வ**ரப்போகும் விருந்தாளிகள் யாரென்று பார்ப்பதற்காகவே அதிகாலையில் எழுந்து விட்டார் சிவதாணு.. வாசலில் நின்று பராக்கு பார்ப்பது போல் தெரு முனையைப் பார்த்துக் கொண்டிருந்தார்... அது நாள்வரை அந்த வீட்டில் உறவினர்களைத் தவிர வேறு யாரும் விருந்தாளிகளாக வீட்டுக்குள் வந்து தங்கியதில்லை.. பழகியவர்கள், நண்பர்கள் என்று

வருவார்கள்.. போவார்கள்.. அவர்கள் அனைவருமே காபி, பலகாரத்துடனோ.. அல்லது.. மதிய நேர விருந்துடனோ விடை பெற்று விடுபவர்கள்தான்...

“வயசுக்கு வந்த பொண்ணு இருக்கிற வீடுடா கண்ணா...”

அன்னபூரணியின் கண்டிப்பில்.. நண்பர்களை வீட்டுக்கு வெயியிலேயே சந்தித்து அளவளாவி அனுப்பி வைத்து விடுவான் கண்ணதாசன்.. காபி, பலகாரத்திற்கும்.. மதிய நேர விருந்திற்கும் சிவதாணுவின் நண்பர்கள்தான் குடும்பத்தோடு வந்து போவார்கள்...

“எல்லாரோட வீட்டிலயும் பெரியவங்க கட்டு திட்டமா இருப்பாங்க.. சின்னவங்கள சரிக்கட்டத்தான் மல்லுக்கட்ட வேண்டியிருக்கும்.. இங்கே எல்லாமே தலைகீழா இருக்கே.. சிறிசு கட்டுதிட்டமா இருக்குது.. பெரிசுதான் காலம் போன கடைசியில சிநேகிதம் கொண்டாடிக்கிட்டு அலையுது...”

அன்னபூரணிக்கு கோபம் வந்தால் பிடிபிடியென்று ஒருபிடி பிடித்து சிவதாணுவை உண்டு இல்லையென்று ஆக்கிவிடுவாள்.. அவளுக்குப் பயந்து.. சில நாள்களுக்கு நண்பர்களை குடும்பத்தோடு விருந்துக்கு அழைப்பதை குறைத்துக் கொள்வார் சிவதாணு.. அந்தச் சில நாள்கள் பறந்ததும் அவருக்கும் மனைவியின் கோபம் மறந்து போகும்.. நண்பர்களை விருந்துக்கு அழைத்து விடுவார்..

அந்தக் கதைதான் அந்தவீட்டில் தொடர்ந்து நடக்கும் தொடர்கதை.. அந்த விதிமுறையை மாற்றி.. முதன் முதலாக அந்த வீட்டுக்குள் விருந்தாளியாக காவ்யாவின்

தோழி வந்திருந்தாள்.. அடுத்து தங்க வந்திருக்கும் விருந்தாளிகளைப் பார்க்கும் ஆவலில் இரவெல்லாம் அவர் இமை மூடவில்லை...

“என்னப்பா இங்கே நிக்கறிங்க..?”

அம்புஜம் மதுரைக்குள் வந்து விட்ட செய்தியை அறிந்து அவளை வரவேற்பதற்காகவும்.. போனிலேயே வழி சொல்வதற்காகவும்.. செல்போனும் கையுமாக வாசலுக்கு வந்த கண்ணதாசன் கேட்டான்...

ஒரு மனிதன் காற்றாட வாசலில் வந்து நின்றால் கூடக் குற்றமா என்ற கோபம் அவருக்குள் பொங்கி எழுந்தது...

‘இவன் மட்டும் வாசலுக்கு வரலாமாம்.. நான் வரக் கூடாதாம்...’

மகனுக்கு இருக்கும் உரிமைகள் அவருக்கு இல்லையா என்று அவர் மனம் விடுதலைப் போராட்டத்தை அறிவித்து வீறு கொண்டு எழுந்து நிற்கப் பார்த்தது... அதைத் தலையில் தட்டி அடக்கி வைத்தார் அவர்..

கண்ணதாசனிடம் மோதிவிட்டு.. அன்னபூரணியின் கையால் ஒரு கரண்டி குழம்பு வாங்கி அவர் குடித்து விட முடியுமா...?

“சும்மாதான் நிற்கறேன்ப்பா.. ஆமா.. நீ எதுக்கு இங்க வந்த..?”

என்னைமட்டும் சொல்லிவிட்டு நீ என்ன அலுவலுக்காக வாசல் பக்கம் வந்து நிற்கிறாய்...?

என்ற கேள்வியை அவர் வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதைப் போல கேட்டு வைக்க... அப்போதிருந்த மனநிலையில் அதைக் கவனிக்காதவனாக கண்ணதாசன் தெரு முனையைப் பார்த்தான்...

அம்புஜத்தின் கார் டிரைவர் சரியாக வழியைக் கண்டுபிடித்து வந்து சேர்ந்துவிட வேண்டுமே என்ற பதட்டம் அவனுக்கு...

“திருநெல்வேலியில இருந்து வர்றவங்க நம்ம ஊருக்குள்ள நுழைஞ்சிட்டாங்கப்பா.. வீட்டுக்கு வர்ற வழியைச் சொல்லியிருக்கேன்.. கரெக்டா வழி கண்டுபிடிச்சு வந்திரனும்.. இல்லைன்னா.. நான் காரை எடுத்துக்கிட்டுப் போயி கூப்பிட்டுக்கிட்டு வரனும்...” கவலையோடு சொன்னான் மகன்...

“ஓஹோ..” பட்டுக் கொள்ளாமல் பதிலளித்தபடி தெருமுனையைப் பார்த்தார் சிவதாணு.. ஒரு கார் வருவது தெரிந்தது...

“அந்தக் காராப்பா..?” ஆர்வமில்லாததைப் போல மகனிடம் கேட்டு வைத்தார்...

அவன் நிமிர்ந்து பார்த்து அம்புஜத்தின் காரை அடையாளம் கண்டு கொண்டான்...

“அவங்கதான்ப்பா...” என்றான் பரபரப்பாக...

கண்ணதாசன் இந்த அளவுக்கு பரபரக்கிறான் என்றால் வருகிறவர்கள் அதி முக்கியமான விருந்தாளி-களாகத்தான் இருப்பார்கள் என்று மனதுக்குள் தீர்மானித்துக்

கொண்ட சிவதாணு.. மகனின் பரபரப்பை வேடிக்கை பார்த்தபடி.. வந்தவர்களைப் பார்க்கத் தயாரானார்... அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்ற காரிலிருந்து அவசரமாக இறங்கி ஓடிவந்து பின்பக்க கார் கதவைத் திறந்து விட்டான் கார் டிரைவர்...

'அடேங்கப்பா.. பெரிய பில்ட் அப்பா இருக்கே...' சிவதாணு உதட்டைச் சுழித்தார்...

காரிலிருந்து இறங்கிய அம்புஜம் கம்பீரமான நரைமுடியை அழகாக கொண்டையிட்டு.. தாமரைப் பூவின் வண்ணத்தில் கெட்டி.. ஜரிகை பார்டர் கொண்ட பட்டுப்புடவையும்.. வைர நகைகளுமாக... ஒரு மகாரணியின் கம்பீரத்தோடு இருந்தாள்...

அவளின் அந்த தேஜஸிலும்.. கம்பீரத்திலும் சிவதாணுவின் உதட்டுச் சுழிப்பு மறைந்தது.. அவளைப் பின்தொடர்ந்து இறங்கிய சுமதி.. மாமியாரைப் போலவே கொண்டையிட்டு.. அதில் கூடுதலாக பூச்சரத்தை சூடியிருந்தாள்.. காபி வண்ணபட்டுப் புடவையும்.. வைர நகைகளுமாக.. மாமியாருக்கு ஏற்ற மருமகளாக தோற்ற மளித்தாள்.. முன்பக்க கார் கதவைத்திறந்து இறங்கிய கார்த்திக்.. ஜீன்ஸீம்.. கார்கோ சட்டையுமாக.. அசத்தலாக விளம்பரங்களில் வரும் ஆண்மாடலைப் போல இருந்தான்...

வந்து இறங்கிய விருந்தினர்களின் தோரணையையும் அவர்களின் வெளிநாட்டுக் காரையும் பார்த்த சிவதாணு...

‘இவங்க.. நம்ம வீட்டில தங்கப் போறாங்களா..?’ என்று மலைத்தார்...

“வாங்க பாட்டி.. வாங்கம்மா...” என்று அம்புஜத்தையும்.. சுமதியையும் வரவேற்ற கண்ணதாசனின் முகம் கார்த்திக்கைக் கண்டதும் மாறியது..

‘இவனும் கூட வந்திருக்கானே...’

இதை அன்னபூரணி எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று கவலைப் பட்டான் கண்ணதாசன்...

காவ்யாவும்.. பாவனாவும் இருக்கும் போது.. கார்த்திக்கை எப்படி கண்ணதாசன் தன் வீட்டில் தங்க வைக்க முடியும்...?

அதை எப்படிச் சொல்வது என்று சங்கடப்பட்டவன்.. அதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.. முதலில் வந்திருப்பவர்களை வரவேற்று உபசரிக்கலாம் என்று முகம் மாறாமல் அம்புஜத்திடம் பேசிக் கொண்டிருந்தான்.. இருந்தும் அவன் மனதில் கார்த்திக்கின் வரவு சிறு நெருஞ்சி முள்ளாக நிரடிக் கொண்டுதான் இருந்தது...

“நைட் ஜர்னி.. காரில் வந்திருக்கீங்க.. டயர்டா இருக்கும்...” உபசாரமாக சொல்லியபடி வீட்டுக்குள் அவர்களை அழைத்தான் கண்ணதாசன்..

அவனைப் பின் தொடர்ந்து வீட்டுக்குள் போகாமல் வாசலில் நின்றிருந்த சிவதாணுவைப் பார்த்து முறுவலித்தாள் அம்புஜம்...

“நீங்க காவ்யாவோட அப்பாதானே...?”

அவளின் கேள்வியிலும்.. விசாரிப்பிலும் மகிழ்ந்து போய் விட்டார் சிவதாணு... யாரும் அறிமுகம் செய்து வைக்காமலே அவரைக் கண்டு கொண்டு விசாரித்த அம்புஜத்தின் தன்மை அவரைக் கவர்ந்து விட்டது...

“ஆமாமாம்.. வாங்கம்மா.. காவ்யா உங்களைப் பத்தி நிறைய சொல்லியிருக்கா...”

பொய்மையும் வாய்மையிடத்து என்ற வள்ளுவரின் வாக்கை பின்பற்றியவராக அவரும் ஒரு பொய்யை எடுத்து விட்டபடி கரம் கூப்பினார்...

மற்றபடி காவ்யாதான் அம்புஜத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே...

“உங்களைப் பற்றியும் என்னிடம் சொல்லியிருக்கா.. நீங்க திருக்குறளில் எக்ஸ்பர்ட்டாமே.. எங்க அப்பாவுக்கு திருக்குறளில இருக்கிற அத்தனை குறளும் அத்துபடின்னு பெருமையாச் சொல்லிக்குவா.. ஒவ்வொரு குறளைப் பத்தியும்.. நீங்க ஆய்ஞ்சு.. ஆராய்ஞ்சு.. சொல்வீங்களாமே.. அவ சொல்லச் சொல்ல.. எனக்கு உங்களை நேரில பாத்து பாராட்டனும்னு தோணிருச்சு... பாராட்டுக்கள்...”

அம்புஜம் பாராட்டியதில் சிவதாணு திக்கு முக்காடிப் போய் விட்டார்.. அவருக்கு இத்தனை பெரிய அங்கீகாரமா..?

“நான் என்னத்தைம்மா செய்தேன்...?”

“எதைத்தான் செய்யலை...? ஆனாலும் உங்களுக்கு இத்தனை தன்னடக்கம் கூடாது.. இந்தக் காலத்தில திருக்குறளை நினைச்சு.. படிச்சு.. அர்த்தம் சொல்லி

ஆராதனை பண்ண யாரிருக்கா..? உங்களைப் போல சிலபேர் இருக்கிறதினாலதான் உலகப் பொது மறையைப் பத்தி மக்கள் இன்னமும் மறக்காம இருக்காங்க...”

அம்புஜம் வைத்த ஐஸ் மலையில் குளிர்ந்து போய் விட்டார் சிவதாணு.. வந்திருக்கும் விருந்தாளிகளிடம் திருக்குறளைப் பற்றிய சிறப்புரை.. பொழிவுரையை நடத்தி.. அவர்களை திருவிழாவைப் பார்க்க விடாமல் திருநெல்வேலிக்கே துரத்திவிட்டு விட வேண்டாம் என்று தகப்பனாரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்வதாக இருந்த கண்ணதாசனின் முடிவு மாறிவிட்டது... அம்புஜம் பாட்டி இந்த அளவுக்கு சிவதாணுவின் பொழிப்புரைக்கு அடிமையாக இருப்பாள் என்று அவன் நினைத்தும் பார்த்ததில்லை...

“ஆத்தி.. இதென்னடா கண்ணா.. வந்திருக்கிற பாட்டி தானா வாயைக் கொடுத்து மாட்டிக்கிட்டு இருக்குது..”

வந்திருப்பவர்களை வரவேற்க வேண்டும் என்ற எண்ணமின்றி மகனிடம் ஆச்சரியமாக கிசுகிசுத்தாள் அன்னபூரணி..

“அதாம்மா... எனக்கும் புரியலை.. நமக்கென்ன வந்துச்சு.. அவங்களா மாட்டிக்கறப்ப நாம எதையும் செய்ய முடியாது...”

“அதைச் சொல்லு...” மகனின் பேச்சை ஆமோதித்து விட்டு..

“வாங்க.. வாங்க...” என்று வந்திருப்பவர்களை வரவேற்கும் பணியில் ஈடுபட்டாள் அன்னபூரணி...

பரஸ்பர அறிமுகப் படலத்திற்குப் பிறகு.. அவர்கள் ஹாலில் அமர்ந்தார்கள்.. அன்னபூரணி அனைவருக்கும் காபி கலந்து கொண்டு வந்து கொடுத்தாள்.. கார்த்திக்கின் கண்கள் காவ்யாவைத்தேடின அது புரியாதவளாக.. அம்புஜம்...

“அப்ப நீ கிளம்பு கார்த்திக்...” என்றாள்...

‘அப்பாடி.. இவனும் இங்கே தங்கலை.. ஊருக்கு கிளம்பிப் போகிறான்...’ நிம்மதியடைந்த கண்ணதாசன்..

“அதுக்குள்ளே ஊருக்குப் போகனுமா..? சாப்பிட்டுட்டு போகலாமே...” என்று உபசாரமாக சொல்லி வைத்தான்...

“நோ.. நோ.. நான் ஊருக்குப் போகலை...” கார்த்திக் மறுக்க.. கண்ணதாசனுக்கு ‘பகீர்’ என்றது...

‘வேற எங்கே போகப் போறான்..? ஒருவேளை.. கடை கண்ணியில ஏதாச்சும் சாமானை வாங்கிட்டு வரச் சொல்லி பாட்டி சொல்லிச்சோ...’ கண்ணதாசன் கவலையானான்..

விவரம் அறிந்தால் அன்னபூரணி மகனைச் சும்மா விட மாட்டாளே.. உலுக்கி எடுத்து விடுவாளே...

“ஹோட்டல்ல ரூம் புக் பண்ணியிருக்கேன்.. அங்கேதான் தங்கப் போறேன்.. அம்மாவும்.. பாட்டியும் இங்கே இருப்பாங்க..” கார்த்திக் கண்ணதாசனின் வயிற்றில் பாலை வார்த்தான்..

எதுக்கு அங்கே போய் தங்கனும் என்பதைப் போன்ற உபசார வார்த்தைகளை மறந்தும்கூட கண்ணதாசன் உச்சரிக்கவில்லை...

“அப்படிங்களா..? எந்த ஹோட்டல்ல தங்கப் போறிங்க..?” என்றுதான் கேட்டுவைத்தான்...

கார்த்திக் சொன்ன பெயர்.. அர்ஜீனும்.. அவன் குடும்பமும் தங்கியிருந்த ஹோட்டலின் பெயராக இருந்ததில் கண்ணதாசனின் புருவங்கள் சுருங்கின...

‘இவங்களுக்கு அவங்க வந்திருக்கிற செய்தி தெரியுமோ...’

தெரியும் என்றாள் அம்புஜம்...

“எங்க அர்ஜீனும்.. சுந்தரியும் அந்த ஹோட்டல்லதான் தங்கியிருக்காங்க.. உனக்கு அர்ஜீனைத் தெரியுமில்ல கண்ணதாசா..?”

“தெரியாது பாட்டி..” மனதார பொய் சொன்னான்.. கண்ணதாசன்..

“மறந்து போயிட்ட போல.. என் அக்கா பேரன்னு நான் சொல்லியிருந்தேனே...”

அடுத்து அவள் காவ்யாவிற்கு அர்ஜீனைத் தெரியுமே என்று சொல்லி வைத்துவிட்டால் என்ன செய்வது என்று பதறிப் போனான் கண்ணதாசன்...

அர்ஜீனை அறியாதவனைப் போல காவ்யா நடந்து கொண்டதை அம்புஜம் பாட்டி அறிவாளா என்ன..?

# 195

*சிந்தையிலே என் முகத்தை...*
*நீ நினைக்க ஆசைகொண்டேன்...*

**எ**ப்படித்தான் இப்படி வந்து மாட்டுமோ என்றிருந்தது கண்ணதாசனுக்கு...

அவன் கண்டானா.. அர்ஜீனும் அவன் குடும்பமும் சித்திரைத் திருவிழாவைப் பார்க்க என்று மதுரைக்கு வந்து குதிப்பார்கள் என்று.. அந்த எரிச்சலில் இருந்தவன் அம்புஜம் பாட்டியும் அவள் குடும்பத்தோடு வந்து குதிக்கப் போகிறாள் என்பதை மறந்து விட்டானே.. அந்த நினைவிருந்தால் காவ்யாவிடம் எச்சரிக்கை செய்து.. அர்ஜீனை அறிந்தவளைப் போல ஒரிரு வார்த்தைகளைப் பேசச் சொல்லியிருப்பானே...

காவ்யா வேலை செய்த துரியோதனின் கடையை அர்ஜீன்தான் வாங்கியிருக்கிறான் என்று அன்னபூரணிக்கும், சிவதாணுவிற்கும் தெரியாது.. கண்ணதாசன் தெரிய விடவில்லை... அன்னபூரணியாவது வீட்டுக்குள்ளேயே இருந்தவள்.. சிவதாணு அப்படியில்லை.. மாநில அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்.. வெளியுலகை அறிந்தவர்.. அவர் காதுக்கும் விசயம் போகாமல்

தடுத்து நிறுத்தியதில்தான் கண்ணதாசனின் சாமர்த்தியம் இருந்தது...

எப்படி காவ்யாவுக்கு அவள் வேலை செய்த கடையில் பிரச்னை ஏற்பட்டதால்தான் வேலையை விட்டு நின்றாள் என்று அவர்களைப் பெற்றவர்களுக்குத் தெரியாதோ.. அதைப் போலவே.. காவ்யா வேலை செய்த கடையின் புதுமுதலாளி அர்ஜீன்தான் என்பதும் அவர்களைப் பெற்றவர்களுக்குத் தெரியாது..

கண்ணதாசன் அவற்றை மூடி மறைத்து விட்டான்.. விரவம் தெரிந்தால் உடனடியாக காவ்யாவுக்கு மாப்பிள்ளை பார்க்கும் முயற்சியில் அவர்கள் இறங்கி விடுவார்கள்.. அதை ஏற்கும் மனநிலையில் இல்லாத காவ்யா விபரீத முடிவை எடுத்து விட்டால் என்ன செய்து..? என்ற பயம் அவன் நெஞ்சத்தில் நிறைந்திருந்தது...

அவனுக்கு காவ்யாவின் திருமணத்தை நடத்தி முடிக்க வேண்டும் என்ற ஆசை கழுத்தளவு இருந்தது.. ஆனால் அந்தத் திருமணத்திற்கு காவ்யா மனப்பூர்வமாக சம்மதிக்க வேண்டும்.. என்பதிலும் அவன் உறுதியாக இருந்தான்.. தங்கையின் விருப்பத்துக்கு மாறாக திருமணம் செய்து வைக்க அவன் விரும்பவில்லை...

இத்தனை சிக்கல்களில் மாட்டியிருந்த கண்ணதாசன் எதை முதலில் நினைப்பான்..? எதை பிறகு நினைப்பான்..?

“பாட்டி.. உங்களுக்கும்.. அம்மாவுக்கும் மாடியில ரூம் காத்திருக்கு...”

“எங்களுக்காக காத்திருக்கா..? கேட்கவே நல்லாயிருக்கு கண்ணதாசா...”

“உண்மையிலேயே அப்படித்தான் பாட்டி.. மாடியில இருக்கிற ரெண்டு ரூம்களில நானும்.. காவ்யாவும் இருக்கோம்.. மூணாவது ரூமை அம்மா இது நாள்வரைக்கும் பூட்டியே வைத்திருந்துச்சு.. யாருக்காகவும் அதை திறந்து விட்டதில்லை.. வாரத்துக்கு ஒருதடவை சுத்தம் பண்ணத்தான் கதவைத் திறக்கும்.. இன்னைக்கு உங்களுக்காக அந்தக் கதவைத் திறந்து விட்டிருச்சு...”

“அப்ப.. சொர்க்க வாசல் எங்களுக்காக திறந்திருக்குன்னு சொல்ற..?”

“என்னவோ ஒன்னு பாட்டி.. நீங்க ரெண்டு பேரும்.. கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு.. குளித்து முடித்து வந்தீங்கன்னா சாப்பிட்டுட்டு.. கோவிலுக்கு போயிட்டு வரலாம்...”

“அதுக்கென்ன கண்ணதாசா...”

நீண்ட நேரமாக காரில் உட்கார்ந்து பயணம் செய்ததில் களைத்துப் போயிருந்த அம்புஜம் அதை ஒப்புக் கொண்டு எழுந்தாள்.. காவ்யாவைப் பார்க்க முடியாத ஏமாற்றத்துடன் கார்த்திக்கும் எழுந்தான்..

“நீயும் ரெஸ்ட் எடுத்துட்டு.. குளித்து முடித்து கோவிலுக்கு வந்து சேருடா..” என்றாள் அம்புஜம்...

அங்கே காவ்யா வருவாளா என்று கேட்க வேண்டும் போல இருந்தது கார்த்திக்கிற்கு.. கண்ணதாசனின் முறுக்கு

மீசையையும்.. சிவந்த விழிகளையும்.. ஆஜானுபாகுவான தோற்றத்தையும் கண்டவன் அந்தக் கேள்வியை மறந்து போனான்...

அம்புஜம் மாடியேறிய போது.. கூடவே போன கண்ணதாசன் மெல்லிய குரலில்...

“அம்மா ரொம்பக் கண்டிப்பு பாட்டி..” என்றான்...

“பாத்தாலே தெரியுதே... ஆனா கண்ணா.. இந்தக் காலத்தில அப்படித்தானே இருக்கனும்..?” என்று கேட்டாள் அம்புஜம்...

“காவ்யாவ கட்டுப்பாடா வளத்திருக்கு.. தெரியாத ஆம்பளைகளோடு பேசினா அம்மாவுக்கு பிடிக்காது... இதை எதுக்குச் சொல்றேன்னா.. காவ்யா உங்களுக்கு உடம்புக்கு முடியலைன்னுதான் உங்க வீட்டுக்கு வந்து.. போக இருந்தா.. நானும் உங்க முகத்துக்காகத்தான் அதை அனுமதிச்சேன்.. அங்கே நம்ம கார்த்திக் தம்பிகூடவும்.. உங்க அக்கா பேரனோடவும் காவ்யா யதார்த்தமா பேசியிருக்கலாம்.. ஆனா.. அம்மா அதை ஏத்துக்காது...”

கண்ணதாசன் நீளமாக விளக்கம் சொன்னதில் அம்புஜமும்.. சுமதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்...

“இப்ப எதுக்காக இதையெல்லாம் சொல்கிற கண்ணதாசா...?”

“இல்ல பாட்டி.. எங்க காவ்யாவோட பிரண்ட்.. பாவனான்னு பேரு.. அந்தப் புள்ள சென்னையில

உங்க அக்கா பேரனோட கம்பெனியில அவருக்கு செகரட்டரியாய் வேலை பாக்குதாம்...”

“இதைப் பார்டா.. இது எனக்குத் தெரியாதே...”

உங்களுக்குத் தெரியாதது இன்னும் நிறைய இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான் கண்ணதாசன்..

“அந்தப் புள்ளயும் திருவிழா பார்க்க வந்திருக்குது.. உங்க அக்கா பேரன் மதுரைக் கடையை பார்வையிட வந்தாராம்.. கூடவே இந்தப் புள்ளயையும் கூப்பிட்டு வந்து எங்க வீட்டில விட்டுட்டுப் போனாரு...”

“இவ்வளவு நடந்திருக்குதா..? இதை சுந்தரி எனக்குச் சொல்லவே இல்லியே...”

“அவங்களும் மதுரைக்கு வந்திருக்காங்க...”

“தெரியும்.. தெரியும்.. என்கிட்டச் சொல்லிட்டுத்தான ஆனந்தி கிளம்பி வந்தா...”

“பாட்டி.. இதையெல்லாம் எதுக்குச் சொல்றேன்னா.. உங்க அக்கா பேரன் எங்க வீட்டுக்கு வந்திருந்தப்ப எங்க காவ்யா... அவரைத் தெரிஞ்சதைப் போலக் காட்டிக்கல.. கார்த்திக் தம்பியப் பாத்தாலும் அப்படித்தான்.. தெரிஞ்சதப் போல காட்டிக்காது...”

“ஓ.. இதுல இவ்வளவு விசயமிருக்கா.. என்னிடம் சொல்லிட்டேல்ல.. இனி நான் பார்த்துக்கிறேன்...”

அம்புஜம் கொடுத்த உறுதியில் நிம்மதியாக அவன் அறைக்குள் நுழைந்தான்.. சிறிதளவு உறக்கம் தேவைப்

பட்டது.. அவன் படுத்துக் கண்மூடிய அதே நேரத்தில் சென்னையிலிருந்த பார்த்தசாரதி.. கண்மூடாமல் யோசனையில் ஆழ்ந்திருந்தார்...

“இப்போதும் ஒன்றும் கெட்டுப் போயிடலை அங்கிள்.. அர்ஜீன் டாடியிடம் ஒரு வார்த்தை ஸாரின்னு சொல்லிவிட்டால் போதும்.. எல்லாம் சரியாகி விடும்.. இதைக்கூட அவர் சொல்ல வேண்டி வந்திருக்காது.. எப்போதும் என் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுக்கும் டாடி.. இதில் மட்டும் பிடிவாதமாக இருக்கிறார்.. அர்ஜீன் வேண்டாம் என்கிறார்.. அர்ஜீனைப் பார்க்கும் போதெல்லாம் அவர் பேசின பேச்சுக்கள்தான் மனதில் குத்தும் என்கிறார்.. அதற்காகத்தான் இந்த ஒற்றை வார்த்தையை சொல்லச் சொல்கிறேன்...”

எளிதில் தோல்வியை ஒப்புக் கொள்ளாத நேகா.. அர்ஜீனை விட்டு விலகாத முடிவுடன் இந்த வார்த்தைகளை மீண்டும்... மீண்டும்... பார்த்தசாரதியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்..

அவரும் அதை சுந்தரியிடம் மீண்டும்.. மீண்டும் நினைவு படுத்திக் கொண்டிருந்தார்.. எப்போதும் அவர் பேச்சுக்கு எதிர் பேச்சுப் பேசாத சுந்தரி இப்போது மட்டும் அசைந்து கொடுக்க மறுத்து விட்டாள்.. அவருடன் பேசுவதையும் நிறுத்தி விட்டாள்.. எதைக் கேட்டாலும் தலையசைவிலும்.. ஒற்றை வார்த்தையிலும் பதில் சொல்லும் மனைவியிடம் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லை..

சுந்தரியின் எதிர்ப்புணர்வை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.. அவளுடைய சுய சிந்தனையையும்.. சுதந்திரமான நடவடிக்கைகளையும் இத்தனை காலமாக அவள் எங்கே மறைத்து வைத்திருந்தாள்.. என்று அவர் திகைத்துப் போயிருந்தார்..

அவள் பேசினால்தானே அவரால் அவளுடன் சண்டை போட முடியும்..? அவள்தான் பேச்சையே நிறுத்தி விட்டாளே..

ஆனந்தி வீட்டுக்கு அவளாகப் போவதும்.. வருவதுமாக இருந்தவள்.. திடிரென்று மகள், பேரன், பேத்திகளுடன் மதுரைக்கு பறந்து விடுவாள் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை...

எப்போதும் போல காலைக் காப்பிக்காக கண் விழித்தவரின் பக்கத்தில் காலி படுக்கைதான் இருந்தது.. கதவைத் திறந்து வெளியே தலை நீட்டியவர்..

“சுந்தரி.. காபி கொண்டா...” என்று குரல் கொடுத்தார்...

சமையல்கார அம்மாள் கையில் காபிக்கப்புடன் சமையலறையை விட்டு வெளியே வந்தாள்...

‘இவளா சுந்தரி..?’ பார்த்தசாரதிக்கு சுர்ரென்று கோபம் வந்தது...

“அம்மா எங்கே..?” அவளை அதட்டினார்...

“மதுரைக்கு போயிட்டாங்கய்யா..” அவள் சொன்ன பதிலில் அவருக்கு தூக்கம் பறந்தோடித் தூக்கிவாரிப் போட்டது...

“என்ன சொன்ன...?”

அவர் போட்ட சப்தத்தில் அவள் கையிலிருந்த காபிக்கப் கீழே விழுந்து விடவா என்று கேட்டது.. நடுங்கிய கைகளுடன் அதை இறுக்கிப் பிடித்தபடி...

“அம்மா மதுரைக்கு போயிட்டாங்கய்யா..” என்று சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாய் ஒப்பித்தாள்..

“எப்ப போனா..?”

“காலையில.. மூணு மணியிருக்கும்...”

“டிரைவர் வந்திருக்க மாட்டானே.. எப்படிப் போனா..?”

“ஆனந்தியம்மா வீட்டுக் காரில போனாங்கய்யா..”

“ஆனந்தி வீட்டுக் காரா..?”

“ஆமாங்கய்யா.. சின்னம்மாவும்.. குழந்தைகளும் காரில இருந்தாங்கய்யா.. எல்லாரும் சேர்ந்துதான் பிளைட்டில மதுரைக்குப் போகப் போகிறதாய் சொன்னாங்கய்யா..”

“மதுரைக்கு எதுக்குப் போகிறா..?”

ஒருவேளை.. மனைவியும்.. மகளும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அந்தக் காவ்யாவைப் பெண் கேட்கப் போகிறார்களோ...

இந்த நினைவில் அவர் பாவம் ஆடிப் போய் விட்டார்.. அதை இல்லையென்று மறுத்தாள் சமையல்கார அம்மாள்..

“சித்திரைத் திருவிழாவப் பார்க்கப் போறாங்களாம்ய்யா..”

இத்தனை காலமாக ஆண்டுதோறும் வந்து போன சித்திரைத் திருவிழாவைப் பார்க்கும் ஆர்வமில்லாமல் இருந்தவர்கள்.. இப்போது மட்டும் அதைப் பார்க்க ஆர்வம் காட்டுவதன் மர்மம் என்ன என்று அவருக்குத் தலை வேதனையாக இருந்தது..

அவர் அடுத்த விமானத்தைப் பிடிக்கத் தீர்மானித்த போது அன்று அவர் கலந்து கொள்ளவிருந்த அதி முக்கியமான மீட்டிங் அவரை மதுரைக்குச் சொல்ல விடாமல் தடுத்து நிறுத்தியது...

"ஃபாரின் காண்ட்ராக்ட் சார்.. போட்டி பலமாயிருக்கு நாம இதை சரியானபடி பேசி முடிச்சுட்டோம்ன்னா.. நம் கம்பெனிக்கு மிகப் பெரிய சக்சஸ் கிடைக்கும்.. மறந்தும் இதை மத்த கம்பெனிகளுக்கு கோட்டை விட்டு விடக் கூடாது..."

நியு எக்ஸ்போர்ட் கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் முதல்நாள் அவரிடம் கூறியிருந்தது அவர் நினைவுக்கு வந்தது...

மனைவியைத் தொடர்ந்து ஓட முடியாமல் வெளிநாட்டு வியாபார ஒப்பந்தம் கால்களில் தளையாய் பிணைந்திருக்க... பார்த்தசாரதி மனைவிக்கு போன் போட்டார்... 'ஸ்விட்ச் ஆஃப்' என்று பதில் வந்தது...

'ஒரு முடிவோடதான் கிளம்பிப் போயிருக்கா...' அவர் பல்லைக் கடித்தார்...

மனைவிக்கு போடும் போனை மகனுக்கும்.. மகளுக்கும் அவர் போட்டுவிட முடியாது.. அடிமைகள் எப்போதுமே மனைவிகள் மட்டும் தான்..

# 196

*காற்றோடு நான் தூதுவிட்ட...*
*கவிதைகளை நீ படிக்க ஆசைகொண்டேன்..*

**பா**ர்த்தசாரதியால் சென்னையை விட்டு நகர முடியவில்லை.. சுந்தரியை போனில் தொடர்பு கொள்ளவும் முடியவில்லை...

“அர்ஜுனிடம் பேசினிங்களா அங்கிள்...”

நேகா கேட்டபோது அவர் இல்லையென்று சொன்னார்.. அவள் முகம் மாறினாள்...

“ஏன் அங்கிள்...? உங்களால் முடியலைன்னா ஆண்டியிடம் சொல்லிச் சொல்லச் சொல்ல வேண்டியது தானே..?”

“அவதான் இங்கே இல்லையே...” பார்த்தசாரதி தன்னையறியாமல் சொல்லிவிட்டார்...

“இங்கே இல்லைன்னா..? புரியலையே.. வேர் இஸ் ஷி..?”

“ம்ப்ச்.. அதையேம்மா கேட்கிற.. அவளும் ஆனந்தியும் சித்திரைத் திருவிழா பார்க்க மதுரைக்கு போயிருக்காங்க...”

“வாட்..?”

நேகாவின் குரலில் தெரிந்த அதிர்ச்சியில்தான் அவளுக்கு எதை மறைத்துப் பேச வேண்டுமோ.. அந்த விவரத்தை மறைக்காமல் கூறி விட்ட தவறு புரிந்தது...

அவரும்தான் என்ன செய்வார்..? அவர் அனுபவிக்கும் மன உளைச்சல் அப்படி..

“அர்ஜீன்..?”

“அவனும் அங்கேதான்..”

“ஓ...!”

நேகா உச்சரித்த அந்த ஒற்றைச் சொல்லில் ஓராயிரம் அர்த்தங்கள் ஒளிந்திருந்தன.. எதுவும் பேசாமல் அவள் போனைத் துண்டித்து விட....

‘என்னவோ செய்து தொலை..’ என்று விட்டு விட்டார் பார்த்தசாரதி...

சுந்தரி அவருடன் இசைந்து போயிருந்தால் அவரால் மலையையே புரட்டி எடுத்து விட முடியும்தான்.. அவள்தான் அவரிடம் முகம் கொடுத்துப் பேசுவது கூட இல்லையே..

நான்.. நான்.. என்று அதுநாள்வரை அலைந்து திரிந்தவருக்கு.. விரலைக் கூட அசைக்க சக்தியில்லாததைப் போன்ற தொய்வு ஏற்பட்டபோதுதான் அந்த ரகசியமே அவருக்குப் புரிந்தது...

அவரென்று ஒன்றுமில்லை.. அவருடைய அத்தனை பலமாகவும்.. மகா சக்தியாகவும்.. அவருக்குப் பின்னால் வாய் திறவாமல் சுந்தரி இருந்திருக்கிறாள்.. அவள் பிரிந்து

நின்றபோது.. அவருடைய சக்தியும் அவரிடமிருந்து பிரிந்து நின்று விட்டது...

'ம்ஹீம்.. பெண்டாட்டி பிள்ளைகளை எதுத்துக்கிட்டு வாழ்கிற வாழ்க்கை.. என்ன வாழ்க்கை...'

கசப்புடன் அவர் கம்பெனி விவகாரங்களில் மூழ்கிய போது நேகா மதுரைக்கு பறந்திருந்தாள்...

இந்த முறை அவள் மதுரைக்குச் செல்வதாக வெளிப்படையாக வீட்டில் சொல்லவில்லை.. சொன்னால் அவளை தீனதயாளன் சும்மா விட மாட்டார் என்பதை அவள் அறிந்து வைத்திருந்தாள்.. அதனால் மும்பைக்கு போக வேண்டிய வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு.. வடநாட்டிற்குப் போகாமல்.. தென்தமிழகத்திற்கு பறந்து விட்டாள்...

அர்ஜீன் இருந்த அதே ஹோட்டலில் அவளுக்கும் ரூம் போடப் பட்டிருந்தது.. இதையறியாத சுந்தரியும்.. ஆனந்தியும்.. அம்புஜத்தைப் பார்க்கப் போகும் சாக்கில் காவ்யாவின் குடும்பத்துடன் இணைந்து விட்டார்கள்..

அவர்கள் போனபோது.. கதவைத் திறந்த அன்னபூரணி ஆச்சரியப் பட்டுப் போனாள்..

"வாங்க.. வாங்க.. எப்படி எங்க வீட்டைக் கண்டு பிடிச்சீங்க.." என்று அவள் வியந்தபோது...

"எங்க பாட்டிதான் சொன்னாங்க..." என்று அம்புஜத்தின் தோள் மீது சலுகையாக சாய்ந்து அவர்களது சொந்தத்தை அன்னபூரணிக்கு உணர்த்தினாள் ஆனந்தி...

“பாட்டியா..?” அன்னபூரணி திகைத்தாள்...

“பாட்டியேதான் இவங்க எங்க அப்பாவோட சித்தி.. இவங்க மருமகள் என்னோட சித்தி...”

ஆனந்தி விளக்கம் சொன்ன பின்னால் அவர்களுக்குள் நெருக்கம் அதிகரித்தது... பகல் பொழுதெல்லாம் காவ்யாவின் வீடு... மாலை வேளையில் ஊரைச் சுற்றிப் பார்ப்பது.. இரவில் தூங்க ஹோட்டலுக்கு திரும்பி விடுவது என்று ஆனந்தியும்... சுந்தரியும் அவர்களின் சுற்றுலா நேரத்தை வகுத்துக் கொண்டார்கள்.. காவ்யா முதல்நாள் அவர்களிடம் பேசத் தயங்கினாள்.. அடுத்தடுத்த நாள்களில் இயல்பாக ஆனந்தியிடம் ஒட்டிக் கொண்டாள்.. அதில் சுந்தரிக்கு மகிழ்ச்சி உண்டானது...

அர்ஜீன் அடிக்கடி வீட்டுக்கு வந்து போனாலும்.. அதிக நேரம் அங்கே இருக்க மாட்டான்.. கண்ணதாசனின் உறவினர்கள் வீடு பூராவும் நிறைந்திருந்ததால்.. அவர்கள் மதுரையைச் சுற்றிப் பார்க்கப் போகும் போது மட்டும் அவர்களுடன் இணைந்து கொள்வான்...

சித்திரைத் திருவிழா கோலாகலமாக ஆரம்பித்து விட்டது.. அம்மன் தனித் தேரில் உலா வர.. சொக்கநாதர்.. ‘பிரியாவிடை’ அம்மனுடன் உலா வந்தார்...

“மதுரைக்கு ராணி மீனாட்சியம்மன்தான்... அதனால அவங்க தனித்தேரிலதான் உலா வருவாங்க.. சிவபெருமான் கூட வருகிற அம்பிகைக்குப் பெயர் ‘பிரியா விடை...’ அவங்கதான் இறைவன் பக்கத்தில் இருப்பாங்க...”

அன்னபூரணி சுந்தரியிடமும்... சுமதியிடமும் சொல்லிக் கொண்டிருந்தாள்... அது சம்பந்தமான திருக்குறள் ஒன்றை சிவதாணு சொல்ல அம்புஜம் அதைக் கவனமாக கேட்டுக் கொண்டாள்...

‘எப்படித்தான்.. எல்லாத்துக்கும்.. ஏதாவது ஒரு குறளை இழுத்து இணை கூட்டி விடுகிறாரோ...’

கண்ணதாசனுக்கு ஆச்சரியமாக இருந்தது...

‘ஏம்பா.. திருவள்ளுவர் என்ன சித்திரைத் திருவிழாவைப் பத்தியா எழுதியிருக்கார்..?’ என்று கேட்க அவனுக்கும் ஆசைதான்...

ஆனால்.. வந்திருக்கும் விருந்தினர் முன்னிலையில் அவனால் பெற்ற தகப்பனிடம் அப்படியெல்லாம் கேள்வி கேட்டுவிட முடியாது...

அம்மன் தேரோடும் வீதியிலே.. எதிர் சேவை நடந்து கொண்டிருந்தது.. எதிரே இருந்த கூட்டத்தில் தேன்மொழி தெரிந்தாள்.. கண்ணதாசனை ஓரக்கண்ணால் பார்த்தபடி கூட்டத்தில் நடந்தாள்..

கண்ணதாசன் தங்கையை மறந்துவிட்டு.. தேன்மொழி இருக்கும் திக்கில் பார்க்க ஆரம்பித்தான்.. அவர்கள் பார்வைகள் அலைமோதி கொண்டிருந்த போது.. கூட்டமும் அலைமோத.. பெண்கள் தெருவோரமாக விலகி நின்றார்கள்...

காவ்யா மட்டும் கூட்டத்துக்குள் மாட்டிவிட... அர்ஜீன் அவளைச் சுற்றி விளைத்து... தன் கை

வளைவுக்குள் கொண்டு வந்துவிட்டான்.. வெளியேற முடியாமல் கூட்டம் நெருக்கியதில்... அவர்களும் நெருங்கினார்கள்.. கூட்டம் நகர்ந்தபோது அவர்களும் நகர்ந்தார்கள்...

காவ்யாவின் காதோரமாக அர்ஜீனின் மீசை உராய்ந்ததில் அவள் உடல் நடுங்கி.. இன்பமான இம்சையை உணர்ந்தாள்...

*"மதுரை மருக்கொழுந்து வாசம்...*
*என் ராசாவே.. உன்னுடைய நேசம்..."*

தெருவோரக் கடைகளில் ஒன்றில் பாடல் ஒலித்தது.. காவ்யாவின் இடுப்பை வளைத்திருந்த அர்ஜீனின் கரங்கள் அங்கே அழுந்திப் பதிய.. காவ்யா கிறங்கிப் போனாள்...

*"வண்டிக்காரன் சொந்தஊரு மதுரை...*
*நீ சண்டித்தனம் செய்யாதடி குதிரை..."*

அடுத்த பாட்டு மாறியதில்.. அந்த வண்டிக்காரன்.. குதிரையை இழுத்து வண்டியில் பூட்டும் லாவகத்துடன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்...

கடுகு விழக்கூட இடமில்லாத அந்தக் கூட்டத்தில்.. அவர்களின் அணைப்பை யாரும் கவனிக்கவில்லை...

அன்று இரவில் காவ்யா தூங்க வெகு நேரமானது.. பாவனா படுத்தவுடன் தூங்கி விட்டாள்... அவள் முகத்தையே பொறாமையுடன் பார்த்தாள் காவ்யா...

இப்படியொரு நிம்மதியான உறக்கம் ஏன் அவளுக்கு வாய்க்கவில்லை..?

*“எங்கிருந்தோ ஆசைகள்...*
*எண்ணத்திலே ஓசைகள்..*
*என்னென்று சொல்லத் தெரியாமலே..*
*நான் ஏன்.. இன்று வாடினேன்..?”*

அவள் காதில் அர்ஜீன் பாடிய பாடலின் வரிகள் வந்து நின்று அவள் உறக்கத்தைக் கொடுத்தன.. அலை மோதும் அவன் மீதான ஆசையில் நிலைகுலைந்தாள் அவள்... தொலைதூரத்தில் அவன் விலகி நிற்கும் போதே துரத்தும் அவனது நினைவுகளின் கனம் தாளாமல் தவிப்பவளுக்கு.. கிட்டத்தில் அவன் வந்து தொட்டுவிட்டுச் சென்றதில் தூக்கம் பிடிக்காமல் போனது...

*‘தூண்டிற் புழுவினைப் போல் – சிறு*
*சுடர் விளக்கினைப் போல்...*
*நீண்ட பொழுதாக.. எனது*
*நெஞ்சம் துடிக்குதடி...’*

மனதுக்குள் பாரதியின் கவி வரிகள் ஓடியதில் சத்தமில்லாமல் விம்மினாள் காவ்யா.. அவன் வேண்டும் என்று போராடும் உடலையும்.. மனதையும்.. வெற்றிக் கொள்ள முடியாமல் துடித்தாள்.. மறுநாள் காலையில் வீங்கிய இமைகளோடு சாப்பிட வந்தவளை.. ஹாலில் நடந்த பேச்சு வார்த்தை தடுத்து நிறுத்தியது...

“திருவிழா முடிந்ததும் பேசலாம்ன்னு நினைத்தேன்.. ஆனா கார்த்திக் அவசரப் படுத்தறான்... அவரும் போன் போட்டுப் பேசச் சொல்லிட்டாரு.. அதனாலதான் பேசிரலாம்ன்னு நினைக்கிறேன்...” என்று சொல்லிக் கொண்டிருந்தாள் சுமதி...

‘எதைப் பேசப் போறாங்க...’ காவ்யாவின் மனதில் அபாய மணி ஒலித்தது...

ஏனோ... சுமதியின் பேச்சு வார்த்தைக்கும்.. அவளுக்கும்.. ஏதோ ஒரு சம்பந்தம் இருக்கிறது என்று அவளுடைய உள்ளுணர்வு கூறியது.. அதை அடுத்து வந்த சுமதியின் வார்த்தைகள் உறுதி செய்து விட்டன...

“என்ன பேசனும்..?” சிவதாணுவுக்கு புரியவில்லை..

“எங்க கார்த்திக்குக்கு உங்க மகளை ரொம்பப் பிடிச்சிருக்கு.. எங்களிடம் சொன்னான்.. இனம் வேறா இருந்தாலும்.. காவ்யாபோல அழகும்.. குணமுமான பெண் கிடைக்கிறது பெரிய விசயம்.. அதனால நாங்களும் ஓகேன்னு சொல்லிட்டோம்.. உங்களுக்கும் விருப்பமிருந்தா நான் கார்த்திக்கோட அப்பாவை வரச் சொல்றேன்.. கல்யாணத்தை பேசி முடிச்சுரலாம்..” என்றாள் சுமதி...

அன்னபூரணி கை வேலையை மறந்து... அப்படியே நின்றுவிட.. கண்ணதாசன் உதட்டைக் கடித்தான்.. இது என்ன புதுப்பிரச்னை என்று அவன் மனம் திகைத்தது..

கார்த்திக் நல்லவன்தான்.. படித்தவன்தான்.. கோடிஸ்வரன்தான்.. ஆனால் அவன் அர்ஜீன் இல்லையே..

காவ்யாவின் மனம் கார்த்திக்கை நினைத்தும் பார்க்காது என்பது அவனுக்குத் தெரிந்த விவரம்தானே...

மகனின் முகம் பார்த்த அன்னபூரணி.. அவன் கண்ணசைவைப் புரிந்து கொண்டாள்.. பதிலுக்கு ஒர் கண்ணசைவை அவள் சிவதாணுவின் பக்கம் அனுப்பி

வைக்க.. அவர் நிதானமாக அதை சிறிய தலையசைவுடன் அங்கீகரித்தார்...

“இப்ப இதைப் பத்தி பேச வேண்டாம்.. திருவிழாச்சமயம்.. வீடு பூரா உறவு மொறைன்னு வந்து குமிஞ்சிருக்காங்க.. இதெல்லாம் ஆற.. அமர.. யோசிச்சுப் பேச வேண்டிய விசயம்.. எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு பேசிற முடியாது.. உங்க மகன் மனசில இருக்கிறதை நீங்க சொல்லிட்டிங்க.. எங்க மக மனசில அப்படியெல்லாம் எதுவுமில்ல.. இருந்தாலும்.. நீங்க கேட்டுட்டதில நிதானமா யோசிச்சு எங்க முடிவைச் சொல்றோம்...”

கம்பீரமான சிவதாணுவின் வார்த்தைகளில் சுமதியின் முகம் மாறிவிட்டது.. முகம் மாறாமல் அமைதி தவழும் புன்னகையுடன் இருந்தது அம்புஜம் மட்டும் தான்...

# 197

*கட்டழகியின் கருவிழியில்...*
*கட்டுப்பட ஆசைகொண்டேன்...*

“**அ**து எப்படியத்தை அவங்க பெண் தரமாட்டேன்னு சொல்லலாம்...?”

சுமதி பொங்கிப் பொருமினாள்.. அவள் அமைதியும்.. பெருந்தன்மையும் நிறைந்தவள்தான்.. ஆனால் மகன்

என்று வரும்போது அவளை விட்டு அந்தக் குணங்கள் பிரிந்து விட்டன...

“எப்படியத்தை..? கார்த்திக்கைப் போல ஒரு மாப்பிள்ளை கிடைக்க இந்தப் பெண் தவம் செய்திருக்கனும்..”

“ஸ்ஸ்.. சுமதி.. என்ன பேச்சு இது..? நாம இப்ப அவங்க வீட்டிலதான் இருக்கோம்.. அதனால எதைப் பேசறதா இருந்தாலும் இங்கே பேச வேணாம்.. திருநெல்வேலிக்குப் போன பின்னாலே பேசிக்கலாம்.. புரிஞ்சதா..?”

“இப்பவே கிளம்பலாம் அத்தை...”

“எங்கே..?”

“திருநெல்வேலிக்குத்தான்.. இதுக்குப் பின்னாலேயும் நாம இங்கே தங்கறதில எனக்கு விருப்பமில்ல...”

“புத்தியோடதான் பேசறயா..? இப்ப என்ன நடந்திருச்சு..? நீ பெண் கேட்ட.. அவங்க யோசிச்சு பதில் சொல்றோமுன்னு சொல்லியிருக்காங்க.. இதுக்கு எதுக்கு இந்த அளவுக்கு நீ டென்சனாகிற..?”

“யோசிக்கனுமா..? அது எதுக்கு அத்தை..? நாம எவ்வளவு பெரிய ஆளுக.. நம்ம உயரத்த விட்டு இறங்கி வந்து இவங்க வீட்டில எதுக்காக பெண் கேட்கிறோம்..? நம்ம வீட்டு புள்ள இந்தப் பெண் மேலே ஆசைப் பட்டுட்டான்னுதானே..? இல்லேன்னா.. நம்ம லெவலுக்கு தகுந்தபடி கோடிஸ்வரங்க வீட்டுப் பெண்ணையில்ல பாத்திருப்போம்..?”

“வார்த்தையைக் கொட்டாதே சுமதி.. அள்ள முடியாது.. இப்ப லெவலைப் பத்தி எதுக்காக பேசற..? இத்தனை நாளா இப்படியெல்லாம் நீ பேசினதே இல்லையே.. உன் மகன் உனக்கும்.. எனக்கும் உசத்தியா இருக்கலாம்.. இவங்களுக்கு அப்படியில்ல.. பார்த்தயில்ல.. நீயே சொன்னதைப் போல.. அழகும்... படிப்பும்... நிறைஞ்ச கோடிஸ்வர வீட்டுப் பிள்ளைக்குத்தான் பெண் கேட்டோம்.. அவங்க ஆஹான்னு மகிழ்ந்து போய் அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை வைத்துக்கலாம்ன்னா சொன்னாங்க..? இவங்க பணத்தை பெரிசா நினைக்காத மனுசங்க.. இவ்வளவு பெரிய சம்பந்தம் வீடு தேடி வந்தும் யோசிச்சுப் பதில் சொல்கிறோம்ன்னு பதில் சொல்ல யாராலே முடியும்..? இவங்களப் போல மனுசங்களாலே தான் முடியும்...”

“அதை நீங்க பெரிசா பேசறிங்களா அத்தை..?”

“பேச வேணாமா..?”

“என் மகனைப் போல மாப்பிள்ளை கிடைக்க இவங்க கொடுத்து வைத்திருக்கனும்...”

“அதை அவங்களும் நினைக்கனும் சுமதி.. இதோ பாரு சுமதி.. திருவிழாப் பார்க்கன்னு கிளம்பி வந்துட்டோம்.. இவங்க வீட்டில தூங்கியிருக்கோம்.. இவங்க கவனிப்பில ஏதாச்சும் குற்றம் குறையிருந்தாச் சொல்லு.. நாம உடனே கிளம்பிரலாம்.. அதை விட்டுட்டு.. பெண் கேட்டோம்.. அவங்க உடனே பதில் சொல்லலைன்னு கிளம்பிப் போனா நம்ம லெவலுக்கு அது நல்லாயிருக்குமா..? நீயே சொல்லு..”

அம்புஜத்தின் கேள்வியிலும் ஒரு நியாயம் இருப்பதை உணர்ந்தவளாக சுமதி மௌனமானாள்.. ஆனாலும் முகத்தை உம்மென்றுதான் வைத்திருந்தாள்.. அன்னபூரணியிடமும் மற்றவர்களிடமும் அவள் சகஜமாக பேசவில்லை.. விவரம் அறிந்த பாவனா.. அநேகத்துக்கும் பொறாமைப் பட்டாள்...

"ஏண்டி.. இந்த சுமதிக்கும்.. சுந்தரிக்கும் உன்னைத் தான் கண்ணுக்குத் தெரிகிறதா..? உன்கூடவே பசை போட்டு ஒட்டிக்கிட்டு அலைகிற என்னைக் கண்ணுக்குத் தெரியலையா..?"

"இதை எதுக்கு என்கிட்டக் கேட்கிற..? போய் அவங்க கிட்டக் கேட்க வேண்டியதுதான..? அப்படியாவது அந்தக் கார்த்திக்கிட்ட இருந்து தப்பிச்சா எனக்கு நிம்மதி..."

"அப்பவும் அர்ஜீன் பெயரை சொல்ல மாட்ட..?"

"ஏய்ய்ய்..."

"என்னவோ போடி காவ்யா.. என் பாட்டி காலத்தில் வந்த படத்தோட டைட்டில் மாதிரியே இரண்டு பேர் கிளம்பி வந்து.. அவங்க மகனுக்குன்னு உன்னைக் குறி வைக்கிறாங்க பாரு..."

"அது என்ன படம்டி..."

"சுமதி.. என் சுந்தரி.."

"ம்ப்ச்.. அவங்க எங்கேடி பெண் கேட்டாங்க.. சுமதி ஆண்ட்டிதானே பெண் கேட்டாங்க..."

“ஹை.. உனக்கு அந்தக் கவலையா..? பாருடா.. மனசுக்குள்ள மலையளவு ஆசையை வைச்சுக்கிட்டு என் பாஸீக்கு இவ தண்ணி காட்டிக்கிட்டு இருக்கிறத...”

“உன் பாஸா...?”

“உனக்கு அதுவும் பொறுக்கலையா..?”

இளம் பெண்கள் இப்படிக் கொஞ்சிக் கொண்டிருக்க.. சுமதியைப் பார்க்க வந்த சுந்தரி அவளின் முக வாட்டத்திற்கான காரணத்தை வினவினாள்.. சுமதி அவளிடம் தன் மனக் குமுறலை கொட்டித்தீர்த்தாள்...

“நீங்களே இதுக்கு ஒரு நியாயத்தைச் சொல்லுங்கக்கா..”

“என்ன சுமதி...?”

“உங்க கொழுந்தன் முடியாதுன்னு ஒற்றைக் காலில் நின்னார்.. நான்தான் உங்க மகன் ஆசைப்படுகிறான்னு எடுத்துச் சொல்லி அவர் மனதைக் கரைத்து சம்மதிக்க வைச்சேன்..”

“எதுக்கு சுமதி...?”

“இந்தக் காவ்யாவை பெண் கேட்கத்தான்...”

இதைக் கேட்ட ஆனந்திக்கும்... சுந்தரிக்கும்... ‘திக்’கென்றாகி விட்டது... அவர்கள் எதற்காக சென்னையிலிருந்து மதுரைக்கு வந்து மையம் கொண்டிருக்கிறார்கள்..? சுமதியின் மகனுக்கு காவ்யாவை பெண் கேட்டு மணம் பேசி முடிப்பதற்காகவா..?

“என்னம்மா சித்தி இப்படிச் சொல்கிறாங்க..?” சன்னக் குரலில் ஆனந்தி பதற...

“அதுதாண்டி எனக்கும் புரியலை..” என்று அதே குரலில் பதில் சொன்னாள் சுந்தரி...

“அத்தை திருவிழாப் பார்க்க மதுரைக்கு வரனும்னு சொன்னாங்க.. நானும் கூடக் கிளம்பி வந்தது எதுக்குன்னு நினைக்கறிங்க..?”

“அத்தைக்கு துணைக்கு வந்திருக்கன்னு நினைச்சேன் சுமதி...”

“இவங்க உலகத்தையே விலை பேசிட்டு வந்திருவாங்க.. இவங்களுக்கு துணை வேணுமா..? பிளைட்டில் ஏற்றிவிட்டு.. கண்ணதாசனுக்கு தகவல் சொன்னால் இந்தத் தம்பி கூப்பிட்டுக்க மாட்டாரா..? அந்த வகையில அத்தை மேல காவ்யாவுக்கும் அவ அண்ணனுக்கும் பிரியம் ஜாஸ்தி...”

“அப்படியா..?”

“உங்களுக்கு தெரியாது அக்கா.. அத்தைக்கு காலில் அடிபட்டு படுக்கையில் இருந்தப்ப.. காவ்யா தினமும் எங்க வீட்டுக்கு வந்திருவா.. சாயங்காலம் வரைக்கும் அத்தைகூட இருந்துட்டுத்தான் போவா.. அப்பத்தான் கார்த்திக் காவ்யாவை பார்த்தான்...”

“ம்ம்ம்...”

“அவனுக்குப் பிடிச்சிருக்குன்னு சொன்னான்.. எங்களுக்கும் பிடிச்சிருந்தது.. உங்க கொழுந்தனையும்

சம்மதிக்க வைச்சேன்.. அத்தை வரும்போது துணைக்கு வருகிறதைப் போல வந்து பெண்ணின் குடும்பத்தை நேரில பார்த்துப் பேசிடலாம்ன்னு நினைத்துத்தான் அத்தைகூட கிளம்பி வந்தேன்... நம்ம லெவலுக்கு கோடிஸ்வரங்க இல்லைதான்.. ஆனா மதிப்பா வாழ்கிறாங்க. உங்க கொழுந்தனை வரச்சொல்லி நாள் கடத்தாம கல்யாணத்தை பேசி முடிச்சிடலாம்ன்னு தான் இவங்களிடம் பேசினேன்...”

இந்த அளவுக்கு விவரம் முற்றிப் போய் விட்டதா என்று சுந்தரி பதைத்துப் போய் விட்டாள்.. அவள் மகன் ஆசைப்படும் பெண்ணை அவளுடைய கொழுந்தன் மகன் திருமணம் செய்து கொள்வதா..? அர்ஜீன் அவன் காதலில் தோற்பதா..?

“அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க சித்தி..?” கவலையுடன் கேட்டாள் ஆனந்தி...

“கார்த்திக் மனதில காவ்யாமேல ஆசையிருக்கிறதைப் போல காவ்யா மனதில எதுவுமில்லயாம்.. இதைச் சட்டுன்னு பேசி முடித்திர முடியாதாம்.. நிதானமா யோசிச்சுப் பதில் சொல்கிறாங்களாம்.. எப்படியிருக்கு பார்த்தீங்களாக்கா..?”

‘அப்பாடி..’ என்றிருந்தது ஆனந்திக்கு.. சுந்தரிக்கும் அதே உணர்வுதான் என்பதை அவள் முகம் பிரதிபலித்தது..

“எனக்கு எப்படியிருக்கும்ன்னு நீங்களே சொல்லுங்க... கார்த்திக்கைப் போல மாப்பிள்ளை கிடைப்பான்னு இவங்க கனவிலயும் நினைத்துப்

பார்த்திருப்பாங்களா..? நான் பெண் கேட்டதும்... எப்பேற்பட்ட கோடிஸ்வரக் குடும்பம் வந்து நம்ம மகளைப் பெண் கேட்டுதேன்னு பிரமிச்சு போயிருவாங்கன்னு பார்த்தா... இவங்க திமிராப் பதில் சொல்கிறாங்க.. இதுக்குத்தான் நாம இருக்கிற இடத்தில இருக்கனும்கிறது.. நான் சொல்கிறதை யார் கேட்கிறாங்க..?"

சுமதி ஜாடையாக அம்புஜத்தைப் பார்த்தபடி பேசினாள்.. அவள் அம்புஜத்தைத்தான் சொல்கிறாள் என்று அம்புஜத்திற்கும் புரிந்தது.. மற்ற இரு பெண்களுக்கும் புரிந்தது.. சுமதியின் பேச்சில் சுந்தரிக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை..

"நீ பேசறது சரியில்லை சுமதி.. இப்ப எதுக்காக மத்தவங்க மனதைப் புண்படுத்தற..?"

"என் மனம் புண்பட்டிருக்கேக்கா.."

"அதுக்காக மத்தவங்க மனதை நீ குதறி எடுப்பியா..? இது நல்லாயில்லை சுமதி... உன் மனதில நாம பணக்காரங்க.. கோடிஸ்வரங்கங்கிற ஆணவம் இருக்கு.. இத்தனை நாளா அதை மறைச்சுப் பெருந்தன்மையா வேசம் போட்டிருக்கிற... இப்ப நேரம் கிடைத்ததும் உன்னையறியாம அது வெளியே வந்திருச்சு..."

"அக்கா..."

"நீயே பெண் கேட்டதும் அவங்க கொடுத்திரனும்னு எப்படி நீ எதிர்பார்க்கலாம்..? நீயே சொன்னதைப் போல.. பணத்தில அவங்களை விட எட்டாத உயரத்தில நீ

இருக்கிறவ.. இருந்தும் அவங்க யோசிச்சுப் பதில் சொல்கிறேன்னு சொல்லிட்டாங்கன்னா.. இதில இருந்தே அவங்களோட உயரம் உன்னைவிடப் பெரிதானதுன்னு உனக்குப் புரியலையா..?"

"அக்கா.." சுமதி குன்றிப் போனாள்...

ஆனந்திக்கு அங்கே இருக்க சங்கடமாக இருந்தது.. அம்புஜத்தின் மனம் காயப்பட்டிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. என்றுமே அவள் பேச்சுக்கு எதிர் பேச்சைப் பேசாத மருமகளின் கோபமான பேச்சில் அவள் மனம் வலித்தது.. சுமதியோ அந்த வீட்டில் இருக்கவும் முடியாமல்.. வெளியேறவும் முடியாமல் துடித்துக் கொண்டிருந்தாள்.. அவள் மனது வேறொரு வகையில் காயம் பட்டிருப்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. சுந்தரிக்கோ இருவகையான தர்ம சங்கடம்.. அர்ஜீன் ஆசைப்படும் அதே பெண்ணை கார்த்திக்கும் ஆசைப்பட்டுத் தொலைக்கிறான் என்பதில் அவள் சங்கடமடைந்திருந்தாள்.. அதே நேரத்தில் அதை மூன்றாம் மனுஷிபோல கேட்டுக் கொண்டு.. ஆலோசனை சொல்ல நேர்ந்ததில் அதிக அளவு சங்கடத்தை அடைந்து கொண்டிருந்தாள்...

ஆனந்தி அறையை விட்டு வெளியே வந்தாள்.. சதுர படிவமாக இருந்த மாடி ஹாலின் இருபக்கமும் மூன்று அறைகள் இருக்க.. அதன் முடிவில் பால்கனி இருந்தது..

காவ்யா அங்கே தனியாக நின்று கொண்டிருப்பதைக் கவனித்த ஆனந்தி சுற்றுமுற்றும் பார்த்தாள்.. யாரும்

இல்லை.. இயல்பாக நடந்து காவ்யாவின் அருகே சென்று அவள் தோளைத் தொட்டாள்.. காவ்யா விதிர்த்துப் போய் திரும்பினாள்..

“மெல்ல.. எதுக்கு இந்த பயம்..?” மென்மையாக வினவினாள் ஆனந்தி..

“இல்ல.. திடிர்ன்னு கை பட்டதும்.. யாரோன்னு திரும்பிப் பார்த்தேன்..” காவ்யா சமாளித்தாள்..

“கார்த்திக்கிற்கு உன்னைப் பெண் கேட்டாங்களாமே..?”

ஆனந்தி நேரடியாக அந்தக் கேள்வியைக் கேட்பாள் என்று காவ்யா எதிர்பார்த்திருக்கவில்லை.. அவள் முகம் வெளுத்துவிட்டது...

அர்ஜீனின் அக்கா இந்தக் கேள்வியைக் கேட்கிறாள் என்றால் அவள் மனதில் என்ன இருக்கிறது..?

“ப்ளீஸ்.. என்னைத் தப்பா நினைக்காதீங்க...”

“உன்னைத் தப்பா நினைக்கிறேன்னு ஏன் நீ நினைக்கிற..? சித்தி அம்மாகிட்டச் சொல்லி வருத்தப் பட்டுக்கிட்டு இருந்தாங்க.. அதான் விவரம் கேட்டேன்.. தட்ஸ் ஆல்...”

“அவங்க திடிர்ன்னு இப்படிப் பெண் கேட்பாங்கன்னு நாங்க யாருமே எதிர்பார்க்கலை...”

“நீ எதிர்பார்க்கலையா..?”

கூர்மையான பார்வையுடன் கேட்ட ஆனந்தியின் கேள்வியில் காவ்யாவுக்கு தூக்கிவாரிப் போட்டது...

கார்த்திக்கிற்கு அவளைப் பெண் கேட்பார்கள் என்று அவள் எதிர்பார்த்தாளா..? ஆனந்தி இப்படிக் கேட்கலாமா..?

"நிச்சயமாய் எதிர்பார்க்கலை..." வேகத்துடன் பதில் சொன்னாள் காவ்யா...

"ஓகே.. லீவ் இட்.. பட், கார்த்திக் உன் மேல ஆசைப்படறான்னு உனக்குத் தெரியவே தெரியாதா..?"

ஆனந்தியின் பார்வை காவ்யாவின் முகத்தில் பதிந்திருந்தது.. துளைக்கும் அவள் பார்வையின் வேகத்தை காவ்யாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை...

'அப்படியே இவங்க தம்பியப் போலவே பாத்து வைக்கிறாங்க...'

"தெரியும்.." காவ்யா உண்மையான பதிலைச் சொன்னாள்..

"ஓ..." ஆனந்தியின் குரலில் நவரசங்களும் ஒலித்தன..

"ஒன்றை நீங்க புரிஞ்சுக்கனும்.. பாட்டியோட கால் வலியினாலேதான் நான் அவங்களைப் பாக்க அவங்க வீட்டுக்குப் போக வேண்டியதாப் போச்சு.. இல்லைன்னா அவங்க வீட்டுக்குப் போயிருக்கவே மாட்டேன்..."

"இப்ப அவங்க வீட்டுக்கு நீ போய் வந்ததைத் தப்புன்னு யாரும் சொல்லலையே..."

"இது தந்நிலை விளக்கம்.. யார் வீட்டுக்கும் நான் போனதில்ல.. அது பிரண்டோட வீடா இருந்தாலும் சரி..

பாவனா எனக்கு பெஸ்ட் பிரண்ட்தான்.. ஆனா.. என்னைத் தேடி அவதான் என் வீட்டுக்கு வருவா.. வந்திருக்கா.. அவளைத் தேடி அவ வீட்டுக்கு ஒரு தடவைகூட நான் தனியாப் போனதில்ல.. பாட்டியும் அப்படித்தான்.. திருநெல்வேலியில நானும் அண்ணனும் இருந்தப்ப அவங்கதான் எங்க வீட்டுக்கு என்னைப் பார்க்க வருவாங்க.. அவங்க வீட்டுக்கெல்லாம் நான் போனதில்ல.. போகனும்னு நினைச்சதுமில்ல...”

“ரிலாக்ஸ் காவ்யா...”

“இல்லேங்க.. பேச்சுன்னு வந்திருச்சு.. நான் என் பக்க உண்மையைச் சொல்லித்தான் ஆகனும்... திடிர்ன்னு பாட்டிக்கு காலில அடிபட்டு படுத்த படுக்கையாய் ஆகிட்டாங்க.. நாங்க பார்க்கப் போனோம்.. போன இடத்தில அண்ணன் கையைப் பிடிச்சுக்கிட்டு.. எனக்காக என் கால் குணமாகிற வரைக்கும் காவ்யாவை வந்து பார்த்துட்டுப் போகச் சொல்லுப்பான்னு கெஞ்சறாங்க.. நாங்க என்ன செய்கிறது..? வேறு வழியில்லாம அண்ணனும் அதுக்குச் சம்மதிச்சுச்சு.. நானும் உங்க பாட்டி வீட்டுக்குப் போய் வந்தேன்.. மத்தபடி.. அவங்க வீட்டுக்கு நானா போய் வரலை...”

“நான் இதைக் கேட்கலை காவ்யா...”

“அதனாலதானேங்க இந்த வினை வந்திருக்குது..? நான் மட்டும் எப்பவும் போல மத்தவங்க வீட்டுக்கு போகாம இருந்திருந்தா இந்த வினை வர வாய்ப்பே இல்லையே...”

“இது வினையா..?”

"பின்னே இல்லையா..?"

அந்தக் கணத்தில் ஆனந்திக்கு காவ்யாவை மிக அதிகமாகப் பிடித்துப் போனது...

சுமதியே சொன்னதைப் போல.. பணத்திலும்.. படிப்பிலும் உயர்வான வாலிபன் ஒருவன் விரும்புவதை பெரிதென்று நினைக்காமல்.. வினையென்று காவ்யா சொல்லுகிறாளென்றால்.. எந்த அளவுக்கு அவள் அர்ஜீனைக் காதலித்திருக்க வேண்டும்..

இத்தனைக்கும்.. அர்ஜீனின் ஆசைக்கு தடையாக அவனுடைய அப்பா குறுக்கே நிற்கிறார்.. கார்த்திக்கிற்கு அப்படியில்லை.. அவனுடைய அப்பாவே மகன் ஆசைப்பட்ட பெண்ணை பெண் கேட்க சொல்லியிருக்கிறார்...

# 198

***உன் நெற்றியிலே பொட்டுவைக்க..***
***என் நெஞ்சுக்குள்ளே ஆசைகொண்டேன்...***

**மா**ர்கழி குளிர் காற்று ஊசி போல உடலைத் துளைத்தது.. குளிர் தாங்க முடியாத ஆனந்தி புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்...

"சால்வை கொண்டு வரவா...?" கவலையுடன் கேட்டாள் காவ்யா..

“நோ.. தேங்க்ஸ்..” முறுவலித்தாள்...

காவ்யா பதில் பேசவில்லை.. ஆனந்தியைப் பார்ப்பதும்.. தெருவைப் பார்ப்பதுமாக.. அவள் பரபரப்பான மனநிலையில் இருந்தாள்..

“ஆக்சுவலா காவ்யா.. சித்தி உங்க குடும்பத்து மேல எக்கச்சக்க கோபத்தில் இருக்காங்க...”

“அது அர்த்தமில்லாத கோபம்...”

“அது உனக்கும்... எனக்கும் தெரியுது... அவங்களுக்குத் தெரியனுமே...”

“அதுக்கு நாங்க என்ன பண்றது..?”

“நீ ஒன்னு செய்யலாம்..” மெதுவான குரலில் சொன்னாள் ஆனந்தி...

“என்னதுங்க..?” புரியாமல் பார்த்தாள் காவ்யா...

“உன் மனதில் அர்ஜீன் மட்டும்தான் இருக்கிறான் என்பதை நீ உன் வீட்டுக்கும் மத்தவங்களுக்கும் சொல்லி விடலாம்...”

ஆனந்தியின் பேச்சில் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தாள் காவ்யா.. அவள் விழிகளில் அகப்பட்டு விட்ட பதட்டம் தெரிந்தது...

“ரிலாக்ஸ் காவ்யா..” ஆனந்தி அவளை அமைதிப் படுத்த முயன்றாள்...

“இது உனக்கும்.. அர்ஜீனுக்கும் நடுவில் இருக்கிற பெர்சனல்தான்.. பட்.. விசயம் இவ்வளவு தூரத்துக்கு வந்த

பின்னாலயும் அவனால் என்னிடம் மறைக்க முடியுமா..? நீயே சொல்லு...”

காவ்யா பதில் சொல்லாமல்.. அவளின் சேலை முந்தானையை விரல் நுனியில் சுற்றுவதும்.. பிரிப்பதுமாக இருந்தாள்.. அவளின் அந்த செய்கையில் அவள்மனம் புரிந்து போனவளாக காவ்யாவின் கையைப் பிடித்துத் தன் கைக்குள் அடக்கிக் கொண்டாள் ஆனந்தி.. அவள் கைவிரல்கள் நடுங்குவதை ஆனந்தியால் புரிந்து கொள்ள முடிந்தது...

“எதுக்கு இத்தனை பதட்டம் காவ்யா..? உன் காதலைப் பற்றி உன் அண்ணனுக்குத் தெரிந்திருக்கும் போது.. என் தம்பியின் காதலைப்பற்றி எனக்குத் தெரியாமல் இருக்குமா..?” ஆனந்தி கேட்டாள்...

“என் அண்ணன்கிட்ட என் காதலைப்பத்தி நான் சொல்லலை...” மனத்தாங்கலுடன் பதில் சொன்னாள் காவ்யா...

“ஓ.. அதுதான் உன் பிராப்ளமா..? இங்கேயும் அப்படித்தான்... அர்ஜீன் அவனோட காதலைப் பற்றிச் சொல்லலை.. டாடிக்கும்.. அவனுக்குமிடையே ‘கோல்டு வார்’ ஃபார்ம் ஆகியிருக்கு.. அதை என்னன்னு கேட்கத்தான் அர்ஜீனோடு பேசினேன்.. பேச்சில் இயல்பாக வெளிவந்தது தான் இந்தக் காதல் விவகாரம்.. மற்றபடி.. அவனாய் எதையும் சொல்ல வில்லை..”

ஆனந்தி விளக்கம் சொல்லிய விதத்தில் காவ்யா கவரப்பட்டாள்.. உதட்டைக் கடித்தபடி காதலனின்

தமக்கையை சங்கடம் கலந்த சொந்தத்துடன் பார்த்தாள்.. பார்த்தசாரதியைப் பற்றிய பேச்சு வந்ததில் அவள் மனபாரம் அதிகமாகி விட்டிருந்தது.. அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாள்.. பார்த்தசாரதியைப் பற்றிய எந்தவொரு பேச்சையும் கேட்க அவள் விருப்பப் படவில்லை...

அதை உணராதவளாக ஆனந்தி தகப்பனாரைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்...

"டாடி எப்போதுமே இந்த அளவுக்கு ஹார்ஷா பிஹேவ் பண்ணியதில்லை.. இப்ப அவருக்கு என்னாச்சுன்னு தெரியலை..."

"இதில் தெரியாமலிருக்க என்ன இருக்குங்க..?" வறண்ட குரலில் இடை மறித்துப் பேசினாள் காவ்யா..

"அவருக்கு நேகாவைத்தான் மருமகளாக்கிக்கனும்னு எண்ணமிருக்கு.. அதில் தப்பொண்ணுமில்லையே.. நீங்களும் கோடிஸ்வரங்க.. அவளும் கோடிஸ்வரி.. இனம்.. இனத்தோடதான் சேரனும்.. பணம்.. பணத்தோடுதான் சேரனும்னு அவர் நினைக்கிறாரு.. அந்த நினைப்பிலயும் தப்பில்லையே..."

காவ்யாவின் ஒட்டாத பேச்சில் ஆனந்தி வருத்தப் பட்டாள்.. இந்த அளவுக்கா அவள் மனதில் விரக்தி விரவியிருக்கிறது என்று விசனப்பட்டாள்...

"அர்ஜீனோட வாழ்க்கை அவனுக்குத்தான் சொந்தம் காவ்யா.. அவன் மனைவியா யார் வரனும்னு அவன்தான்

தீர்மானிக்கனும்.. அதை டாடி தீர்மானிக்க முடியாது.. உனக்கு அவனைப் பற்றித் தெரியாது.. இப்ப அவன் இருக்கிற உயரம்.. அவன் உருவாக்கிக் கொண்டது.. டாடி உருவாக்கித் தந்ததில்லை...”

“இருக்கலாம்.. ஆனாலும் பெத்தவர் அவர்தானே...”

“அதுக்காக அவர் பிள்ளையை நீ வெறுப்பியா..?”

அர்ஜீனை காவ்யா வெறுக்கிறாளா..? அந்த நினைவு தந்த அதிர்வில்...

“உங்க தம்பியை யார் வெறுக்கிறது..? என்னால அது முடியுமா..?” என்று சொல்லி விட்டாள் காவ்யா...

ஆனந்தியின் இதழ்களில் சந்தோசப் புன்னகையைக் கண்டதும் தன் நாக்கைக் கடித்துக் கொண்டாள்...

“இவ்வளவு பிரியத்தை அவன்மீது வைத்துவிட்டு ஏன் பிரிந்து நிற்கிற காவ்யா..?” மென்மையாக வினவினாள் ஆனந்தி...

காவ்யாவுக்கென்ன அப்படிப்பட்ட வேண்டுதலா இருக்கிறது...? அவள் கண்களில் நீர் திரையிட.. தொலைதூர தொடுவானத்தை வெறித்தபடி தன் போக்கில் பேசலானாள்...

“எனக்கென்ன அப்படிப்பட்ட வேண்டுதலா இருக்கு..? ரெண்டு வருசத்துக்கு முன்னால நானும் காதலில் விழுந்து வைப்பேன்னு யாரு கண்டா..? சிட்டுக் குருவியப் போலல்ல நிம்மதியா இருந்தேன்.. அது

அத்தனையும் உங்க தம்பியப் பாத்த நாளில மாறிப் போகும்ன்னு நினைச்சும் பாத்ததில்ல.. பிரியம் வைக்கிற மனசு.. தகுதியையும்.. அந்தஸ்தையும் நிறுத்துப் பார்த்து பிரியம் வைக்கிறதில்ல.. இத உங்கப்பா புரிஞ்சுக்கலியே..”

“அர்ஜீன் புரிஞ்சுக்கிட்டு இருக்கான்.. நான் புரிஞ்சுக் கிட்டு இருக்கேன்.. எங்க அம்மாவும் புரிஞ்சுக் கிட்டிருக்காங்க.. உனக்கு இதெல்லாம் தெரியலையா..?”

“தெரியலைங்க.. கல்லால் அடித்திருந்தா காயம் ஆறியிருக்கும்.. உங்கப்பா சொல்லால் அடிச்சுட்டாரு.. அந்தக் காயம் என்னென்னைக்கும் ஆறாதுங்க.. உங்களுக்கு அதைச் சொன்னா புரியாது...”

“காவ்யா..”

“வீடுங்கிறது எதுங்க..? அதில நிறைஞ்சிருக்கிற அத்தனை மனுசரையும் சேர்த்ததுதான் அது... உங்க வீட்டுக்குள்ள நான் மருமகளா வர்றதை உங்கப்பாவாலே ஏத்துக்க முடியாதுன்னு ஆனபின்னால உங்க தம்பி மேல நான் பிரியம் வைச்சு எதுக்குங்க ஆகப்போகுது..? சோத்துக்கு ஆகப் போகுதா..? குழம்புக்கு ஆகப் போகுதா..?”

“காவ்யா...”

“ஒரு வீடான வீட்டில.. வீட்டுக்கு வரப் போகிற மருமகள.. விரோதியப் போலப் பாக்கிற மனுசர் இருந்தா.. அந்தப்பக்கம் தலைவைத்துப் படுக்கலாமா..? நினைச்சாலே குலை நடுங்குது...”

“காவ்யா...”

“வேணாங்க.. விட்டிருங்க.. உங்கவழி உங்களுக்கு.. என்னால அதில பயணப்பட முடியாது..”

காவ்யா சட்டென்று அங்கிருந்து அகன்றுவிட.. அவள் போவதையே பார்த்த வண்ணம் சுந்தரி ஆனந்தியின் அருகில் வந்தாள்...

“என்ன ஆனந்தி.. சுமதி இப்படிச் சொல்றா..?”

“தெரிந்த விசயம்தானேம்மா.. சித்தப்பாவுக்கு இது தெரியாதுன்னு அன்னைக்கு போனில் பேசினப்ப பாட்டி சொன்னாங்க.. அதுக்கப்புறமா சித்தப்பாவுக்கும் இதைச் சொல்லிட்டாங்க போல...”

“அப்படித்தான் சுமதி சொல்றா.. அவரும் சம்மதிச் சுட்டார் போல இருக்கே..” கவலைப்பட்டாள் சுந்தரி...

“பெத்த மகன்மேல உண்மையான பாசம் வைத்திருக்கிற தகப்பன் அவர்தான்.. நம்ம டாடியும் இருக்காரே..” சலித்துக் கொண்டாள் ஆனந்தி...

“காவ்யாவிடம் என்ன பேசின...? எதிரே நான் வருகிறதைக் கூடக் கவனிக்காம அவ... வேகமாக போறாளே..”

“ம்ப்ச்.. என்னத்தைன்னு சொல்ல..? டாடி பேசின பேச்சை அவளாலே மறக்க முடியலைம்மா.. அவ மனசை மாற்ற என்னால முடியலை.. பட்.. ஒன்திங்ம்மா.. அவ மனசில அர்ஜீன் மேல மட்டும்தான் ஆசையிருக்கு.. கார்த்திக்குக்காக சித்தி பெண் கேட்டதில் அவளுக்கு கொஞ்சம் கூட விருப்பமில்லை...”

“தங்கமான பொண்ணு.. உன் டாடிக்கு இது தெரியலையே...”

ஆனந்தி மௌனமானாள்.. மதுரை வந்ததின் நோக்கம் நிறைவேறாது போல இருக்கிறதே என்று அவள் மனம் சோர்ந்தது.. அன்றைய இரவில்.. தூங்குவதற்கு முன்னால்.. அர்ஜீன் அவர்களைப் பார்க்க வந்தபோது.. காவ்யா பேசியதை அவனிடம் ஆனந்தி சொன்னாள்.. அவன் முகம் இறுகியது..

“அவ பிடிவாதக்காரிக்கா..” கோபப்பட்டான்...

“உன் மேல வைத்திருக்கிற காதலிலும் பிடிவாதமாத்தான் இருக்கிறா..” ஆனந்தி சமாதானப் படுத்தினாள்...

மறுநாளில் அவர்கள் கண்ணதாசனின் வீட்டுக்குப் போனபோது மாடி ஹாலில் பெண்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.. சுமதி அதில் கலந்து கொள்ளாமல் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டிருந்தாள்.. சுந்தரியையும்... ஆனந்தியையும் புன்னகையான தலையசைவுடன் அருகே அழைத்துக் கொண்டாள் அம்புஜம் பாட்டி...

“திக்குவிஜயத்தை பார்க்க மாசி வீதியில் ஊரே திரண்டு நிற்கும்.. மீனாட்சி அம்மன் வீதி உலா வருவாங்க.. மீனாட்சி அம்பு விடும் காட்சி மிக அருமையாக இருக்கும்..” அன்னபூரணி கதை சொல்லிக் கெண்டிருந்தாள்...

காவ்யா எழுந்து போனாள்.. மாடிப்படியில் இறங்குகிறவளை கவலையுடன் பார்த்தாள் சுந்தரி..

அவளும்.. ஆனந்தியும் வந்தவுடன் காவ்யா எழுந்து போய் விட்டாளென்றால்.. அவள் மனதில் அவர்கள்மீது வெறுப்பு வந்து விட்டதோ என்ற எண்ணம் அவளுக்கு..

“ஆத்தில தண்ணி வந்திருது... புதுசா வைகையாத்துத் தண்ணியக் கண்டதும்.. தங்கச்சி கல்யாணத்துக்கு சீர் செய்ய வந்த அழகர் ஆத்தில இறங்காம திரும்பிருவாரு...” அன்னபூரணி சொல்ல..

“அட..! அப்புறம்..?” என்று முகவாயில் கை வைத்து வியப்புக் குறியீடுகளை உச்சரித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள் அம்புஜம்..

“இங்க மீனாட்சி கல்யாணத்தில் அண்ணன் தாரை வார்க்க வரலையேன்னு மீனாட்சி வாசல... வாசலப் பாக்குது...”

அன்னபூரணி கதை செல்லிக் கொண்டிருக்க.. காவ்யா தென்படுகிறாளா என்று சுந்தரி.. வாசலை.. வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. காவ்யாவின் நிழலைக் கூட அவளால் பார்க்க முடியவில்லை...

“பாத்தாரு.. சிவபெருமான்.. என்னடா.. நம்ம பொண்டாட்டி அண்ணன்காரன் தாரை வார்க்க வரலைன்னு ஏங்கிப் போயிருமேன்னு.. அவரே அழகரப் போல மாறி தாரை வார்க்க வர்றாரு...”

“கேட்டியா சுமதி..” அம்புஜம் பரவசப்பட.. சுமதி உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு மாமியாரை முறைத்தாள்..

அவளே பெண் கேட்க வந்து அது நடக்காமல் போன வருத்தத்தில் இருக்கிறாள்.. அவளைக் கதை கேட்கச் சொன்னால் எப்படிக் கேட்பாள்..? அவளைப் போய் கேட்டியா சுமதி..? என்றால்.. ‘ஆமாம் அத்தை.. கேட்டுக் கிட்டுத்தான் இருக்கிறேன்..’ என்று தேனொழுகும் குரலில் சொல்லி விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பாளா..?

“அழகரா சிவபெருமான் மாறி தாரை வார்க்க வந்த பெருமாளுக்குப் பேருதான் வீர ராகவ பெருமாள்...”

“அப்படியா..?!... ஆஹா..! கேட்டியா சுமதி...”

“சித்திரைத் திருவிழாவில மீனாட்சிக்கு செங்கோல் கொடுப்பாங்க.. இன்னைக்கும் மதுரையை ஆட்சி செய்யறது மீனாட்சிதான்..”

“பேஷ்.. பேஷ்.. ரொம்ப நல்லாயிருக்கு.. கேட்டியா சுமதி..”

“எங்க ஊரு ராணிங்கிறதினால மீனாட்சி தனித் தேரிலதான் வரும்மா.. சிவபெருமான் பக்கத்தில் இருக்கிற அம்மனுக்குப் பேரு ‘பிரியாவிடை’ இதுவும் பார்வதியின் அம்சம்தான்ம்மா...”

“ஏற்கனெவே நீ சொல்லியிருந்தாலும்.. புதுசாக் கேக்கறதைப் போலவே பரவசமாயிருக்கு அன்னபூரணி.. கேட்டியா சுமதி...”

“எங்க ஊரே கோவில் நகரம்மா.. இங்கேயிருக்கிற சிவன் கோவிலில சூரியனோட கதிர்கள் நேரா வந்து சன்னதியில விழுகிற அதிசயம் இருக்கும்மா..”

“நிஜமாவா..? கேட்டியா சுமதி...”

“மடப்புறம் காளியம்மன் கோவில்.. மாரியம்மன் கோவில் தெப்பத்திருவிழான்னு நாங்க சாமிகளைக் கொண்டாடற ஜனங்கம்மா...”

“ஆஹா..! கேட்டியா சுமதி...”

அதற்கு மேல் மாமியாரின் ‘கேட்டியா சுமதி..’யைக் கேட்க முடியாமல் தலையைப் பிடித்துக் கொண்டு எழுந்து விட்டாள் சுமதி.. என்னவென்று வினவிய மாமியாரிடம்...

“தலைவலி..” என்று முகம் சுளித்தாள்...

அவள் எதைக் குறிப்பிடுகிறாள் என்று விளக்கம் கேட்காமல் அதற்கும் ஒரு ‘அடடா’வைப் போட்டு அறையில் படுத்து ஓய்வெடுக்கச் சொல்லி அனுப்பி வைத்து விட்டாள் அம்புஜம்...

மாடிப்படியில் காவ்யாவின் தலை தெரிந்தது.. சுந்தரியின் விழிகள் பிரகாசித்தன.. காவ்யாவின் கையில் இருந்த காபித் தம்ளர்களைக் கொண்ட டிரேயைக் கண்டதும்.. ஆனந்தியின் கண்களும்.. அவளின் கண்களும சந்தித்து மீண்டன...

‘நமக்காக காபி கொண்டு வரப் போயிருக்கிறா..’ சுந்தரியின் விழி சொன்ன செய்தியை இமைமூடி அங்கீகரித்தாள் ஆனந்தி...

சற்றுநேரத்தில் அன்னபூரணி சமையலைக் கவனிக்க எழுந்துசென்று விட.. அம்புஜம் மருமகளுக்குத் துணையாக ஓய்வெடுக்கப் போய்விட.. ஆனந்தி செல்போனை காதுக்கு

கொடுத்து கணவனுடன் பேசியபடி தனிமை நாடி விலகி நடந்துவிட.. சுந்தரியும் காவ்யாவும் மட்டும் தனித்து இருந்தார்கள்..

“ஏம்மா.. எங்க வீட்டில அர்ஜீனோட டாடி மட்டும்தான் இருக்கிறாரா..? நானில்லையா..?” இதமாக சுந்தரி கேட்டதும்.. பொலபொல வென்று கண்ணீர்துளிகள் கொட்ட.. அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டாள் காவ்யா.. அவள் மனதில் பாறாங்கல் ஏறியிருந்தது...

# 199

*உனக்கும் எனக்குமான பரிபாஷையை..*
*உள்ளத்தில் பொதித்து வைக்க ஆசைகொண்டேன்..*

இரவைப் பகலாக்கிய வெள்ளை நிற வெளிச்ச வெள்ளத்தில் தமுக்கம் வைமதானம் ‘ஜே... ஜே..’ என்று இருந்தது.. வரிசை கட்டியிருந்த கடைகளில் மக்கள் வெள்ளம் நுழைந்து வெளியேறிக் கொண்டிருக்க... ஒரு பக்கம்.. மணல் வெளியில் ஜமுக்காளங்களை விரித்து.. அதில் உட்கார்ந்து கலை நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார்கள் வெளியூர் வாசிகள்...

“கட்டுச் சோறு கட்டிக்கிட்டு வருவாங்கள்ல..” பெருமையுடன் சொன்னாள் அன்னபூரணி...

ஆகாயத்தில் எழும்பிய ஜெயிண்ட் வீலர்களில் அமர்ந்திருந்தவர்கள்.. இருக்கை வானைத் தொடும்போது.. கூட்டத்தைப் பார்த்துக் கையாட்டிச் சிரித்தார்கள்...

காவ்யாவும் அதைப் போல ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தவள்தான்.. இப்போது அந்த நினைவின்றி அமைதியான நதியைப் போல நடந்து கொண்டிருந்தாள்..

“நம்ம ஊர் மெரினா பீச்சைப் போல இருக்கு..” என்றாள் சுந்தரி.. ஆனந்தி அதை ஆமோதிக்க...

“மெரினா பீச்சில... இப்படி கைத்தறித்துறை.. மீன்வளத்துறைன்னு.. ஒவ்வொன்னிலயும் கண்காட்சி வைத்திருப்பாங்களா..?” என்று கேட்டாள் அன்னபூரணி...

அனைத்திலும் மதுரை சித்திரைத் திருவிழாவின் பொருள் காட்சியே சிறந்தது என்று வாதாடும் நோக்கத்தில் அவள் கேட்ட கேள்வியைப் புரிந்து கொண்ட பாவனையில் அம்புஜமும்.. சுந்தரியும்.. ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்...

“அதோ.. அர்ஜீன் வந்துட்டான்...”

ஆனந்தியின் உற்சாகக் கூவலில் பாவனாவின் கரம் பற்றித் தனியாக நின்று கொண்டிருந்த காவ்யாவின் இதயத்தில் யாரோ மத்தளம் வாசிக்க ஆரம்பித்தார்கள்...

அவள் வழிகள் மின்னத் திரும்பிப் பார்த்தாள்...

அவள் திரும்பிப் பார்ப்பதைப் பார்த்தபடி.. அழுத்தமான காலடியுடன் அர்ஜீன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்..

அந்த முன்னிரவு நேரத்தின் விழாக் கொண்டாட்டக் கலகலப்பில் அவனைப் பார்த்த காவ்யாவின் மனதில் கிளர்ச்சி ஏற்பட்டது...

அடர்ந்த கரும்பச்சை வண்ண முரட்டு ஜின்ஜீம்... இளம்பச்சை கோடுகள் நிறைந்த கார்கோ சட்டையுமாக.. அவன் அட்டகாசமாக இருந்தான்...

“ஏய்ய்.. பாஸ் இன்னைக்கு அசத்தலா வந்திருக்கார்டி..” பாவனா ரசித்தாள்..

அவளின் அந்த ரசிப்பில் காவ்யாவின் ரத்தம் கொதித்தது.. அவளது அர்ஜீனை எப்படி இன்னொருத்தி ரசித்துப் பார்க்கலாம்...

“பார்வையைத் திருப்பு..” காட்டமாக அவள் முணுமுணுத்தாள்...

“அது என்ன கழுதைக்கு..?” அலட்சியமாக நியாயம் கேட்டாள் பாவனா..

“ஏய்ய்.. அடங்குடி..” எரிச்சலுடன் சொன்னாள் காவ்யா..

“முடியாதுங்கிறேன்.. அதுக்கு இப்ப என்னங்கிற..?”

“பாவனா...”

“இப்ப நீதான் அடங்கனும்.. ஏண்டி ஆத்துல தண்ணி அலைமோதிப் போனா.. தாகமெடுக்கிறவங்க தண்ணியைக் குடிக்கத்தான் நினைப்பாங்க.. இவ்வளவு உறுத்திருக்கவ.. அவர் கையாலே.. தாலியை வாங்கிக்கிட்டு கண்டிசன் போட வேண்டியதுதானே...?”

“என்னன்னு..?”

“ஐயா அர்ஜீன் ராசா.. உன் அழகைக் கொஞ்சம் மறைச்சு வைய்யி.. ஊரு கண்ணு ஓவராப் படுதுன்னு...”

“அப்ப.. நீ அடங்க மாட்ட..?”

“மாட்டேன்.. நீ வேணும்னா வேலி போடு..”

“ஆத்துக்கு வேலி போடறதா..? நடக்கிற காரியமா..?”

“இந்த ஆத்துக்கு நீ வேலியைப் போடலாம்.. அது நடக்கிற காரியம்தான்.. நீ சொன்னா இந்த ஆத்துத்தண்ணி.. உன் இடுப்பில சுமக்கிற குடத்துக்குள்ள அடங்கி நிற்கும்.. யாரு நீ..? அடங்காத அர்ஜீனனையே அடக்கி உன் பின்னாலே சுத்த வைச்சிருக்கிற சொக்குப் பொடிக் காரியில்ல...”

பாவனாவின் பொறாமையில் காவ்யாவுக்கு பெருமையாக இருந்தது.. ஆறடியில்.. அண்ணாந்து பார்க்கும் உயரத்தில்.. நிமிர்ந்த நடையுடன்.. அவர்களின் அருகே வந்து நின்ற அர்ஜீனின் பார்வை காவ்யாவின் மீதே மையம் கொண்டிருந்ததில் அவள் மனதுக்குள் ரகசிய சந்தோசம் உண்டானது..

“எப்பவும் கோட்டும்.. சூட்டும்.. டையுமா இருப்பாரா..? இப்பக் கேஸீவல் டிரஸ்ஸில் பார்க்கிறப்ப.. ‘வாவ்..’ன்னு சொல்லலாம் போல அசத்தலா இருக்கிறார்டி..” பாவனா விடாமல் அவனை பார்வையிட்டாள்...

“நீ அசத்தலை விட்டுத் தொலைக்கவே மாட்டியாடி..?” கடுகடுத்தபடி.. அவனை பார்வையிட ஆரம்பித்தாள் காவ்யா..

கண்ணதாசனும்... சிவதாணுவும் அவர்களுடன் வரவில்லை.. பெண்களாகப் போகிறார்கள் என்பதினாலும்.. இரண்டு கார்களிலும் டிரைவர்கள் இருக்கிறார்கள்.. அவர்கள் பத்திரமாக பார்த்துக் கொள்வார்கள் என்று அம்புஜம் அளித்த உத்திரவாதத்தினாலும்.. அவனும்.. சிவதாணுவும் வீட்டிலேயே தங்கி விட்டார்கள்...

அர்ஜீன் வரப்போவது மட்டும் தெரிந்திருந்தால்.. கண்ணதாசன் அப்படி வீட்டிலேயே தங்கியிருப்பானா என்று யேசித்தாள் காவ்யா..

அவளுக்கே அவன் வரப்போவது தெரியாது.. எதிர் பாராத அந்த இனிமையான முன்னிரவுப் பொழுதின் சந்திப்பில் அவர்களின் கண்கள் ரகசியமாக சந்தித்துச் சந்தித்து மீண்டன..

*"எங்கிருந்தோ ஆசைகள்..*
*எண்ணத்திலே ஓசைகள்..*
*என்னென்று சொல்லத் தெரியாமலே..*
*நான் ஏன் இன்று மாறினேன்..?"*

மதுரை மாநகருக்கே உரிய பாணியில் அருகில் கட்டப் பட்டிருந்த ஒலி பெருக்கியில் பழைய பாடல் ஒலிபரப்பாகிக் கெண்டிருந்தது.. அந்த ஆசையின் அலைகள் வந்து அடித்துச் சென்று கொண்டிருந்த அந்த வேளையில்.. அந்தப் பாடலைக் கேட்ட காவ்யாவின் மனதில் ரம்யம் நிரம்பியது...

*"ஆசை.. வரும் வயது...*
*உந்தன் வயது...*

*பேசும்.. இளம் மனது...*
*எந்தன் மனது...”*

அர்ஜீன் மெதுவான குரலில் சேர்ந்து பாடியபடி அவளைப் பார்த்தான் அவனது ஆண்மை ததும்பும் குரலின் இனிமையில் அவள் கட்டுண்டபோது.. அவளுக்கு மட்டும் தெரியும்படி அவன் கண்சிமிட்டினான்.. காவ்யா உடல் வேர்த்து அருகிலிருந்த பாவனாவை பார்த்தாள்.. அவள் கள்ளச்சிரிப்புடன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள்..

‘கள்ளி.. கண்டு கொண்டிருப்பா...’ காவ்யா உதட்டைக் கடித்தாள்..

அர்ஜீனின் பார்வை அவள் உதட்டின்மீது தயங்கி நிற்க... அவள் பதறிப் போனவளாக இப்போது அன்னபூரணியைப் பார்த்து வைத்தாள்.. அவள் சுந்தரியுடன் எதையோ பேசிக் கொண்டிருந்தாள்... அம்புஜமோ ஆனந்தியுடன் மெதுவான குரலில் குடும்ப விவகாரங்களை அலசிக் கொண்டிருந்தாள்...

*“ஆடவன் பார்வையில்...*
*ஆயிரம் இருக்கும்...*
*மாதுளம் நாளொரு..*
*தூதுகள் அனுப்பும்...*
*என்னென்ன சுகம் வருமோ..?”*

அவர்களைச் சுற்றித் தவழ்ந்த அந்த இசையில் அர்ஜீனின் பார்வை அவளுக்கு செய்திகளை அனுப்பிக் கொண்டேயிருந்தது... அவளுக்கும்... அவனுக்கும்..

மட்டும் புரிந்த அந்த பரிபாஷையில் இருவர் மனங்களும் ஆசையாசையாய் பேசிக் கொண்டிருந்தன..

*"எங்கிருந்தோ ஆசைகள்..*
*எண்ணத்திலே ஓசைகள்..*
*என்னென்று சொல்லத் தெரியாமலே..*
*நான்தான் உன்னை மாற்றினேன்.."*

நிமிர்ந்த பார்வையும்.. வெடுக்கென்ற பேச்சுமாக இருந்தவளை மாற்றி விட்ட அர்ஜீனின் விழிகள் பாடலை ஒலிபரப்ப.. காவ்யாவுக்கு கண்மூடி அவன் மார்பில் சாய்ந்து கொள்ள வேண்டும்போல இருந்தது..

அவனது தோற்றத்தில் அவள் மயங்கினாள்.. அவன் பார்வையில் அவள் மயங்கினாள்.. அவனது அண்மையில் அவள் மயங்கினாள்.. அவன் காதலில் அவள் மயங்கினாள்.. அவனிடம் மனம் மயங்கினாள்...

*"மாலை வரும் மயக்கம்..*
*என்ன மயக்கம்..?*
*காலை வரும் வரைக்கும்..*
*இல்லை உறக்கம்..*
*பூவிதழ் மேலொரு..*
*பனித்துளி இருக்க..*
*நானதைப் பார்க்கையில்..*
*நூலென இளைக்க..*
*என்னென்ன அதிசயமோ..?"*

பாடலின் இழைகள் பின்னிய மாய வட்டத்துக்குள் சிக்கிய அவனும்.. அவளும்.. மற்றவர்களை மறந்து

ஒருவரையொருவர் பார்த்தபடி அசையாமல் நின்றிருக்க.. காவ்யாவின் அருகிலிருந்த பாவனா பக்கத்திலிருந்த கடையில் ஏதோ ஒரு பொருளை வாங்கப் போவதைப் போல நகர்ந்து விட்டாள்.. அர்ஜீன் காவ்யாவின் பக்கத்தில் நெருங்கி நின்றான்.. அவள் மனம் படபடத்தது.. விரல் நுனிநடுங்க.. அதை மறைப்பதற்காக.. கைவிரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி லேசாக அவனைப் பார்த்தாள்...

அவன் அவளையேதான் பார்த்துக் கொண்டிருந்தான்.. நீ எனக்கு வேண்டும் என்பதைப் போல.. உன்னை விட்டு நான் நீங்க மாட்டேன் என்பதைப் போல.. எங்கே நீ போனாலும் அங்கே நான் தொடர்ந்து வருவேன் என்பதைப் போல.. நீயின்றி நானில்லை என்பதைப் போல.. அவன் பார்வை மழைச்சாரலாய் அவள் மனம் நனைத்து.. மயிலிறகாய் அவள் மனம் வருடி நின்றது...

காவ்யாவினால் அவள் பார்வையை விலக்கிக் கொள்ள முடியவில்லை... தவிப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்... அவர்களின் செவிகளில் நுழைந்தபாடல் வரிகள் அவர்களின் மனதைத் தாலாட்டிக் கொண்டிருந்தன..

*"சந்தித்ததோ பார்வைகள்..*
*தித்தித்ததோ நினைவுகள்..*
*மையலைச் சொல்லத் தெரியாமலே..*
*ஏன்.. ஏன்.. இன்று தேடினேன்..?"*

அவளது விழிகளில் தெரிந்த தேடலில் அவன் மனம் கரைந்து கொண்டிருந்தது.. அசையாமல் நின்றிருந்த

காவ்யாவின் மோனத்தை அன்னபூரணியின் குரல் கலைத்துவிட்டது...

"காவ்யா.." என்ற அவளின் அழைப்பில் மோனம் கலைந்தவள் பதறிப் போனவளாக தாயருகில் ஓடினாள்...

"அம்மா..."

"ஏம்மா இப்படி ஓடி வர்ற..?"

"கூப்பிட்டியே..."

"அந்தப் பக்கம் இன்னும் பாக்கலையே.. அதான்.. போகலாமான்னு கேக்கக் கூப்பிட்டேன்.. அதுக்காகவா இப்படி ஓடி வந்த..?"

அன்னபூரணியின் முகத்தில் வாத்சல்யம் கலந்த பெருமை மிளிர்ந்தது.. அவள் பார்வை மகளை சீராட்டியது.. காவ்யா குற்ற உணர்வுடன் தாயின் முந்தானையைப் பிடித்துக் கொண்டாள்.. அதில் இன்னும் அதிகமாக மகிழ்ந்து போனாள் அன்னபூரணி...

"எம்மகளுக்கு எந்நேரமும் அம்மா முந்தானையில தொட்டி கட்டி அதில தூளி விளையாடனும்.. பார்வைக்குத் தான் வளந்திருக்கா.. மத்தபடி பச்சை மண்ணுதான்.." மற்றவர்களிடம் சொன்னாள்...

அவர்கள் அதை ஆமோதிப்பதைப் போல சிரித்தார்கள்.. சுமதி மட்டும் அந்தச் சிரிப்பில் கலந்து கொள்ளவில்லை.. பாவனாவும் வந்து சேர்ந்துவிட.. அவர்கள் நகர்ந்தார்கள்..

“அர்ஜீன்...” ஆனந்தி தம்பியின் அருகில் போய் பேச ஆரம்பித்தாள்...

காவ்யாவுக்கு ஏக்கமாக இருந்தது.. கிட்ட இருந்தும்.. எட்டமுடியாத தொலைவில் இருக்கும் காதலனை அவளால் கடைக்கண்ணால் கூடப் பார்க்க முடியவில்லை.. அருகில் அன்னபூரணி இருக்கிறாள் என்ற நினைவில் அவள் நிலம் பார்த்து நடந்து கொண்டிருந்தாள்...

“சித்தி.. அங்கே நிற்கிறது கார்த்திக்தான..?”

ஆனந்தி கேட்டதும் அவர்கள் அவள் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்தார்கள்.. அங்கே கார்த்திக் யாரோ ஒரு ஜீன்ஸ் அணிந்த அல்ட்ரா மாடர்ன் பெண்ணுடன் தீவிரமாக கைகளை ஆட்டியாட்டிப் போசிக் கொண்டிருந்தான்..

“அது யார் பாட்டி..?” ஆனந்தியின் கேள்விக்கு..

“தெரியலையே ஆனந்தி... உனக்குத் தெரியுதா சுமதி..?” என்று கேள்வியை இடம் மாற்றினாள் அம்புஜம்..

“உலகத்தையே தெரிந்த உங்களுக்கே தெரியலைங்கிறப்ப எனக்கு மட்டும் எப்படித் தெரியும் அத்தை..” குத்தலாகப் பதில் சொன்னாள் சுமதி..

பெண் கேட்டதும் தாவிக் குதித்து சந்தோசம் கொண்டாடி.. காலில் விழுந்து வணங்கிக் கல்யாணம் பண்ணிக் கொடுக்காத காவ்யாவின் வீட்டில் தொடர்ந்து தங்க வைத்திருக்கிற மாமியாரின் மீது அவள் கொண்டிருந்த கோபத்தை இப்படித்தான் இடக்கு மடக்கான பேச்சுக்களில் அவள் வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்..

சுந்தரியும்.. ஆனந்தியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்... சுமதியின் ஜாடைமாடையான குத்தல் பேச்சுக்களை அவர்களும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார்கள்...

“சித்தியாலே இப்படிக்கூட பேச முடியுமா அம்மா..?”

ஆனந்தி ஆச்சரியப்பட்டாள்.. அவளறிந்த சுமதிக்கு இது போல பேச வராது.. அவள் பெருந்தன்மையே வடிவானவள்..

‘அந்தச் சித்தியா.. இது..?!..’

மனதுக்குள் ஆச்சரியப் பட்டபடி கார்த்திக் நின்றிருந்த திசைப்பக்கம் அவள் பார்த்தபோது கார்த்திக்குடன் பேசிக் கொண்டிருந்த பெண் திரும்பினாள்.. அவள் முகத்தைப் பார்த்த ஆனந்தி அதிர்ந்து போனாள்...

“அம்மா.. அவ நேகா...”

## 200

*வான்வெளியின் நிலவினிலே – நீ*
*எனைப்பார்க்க ஆசைகொண்டேன்...*

**கா**ர்த்திக்குடன் நெடுநாள் பழகியவளைப் போல நேகா பேசிக் கொண்டிருந்தது எப்படியென்று ஆனந்திக்கும் தெரியவில்லை.. சுந்தரிக்கும் தெரியவில்லை..

அவர்களுக்குத் தெரியாதது அது மட்டுமல்ல.. நேகா அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பவள் என்பதையும் அவர்கள் தெரிந்து வைத்திருக்கவில்லை...

நேகா மதுரைக்கு வந்ததும்.. அவர்கள் தங்கியிருந்த அதே ஹோட்டலிலேயே தங்கியிருப்பதும் எப்படி அவர்களுக்குத் தெரியாதோ.. அதைப்போல.. வந்தவள்.. அவர்கள் எங்கு செல்கிறார்கள்.. என்ன செய்கிறார்கள் என்று துப்புத் துலக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதும் அவர்களுக்குத் தெரியாது...

நேகா வந்த முதல்நாளிலேயே.. கார்த்திக் அர்ஜீனின் ஒன்று விட்ட தம்பி என்பதைக் கண்டுபிடித்து விட்டாள்.. அதற்கடுத்த இரண்டாவது நாளில் முகம் சிவக்க கார்த்திக் கைத் தேடிவந்த சுமதி.. காவ்யாவின் வீட்டில் பெண் தரத் தயங்குவதைப் பற்றி மகனிடம் சொல்லிக் குமுறியதை காது கொடுத்து கேட்டும் விட்டாள்...

பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும்.. அது பல பேர் உணவருந்தும் ரெஸ்ட்டாரெண்டாக இருந்தால் குரல் தாழ்த்திப் பேச வேண்டும்.. சுமதி இரண்டையும் செய்யவில்லை...

அவள் பக்கம் பார்த்திருந்தாலும் அவர்களைத் தெரிந்த நேகாவைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரிந்திருக் காது தான்.. ஆனால் குரல் தாழ்த்திப் பேசியிருக்கலாம்.. அவள் அதை விட்டுவிட்டு.. அவர்களைப் போன்ற கோடிஸ்வர வீட்டில் பெண் கேட்டும்.. யோசித்துப் பதில் சொல்வதாகக் கூறிவிட்ட காவ்யாவின் குடும்பத்தின்

மமதையைப் பற்றி உணர்ச்சிப் பெருக்குடன் விவரித்து விட்டாள்...

'கதை இப்படியும் போகுதா..'

அது எப்படி.. ஒன்று விட்ட கோடிஸ்வர சகோதரர்கள் இருவரும் ஒரே பெண்ணின் மீது கண்வைத்தார்கள் என்ற ஆச்சரியம் ஏற்படுவதற்குப் பதிலாக...

'அந்தக் காவ்யாவிடம் அப்படி என்னதான் இருக்கிறது என்று இந்த இரண்டு பேரும் அவள் பின்னால் சுற்று கிறார்கள்..?' என்ற எரிச்சல்தான் அவளுக்குள் எழுந்தது..

அவள் கார்த்திக்கைப் பார்த்தாள்.. அர்ஜீனைப் போன்ற கம்பீரத்துடன் இல்லையென்றாலும் அவன் அழகாக இருந்தான்...

'இவன் பெண் கேட்டுமா அவள் வீட்டில் யோசித்துச் சொல்கிறோம் என்று சொல்லி விட்டார்கள்.. அப்படி யென்ன அவள் வீடு கோடிஸ்வரப் பரம்பரையில் கொடி கட்டிப் பறக்கிற குடும்பமா..?'

அவள் மனதில் கோபம் கணன்றது.. காவ்யாவைப் போன்ற மத்தியதர வர்க்கப் பெண்ணொருத்தி.. எப்படித் தான் கோடிஸ்வர சம்பந்தத்தை வேண்டாமென்று தூக்கிப் போடுகிறாளோ என்ற அவளுக்கு கடுப்பாக இருந்தது...

நேகா கார்த்திக்கிடம் வலியப் போய் சிநேகித மானாள்.. சுமதி கிளம்பிப் போனதும்.. காதல் தோல்வியால் கனன்று போன மனத்தை தண்ணீர் விட்டு குளிர்விக்க.. பாரைத் தேடிக் கிளம்பிப் போனவனைத் தடுத்து நிறுத்தி...

“ஹாய்..” என்று கை நீட்டினாள் நேகா...

நீட்டியகையை இறுக்கிப் பிடித்துக் குழுக்கக் கொஞ்சம் கூடத் தயங்கவில்லை கார்த்திக்.. அவனின் அந்தச் செய்கையில் அவனொன்றும் அர்ஜீனைப் போல ‘தெய்வீகக் காதல்’ என்று பிதற்றுபவனில்லை என்று கணித்துவிட்டாள் நேகா.. அவள் இததேழாரம் புன்சிரிப்பு தோன்றியது...

“ஐ ஆம் நேகா.. சென்னையில் இருக்கிற நேகா குரூப் ஆஃப் கம்பெனிஸீன் எம்.டி..” ஆணவமாக அறிமுகப் படுத்திக் கொண்டாள்...

“ஓ.. ஐ ஸீ...” கார்த்திக்கின் கண்கள் விரிந்தன..

அவனுக்கு எதிரே ஜீன்ஸீம்.. ஸ்லீவ்லெஸ் சர்ட்டுமாக.. முடியை விரித்துப் போட்டு நின்றிருக்கும் அந்த அழகி அவ்வளவு உயரத்தில் இருக்கும் கோடிஸ்வரியா..?

இவள் கை பிடித்துக் குழுக்க என்ன தவம் செய்தேன் என்ற நினைவுடன் அவன் அவசரமாக தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான்...

“ஐ ஆம் கார்த்திக்.. திருநெல்வேலியில எனக்குச் சொந்தமா கம்பெனி இருக்கு.. என் டாடியைப் பற்றி அங்கே எல்லோருக்கும் தெரியும்.. அவர் பெயர் சரவணன்...” என்று அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே...

“ஐ நோ.. ஐ நோ.. ரிலாக்ஸ் மிஸ்டர் கார்த்திக்.. நீங்க அர்ஜீனின் தம்பின்னு எனக்குத் தெரியும்...” என்று அவனை அமைதிப் படுத்தினாள் நேகா...

‘இங்கேயும் அர்ஜீனா..’ கார்த்திக் வெறுத்துப் போய் விட்டான்...

அதை அவன் முகபாவத்திலிருந்து யூகித்து விட்ட நேகா தன்பங்குக்கு இன்னும் கொஞ்சம் வெறுப்பேற்றினாள்..

“அர்ஜீன்னு பெயரைச் சொன்னா.. சென்னையில் இருக்கிற அத்தனை பேருக்கும் அது ஆர்ச் கம்யூட்டர் சொலுசனை உருவாக்கிய தி கிரேட் அர்ஜீன்னு தெரியும்.. அவர் உங்களைப் போல அவரோட டாடி பெயரைச் சொல்லி.. இன்னாரோட ‘சன்’னு தன்னை அறிமுகப் படுத்திக்க மாட்டார்.. அவரோட டாடிதான் தன்னை இன்னாரோட டாடின்னு அறிமுகப் படுத்திக்குவார்..”

அப்படியே சரவணன் பேசுவதைப் போல அவள் பேசி வைக்க இந்த வசனங்கள் எல்லாம் இவளுக்கு எப்படித் தெரியுமென்று கார்த்திக் நொந்து நூலாகிப் போனான்...

“அப்படியா.. ரொம்ப சந்தோசம்...”

பட்டுக் கொள்ளாமல் சொல்லி விட்டு.. இதற்கு மேல் இவளுடன் என்ன பேச்சென்று அவன் கழண்டு கொள்ளப் போனான்...

“வெயிட் மிஸ்டர் கார்த்திக்... அதுக்குள்ளே கிளம்பிட்டா எப்படி...?” நேகா சட்டென்று நகர்ந்து கார்த்திக்கை வழி மறித்தாள்...

‘என்னடா இது..? இவ எதுக்காக என் வழியை மறிக்கிறா..? பார்க்க அழகா இருக்காளேன்னு நின்னு பேசினா. அர்ஜீனைப் பத்தின புராணத்தைப் படிக்கிறா..

அவன் புராணத்தைக் கேட்கவா மதுரைக்கு கிளம்பி வந்தேன்னு நொந்து போய் நகரப் போனா.. போகவிடாம என் வழியை மறைக்கிறா இவருக்கு என்னதான் வேணுமாம்..?'

கார்த்திக் நின்று நிதானமாக அவளை ஏற இறங்க பார்த்தான்...

"என்ன அப்படி லுக் விடறிங்க மிஸ்டர் கார்த்திக்.. பெண் கேட்டுப் போன இடத்தில் அவங்க ஓகே சொல்லியிருந்தா விட வேண்டிய லுக்கை இங்கே அள்ளி விடறிங்களா..?" விசமச் சிரிப்புடன் கேட்டாள் நேகா..

'இவளுக்கு இது எப்படித் தெரியும்..?' அயர்ந்து போய் விட்டான் கார்த்திக்...

"இதுக்கும் ஒரு லுக்கா..? எனக்கு இதுவும் தெரியும்.. இதற்கு மேலேயும் தெரியும்.. உங்களை காவ்யா வீட்டில அவாய்டு பண்றதுக்கான ரீசன் என்னன்னு நான் சொல்லவா..?" நேகா மர்மச் சிரிப்புடன் கேட்டபோது...

"என்ன.. என்ன.. சொல்லுங்க.." என்று பரபரத்தான் கார்த்திக்...

"அர்ஜீன்..!"

ஒற்றைச் சொல்லில் அவள் சொன்ன பதிலில் கார்த்திக்கின் புருவங்கள் உயர்ந்தன.. அவன் இதை எதிர் பார்க்கவில்லை என்பதை அவனது திகைத்துப் போன முகமே சொல்லிவிட்டது...

“என்ன..? நம்ப முடியவில்லையா..? நம்பித்தான் ஆகனும்.. நீங்க ஆசைப்பட்ட காவ்யா யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா கார்த்திக்...?”

“யார்...?”

“அர்ஜீனுடைய காதலி..!”

“வாட்..?”

“நீங்க இதையும் நம்பலையா..? காட்..! இப்படியொரு சைல்டிஷா இருக்கீங்களே கார்த்திக்...”

“ஹலோ.. நீங்க அதைச் சொல்லக் கூடாது.. ஹீ ஆர் யு..? என்னவோ வந்தீங்க.. அறிமுகப் படுத்திக்கிட்டிங்க.. நீங்க பாட்டுக்கு என் பேமிலி மேட்டர்க்குள்ள இன்வால்வ் ஆகி என்னென்னவோ சொல்கிறிங்க.. ப்ளீஸ்.. இதைப் போல ‘காசிப்’ பையெல்லாம்.. நான் காது கொடுத்துக் கேட்கிறதில்லை... உங்க அக்கப் போருக்கு வேறு ஆளைப் பாருங்க...”

“வெயிட்.. வெயிட்.. இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு நீங்க இந்த அளவுக்கு கோபப் படறீங்க..? ரிலாக்ஸ் மிஸ்டர் கார்த்திக்...”

“பேசாம போயிருங்க... நான் எப்பவும் நீங்க சொல்கிறதைப் போல சைல்டிஷாவே இருக்க மாட்டேன்.. எனக்குக் கோவம் வந்தா நடக்கிறதே வேற...”

“நீங்க உண்மையை ஃபேஸ் பண்ண முடியாம ஓடி ஒளிந்துக்கறிங்கன்னுதான் நான் சொல்வேன்...”

“எது உண்மை..?”

“அதை நின்று கொண்டே பேசனுமா..? உட்கார்ந்தும் பேசலாமே.. ஏன்னா.. எனக்குக் கால் வலிக்குது...”

நேகா அவனைப் பற்றி அக்கறையில்லாதவளைப் போல.. நீச்சல் குளத்தின் அருகே போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.. கார்த்திக்கைத் திரும்பிக் கூடப் பார்க்காமல்.. குளத்தை ரசிக்க ஆரம்பித்து விட்டாள்..

அவளுக்குத் தெரியும்.. கார்த்திக் விவரம் அறியாமல் அந்த இடத்தை விட்டு நகர மாட்டான் என்று...

அவளது கணிப்பு அர்ஜீன் விசயத்தில்தான் பொய்த்துப் போனது.. கார்த்திக்கின் விசயத்தில் கன கச்சிதமாக நடந்தது.. அவளுக்கு அருகே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான் கார்த்திக்...

“சொல்லுங்க..” என்று சொன்னவனை கேலியாக பார்த்தாள் நேகா...

“யாரோ பேசாம போயிருங்கன்னு சொன்னாங்க.. இப்ப என்னடான்னா அவங்க போகாம என்னிடம் வந்து சொல்லச் சொல்றாங்க.. எதைச் சொல்லச் சொல்றிங்க கார்த்திக்...?”

“உங்களுக்கு எங்க வீட்டு விவரங்களைப் பற்றி எப்படித் தெரியும்..? அர்ஜீன் அண்ணா என் காதலுக்கு உதவி செய்கிறேன் என்று வாக்குக் கொடுத்தவர்...”

“அந்த வாக்கைக் கொடுத்தபோது காவ்யாதான் நீங்க சொன்ன காதலின்னு அவருக்குத் தெரியுமா..?”

நேகாவின் கேள்வியில் கார்த்திக் யோசித்தான்.. அது அர்ஜீனுக்குத் தெரியாதே...

"யெஸ்.. யு ஆர் கரெக்ட்... எங்க வீட்டுக்கு பாட்டியோட பிரண்டுன்னு புதிதாக ஒரு பெண் வந்திருக்கிறாள்.. நான் அவளைக் காதலிக்கிறேன்னுதான் அண்ணனிடம் நான் சொன்னேன்.. அண்ணனும் நேரில் வந்து பார்த்துட்டு.. என் செலக்சன் கரெக்டாயிருந்தா டாடியிடம் பேசுவதாக வாக்குக் கொடுத்தார்..."

"ஓ.. அவர் நேரில் வந்து பார்த்த பின்னாலே உங்க காதலுக்கு ஹெல்ப் பண்ணினாரா...?"

"இல்லையே..."

"அதுதான் அர்ஜீன்..."

நேகா வியந்தாள்.. எவ்வளவு கச்சிதமாக வாக்குக் கொடுத்திருக்கிறான்..! தம்பி சொன்ன பெண்ணை நேரில் பார்த்து அவன் தேர்வு சரியானதுதானா என்று உறுதி செய்துவிட்டு.. அதுசரியாக இருந்தால் மட்டுமே அவன் உதவி செய்வதாக கூறியிருக்கிறான்..

இந்த வாக்கு சாதுர்யம் யாருக்கு வரும்..? இப்போது அவன் வாக்குத் தவறிவிட்டான் என்று கார்த்திக்கே சொல்ல முடியாதே...

"வெரி கிளவெர் மேன்..!" நேகா ரசித்துச் சொன்னாள்..

"இதில் நீங்க அப்ரிசியேட் பண்ண என்ன இருக்கு..?" கார்த்திக் எரிச்சல் பட்டான்...

வழியோடு போனவனை இழுத்துப் பிடித்து உட்கார வைத்தது.. அர்ஜீனைப் பற்றிய புராணத்தை படிப்பதற்காகவா..?

“நிறைய இருக்கு மிஸ்டர் கார்த்திக்.. அர்ஜீன் உங்க ஊருக்கு வந்திருப்பார்.. காவ்யாவை பார்த்திருப்பார்.. அவரோட காதலியை நீங்க செலக்ட் பண்ணியிருந்தா.. அந்த செலக்சன் சரின்னு ஒப்புக் கொள்ள அவரென்ன முட்டாளா..? அவரோட காதலியை உங்களோடு சேர்த்து வைத்து வாழ்த்துச் சொல்ல அவரென்ன தியாகியா..?”

“நோ மிஸ் நேகா..! அவங்க இரண்டு பேருமே.. ஒருவரையொருவர் தெரிந்ததைப் போலக் காட்டிக் கொள்ளவேயில்லையே.. எனக்கென்னவோ நீங்க தெரியாம பேசறிங்கன்னுதான் தோணுது..”

‘எனக்கா தெரியாது..?’ நேகாவின் மனம் புகைந்தது..

அவர்கள் இருவரையும் பிரித்து வைத்து.. அர்ஜீனின் முகத்தில் விழிக்கக் கூடாதென்று பிறந்த ஊரை விட்டு காவ்யாவை திருநெல்வேலிக்கு ஓட வைத்தவளாயிற்றே அவள்..! அவளுக்கா எதுவும் தெரியாது..? அவள் அனைத்தையும் அறிந்தவள் அல்லவா..?

அதை கார்த்திக்கிடம் அவளால் சொல்ல முடியுமா..? அதனால்

“உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்..” என்று மட்டும் சொன்னாள் அவள்..

அந்த வார்த்தைகளில் கார்த்திக் ரோசப்பட்டுப் போனான்...

“நான் அவருடைய தம்பி.. நீங்க தேர்ட் பெர்சன்.. எனக்குத் தெரியாதது உங்களுக்கு மட்டும் தெரிந்து விடுமோ..?”

“நான் தேர்ட் பெர்ஸன்னு யார் சொன்னது..”

நேகாவின் நிதானமான கேள்வியில் கார்த்திக் புரியாத பார்வை பார்த்தான்...

“நீங்க எப்படியோ.. அப்படித்தான் நானும் கார்த்திக்..”

“புரியலை...”

“அதாவது.. நீங்க எப்படி காவ்யாவின் மேல் ஆசைப் பட்டு அவளைப் பெண் கேட்டிங்களோ.. அப்படித்தான் நானும் அர்ஜீனை மேரேஜ் பண்ணிக்கனும்னு ஆசைப் பட்டேன்.. உங்க விசயத்தில் காவ்யாவின் வீட்டிலேயே ஒப்புக்கலை.. எனக்கு அப்படியில்லை.. அர்ஜீனின் டாடிக்கு இதில் பரிபூர்ண சம்மதம்.. என்டாடியும்.. அர்ஜீனோட டாடியும் சேர்ந்து உட்கார்ந்து பேசி மேரேஜை முடிவு பண்ணினாங்க...”

நேகா சொல்லச் சொல்ல.. அவள் கண்களில் தெரிந்த மயக்கத்தில் கார்த்திக் வெறுத்துப் போய் விட்டான்.. கடைசியில் இந்த கோடிஸ்வரி அர்ஜீனின் மீது ஆசை கொண்டவளா..?

“ஈஸிட்.. எனக்கு இது தெரியாதே.. எனிவே மை ஹார்ட்டி கன்கிராஜீலேசன்ஸ்...”

கார்த்திக் வாழ்த்துச் சொல்ல.. இவனென்ன லூஸா என்ற தினுசில் அவனை முறைத்துப் பார்த்தாள் நேகா...

“நடக்க முடியாத மேரேஜீக்கு எதுக்காக கங்கிராஜீலேசன்ஸ் சொல்கிறிங்க மிஸ்டர் கார்த்திக்..?”

“நடக்க முடியாதா..? ஏன்..?”

“அதைத்தானே இவ்வளவு நேரமாக சொல்லிக் கிட்டிருக்கேன்.. அர்ஜீன் காவ்யாவை காதலிக்கிறார்.. அதனால என்னை மேரேஜ் பண்ணிக்க மாட்டேன்னு சொல் லிட்டார்..” தோல்வியின் வலியோடு சொன்னாள் நோக...

“அப்ப.. நிஜமாவே அவங்க இரண்டு பேரும் லவ்வர்ஸா..?”

“யெஸ்.. ஒரு மனத்தாங்கல்.. பிரிந்து நிற்கிறாங்க..”

“அதனால்தான் காவ்யா என் காதலுக்கு பதில் சொல்லலையா..?”

“ம்ம்ம்.. அர்ஜீனும் என்னை அவாய்டு பண்றார்.. வி ஆர் இன் ஸேம் போட் மிஸ்டர் கார்த்திக்...”

ஒரே படகில் சவாரி செய்து என்ன ஆகப் போகிறதென்று பெருமூச்சு விட்டான் கார்த்திக்.. அதுவும் அந்தப் படகு.. ஓட்டைப் படகு..

“நீங்க நினைத்தால் நம்ம இரண்டு பேரின் ஆசையும் நிறைவேறும் மிஸ்டர் கார்த்திக்...” நேகா கார்த்திக்கின் முகத்தை கூர்மையாக பார்த்தபடி சொன்னாள்...

“எப்படி..?” கார்த்திக்கிற்கு விளங்கவில்லை...

‘இவனுக்கு எல்லாத்தையும் விளக்கிக்கிட்டு இருக்கனும்.. தத்தி..!’

நேகா பல்லைக் கடித்தாலும்.. அப்போதைக்கு அந்த 'தத்தி'யை விட்டால் அவள் நினைத்ததை செய்து முடிக்க வேறு ஆள் கிடைக்காது என்பதினால் பொறுமையாக அவனுக்கு வரைபடம் வரைந்து விவரம் சொல்லிக் கொடுக்காத குறையாக அவன் மனதில் ஏறுமாறு ஓதி முடித்தாள்...

## 201

*மீனாட்சி ஆட்சி செய்யும் மதுரை மகளின் மனதில்..*
*நானாட்சி செய்திடவே ஆசைகொண்டேன்...*

"**கா**ர்த்திக் நீங்களோ காவ்யா மேல ஆசைப் படறிங்க.. நானோ அர்ஜீனின் மேலே ஆசைப்படறேன்.. நம்ம ஆசை நிறைவேறாம போகிறதுக்கு யார் காரணம்..?"

"யார்..?"

"காவ்யாதான் காரணம்..."

"ஏன்.. அர்ஜீன் காரணமில்லையா..?"

'இதிலெல்லாம் விவரமாக இரு..' மனதுக்குள் கார்த்திக்கைத் திட்டித் தீர்த்தாள் நேகா...

என்னதான் காவ்யா கார்த்திக்கை வேண்டா மென்று தூக்கியெறிந்தாலும் அவளை கார்த்திக் ஒரு

சொல் சொல்ல விடாததில் அவளுக்குள் ஆத்திரம் கிளர்ந்தது...

இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு புன்னகை அரசியானாள்.. அவளுக்கு காரியம் நடக்க வேண்டுமே.. கார்த்திக்கை பகைத்துக் கொண்டால் அது நடக்குமா..?

“இரண்டு பேருமே காரணம்தான்..?”

“அப்ப அதைச் சொல்லுங்க.. காவ்யாவை மட்டும் ஏன் குறைசொல்கிறிங்க..? அர்ஜீன் அண்ணா அவ மனதை கலைத்திருக்கலாமில்லையா..?”

“ஓ.கே.. ஓ.கே.. லீவ் இட்.. நானும் காவ்யாவின் பெயரை மட்டும் சொல்லியிருக்கக் கூடாதுதான்.. பட் இப்ப பிராப்ளம் அது இல்லை மிஸ்டர் கார்த்திக்.. நீங்க காவ்யா மேல ஆசைப்படறிங்கதானே...”

“யெஸ்...”

“அப்படின்னா.. அவளை மேரேஜ் பண்ணிக்கிற வழியைப் பாருங்க.. உங்க பிராப்ளமும் ஓவர்.. என் பிராப்ளமும் ஓவர்...”

“கேட்க நல்லாத்தான் இருக்கு.. ஆனா.. காவ்யாவின் வீட்டில பெண் கேட்டதுக்கு அவங்க யோசிக்கனும்னு சொல்லிட்டாங்களாமே..”

“அப்படிச் சொல்லிட்டா நீங்க விட்டு விடுகிறதா..?”

“வேற என்ன செய்யனும்கறிங்க..? விருப்பமில்லாத பெண்ணைக் கட்டாயப் படுத்தி மேரேஜ் பண்ணிக்கனும்னு

சொல்கிறிங்களா..? அது சரியில்லைங்க.. எனக்கு அது பிடிக்காது..”

கார்த்திக் முகத்தில் அடித்ததைப் போல பேசி வைக்கவும் நேகாவுக்கு என்னவோ பேல ஆகிவிட்டது.. அவளுக்கு முகத்தை எங்கே போய் வைத்துக் கொள்வ தென்று தெரியவில்லை.. கார்த்திக் பேசிய விதத்தில் அவன் அவ்வளவாக விவரமில்லாத பணக்கார வீட்டு வாலிபன் என்று மட்டுமே அவள் நினைத்திருந்தாள்.. அதற்கும் மேலாக நல்ல குடும்பத்தைச் சேர்ந்த.. பண்பாடான கோடிஸ்வர வாலிபன் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை...

இவனை எப்படித்தான் மடக்குவது என்ற தீவிர ஆலோசனையில் அவள் ஆழ்ந்தாள்.. கடைசியாக மனதில் தோன்றிய வார்த்தைகளை அவனிடம் சொல்லி விடலாம் என்று நிமிர்ந்தாள்..

‘இதற்கு இவன் மசியலைன்னா வேலைக்காகாதுன்னு கிளம்பிவிட வேண்டியதுதான்.. இப்படியுமா ஒருவன் இருப்பான்...?’

நேகா கார்த்திக்கின் முகத்தை ஆழ்ந்து பார்த்தபடி பேச ஆரம்பித்தாள்...

“நீங்க சொல்கிறதைப் போல இருந்தா உங்க காதலில் தோற்றுவிட்டு உட்கார வேண்டியதுதான்.. காவ்யாவை அண்ணின்னு கூப்பிட வேண்டிய நிலை வந்தால் பரவாயில்லையா..?” அவள் கேட்க...

“அண்ணியா..?” என்றவனின் முகம் விளக்கெண்ணையைக் குடித்து விட்டதைப் போல மாறியது..

நேகாவுக்கு அதுதானே வேண்டும்..? தூண்டிலில் மீன் சிக்கி விட்ட உற்சாகத்துடன் அவள் அடுத்த காயை நகர்த்தினாள்...

“பின்னே..? அண்ணனின் வொய்ஃபை அண்ணின்னு கூப்பிடாம அக்கான்னா கூப்பிடுவாங்க...?”

“என்னங்க இப்படியெல்லாம் சொல்கிறிங்க..?”

“நீங்க கையைக் கட்டிக்கிட்டு நின்னா அதுதான் நடக்கும் கார்த்திக்.. அதுக்குப் பதிலா ஆண்பிள்ளையா லட்சணமா உங்க காதலை நிறைவேத்திக்கிற வழியைப் பாருங்க...”

“அதுதான் எப்படிங்க..”

“சிம்பிள்.. உங்க அம்மாவும் பாட்டியும் காவ்யாவின் வீட்டில்தான தங்கியிருக்காங்க..?”

“ஆமாம்..?”

“நீங்க அவங்களைப் பார்க்கிற சாக்கில் அங்கே போவீங்கதானே...”

“அடிக்கடி போக மாட்டேன்.. ஒருநாள் விட்டு ஒருநாள் போவேன்...”

“ஏன்..?”

“அவ அண்ணன் கோபக்காரர்... அவளோட அப்பாவும்.. அண்ணனைப் போலவே முறைச்சு வைக்கிறார்..

போதாக்குறைக்கு அவங்க வீட்டில வந்திருக்கிற உறவுக்காரங்களெல்லாம்.. வீச்சருவாள்.. வேலுக்கம்புன்னு பேசிக்கிட்டிருக்காங்க.. எதுக்கு வம்புன்னு நான் அவங்க வீட்டுப் பக்கம் அதிகம் போறதில்லை...”

“வீராதி வீரன்தான்..” இகழ்ச்சிப் புன்னகையுடன் சொன்னாள் நேகா...

“ஏங்க.. என் வீரத்தை டெஸ்ட் பண்ண இதுதான் வழியா..? நான் திருநெல்வேலிக்காரன்ங்க.. வீச்சருவாளும்.. வேலுக்கம்பும் எங்க ஊரிலயும் உண்டு.. கட்டபொம்மன் பிறந்த சீமைங்க.. எங்க சீமை.. களத்தில இறங்க பயப்பட மாட்டோம்.. அதுக்காக வலியப் போய் வம்பை விலை கொடுத்து வாங்கி என் வீரத்தை புரூவ் பண்ணச் சொல்கிறிங்களா..?”

கார்த்திக் தான் அப்படியொன்றும் அப்பாவியில்லை யென்பதை நிருபித்தான்.. அதில் விழி விரித்த நேகா.. ‘பரவாயில்லையே.. இவன் கொஞ்சம் விவரமானவனாகத் தான் இருக்கிறான்’ என்று நினைத்துக் கொண்டாள்...

“ஆனாலும் கார்த்திக்.. உங்க காதல் நிறைவேறனும்னா.. நீங்க காவ்யாவின் வீட்டுக்கு போய் வரத்தான் வேணும்..”

“அதுதான் எதுக்கு..? எப்படியும் அவ எங்க வீட்டுப் பெண்களோட கோவில்.. பொருள்காட்சின்னு சுற்றிப் பார்க்க வெளியே வரத்தான் போறா.. நான்தான் அங்கே போய் அவங்க கூட ஜாயின் ஆகிக்குவேனே..”

"கெட்டிக்காரர்தான்.. பட்.. இந்தக் கெட்டிக்காரத் தனத்தை வைத்து காவ்யாவை 'சைட்' வேணும்னா அடிக்கலாம்.. கைபிடிக்க முடியாது..."

"அதுக்கு என்னதான் செய்யனும்கறிங்க.. அவ வீட்டுக்குள்ளே போய் வந்தா மட்டும். என் பெண்ணை மேரேஜ் பண்ணிக்கன்னு அவ வீட்டில கூப்பிட்டுப் பெண் கொடுத்துரப் போறாங்களா..?"

"ஏன் கொடுக்க மாட்டாங்க..? நீங்களும் காவ்யவும்.. ஒரே ரூமில இருக்கிறதை அவங்க சொந்த பந்தம் முன்னாலே பார்த்தா நீங்க கேட்காமலே பெண் கொடுக்க மாட்டாங்களா..?"

அலட்டிக் கொள்ளாமல் நேகா கேட்ட கேள்வியில்..

"என்னது..?" என்று அதிர்ந்து விட்டான் கார்த்திக்...

"ஊஹீம்.. இந்த வேலையெல்லாம் எனக்குப் பிடிக்காது.." உடனடியாக மறுக்கவும் செய்தான்...

"பாருங்க கார்த்திக்.. இதை விட்டா நமக்கு வேறு வழியில்லை.. நானும் அவங்களை ஃபாலோ பண்ணிக் கிட்டுத்தான் இருக்கிறேன்.. ஈவினிங் வெளியே வந்தா.. மிட் நைட்டை தொடற நேரத்திலதான் வீடு பேய் சேருகிறாங்க.. அந்த டயத்தில நீங்க உங்க அம்மாகூட ஒட்டிக்கிட்டுப் போயிட்டிங்கன்னா.. காவ்யாவோட ரூமுக்குள்ளே கப்புன்னு நுழைந்து விடலாம்.. அவளுக்குத் தெரியாம கட்டிலுக்கடியில் ஒளிந்துக்கலாம்.. விடிந்து எழுந்ததும்.. அவங்க வீட்டில காபி காப்போடு காவ்யாவை

தேடி வருவாங்க.. ரூமுக்குள்ள அவ மட்டும் இருக்க மாட்டா.. நீங்களும் சேர்ந்து இருப்பீங்க.. அவங்க உங்க இரண்டு பேரையும் சேர்த்துப் பார்த்துட்டு சப்தம் போடுவாங்க...”

“அவ அண்ணன் அருவாளைத் தூக்குவார்...”

“அதை உங்க கழுத்தில் இறக்கற வரைக்கும் உங்க பாட்டியும்.. அம்மாவும் பார்த்துக்கிட்டு இருப்பாங்களா..? சண்டைக்கு போயிர மாட்டாங்க..? அடுத்து என்கொயரி நடக்கும்.. ஜட்ஜ்மென்ட்டும் கிடைக்கும்.. இப்ப என்ன நடந்து போச்சு.. வர்ற மூகூர்த்ததில் இவங்களுக்கு மேரேஜ் பண்ணி வைத்து விடலாம்ன்னு உங்க பாட்டி சொல்வாங்க.. அவங்க வீட்டில இப்ப மறுப்பு சொல்ல முடியுமா..? ஓகே சொல்லிடுவாங்க.. அப்புறமென்ன..? டும்.. டும்.. தான்..”

“என்னவோ போங்க.. அப்படியே நாவலைப் படித்ததைப் போலவே இருக்கு.. இப்பக்கூட எங்க அம்மா ஒரு நாவலைப் படித்துக்கிட்டு இருக்காங்க.. ‘பூமிக்கு வந்த நிலவு’ன்னு பெயர்.. அதில ஹீரோவும்.. ஹீரோயினும் இன்னொஸென்ட்.. எந்த விதப் பிளானும் பண்ணாமலே... அதைப் பற்றி எதுவும் தெரியாமலே.. தெரியாத்தனமா ஒரே ரூமில தூங்கிருவாங்க.. ஒருவேளை நீங்க அந்த நாவலைப் படிச்சீங்களோ..?”

“எனக்குப் பிளான் போட எந்த நாவலின் உதவியும் தேவையில்லை...” நேகா அலட்சியமாக உதட்டைச் சுழிக்க..

‘அதானே.. இவ ஊருக்கே பிளான் போட்டுத் தருவாளே..’ என்று நினைத்துக் கொண்டான் கார்த்திக்...

அவனுக்கு என்ன தெரியும்.. அவள் அதைவிட அதிகமாகவே திட்டம் தீட்டி செயல்படுத்துவாள் என்பது.. அவள் போட்ட.. போடும்.. திட்டங்களைப் பற்றி அறிந்தால் அவன் அவளுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க மாட்டானே... தலை தெறிக்க ஓடிவிடுவானே..

“எனக்கென்னவோ இது சரியாப் படலைங்க..” அப்போதும் அவனுக்கு அவள் திட்டத்திற்கு உடன்படுவதில் விருப்பமில்லைதான்..

“அப்படின்னா.. நீங்க ஆசைப்பட்ட பெண்ணை ‘அண்ணி’ன்னு கூப்பிட வேண்டி வரும்.. அது சரியாய் வருமா..?”

“ஊஹீஹீம்...”

“முடியாதில்ல..? அப்படின்னா நான் சொன்ன வேலையைச் செய்துதான் ஆகனும்...”

“இது தப்பில்லையா..?” கார்த்திக் குழம்பினான்..

‘நீ தப்புப் பண்ணிட்டாலும்...’ நேகாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது...

அவளைப் போல நினைக்காமல் எதிலும் நியாய அநியாயம் பார்க்கும் கார்த்திக்கை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலைவெறி அவளுக்குள் கிளர்ந்தது.. பாவம் கார்த்திக்.. அம்புஜத்தின் கண்டிப்பிலும்... சுமதியின் செல்லத்திலும்.. சரவணனின் கண்காணிப்பிலும்

வளர்ந்தவன்.. அவனுக்கு இது போன்ற செய்கைகள் எல்லாம் சுட்டுப் போட்டாலும் வராது.. நேகா சொல்லிக் கொடுத்தால் மட்டும் வந்து விடுமா..?

“எதுக்கும் யோசிக்கிறேன்...”

கார்த்திக் யோசனையுடன் எழுந்து கொள்ள முயன்ற போது...

“இருங்க நானும் வரேன்...” என்று அவனுடன் அட்டையாக ஒட்டிக் கொண்டாள் நேகா...

கார்த்திக்கின் சலனப்பட்ட அந்த மனநிலையில் அவனைத் தனியே விடக்கூடாது என்பது அவளது எண்ணம்.. அவன் மதில் மேல் பூனையாக இருந்தான்.. எந்த நேரமும் அம்புஜம் பாட்டியின் வளர்ப்புப் பக்கம் குதித்து விடும் அபாயம் இருந்ததால்.. அவனைக் கரைப்பாய் கரைத்து தனது போதனைப் பக்கம் குதிக்க வைக்க வேண்டிய பொறுப்பு நேகாவின் தலைக்கு மேலே இருந்ததால்.. அவள் கார்த்திக்கைத் தன் கட்டுப் பாட்டுக்குள்.. வைத்திருக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளனாள்..

“நீங்க எங்கே வர்றீங்க..?” எரிச்சல் பட்டான் கார்த்திக்...

அவனுக்கு தனிமை வேண்டியிருந்தது.. காவ்யா அவனுக்கு கிடைக்க மாட்டாள் என்பதை ஏற்றுக் கொள்ள அவனது மனதை தயார் படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.. அவன் குடும்பத்தை மதிப்பவன்..

அதன் கண்ணியம் குறையும் வகையில் நடந்தறியாதவன்.. ஆதலினால் நேகா சொல்வதை ஏற்றுக் கொள்வதா.. வேண்டாமா என்று யோசிக்க வேண்டியிருந்தது...

இதற்காக அவன் எழுந்தால்.. யாரைத் தவிர்க்க நினைக்கிறானோ.. அவளே.. அட்டை போல ஒட்டிக் கொண்டு கூடவே எழுந்தால் அவனுக்கு எப்படியிருக்கும்..?

"ஏன் கார்த்திக்..? நான் உங்க பிரண்ட்தானே.. நான் உங்க கூட வரக்கூடாதா..?" கொஞ்சினாள் நேகா..

"ஹலோ.. உங்களைப் பார்த்து முழுதாய் இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை.. அதற்குள்ளே நீங்க எப்படி எனக்கு பிரண்ட் ஆவிங்க..? என் பிரண்ட்ஸெல்லாம் வேற கேட்டகிரிங்க.."

இதைக் கேட்டு ரோசப்பட்டு விலகிப் போக நேகா என்ன முட்டாளா..? அவள் மனதுக்குள் அதைக் குறித்துக் கொண்டாள்.. அதுதானே அவள் வழக்கம்..? வன்மம் வைத்துப் பழிவாங்குவதில் அவளுக்கு நிகர் அவளேதானே.. உடனடியாக செயல்பட முடியாவிட்டால் அமைதி காத்து எதிராளியை திசை திருப்பி விடுவது அவளுக்கு கை வந்த கலையாயிற்றே...

'என் பிரண்ட்ஸீம் வேற கேட்டகிரிதாண்டா.. உன்னைப் போல 'சாம்பார்'களுடன் நான் நின்று கூட பேச மாட்டேன்.. ஏன்.. திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்.. நேரம்.. நான் ஆசைப்பட்டவன், ஆசைப்படுகிற பெண் மேலே.. நீ ஆசைப்பட்டிருக்கிறாய்.. அந்த ஆசைகளின் குழப்பங்களாலேதான் உன்னிடம் நான் வந்து பேச

வேண்டியிருக்கிறது.. இல்லைன்னா உன் பக்கம் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டேன்.. ஆனானப்பட்ட அர்ஜீனையே அவனுடைய ஹீரோ இமேஜிற்காக செலக்ட் பண்ணி வைச்சிருக்கிறவதான்.. இந்த நேகாடா.. நீயெல்லாம் எனக்கு ஜீஜீபி.. யாருன்னு கேட்டாலே.. நீ உன் அப்பன் பெயரைச் சொல்லி அடையாளம் சொல்கிற.. உன் கூடல்லாம் பிரண்ட்ஷிப் வைத்து எனக்கென்ன ஆகப் போகுது..? நான் நேகாடா..'

மனதுக்குள் அவனை வசைமாரி பொழிந்தபடி.. வெளியே புன்னகை அரசியாக தன் முப்பத்தியிரண்டு பல்லையும் காட்டி.. 'ஈ' யென்று சிரிக்க முயன்றாள் நேகா.

சகிக்கலை என்று நினைக்க முடியாதபடி அந்த சிரிப்பு அவளுக்கு அழகு சேர்த்ததில் அவளை ஊன்றிப் பார்த்தான் கார்த்திக்...

'அழகாத்தான் இருக்கா..' அவன் மனம் எதிர்ப்பை கை விட்டது...

"எதிரிக்கு எதிரி நண்பன்னு நீங்க கேள்விப் பட்டதில்லையா மிஸ்டர் கார்த்திக்..?"

"யார் என்னோட எதிரி..? அர்ஜீன் அண்ணனா.. இல்லை காவ்யாவா..? இரண்டு பேருமே எனக்கு எதிரியில்லைங்க.."

கார்த்திக் கறாராய் சொல்லிவிட.. சிரித்தும் இவனை மயக்க முடியவில்லையே.. என்று மண்டை காய்ந்து போனாள் நேகா...

‘இவன் அநியாயத்திற்கு நல்லவனாய் இருந்து தொலைக்கிறானே...’

எப்படிப் பேசினால் அவனைக் கரைக்க முடியும் என்று யோசனை செய்தபடி.. அதற்கும் சிரித்து வைத்தாள் நேகா.. அந்தச் சிரிப்பில் கவரப்பட்ட கார்த்திக்...

“நீங்க சிரிக்கும் போது அழகாய் இருக்கறிங்க..” என்று சொல்லி விட்டான்..

‘அட..! இவனுக்கு இப்படிப் பேசக் கூடத் தெரியுமா..?’ நேகா ஆச்சரியப்பட்டுப் போனவளாள் ஒயிலாக விழிகளை சுழற்றி..

“அப்ப.. சிரிக்காதப்ப நான் அழகாயில்லைன்னா சொல்றீங்க..” என்று கேட்டாள்..

“யார் சொன்னது..? அப்ப இதைவிட அழகாயிருக் கீங்க..” கார்த்திக் ஜொள்ளினான்...

“ம்ஹீம்.. இது உங்க அண்ணன் கண்ணுக்குத் தெரியலையே..”

“அதுதான் எனக்கும் ஆச்சரியமாயிருக்கு...”

இயல்பாக பதில் சொன்ன கார்த்திக்கை அந்தப் பதிலினாலேயே நேகாவிற்கு மிகவும் பிடித்துப் போனது.. அவள் தனது மனதிலிருந்த போட்டுத் தாக்க வேண்டியவர்களின் பட்டியலில் இருந்து உடனடியாக அவன் பெயரை நீக்கினாள்.. அவர்கள் பேசியபடியே காபி சாப்பிட்டார்கள்.. மதியம் லன்ச் சாப்பிட்டார்கள்..

மாலையில் டிபன் சாப்பிட்டார்கள்.. பொருள் காட்சியைச் சுற்றிப் பார்க்கப் போனார்கள்...

காவ்யாவின் நிராகரிப்பை மறந்து அவனும்.. அர்ஜீனின் நிராகரிப்பை மறந்து அவளும் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்த அந்தத் தருணத்தில்தான் ஆனந்தியும்.. சுந்தரியும் அவர்களைப் பார்த்து விட்டார்கள்..

# 202

*சொல்லில் அடங்கா ஆசைகளை..*
*சொல்லிவிடவே ஆசைகொண்டேன்...*

**கா**ர்த்திக்கும் நேகாவும் அவர்களைப் பார்க்க வில்லை.. நேகா கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு..

“ஓகே கார்த்திக்.. ஸீ யு டுமாரோ..” என்று சொல்லி விட்டு கையசைத்தபடி போய்விட்டாள்...

அம்புஜம் வகையறா எங்கேயிருக்கிறார்கள் என்று கேட்பதற்காக செல்போனை காதுக்கு கொடுத்த கார்த்திக்..

“அவகூட உனக்கென்னடா பேச்சு..?” என்ற சுந்தரியின் கோபக்குரலில் திரும்பினான்...

“பெரியம்மா..? அக்கா...!”

“இப்பத்தான் பெரியம்மாவையும்.. அக்காவையும் உனக்கு அடையாளம் தெரிகிறதா..?”

“யார் சொன்னது..? எப்பவுமே தெரியுமே..”

“இவ்வளவு நேரமா அவகூட கடலை வறுத்துக்கிட்டு இருந்தியே.. அப்போ உனக்குத் தெரியலையா..?” ஆனந்தி முறைத்தாள்..

“அக்கா.. கடலை வறுக்கிறதை நீங்க எப்படிக் கண்டு பிடிச்சீங்க..?” கார்த்திக் சிரித்தான்..

“அடிதான் வாங்கப் போற படவா..!” ஆனந்தி கையை உயர்த்தி தம்பியை அடிக்கப் போவதைப் போல மிரட்டியபடி...

“ஆமாம்.. அவளை உனக்கு எப்படித் தெரியும்..?” என்று விசாரித்தாள்...

“இது உங்களுக்குத் தெரியாதாக்கா..? நாம தங்கியிருக்கிற அதே ஹோட்டலில்தான அவளும் தங்கியிருக்கா..?”

கார்த்திக்கின் கேள்வியில் தூக்கிவாரிப் போட்டவர்களாக சுந்தரியும் ஆனந்தியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்...

“அம்மா..” ஆனந்தி யோசனையாக அழைத்தாள்..

“உன் டாடிக்கு தகவல் போயிருக்கும்..” என்றாள் சுந்தரி...

“அதையேதான் நானும் யோசிக்கிறேன்...” ஆனந்தி சொன்னாள்...

“பெண்ணாடி இவ..?”

“நான் அப்படிச் சொன்னேனா..? இதோ நிற்கிறான் பாரு கார்த்திக்.. இவன் தான் அப்படி நினைத்துக்கிட்டு இந்நேரம் வரைக்கும் கடலை வறுத்துக்கிட்டு இருந்தான்..”

“இவனை எப்படிடீ அவ பிடிச்சா..?”

“வலை போட்டு பிடிச்சிருப்பா.. போங்கம்மா நீங்க வேற அவளே நம்மை ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்திருக்கிறா.. நாம தங்கியிருக்கிற ஹோட்டலில் தங்கி கண்காணிக்கிறவ கார்த்திக் நம்ம சொந்தக்காரன்னு கண்டு பிடிக்க மாட்டாளா..?”

“எங்கேயிருந்து வந்து யாரை பிரண்ட் பிடிக்கிறான்னு பாரு...”

“அவ எதையும் செய்வா...”

சுந்தரியும் ஆனந்தியும் எதற்காக இந்த அளவுக்கு கவலைப்பட்டுப் பேசிக் கொள்கிறார்கள் என்று கார்த்திக்கிற்கு விளங்கவில்லை...

“எதுக்கு பெரியம்மா இப்படிக் கவலைப்படறிங்க..? அவ என்ன லேடி டானா..? அண்ணனுக்கு பெரியப்பா பார்த்து வைத்திருக்கிற பெண்தானே...” என்று கேட்டு விட்டான்...

“அப்படி அவ சொன்னாளா..?” சுந்தரி கொதித்தாள்..

“யெஸ்...”

“இதை உன் அண்ணனிடம் சொல்லி விடாதே.. உன்னை உண்டு இல்லைன்னு பண்ணி விடுவான்..”

“ஏன்..? அவ பார்க்க அழகாத்தானே இருக்கா..”

“அப்ப... நீ கட்டிக்கடா... உன் அண்ணனை விட்டுவிடு...”

“நானா பிடித்து வைத்திருக்கிறேன்...?”

கார்த்திக் உரக்கச் சிரித்தான்.. அந்தச் சிரிப்பில் அவனைப் பார்த்துவிட்ட அம்புஜமும்.. சுமதியும் அவர்களுக்கு அருகேவந்தார்கள்.. அன்னபூரணி காவ்யாவுடன் தேங்கி நின்று விட்டாள்.. கார்த்திக்கிற்கு காவ்யாவை பெண் கேட்ட தினத்திலிருந்து அவள் அப்படித்தான் செய்கிறாள் என்பதை கோபத்துடன் நினைவு கூர்ந்தாள் சுமதி...

“என்னைச் சொல்லனும்..” வாய்விட்டு முணுமுணுத்தாள்...

“என்னம்மா..?” அம்புஜம் வினவினாள்...

“உங்க மகன் யோசிச்சுப் பேசலாம்ன்னார்.. நான் தான் அவசரப்பட்டு வாய் விட்டுட்டேன்.. இப்பப் பாருங்க.. இவங்களுக்கு கிரிடம் வைத்ததைப் போல ஆகி விட்டது..”

“விடு சுமதி.. அவங்க வீட்டுப் பழக்கம் அப்படியா யிருக்கலாம்.. நாமளா எதையும் நினைத்துப் பேசிரக் கூடாது”

“நீங்க இப்படித்தான் சொல்வீங்கத்தை.. அன்னபூரணி உங்களுக்கு வசிய மருந்தை வைச்சிட்டா..”

“ஆமா.. உனக்கு விட்டுட்டு.. எனக்கு மட்டும் வைச்சிட்டா.. சிரிப்பு மூட்டாம பேசாம வா சுமதி.. அங்கே கார்த்திக் வந்திருக்கான்...”

காவ்யாவின் பக்கத்தில் நின்ற பாவனாவிடம் எதையோ கேட்கும் சாக்கில் அர்ஜீனும் அங்கேயே நின்று விட்டான்.. அதில் அன்னபூரணியின் மனதுக்கு ஆறுதல் ஏற்பட்டது.. வந்திருக்கும் விருந்தாளிகளுக்கு ஊரைச் சுற்றிக் காட்ட அவள் வந்தால்.. அவர்கள் அவளை விட்டு விட்டு.. தனியாக ஒன்று சேர்ந்து குடும்பமாக கும்மியடித்ததில் அவளுக்குள் தனிமைப் பட்டுப்போன உணர்வு வந்தது...

‘இதுக கூட்டுச் சேர்த்து கும்மியடிக்கிறதுக்கு என்னை எதுக்காக துணைக்கு கூப்பிடனும்...?’

தனிமைப் படுத்தப்பட்ட மனநிலையில் இருந்த வளுக்கு.. அர்ஜீன் அவனுடைய குடும்பத்தினருடன் பேசப் போகாமல்.. அவர்களுக்கு அருகில் நின்று.. அவர்களுடன் பேச ஆரம்பித்ததை பிடித்துப் போய் விட்டது..

“ஏண்டா கார்த்திக் இவ்வளவு நேரம்..?” சுமதி கேட்டாள்..

“இவன் அப்பவே வந்துட்டான் சித்தி...” ஆனந்தி போட்டுக் கொடுத்தாள்..

“அப்பவே வந்தால் நம்மளைத் தேடிக்கிட்டு வர வேண்டாமா..?”

“ஐயா எப்படித் தேடி வருவாராம்..? அவர்தான் கூடவந்த பொண்ணுகிட்ட கடலை வறுத்துக்கிட்டு இருந்தாரே...”

“யாருடா அந்தப் பெண்..?”

“ம்மா.. எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை.. அண்ணனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் தான் சம்பந்தமிருக்கு...”

“கார்த்தி.. சுமதி கேட்டா ஒழுங்கா பதில் சொல்லு.. எதுக்காக அர்ஜீன் பெயரை இழுக்கற..?”

“என்மேல கோபப்பட்டா எப்படி பெரியம்மா..? அண்ணனுக்கு அந்தப் பெண்ணை பெரியப்பா பார்த்து வைத்திருக்கிறது உண்மைதான்னு நீங்களும் ஒப்புக் கிட்டிங்களே...”

“டேய்.. வாயை மூடுடா..”

“அவன் வாயை எதுக்காக மூடனும் அக்கா..? அவன் உள்ளதைத்தானே சொல்கிறான்..? அண்ணனுக்கு பார்த்து வைத்திருக்கும் பெண்ணுன்னு அவன் நின்று இரண்டு வார்த்தை பேசியிருப்பான்.. அதுக்காக அவனை கடலை வறுக்கிறான்னு ஆனந்தி சொல்லலாமா..? அதை ஏன்னு கேட்டிங்களா..?”

“அக்காவும் தம்பியும் விளையாட்டாப் பேசினதை நீ வினயமா எடுத்துக்கக் கூடாது சுமதி...”

“கார்த்திக்கும் விளையாட்டாத்தானே சொன்னான்..? அதை எதுக்காக நீங்க வினயமா எடுத்துக்கிட்டிங்க..?”

“புரியாம பேசாதே சுமதி.. அந்தப் பெண்ணுக்கும் எங்களுக்கும் ஆகாது.. அவகூட நம்ம கார்த்திக் எதுக்காக பேசனும்..?”

“எங்களுக்கும் அந்த அன்னபூரணிக்கும் கூடத்தான் ஆகாது.. நீங்க அவங்ககூட சொந்தம் கொண்டாடிப் பேசலையா..? அது போலத்தான் இதுவும்..”

எந்தப் பக்கம் போனாலும்.. அந்தப் பக்கம் வந்து வழிமறிக்கும் சுமதியின் வார்த்தை விளையாட்டில் களைத்துப் போய் விட்டாள் சுந்தரி...

“அத்தை...” அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் அவள் அம்புஜத்தை உதவிக்கு அழைத்தாள்..

சுமதி இது போலப் பேசும் ரகமில்லை... அவள் சொந்தத்தைக் கொண்டாடுபவள்.. அதுநாள் வரை சுந்தரியின் சொல்லுக்கு எதிர் சொல்லை அவள் சொல்லிய தில்லை.. அப்படிப்பட்டவள் அன்று காட்டிய விரோதத்தில் அவளுக்கு என்ன பேசுவதுதென்றே தெரியவில்லை...

அவளுக்குத் தெரியாது.. பெண்மைக்கே உரித்தான சூட்சும உணர்வுடன் சுமதி.. காவ்யாவின் மனநிலையை கணித்து விட்டாள் என்பது...

கார்த்திக்கைக் கண்டால் முகம் கூம்பி.. தள்ளி நின்று விடும் காவ்யா.. அர்ஜீனைக் கண்டதும் முகம் மலர்ந்து.. அவன் எங்கே நிற்கிறானோ.. அங்கேயே வட்டமடிப்பதை அவள் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்...

சுமதியிடம் பேசத் தயங்குபவள்.. சுந்தரியைக் கண்டதும் காபி கலந்து கொண்டு வருவதும்.. பூவைக் கொண்டு வருவதும்.. பலகார வகையறாக்களைக் கொண்டு வருவதுமாக... ஓடி ஓடி உபசாரம் செய்ததில்.. அர்ஜீனைப் பெற்றவள் மீதும்.. அவன் கூடப் பிறந்தவளின் மீதும் காவ்யா கொண்டுள்ள வாத்சல்யத்தை சுமதி உணர்ந்தாள்..

ஆனந்தியின் பிள்ளைகளை காவ்யா தரையில் நடக்க விடவில்லை.. அவர்களைத் தோளில் சுமந்தாள்.. அந்தப் பிரியம் சுமதிக்கு உணர்த்திய செய்தி ஒன்றுதான்...

அது.. காவ்யா அர்ஜீனை விரும்புகிறாள் என்பது...

சுமதிக்கு கார்த்திக்கை சந்திப்தற்கு முன்னரே காவ்யா அர்ஜீனை சந்தித்து விட்டாள் என்ற விவரம் தெரியாது.. அவர்கள் காதலித்துப் பிரிந்தவர்கள்.. அர்ஜீனை மறப்பதற்காகவே காவ்யா ஊர்விட்டு ஊர் வந்தாள்.. வந்த இடத்தில் மீண்டும் அர்ஜீனை சந்தித்தாள் என்ற எந்த விவரமும் அவளுக்குத் தெரியாது...

சுமதி அர்ஜீனை காவ்யா முதன்முதலாக அம்புஜத்தின் வீட்டில்தான் சந்தித்திருப்பதாக நினைத்து விட்டாள்...

‘கார்த்திக்கை விட உயர்வா ஒருவனைக் கண்டதும் இவ மனதை மாத்திக்கிட்டாளே..’ இப்படித்தான் சுமதி நினைத்தாள்...

கார்த்திக்கின் காதலை அவள் ஏற்றுக் கொண்டு விட்டதாகத்தான் அவன் சுமதியிடம் சொல்லியிருந்தான்.. அந்த நினைவிலிருந்த சுமதிக்கு காவ்யா நிறம் மாறும் பச்சோந்தியாகத் தெரிந்து விட்டாள்..

அந்தப் பச்சோந்தியைக் கொண்டாடும் சுந்தரியும்.. ஆனந்தியும் அவளுக்கு விரோதிகளாக தெரிய ஆரம்பித்து விட்டதில் விந்தை எதுவுமில்லை...

அன்று அவர்கள் பொருள் காட்சியிலிருந்து மன வலியுடன் திரும்பினார்கள்...

# 203

## ஆசையென்னும் அலைமீது - நீ
## அசைந்துவரவே ஆசைகொண்டேன்...

**அ**திகாலையில் இளஞ்சூரியக்கதிர்கள் பட்டு செடிகளின் இலைகளில் இருந்த பனித்துளிகள் மறைந்து கொண்டிருந்த அந்த நேரத்தில்...

“குட் மார்னிங்..” என்ற பழகிய குரல் கேட்டுத் திரும்பினாள் ஆனந்தி...

அங்கே பார்த்தசாரதி நின்று கொண்டிருந்தார்.. ஹோட்டலின் காரிடாரின் முடிவிலிருந்த பால்கனியில் பசுமையான தொட்டிச் செடிகளின் மத்தியில் நின்று சூரிய வெளிச்சத்தில் குளிர் காய்ந்து கொண்டிருந்த ஆனந்தி...

“டாடி..” என்றாள் திகைப்புடன்...

“உன் டாடியேதான்.. வேர் இஸ் யுவர் அம்மா..?”

அவர் இலகுவாக பேசினார்.. அவர் கையில் பெட்டியில்லை.. என்பதை ஆனந்தியின் புத்தி கிரகித்துக் கொண்டது.. அப்படியென்றால் அவர் அப்போதுதான் வரவில்லை.. அதற்கு முன்னரே வந்திருக்கிறார்...

“எப்ப வந்தீங்க டாடி..?”

“நைட்..”

“எங்கே தங்கியிருக்கீங்க..?”

“இங்கேதான்..”

“இங்கேன்னா..?”

“இதே ஹோட்டலில்தான்...”

பார்த்தசாரதியின் பதிலில் வெறுத்துப் போய் விட்டாள் ஆனந்தி.. அது என்ன ஹோட்டலா.. இல்லை.. அவர்களது குடும்பத்தின் கெஸ்ட் ஹவுஸா..? இப்படியா ஒட்டு மொத்தக் குடும்பமும் தனித்தனியாக கிளம்பி வந்து ஒரு ஹோட்டலில் ஒன்று சேரும்..?

கணவரின் வரவையறிந்ததும் சுந்தரிக்கு முகம் மாறிவிட்டது.. அவரது வருகையை அவள் ரசிக்கவில்லை.

“நிச்சயமா நமக்குத் தடங்கல் பண்ணணும்னே உன் டாடி கிளம்பி வந்திருக்கார்டி..” என்று மகளிடம் கொதித்தாள்...

அதை உண்மையாக்குவதைப் போல.. காலை உணவிற்குப் பின்னால் காவ்யாவின் வீட்டிற்குப் போவதற்காக கிளம்பிய சுந்தரியிடம்...

“எங்கே போகிற சுந்தரி..?” என்று கேட்டு வைத்தார் பார்த்தசராதி

‘விளங்கினாப்புலதான்..’ சுந்தரியின் முகத்தில் எள்ளும்.. கொள்ளும் டிைவத்தன.. அவள் ஆனந்தியை முறைத்தாள்.. அந்தப் பார்வையின் பொருள் புரிந்தவளாக..

“ஊரைச் சுற்றிப் பார்க்கப் போறோம் டாடி.. அதுக்குத் தானே வந்திருக்கோம்..?” என்று கேட்டாள் ஆனந்தி...

“இருங்க.. நானும் வர்றேன்..”

“நீங்க எதுக்கு டாடி..?”

“பெண்களை மட்டும் தனியா அனுப்பி வைக்கிறதா..? நோ சான்ஸ்..”

“இத்தனை நாளும் அதைத்தானே செய்தோம்..?”

“நீங்க அப்படிச் செய்து வைப்பீங்கன்னுதான் நான் கிளம்பி வந்தேன்.. வாங்க.. வாங்க.. சேர்ந்தே போகலாம்..”

பார்த்தசாரதி பரபரப்பு காட்ட சுந்தரி கைப்பையை கட்டிலில் வீசி அடித்துவிட்டு தலையில் கை வைத்து உட்கார்ந்தாள்.. ஆனந்திக்கு தாயைப் பார்க்க பாவமாக இருந்தது.. பார்த்தசாரதி பண்ணிய அழிச்சாட்டியத்தில் அவளுக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை...

“இங்கே தெரிந்தவங்க இருக்கிறாங்க டாடி..”

“எனக்குத் தெரியாத தெரிந்தவங்க இந்த ஊரில் இருக்கிறாங்களா..? யார் அது..?”

பார்த்தசாரதி ஒன்றும் அறியாதவரைப் போலக் கேட்டு வைக்க.. சுந்தரி பல்லைக் கடித்தபடி மகளைப் பார்த்து...

‘கேட்டுக்கிட்டியா..?’ என்று விழிகளால் கேட்டாள்..

‘இந்த டாடி இருக்கிறாரே..’ ஆனந்திக்கும் தலைவேதனையாகத்தான் இருந்தது..

“உங்களுக்குத் தெரியாத பாட்டிக்குத் தெரிஞ்சவங்க குடும்பம் இங்கே இருக்கு டாடி.. பாட்டியும்.. சித்தியும் அங்கேதான் தங்கியிருக்காங்க.. நாங்க அவங்களைப் பார்க்கத்தான் போறோம்.. அவங்க கூட கம்பைன் பண்ணித் தான் ஊர் சுற்றிப் பார்த்துக்கிட்டு இருக்கோம்.. ஸோ.. நீங்க கவலைப்படாம உங்க வேலையைப் பாருங்க..”

“பாட்டி..? யு மீன் சித்தி..?”

“யெஸ்...”

“அவங்க எதுக்காக திருநெல்வேலியில் இருந்து இங்கே கிளம்பி வந்து தங்கியிருக்காங்க..?”

“இதை நேகா உங்களிடம் சொல்லலையா..?”

“வாட்..? நேகாவா..? அவ இங்கே இருக்காளா..?”

பார்த்தசாரதி நடிகர் திலகத்தை தனது நடிப்பினால் மிஞ்சிவிட முயல.. அதைக் கண் கொண்டு பார்க்கச் சகிக்காமல்...

“ஆக்டிங் பண்ணினது போதும் டாடி.. அவ சொல்லித் தான் நீங்க இங்கே கிளம்பி வந்திருக்கீங்கன்னு எங்களுக்குத் தெரியும்.. அவளும் இதே ஹோட்டல்தான் தங்கியிருக்காங்கிறது உங்களுக்குத் தெரியும்கிறதும் எங்களுக்குத் தெரியும்.. என் கெஸ்ஸிங் சரியாக இருந்தா.. நேற்று நைட்டே நீங்க அவளை மீட்பண்ணி எல்லா விவரத்தையும் கேட்டுத் தெரிந்து வைச்சிருப்பீங்க...”

ஆனந்தியின் யூகம் மிகச் சரியானது என்ற குற்ற உணர்வில் அவள் முகம் பார்க்காமல் வேறு பக்கம் பார்த்தார் பார்த்தசாரதி..

“ஆம் ஐ கரெக்ட்..?” அழுத்தமாக வினவினாள் ஆனந்தி...

“இப்ப அதையெல்லாம் எதுக்காக தேவையில்லாம பேசனும்..? சித்தியையும்.. சுமதியையும் அந்த வீட்டில் இருந்து கிளம்பி வரச் சொல்லு...”

“எந்த வீட்டில இருந்து..?”

இந்தக் கேள்வியை சுந்தரியும் கேட்கவில்லை.. ஆனந்தியும் கேட்கவில்லை.. அறைவாசலில் சாய்ந்து நின்ற அர்ஜீன்தான் கேட்டான்...

“அர்ஜீன்...”

“கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க டாடி.. எந்த வீட்டில் இருந்து பாட்டியும்.. சித்தியும் புறப்பட்டு வரனும்..?”

பார்த்தசாரதி மௌனம் சாதித்தார்.. சுந்தரியின் முகத்தில் கோபக்கனல் தெரிந்தது.. ஆனந்தி.. பல்லைக் கடித்தாள்.. அர்ஜீன் நிதானமாக கேட்டான்...

“ஸோ.. நீங்க அது யார் வீடுன்னு தெரிந்துதான் பேசறிங்க..”

“புரியாம பேசாதே அர்ஜீன்.. நம்ம தகுதிக்கு அந்த வீட்டில் போய் தங்கலாமா..? இந்த சித்திக்கும்.. சுமதிக்கும் அறிவே இல்லை...”

“அது அவங்களுக்கு நிறைய இருக்கு.. நாமதான் அதைக் கடன்கொடுத்து விட்டு இருக்கிறோம்.. அவங்க அங்கே தங்க உங்களிடம் பெர்மிசன் வாங்க வேண்டிய தில்லை.. சித்தப்பாதான் அதுக்கு பெர்மிசன் கொடுக்கனும்..

அவர் பெர்மிசன் கொடுத்ததுமில்லாம.. அந்த வீட்டிலே பெண் கேட்கவே வைத்திருக்கிறார்.. அது உங்களுக்குத் தெரியுமா..?”

பார்த்தசாரதிக்கு அது தெரியாது.. நேகா அவரிடம் இந்த விவரத்தைக் கூறவில்லை.. அதைச் சொன்னால்.. சரவணனே பெண் கேட்கும் அளவிற்கு காவ்யா இருக்கும் போது தன் மகனுக்கு அவளைத் திருமணம் செய்து வைத்தால் என்ன குறைவு வந்து விடப் போகிறது என்று பார்த்தசாரதி நினைத்து விட்டால் என்ன செய்வது என்று அவள் கவனமாக அந்தப் பேச்சைத் தவிர்த்துவிட்டு வேறு ஒன்றைச் சொல்லியிருந்தாள்.. அதை பார்த்தசாரதி சொல்லிவிட்டார்...

“இல்லையே.. கார்த்திக்தான் நேகா பின்னால் சுற்றுகிறானாமே.. நான் அப்படித்தான் கேள்விப்பட்டேன்.. இந்த சரவணன் பயலுக்கு இருக்கிற எண்ணத்தைப் பார்த்தியா... எங்கேயிருந்து வந்து எங்கே பெண் தேடுகிறான்னு பாரு.. இவன் மகனுக்கு நேகா குருப் ஆஃப் கம்பெனியோட ஒரே வாரிசு வேணுமாம்...”

“பாவம் நேகா..” ஆனந்தி பரிதாபப் பட்டாள்..

“அவளுக்கு இருக்கிற தகுதி அது ஒன்னுதான்னு தெரியாம தலை கீழே பாய்கிறா.. வாட் எ பிட்டி..” என்று அவள் சொல்லியதில் பார்த்தசாரதியின் முகம் மாறிவிட்டது..

“நீ கூட இப்படிப் பேசலாமா ஆனந்தி.. நாம பார்த்திருக்கிற பெண் மேலே சரவணன் மகன் கண்

வைக்கிறானேன்னு நானே பயந்துபோய் ஃபாரின் ஆர்ட்ரைப் பத்தின கவலையில்லாம ஓடி வந்திருக்கேன்.. நீயென்னன்னா இப்படிப் பேசற..” அங்கலாய்த்தார்..

“ஒரு திருத்தம் டாடி.. நேகா நீங்க பார்த்த பெண்.. நாம பார்த்து வைத்திருக்கிற பெண்ணில்லை.. எனக்கோ.. அம்மாவுக்கோ.. இதில் துளிக்கூட இஷ்டமில்லை. அர்ஜீனைப் பத்திச் சொல்லவே வேணாம்.. அவன் நேகா பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டான்.. இதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறதினாலே தானே அந்த நேகா.. அவளுக்கென்று டிமான்டை கிரியேட் பண்ண.. உங்களை இங்கே ஓடி வர வைச்சிருக்கா..?”

ஆனந்தியின் கேள்வியில் கை தட்டினான் அர்ஜீன்.. அதை பார்த்தசாரதி ரசிக்கவில்லை.. அவர் குடும்பத்தினரை விரோதமாகப் பார்த்தார்.. அதை கண்டு கொள்ளாமல்..

“கிளம்புங்கம்மா..” என்றான் அர்ஜீன்...

“எங்கேடா..?” பதட்டமாக கேட்டார் பார்த்தசாரதி...

“நீங்க என்ன எனக்கு அம்மாவா..?” முறைத்தான் அவன்..

“போகலாம் அர்ஜீன்...”

மகனின் துணை கிடைத்து விட்ட தெம்புடன் சுந்தரி எழுந்து கட்டிலில் கிடந் கைப்பையை எடுத்துக் கொண்டாள்...

“சரண்.. சாரா.. கிளம்புங்க..” ஆனந்தி குரல் கொடுக்க...

“ஹை.. ஜாலி..” என்று அவர்கள் கோரஸாக குதியாட்டம் போட்டார்கள்..

பார்த்தசாரதி என்ற ஒரு மனிதர் அங்கு நிற்பதையே கண்டு கொள்ளாமல் அவர் குடும்பம் கிளம்ப யத்தனிக்க.. இதற்கா எல்லா வேலைகளையும் போட்டது போட்டபடி விட்டுவிட்டு ஓடி வந்தோம் என்று அவர் நொந்து போனார்...

“அவர்களை எங்கேடா கூப்பிட்டுக்கிட்டு போகிற..?” அவர் பதற..

“பாட்டியிருக்கிற வீட்டுக்கு..” என்று அமர்த்தலாகப் பதில்சொன்னான் அர்ஜீன்...

“அதாவது அந்த காவ்யாவோட வீட்டுக்கு கூப்பிட்டுப் போகிற..?” ஆத்திரப்பட்டார் அவர்..

“அந்தக் காவ்யா இல்ல.. என் சொந்தக் காவ்யா..”

“அர்ஜீன்..”

“கத்தாதீங்கப்பா.. அம்மாவும் அக்காவும் என்னுடன் காவ்யா வீட்டுக்கு வரப் போகிறாங்க.. அப்ப நீங்க..?”

அவர் பதிலை எதிர்பாக்காமல் கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு அவன் அங்கிருந்து நடக்க ஆரம்பிக்க.. சுந்தரியும்.. ஆனந்தியும் குழந்தைகளுடன் அவனைப் பின் தொடர்ந்தார்கள்...

‘இவங்களைத் தனியா அனுப்பக் கூடாதே..’

கடைசி வினாடி ஞானோதயத்தில் பார்த்தசாரதி ஓடிப் போய் அவர்களுடன் தொற்றிக் கொண்டார்..

“நானும் வரேண்டா..”

“நீங்கதான் அந்த வீட்டுக்கு வர மாட்டிங்களே...”

“உங்க அம்மாவைக் கல்யாணம் பண்ணி உங்க இரண்டு பேரையும் பிள்ளைகளா பெத்துப் போட்டிருக்கேனே.. என் தலைவிதிக்கு வேற என்ன செய்து தொலைக்க..? நானும் வந்து தொலைக்கிறேன்..”

“இவ்வளவு வன்மத்தோட எங்க கூட நீங்க வரவேண்டாம்...”

“ஊஹீம்.. நானும் வருவேன்..”

இல்லையென்றால் இவர் ஆட்டத்தைக் கலைத்து விடுவாரா என்ற நினைவோடு.. ஆனந்தியைப் பார்த்து லேசாக சிரித்து வைத்தான் அர்ஜீன்....

“காரில் இடமில்லைப்பா..”

“இடமில்லாமல் எப்படிப் போகும்..? சரண்.. சாரா.. நீங்க பின் சீட்டுக்கு ஓடுங்க.. அம்மா மடியும்.. பாட்டி மடியும் உங்களுக்காகத்தான்..”

“ஏன்.. உங்க மடி எதுக்காக இருக்கிறதாம்..?”

ஆனந்தியின் கோபத்தில் இரண்டு குழந்தைகளையும் மடிதாங்கிக் கொண்டு காரில் இடம்பிடித்தார் பார்த்தசாரதி.. மர்மப் புன்னகையுடன் காரைக் கிளப்பினான் அர்ஜீன்..

# 204

## கரிசல் காட்டுப் பூமியிலே... கானம் பாட ஆசைகொண்டேன்...

அவர் நினைத்தாரா.. இது நடக்கும் என்று...?

நேகா கொடுத்த அபாய அறிவிப்பில் அலறியடித்துக் கொண்டு அவர் கிளம்பி வந்தார்.. அத்தனை தினங்களாக அர்ஜீன்தான் நேகாவை கை நழுவ விடுகிறான் என்ற நினைப்பில் இருந்தவருக்கு.. அப்படி கை நழுவிப் போகும் நேகாவை அவருடைய ஒன்று விட்ட தம்பியின் மகன் கை நீட்டிப் பிடித்துக் கொள்வான் என்று நினைவே எழுநத்தில்லை...

"உங்க 'கோ-பிரதரோட சன்'னாமே அங்கிள்.. கார்த்திக்ன்னு பெயர் சொன்னார்.. என்ன ஒரு ஹேண்ட்சம்.. உங்க சன் போல இல்லை.. தரம் தெரிந்து பேசிப் பழகுகிறார்.. மதுரையைச் சுற்றிப் பார்க்க அவர்தான் கம்பெனி கொடுக்கிறார்ன்னா பார்த்துக்கங்களேன்..."

அவள் சொடுக்கிய சாட்டையில் சுற்றாடும் பம்பரமாக ஃபாரின் ஆர்டரை மறந்துவிட்டு மதுரைக்கு ஓடிவந்து விட்டார் பார்த்தசாரதி.. வந்த மனிதர் சும்மா இருக்காமல்

குடும்பத்தை தனித்து காவ்யாவின் வீட்டுப் பக்கம் அனுப்பக் கூடாதென்று அவரும் சேர்ந்து கிளம்பிவிட்டார்...

‘அகப்பட்டுக்கிட்டிங்களா..?’

அர்ஜீனின் கண்களில் தெரிந்த மின்னலை அவர் கவனிக்கவில்லை.. எங்கே...? அதற்கு வழிவிடாமல் அவரின் மடியில் பேரனும் பேத்தியும் சட்டமாக சாய்ந் திருந்தார்களே.. அவர்கள் ஆடிய ஆட்டத்தில் அவரும் சேர்ந்தாடி அவர்களைச் சமாளிக்க முயன்று கொண்டிருந்ததில் அர்ஜீனின் முகக் குறிப்பை அவர் கவனிக்கத் தவறிவிட்டார்..

“திருவள்ளுவர் இதைத்தான் சொல்லியிருக்காருப்பா..” என்று எதற்கோ திருக்குறளை கண்ணதாசனிடம் மேற்கோள் காட்டிப் பேசிக் கொண்டிருந்த சிவதாணு.. அர்ஜீனின் காரிலிருந்து இறங்கிய பார்த்தசாரதியைக் கண்டதும்...

“ஆருப்பா..?” என்று மகனிடம் விசாரித்தார்...

‘இந்த ஆளா..? இவரை எதுக்காக இவன் கூப்பிட்டுக் கிட்டு வந்திருக்கான்..?’ கண்ணதாசன் முகம் இறுகிப் போனான்...

அவன் வரவேற்க மாட்டான் என்பதை அறிந்து வைத்திருந்த அர்ஜீன் சிவதாணுவிடம்...

“என் டாடி..” என்று பார்த்தசாரதியை அறிமுகப் படுத்தினான்..

“அடடே.. நீங்கதான் சாரோட அப்பாவா..? எங்க வீட்டுக்கு நீங்க வந்ததில் மெத்த சந்தோசம்..

அன்னபூரணி.. யாரு வந்திருக்கிறதுன்னு வந்து பாரு...” குரல் கொடுத்தபடி வீட்டுக்குள் சென்று விட்டார் சிவதாணு...

இப்படியொரு வரவேற்பை எங்கேயும் கண்டிராத பார்த்தசாரதி... இதுதான் உன் காதலியின் வீட்டில் வரவேற்கும் லட்சணமா...? என்று மகனை முறைத்துப் பார்த்தார்.. அவன் நிச்சலனமான முகத்துடன் போதி மரத்தடி புத்தனைப்போல அவரை நோக்கினான்...

“ஏண்டா..? அண்ணன்காரன் வெட்டவா.. குத்தவான்னு பார்க்கிறான்.. அப்பன் என்னடான்னா.. வாங்க வாங்கன்னு சொல்லிக்கிட்டே வீட்டுக்குள் ஓடிட்டான்... நல்ல குடும்பத்தில காதலிச்சு வைச்சிருக்கடா...”

“ம்ம்ம்.. நீங்க பண்ணி வைத்திருக்கிற வேலைக்கு இந்த வரவேற்பே பெரிசு.. பேசாம வாயை மூடிக்கிட்டு வீட்டுக்குள்ள வாங்க.. இப்பப் போனாரே பெண்ணோட தகப்பன்.. அவர் மற்ற நேரத்திலதான் சாது.. திருக்குறளுண்டு.. அவருண்டுன்னு இருப்பார்.. மகளுக்கு ஏதாவது ஒன்னுன்னு தெரிஞ்சா.. அதை செஞ்சவனை உண்டு இல்லைன்னு பண்ணிட்டுத்தான் வேற வேலை-யைப் பார்ப்பார்.. அப்ப அவர் கையில குறள் இருக்காது.. அருவாள்தான் இருக்கும்.. அதனால அடக்கி வாசிங்க...”

“அது என்ன தேவைக்கு..?”

“அப்படின்னா இப்படியே திரும்பிப் போய் ஹோட்டல் ரூமில ரெஸ்ட் எடுங்க... நாங்க வர மிட்நைட்டுக்கு மேலேயே ஆகும்..”

அதற்காகவா பார்த்தசாரதி ஃபாரின் ஆர்டரை கோட்டை விட்டுவிட்டு வந்திருக்கிறார்...? அவர் முறைப்புடன் வீட்டுக்குள் பிரவேசித்தார்..

புருவங்கள் முடிச்சிட.. வந்தவரை வாவென்று சொல்லாமல் கால்மேல் கால் போட்டு அமர்ந்தான் கண்ணதாசன்.. அதற்குள் சிவதாணுவுடன் அங்கு வந்த அன்னபூரணி...

“வாங்க..” என்று சேலை முந்தானையை தோளைச் சுற்றிப் போர்த்திக் கொண்டு கரம் குவித்தாள்...

அவரின் மரியாதையான வரவேற்பில் தன்னையு மறியாமல் பதிலுக்கு கரம் குவித்து விட்டார் பார்த்தசாரதி..

“ஆனந்தி அருமையான பெண்.. வேற்று மனுஷியா இல்லாம எங்க வீட்டு மனுஷியாவே ஆகிருச்சு.. உங்க சம்சாரமும்.. உங்க பொண்ணும் சொந்த பந்தம் போல எங்களோட ஒன்னு மண்ணா பழகினதில அவங்கள இப்பத்தான் நாங்க பார்த்தோம்னே எனக்குத் தோணலை..” அன்னபூரணி சொந்தத்துடன் சுந்தரியைப் பார்த்தடி சொன்னாள்...

‘இவ்வளவு நடந்திருக்கா.. பாசப்பயிரை வளர்க்கத் தான் என் பெண்டாட்டியும் மகளும் ஜோடி போட்டுக்கிட்டு சித்திரைத் திருவிழாவைப் பார்க்க வந்தாங்களா..?’ பார்த்தசாரதி மனம் புகைந்தார்...

அன்னபூரணி காபி போட உள்ளே செல்ல.. சுந்தரி எழுந்து மாடிப்பக்கம் போக முயன்றாள்..

“உட்காருங்கம்மா..” என்று சொல்லி விட்டான் அர்ஜீன்...

அவன் முகத்தில் தெரிந்த ஏதோ ஒன்றில் சுந்தரியும் உட்கார்ந்து விட்டாள்.. பாவனாவுடன் பேசியபடி மாடிப் படிகளில் இறங்கிவந்த காவ்யாவின் கண்கள் அர்ஜீனைக் கண்டதும் ஒளிர்ந்தன.. அவள் பார்த்தசாரதியைப் பார்க்க வில்லை.. ஆனால்.. அவளைப் பார்த்துவிட்ட பார்த்தசாரதி அவளின் பார்வையில் பல்லைக் கடித்தார்...

‘எதை உடைத்தாலும்.. இவங்க காதலை உடைக்கவே முடியாது போல இருக்கே...’

அதற்குள் பார்த்தசாரதியைப் பார்த்துவிட்ட காவ்யா முகம் மாறிப் போனவளாக மீண்டும் மாடிக்குப் போகத் திரும்பினாள்.. அவளை கண்ணதாசனின் குரல் தடுத்து நிறுத்தியது...

‘யார் வீட்டில்.. யாரைப் பார்த்து.. யார் பயப்பட்டு ஓடுகிறது..?’

“காவ்யா...”

“அண்ணே...”

“இப்படி வந்து உட்காரு.. இது நம்ம வீடு.. வந்திருக்கிறவங்க தெரிஞ்சவங்க.. அவ்வளவுதான்...”

அவனின் அழுத்தமான குரலில் முகச்சுளிப்போடு ஆனந்தியின் பக்கத்தில் உட்கார்ந்தாள் காவ்யா.. அது யதேச்சையாக சுந்தரிக்கும்.. ஆனந்திக்கும் நடுவில் இருந்த இடமாக அமைந்துவிட... பார்த்தசாரதி பல்லைக் கடித்தார்..

‘எப்படித் தோதாப் போய் உட்கார்ந்திருக்கு.. திட்டம் போட்டே என் குடும்பத்தை இந்தப் பொண்ணு கைக்குள்ள போட்டுக்கப் பார்க்குது...’

காவ்யா எதையும் பார்க்கவில்லை.. அவளுக்கு பார்த்தசாரதியின் முன்னால் உட்கார்ந்திருப்பது.. முள்ளின் மீது அமர்ந்திருப்பதைப் போல இருந்தது.. கண்ணதாசனின் கட்டளைக்கு கட்டுப்பட்டவளாய் உட்கார்ந்திருந்தவளின் முடியை சுந்தரி அன்பாக கோதிவிட்டதில் பார்த்தசாரதிக்கு கொஞ்சம் கூட உடன்பாடில்லை.. அவரின் முன்பாக காவ்யா அர்ஜீனை ஏறெடுத்தும் பார்க்காதில் அவர் மனதில் திருப்தி நிலவியது.. காதலர்களின் பரிபாஷையை முறித்துவிட்டதில் அவருக்கு அப்படியொரு சந்தோசம்..

அன்னபூரணி காபிக் கோப்பைகளுடன் வந்தாள்.. எல்லோருக்கும் காபியை அவள் கொடுத்த போது பார்த்தசாரதி மறுத்துச் சொல்ல முயன்றார்.. அவரையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜீனின் விழிகளில் தெரிந்த அதட்டலில் அவசரம் அவசரமாக காபிக் கோப்பையை கைப்பற்றிக் கொண்டார்...

அன்னபூரணி அங்கேயே நின்றபடி பொதுவாக பேசிக் கொண்டிருந்த போது.. மாடிப்படிகளில் சப்தம் கேட்டது.. அம்புஜமும்.. சுமதியும் பாவனா பின் தொடர கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார்கள்...

“பார்த்தன் வந்திருக்கான்னு பாவனா வந்து சொன்னா.. அதான் கீழே இறங்கிவந்தேன்.. எப்ப வந்தலே..” அக்கா மகனை பாசத்துடன் விசாரித்தாள் அம்புஜம்...

“நைட் வந்தேன் பெரியம்மா..” பார்த்தசாரதி காபிக் கோப்பையை எதிரிலிருந்த டீப்பாயின் மீது வைத்துவிட்டு நாசுக்காக கைக்குட்டையால் கைகளையும்.. உதட்டையும் துடைத்துக் கொண்டார்...

அந்தச் செய்கையில் கண்ணதாசன் அவரை விட்டு விட்டு அர்ஜீனை முறைத்தான்.. அவன் அதே நிச்சலனமான முகத்தோடு தந்தையின் பக்கம் திரும்பி அன்பாக ஓர் பார்வை பார்த்தான்...

‘அடக்கி வாசிங்க..’ என்று அந்தப் பார்வையில் பொதிந்திருந்த கட்டளையில் அவசரமாக கைக்குட்டையை எடுத்த இடத்தில் வைத்துவிட்டார் பார்த்தசாரதி.. வீட்டைச் சுற்றிப் பார்வையை சுழல விட்டவர்...

“இங்கேயா தங்கியிருக்கீங்க..?” என்று ஒரு மாதிரியான குரலில் அம்புஜத்தை விட்டுவிட்டு சுமதியைப் பார்த்துக் கேட்டார்..

அதில் சுமதிக்கு பரம சந்தோசமாகிவிட்டது.. பெண் தர மறுத்த அன்னபூரணியின் வீட்டை மட்டம் தட்ட கிடைத்த வாய்ப்பை அவள் இறுகப் பற்றிக் கொண்டாள்...

“இதை என்னிடம் ஏன் கேட்கறிங்க மாமா..? உங்க சித்தியிடம் கேளுங்க.. கார்த்திக் தங்கியிருக்கிற ஹோட்டலில் ரூம் போட வேண்டாம்ன்னு சொல்லிட்டு.. இங்கே வந்து தங்கியிருக்கிறது அவங்கதான்.. நானில்லை..” என்று சொல்லிவிட்டாள்...

அன்னபூரணியின் முகம் மாறிவிட்டது.. அவளது கோபம் எப்படிப் பட்டது என்பதை சுமதி அறிவாளா

என்ற கவலையில் ஆழ்ந்த கண்ணதாசன்.. வெள்ளம் கரையுடைக்கு முன்னால் அணை கட்டவேண்டிய அவசியத்தை உணர்ந்தவனாக..

“நம்ம காவ்யாவ பாட்டி சொந்தப் பெண்ணைப் போலப் பார்த்துக்கிட்டாங்கம்மா.. பாவம்.. தாய் தகப்பனை விட்டுவிட்டு அண்ணனுக்காக அறியாத ஊருக்கு வந்திருக்குதுன்னு சொல்லிப் பாசமா வைத்துக்குவாங்க..” என்று சொல்லி அன்னபூரணியின் கோபத்திலிருந்து சுமதியைக் காப்பாற்றிவிட்டான்..

பார்த்தசாரதி அப்படியே அதை விட்டு விடாமல் இன்னும் கொஞ்சம் பற்ற வைக்கும் முயற்சியில் வாய் திறக்க யத்தனிக்க...

“டாடி..” என்று அவரை அடக்கிவிட்டு.. அம்புஜத்தின் பக்கம் திரும்பினான்..

“நம்ம குடும்பத்துக்கு மூத்தவங்களா நீங்க இங்கே இருக்கீங்க பாட்டி.. எங்க குடும்பத் தலைவனா டாடியும் இருக்கிறார்.. என் குடும்பமா அம்மாவும்.. அக்காவும் இருக்கிறாங்க.. இந்த நேரத்தில நான் ஒன்றைப் பேசப் போகிறேன் பாட்டி..”

‘எதைப் பேசப் போறான்..’ பார்த்தசாரதிக்கு புரியவில்லை...

அர்ஜீனோ கண்ணதாசனை ஓர் பார்வை பார்த்து விட்டு சிவதாணுவின் பக்கமாக திரும்பினான்.. பேசினான்..

“உங்க மகளை நான் காதலிக்கிறேன்.. கல்யாணம் பண்ணிக்கனும்னு ஆசைப்படறேன்.. அதனால என் குடும்பத்தோடு பெண் கேட்டு வந்திருக்கிறேன்.. உங்க

மகளை எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுங்க.. அவளைக் கண்ணுக்குள் வைத்து நான் பார்த்துக்கிறேன்..”

அழுத்தம் திருத்தமாகப் பேசிய அர்ஜீன்.. தான் யார் என்பதை கண்ணதாசனுக்கு நிரூபித்தான்.. என் குடும்பத்துடன் உன் தங்கையைப் பெண் கேட்டு உன் வீட்டிற்கு வருவேன் என்று அவன் சொன்ன சொல்லை உண்மையாக்கினான்...

கண்ணதாசனின் இதழ்களில் புன்னகை விரிந்தது.. அவன் மெச்சுதலாக அர்ஜீனை நோக்கினான்.. அவனின் வசிஷ்ட பார்வை அந்த விசுவாமித்திரனைப் பார்த்து சொன்ன செய்தி ஒன்றுதான்.. அது...

‘நீ பிரம்மரிஷி..’ என்பதாகும்...

வஷிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டம் பெற்ற அந்த விசுவாமித்திரர் வெற்றி கொண்டாடினாரோ இல்லையோ.. மைத்துனனாகப் போகிறவனின் கண்பார்வையில் தெரிந்த பாராட்டுதலில் அர்ஜீன் வெற்றிவாகை சூடினான்...

## 205

***வைகை கரை ஓரத்திலே...***
***வசந்தம் வர ஆசைகொண்டேன்...***

**பா**ர்த்தசாரதி இமை கொட்டி விழித்தார்.. அவரால் தன் செவிகள் கிரகித்த செய்தியை நம்பமுடியவில்லை..

‘அர்ஜீன் பெண் கேட்டு விட்டானா..? அதுவும் அவரை முன்னிருத்தியா...?’

எனக்கும் இதற்கும் துளிக்கூட சம்பந்தமில்லையென்று சொல்வதற்காக அலறியடித்துக் கொண்டு அவர் வாய் திறந்த அதே நேரத்தில் சந்தோசத்துடன் வாய் திறந்தாள் சுந்தரி...

“ஆமாங்க அன்னபூரணி.. உங்க மகளை எங்க எல்லோருக்குமே பிடித்திருக்கு.. என் மகன் கட்டினால் உங்க பெண்ணைத்தான் கட்டுவேன்னு ஒற்றைக்காலில் நிற்கிறான்.. நீங்க யோசிக்காம பெண்ணைக் கொடுங்க.. அவளை மகளைப் போலப் பார்த்துக்கொள்ள நானாச்சு.. எனக்கு ஆனந்தி வேறு.. காவ்யா வேறுன்னில்ல...”

‘அடிப்பாவி..’ பார்த்தசாரதி கண்களை உருட்டி விழித்தும் அதைக் கவனிப்பேனா என்று கங்கணம் கட்டிக் கொண்டு சிரித்த முகமாய்.. அவரின் முகம் பார்க்காமல் அன்னபூரணியின் முகத்தைப் பார்த்தபடியே நினைத்ததை பேசி முடித்து விட்டாள் சுந்தரி...

‘எனக்குப் பெண்ணைப் பிடிக்கலை..’ மனதுக்குள் அலறிய பார்த்தசாரதியை அங்கு யாருமே பேச விடவில்லை...

என்றைக்கும் கணவனின் முன்னால் பேசியறியாத சுந்தரி அன்றைக்கு மடை திறந்த வெள்ளம் போல பேசித்தள்ளிவிட்டாள்.. ஊடே குறுக்கிட முயன்ற பார்த்த சாரதிக்கு அவள் வாய்ப்புத் தரவேயில்லை.. ஒருவழியாக அவள் பேசிமுடித்ததும் ‘அப்பாடா..’ என்ற அவசரத்தோடு

அவர் மறுத்துப் பேச முனைகையில் ஆனந்தி வாய்திறந்து விட்டாள்...

“அம்மா சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை ஆண்ட்டி.. நாங்க சித்திரைத் திருவிழாவை மட்டும் பார்க்க வரலை.. உங்க பெண்ணைப் பார்க்கவும் தான் வந்தோம்.. என் தம்பிக்கேத்த பெண் இவள்தான்.. காவ்யாவை அவனுக்கு மேரேஜ் பண்ணிக்கொடுங்க.. ஆண்ட்டி.. அவன் உங்க மகளை மகாராணி போல வாழவைப்பான்...”

அன்னபூரணி திகைத்துப் போய் விட்டாள்.. சிவதாணுவின் முகத்தில் ஈயாடவில்லை... வந்திருக்கும் உறவினர்கள் தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொள்வதைக் கவனித்தவருக்கு.. யாரைக் கேட்டு இவர்கள் பெண் கேட்டு வந்தார்கள் என்ற கோபம் எழுந்தது...

‘திருநெல்வேலியில இருந்து திருவிழாப் பார்க்க வந்த அம்மாவும் என் மகளப் பொண்ணு கேக்குது.. சென்னையில இருந்து வந்த அம்மாவும் அதப் போலவே பொண்ணு கேக்குதுன்னா.. இவங்க ஒரு முடிவோடதான் ஊரை விட்டுக் கிளம்பி வந்தாங்களா..? ஆக மொத்தம் யாரும் சித்திரைத் திருவிழாவைப் பார்க்க வரலை...’

சிவதாணு கண்டிப்புடன் எதையோ பேச வாய்திறந்த போது அவரைப் பேச விடாமல் கண்ணதாசன் முந்திக் கொண்டான்...

“திடீர்ன்னு வந்து பெண் கேட்கறிங்க.. அதான் அப்பா திகைச்சுப் போயிட்டாரு.. மத்தபடி காவ்யாமேல உங்களுக்கும் உங்க குடும்பத்துக்கும் இருக்கிற நல்ல

அபிப்ராயத்துக்கு ரொம்ப நன்றி.. காவ்யாகிட்டயும் ஒருவார்த்தை பேசிட்டு நாம மேற்கொண்டு ஆக வேண்டியதைப் பார்க்கலாம்...”

‘எதைப் பார்க்கிறது..?’

பெண்ணைப் பெற்ற தகப்பனுக்கும்.. மாப்பிள்ளையைப் பெற்ற தகப்பனுக்கும் ஒரே கேள்வி.. ஒரே நேரத்தில் நெஞ்சில் எழுந்து நின்றது..

தன்னைக் கேட்காமல்.. தனக்குப் பிடிக்காத சம்பந்தத்தை மகன் பேசி முடித்து விட்டானே என்ற கோபத்தில் பார்த்தசாரதி கொதிக்க.. என்னதான் தாட்டியமான அண்ணன்காரனாக இருந்தாலும் பெண்ணைப் பெற்ற தகப்பனிடம் ஒருவார்த்தை கேட்காமல் முடிவு சொல்லி விடலாமா என்ற கொதிப்பில் சிவதாணு இருந்தார்..

அன்னபூரணி மகனைப் பார்த்தாள்.. அவள் பார்வையின் கேள்விக்கு கண்ணதாசன் இமை மூடித் திறந்தான்.. மகனின் பரிபாஷையில் முகம் சுணங்க அவள் மௌனமாகி விட்டாள்...

காவ்யா சிலையாக சமைந்து விட்டாள்... பார்த்தசாரதியே வந்து பெண் கேட்பார் என்று அவள் நினைத்துக் கூடப் பார்த்திருக்கவில்லை.. பாவனா அவள் கையைக் கிள்ளிய போதுதான் நடப்பது கனவல்ல.. நனவு என்பதே அவளுக்கு உறுதியானது..

“உன் ஆள் தூள் கிளப்பறார்டி..” பாவனா தோழியின் காதுகளில் கிசுகிசுத்தாள்...

காவ்யாவின் மனதில் அவனது அந்த தீரத்தின் மீதானகாதல் பெருகியது.. அவள் மனதில் திருமணத்தைப் பற்றிய எந்த முடிவும் தோன்றவில்லை என்ற போதும்.. அவனது தைரியத்தை அவள் மனதுக்குள் மெச்சினாள்..

‘என்னடா இது.. விட்டால் இவன் கல்யாண நாளைக் குறித்துக் கையோடு வாங்கிக் கொண்டு வருவான் போல இருக்கே...’ பார்த்தசாரதி திகிலடைந்து போனார்...

அவர் புருவங்களைச் சுளித்தபடி பேச ஆரம்பித்த போது.. அவரைப் பேசவிடாமல் குறுக்கே புகுந்தாள் அம்புஜம்...

“அட.. அப்படியா சேதி.. ஏன்லே அர்ஜீன்.. நீ காவ்யாவ காதல் பண்றியா..? இந்தச் சேதியை சொல்லியிருந்தா உன் தம்பி விலகிப் போயிருப்பானேலே..”

“தப்புத்தான் பாட்டி.. எனக்கும் மனசைக் குத்துச்சு.. பட் சில காரணங்களினாலே அதைச்சொல்ல முடியல...”

காவ்யாவை ஜாடையாய் பார்த்தபடி சொன்னான் அர்ஜீன்.. அவன் எதைச் சொல்கிறான் என்பதைப் புரிந்து கொண்ட காவ்யா உதட்டைக் கடித்தபடி மௌனமானாள்...

“போனதை விடுலே.. நீ ஏதாச்சும் காரணமில்லாம சொல்லியிருக்க மாட்டே... என்னவோ போ.. நாங்களும் கார்த்திக்குக்கு காவ்யாவை பெண் கேட்டோம்... நல்ல வேளையா அன்னபூரணி யோசிச்சுப் பதில் சொல்றோம்ன்னு சொல்லிருச்சு.. இல்லையின்னா என்னவாகியிருக்கும்..? நினைச்சுப் பாருலே.. சொந்த பந்தத்துக்குள்ள மனத்தாங்கல் தானேலே...”

"மன்னிச்சுக்கங்க பாட்டி..."

அர்ஜீன் மனதார மன்னிப்புக் கேட்டான்.. சுமதி கோபத்துடன் விர்ரென்று மாடியேறிப் போய் விட்டாள்.. இந்தப் பெண்ணுக்கு சரவணன் வீட்டிலிருந்தும் போட்டி போடுகிறார்களா என்று பார்த்தசாரதி ஆச்சரியப் பட்டுப் போனார்...

'இந்தக் கார்த்திக்குதான் புத்தியில்லைன்னா... சரவணனுக்குமா புத்தி புல் மேயப் போய் விட்டது..?'

என்னவோ.. அப்போதே திருமணத்திற்கு தேதி குறித்து.. பரிசம் போட்டு விட்டதைப் போல சுந்தரி காவ்யாவின் தலை கோத ஆனந்தி பிரியத்துடன் காவ்யாவின் கைவிரல்களைப் பிடித்துக் கொண்டாள்.. பார்த்தசாரதியால் அதைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை.. அவர் பொறுத்தது போதும் என்று பொங்கியெழப் புறப்பட்ட போது..

"அப்ப நாங்க கிளம்பறோம்.." என்று கைகூப்பியபடி எழுந்து கொண்டான் அர்ஜீன்...

"அர்ஜீன்.." பார்த்தசாரதி ஆட்சேபக் குரல் எழுப்ப முயன்ற போது.. அதை கண்டு கொள்ளாமல் கண்ணதாசனைப் பார்த்து...

"நான் யாருன்னு இப்பவாவது உங்களுக்குத் தெரிந்ததா..?" என்று கேட்டான்..

"ம்ம்ம்.. வீராதிவீர அர்ஜீனன்னு தெரியுது.." சிரித்தபடி பதில் சொன்னான் கண்ணதாசன்...

“அத்தைக்கு மீசை முளைத்தாச்சு...” மர்மப் புன்னகையோடு அர்ஜீன் சொல்ல..

“ஆமாம் சித்தப்பா..” என்று இன்னும் பலமாக சிரித்தான் கண்ணதாசன்...

மற்றவர்களுக்கு அவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று புரியவில்லை.. பார்த்தசாரதி வாயைத் திறக்க யத்தனிக்கும் போதெல்லாம் அவர் குடும்பத்தினரில் யாராவது வாயைத் திறந்து அவரைப் பேச விடாமல் செய்து கொண்டேயிருந்தார்கள்.. அர்ஜீன் அவரின் தோள் பற்றி எழுப்பி.. ஏறக்குறைய அவரை இழுத்துக் கொண்டு போய் காருக்குள் சேர்த்தான்...

“நான் இதற்கு சம்மதிக்க மாட்டேன்...”

ஹோட்டல் அறைக்கு வந்ததும் பார்த்தசாரதி வெடித்தார்...

“உங்க சம்மதத்தை யார் கேட்டது..?” சுந்தரி நிதானமாக அவரிடம் கேட்டாள்...

அதுநாள்வரை அவரிடம் மனைவி பேசவில்லையே என்ற வருத்தம் மறைந்து.. அவள் அப்படியே அவரிடம் பாராமுகமாய் இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம் அவருக்குள் உண்டானது..

“இங்க உங்களுக்கு யாரும் இரண்டாம் கல்யாணத்துக்கு பெண் பார்க்கலை... உங்க மகனின் கல்யாணத்துக்குத்தான் பெண் பார்த்திருக்கிறோம்.. அதுக்கு அவன் சம்மதம் இருந்தா மட்டும் போதும்...”

“பிள்ளைக்குத் தகப்பனா நான் மணமேடையில் நிற்க வேணாமாடி..?”

“அப்படி நீங்க நிற்கலைன்னா.. காலத்துக்கும் நாங்க யாரும் உங்க கூட நிற்க மாட்டோம்.. கடைசி வரைக்கும் நீங்க தனிமரமாய்த்தான் வாழனும்.. அதை நினைப்பில் வைத்துக்கங்க...”

பேசாமடந்தையான சுந்தரியா இது என்று நொந்து போய் விட்டார் பார்த்தசாரதி.. இங்கே இப்படியிருக்க.. காவ்யாவின் வீட்டில் தங்கியிருந்த சுமதியோ அம்புஜத்திடம் கொதித்துக் கொண்டிருந்தாள்...

“நாம பொண்ணு கேட்டா மட்டும் யோசிக்கனும்.. அதுவே உங்க அக்கா பேரன் பெண் கேட்டா மட்டும் ‘ஆகட்டுமா..?’ என்னத்தை நியாயம் இது..? நாம எதில குறைஞ்சு போனோம்..?”

“அதான் அவன் காதல் அது இதுன்னு சொல்கிறானே சுமதி..”

“சுத்தப் பொய்.. அப்படியிருந்த திருநெல் வேலியிலேயே நமக்குத் தெரிந்திருக்காதா.? இவனைக் கண்டாலே காவ்யாவுக்கு ஆகாது..”

“கார்த்திக்கை கண்டால் மட்டும் ஆகுமா..?”

“அத்தை...”

“ஆத்திரத்திலே எதைப் பேசினாலும் அது சரியாய் வராது சுமதி.. அர்ஜீனும் நம்ம வீட்டுப் பிள்ளைதான்.. அதை யோசி...”

அம்புஜம் கண்டிப்பாக சொல்லி விட்டாள்...

# 206

## *தென்றலெனும் தேரேறி...*
## *நீ வரவே ஆசைகொண்டேன்...*

*"தேரு பார்க்க வந்திருக்கும்*
*சித்திரைப் பொண்ணே...*
*உன்னைத் திருடிக் கொண்டு..*
*போகட்டுமா பத்தினிப் பெண்ணே.?*
*ஊரு பார்க்க மணமுடிப்போம்..*
*பொறுத்திருகண்ணா.. அப்போ*
*ஊர்வலத்தில் நாம் வருவோம்..*
*ஒன்னுள்ள ஒன்னா..."*

**பா**டல் உரக்க ஒலித்துக் கொண்டிருந்தது.. காவ்யாவின் விழிகள் அர்ஜீனைத் தேடின.. அவனும் அந்தக் கூட்டத்தில்தான் இருந்தான்.. திக்கு விஜயத்தில் மீனாட்சியம்மனின் தேரின் அருகே... அவளைப் பார்த்தபடி நடந்து வந்து கொண்டிருந்தான்.. அவள் பார்வையை அவன் பார்வை கவ்வியதும் வெட்கத்துடன் முகம் திருப்பிக் கொண்டாள் காவ்யா..

அதை ஜாடையாக பார்த்துக் கொண்டிருந்த அன்னபூரணிக்கு நடப்பது எதுவும் உவப்பானதாக இல்லை..

வந்திருக்கும் சொந்தபந்தங்கள் என்ன பேசுவார்களோ என்று அவள் நினைத்தாள்..

“அவங்க பெரிய கோடிஸ்வரங்களா இருக்கலாம் கண்ணா.. ஆனா நம்ம இனமில்ல.. உறவு மொறையில கேள்வி வந்தா பதில் சொல்ல முடியாதுப்பா.. அதனால முடியாதுன்னு சொல்லிரு...”

“அப்படி எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு சொல்லிற முடியாதும்மா...”

“இல்லப்பா... எனக்கு மனசு ஒப்பலை... இதுநாள் வரைக்கும் நம்ம குடும்பத்தில இப்படி எடுத்தேறி பொண்ண வெளியில கட்டிக் கொடுத்ததில்ல புதுசா வழக்கத்த மாத்த வேணாம்ப்பா...”

அன்னபூரணி சம்மதிக்க மறுத்தாள்.. தாயாரிடம் உட்கார்ந்து பேச முடியாத அந்தச் சூழலில் பேச்சு வார்த்தையை கண்ணதாசன் தள்ளிப் போட்டான்.. அந்தத் தருணத்தில் திருநெல்வேலியில் இருந்து மருக்கொழுந்தும்.. குமாரும் சித்திரைத் திருவிழாவுக் கென்று மதுரைக்கு வந்து இறங்கிவிட்டார்கள்..

“அய்யா...” மருக்கொழுந்து வாய் நிறைய அழைத்தபடி வந்து சேர...

“அட.. மருக்கொழுந்து..” என்று ஆச்சரியமானான் கண்ணதாசன்...

‘நம்ம ஐயாவா இது..’ ஆச்சரியப் பட்டுப் போனாள் மருக்கொழுந்து...

திருநெல்வேலியில் இருந்த வரைக்கும் இது போன்ற உற்சாக முகத்துடன் மருக்கொழுந்திடம் கண்ணதாசன் பேசியதே இல்லை...

'மதுரை மண்ணுக்குன்னு தனிப் பவர் இருக்கோ...'

அதிசயப் பட்டுப் போனவளாக.. வாயெல்லாம் பல்லாக..

"புள்ளைகளுக்கு லீவுங்கய்யா.. அவங்க தாத்தா பாட்டி வந்து கூப்பிட்டுக்கிட்டுப் போயிட்டாக.. நானும் இந்த மனுசரும் மட்டும் தனியா இருந்தோம்.. நம்ம பாப்பாகூட போனில பேசினப்ப அதுதான் ஏங்க்கா அங்கே உக்காந்து கிட்டு இருக்கே.. எங்க ஊரு சித்திரைத் திருவிழாவுக்கு வரச் சொல்லிட்டுதான வந்தேன்..? புறப்பட்டு வர வேண்டியது தானக்கான்னு கேட்டுச்சு.. எனக்கு இம்புட்டுச் சொன்னா பத்தாதா..? கண்ணுக்குள்ளேயே இருக்கிற பாப்பாவ நேரில பாத்துப் புடலாம்ன்னு இந்த மனுசரப் போட்டு படுத்தி எடுத்து லீவு வாங்க வைச்சு புறப்பட்டு ஓடி வந்தேன்.." என்று மூச்சு விடாமல் சொல்லிவிட்டு...

"எங்கேய்யா நம்ம பாப்பா..?" என்று தேடவும் செய்தாள்..

அப்போதுதான் சமையலறையிலிருந்து வெளியே வந்த அன்னபூரணி மருக்கொழுந்துவை பார்த்ததும்..

"நம்ம வீட்டில ஏதுப்பா பாப்பா..? இந்தப் பொண்ணு இங்க வந்து கைப்புள்ளய தேடுதே.." என்று மகனிடம்

கேட்டபடி மருக்கொழுந்தை ஏற இறங்க பார்வை யிட்டாள்...

“அம்மா..?”

கேள்வியைக் கேட்டுவிட்டு கண்ணதாசனின் பதிலை எதிர்பாராமல் அன்னபூரணியைப் பார்த்து...

“கும்பிடறேனுங்க அம்மா..” என்று வணக்கம் வைத்தாள் மருக்கொழுந்து...

“இரு.. இரு.. எதுக்காக இப்ப கும்பிடு போடற..?” சந்தேகத்தோடு கேட்டாள் அன்னபூரணி...

“தாயப் போல புள்ள.. நூலப் போல சேலம்மா...”

“எங்களுக்கும் இந்தச் சொலவடயத் தெரியும்.. நான் சொலவடயப் போட ஆரம்பிச்சா.. நீ வந்த வழியே திரும்பி ஊரப்பாத்து ஓடிப் போயிருவ.. யாருகிட்ட..? சொலவடக்கே சொலவடயா..?”

“ஆத்தி.. அப்புடியே எங்க ஐயாதான்.. அம்மா.. நானு பாப்பான்னு சொன்னதும் நீங்க இந்த வீட்டில ஏது பாப்பான்னு கேட்டிகளே.. அதுலயே நீங்கதான் ஐயாவுக்கு அம்மான்னு நிருபிச்சுட்டீங்க.. நம்ம ஐயாவும் இப்படித்தான்.. திருநெல்வேலிச் சீமையில என்னத் திட்டிக்கிட்டே இருப்பாக..”

“என்னது.. என்புள்ள சொல்லியும் உன் பழக்கத்த நீ இன்னும் மாத்தலையா..?”

“பாப்பான்னு கூப்பிட்டுப் பழகிட்டு வேற எப்படிம்மா கூப்பிடறது..? பாத்தீகளா மச்சான்.. என்னோட பாப்பா ஊரவிட்டு வந்தாலும் என்ன மட்டும் மறக்கல.. எங்கே பாப்பா..? எங்கே பாப்பா..?”

விட்டால் அந்த இடத்திலேயே காவ்யாவுக்கு தொட்டில் கட்டிப் போட்டு.. தூளியாட்டி தாலாட்டு பாட ஆரம்பித்து விடுபவளைப் போல மருக்கொழுந்து காவ்யாவைத் தேட ஆரம்பித்தாள்.. அங்கே வந்த உறவுக்காரப் பெண்ணொருத்தி...

“என்னாக்கா இது..? நம்ம உறவுமொறையில யாரும் கைப்புள்ளயோட வரலயே.. அப்புறம் இந்தப் புள்ள எந்தப் புள்ளயத் தேடுது..?” என்று சந்தேகம் கேட்டாள்...

அன்னபூரணி சிரித்து விட்டாள்... அவளுக்கு மருக்கொழுந்தின் அப்பழுக்கற்ற பாசத்தை பிடித்து விட்டது...

“நம்ம காவ்யாப் புள்ளயத்தான் தேடுது... கண்ணதாசனோட காவ்யா திருநெல்வேலிக்கு போயிருந் துச்சுல்ல.. அப்ப.. இந்தப் புள்ளதான் நம்ம காவ்யாவயும் வீட்டையும் பாத்துக்குச்சு..”

அன்னபூரணியின் கண்ணியமான அறிமுகத்தில் மருக்கொழுந்து நெகிழ்ந்து போனாள்.. அதற்குள் அவள் தேடிய காவ்யாப் பாப்பா மாடிப்படிகளில் தவழ்ந்து இறங்காமல் தடதடவென்று இறங்கி ஓடி வந்தாள்...

“அக்கா...”

“பாப்பா...”

அந்த அன்யோன்யப் பாசப் பிணைப்பில் பாவனா தான் ஏகத்துக்கும் பொறாமைப் பட்டுப் போனாள்...

“அதென்னடி.. முதலாளி வர்க்கமும் உன்மேல பித்தா இருக்குது.. தொழிலாளி வர்க்கமும் உன்னைக் கண்டா பாசமழையைப் பொழியுது.. என்ன சொக்குப்பொடிய போட்டு வைச்சிருக்க காவ்யா..?”

“இரு.. அப்புறமா வந்து எடுத்துக் கொடுக்கறேன்..”

காவ்யா கலகலத்துச் சிரித்தாள்.. அந்தச் சிரிப்பை அன்னபூரணிக்கு காட்டினான் கண்ணதாசன்...

“பாரும்மா.. இந்தச் சிரிப்ப இத்தன நாளா தங்கச்சி எங்கே ஒளிச்சு வைச்சிருந்துச்சு..? நீயே சொல்லு... பொண்ணு கேட்டவரு வேற இனம்தான்.. நம்ம விட பெரிய இடம்தான்... அசலுர்காரர்தான்.. ஆனாலும் வீடு தேடி குடும்பத்தோட வந்து உக்காந்து அம்புட்டுத் தைரியமா பொண்ணு கேட்டாருன்னா... அது யாரு கொடுத்த தைரியம்...?”

“உந்தங்கச்சி கொடுத்த தைரியம்ங்கிறயா..? திருவிழா முடியட்டும்டா கண்ணா.. இவளுக்கு திருவிழா கொண்டாடிப்புடறேன்...”

“நீ அதிலேயே இரு.. இதுக்கு திருவிழா கொண்டாடிப் புட்டு நீ நிம்மதியா இருந்துருவியா..? பாவம்மா.. சீக்காளிப் பொண்ணு...”

காவ்யாவுக்கு இல்லாத நோயை இருப்பதைப் போலச் சொல்லி முகத்தை சோகமாக வைத்துக் கொண்டான் கண்ணதாசன்... அவன் அன்னை குழம்பித் தவித்துப் போனாள்...

“சரக்குன்னா வயித்தைப் புடிச்சுக்கிட்டு வயித்து வலின்னு உக்காந்திருது.. நம்ம உறவு மொறையில இதக் கட்டிக் கொடுத்தா.. ஓடியாடி வேலை செஞ்சாகனும்.. வயித்து வலின்னு உக்காந்தா.. சீக்குக்காரப் புள்ளய ஏமாத்தி எங்க தலையில கட்டி வைச்சீங்களான்னு பஞ்சாயத்த கூட்டிருவாங்க.. பாத்துக்கம்மா.. அதுக்கப்புறம் உன் இஷ்டம்..”

புளியைக் கரைத்து அன்னபூரணியின் வயிற்றில் ஊற்றிவிட்டு ஏதுமறியாதவனைப் போல அகன்று விட்டான் கண்ணதாசன்.. அன்னபூரணிக்கு மனதைப் பிசைந்தது.. காவ்யாவைப் பார்த்தாள்.. அப்போது பார்த்து பாவனா சொன்ன ஏதோ ஒரு நகைச்சுவைக்கு வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள் காவ்யா.. அன்னபூரணியின் மனம் பதறியது...

‘பாவம் என் புள்ள.. மனசார சிரிக்கக் கூட என் புள்ளய இந்தப் பாழாப் போன வயித்து வலி விடலையே.. சிரிச்சா வயித்த வலிக்குது போல.. வயித்தப் பிடிச்சுக்கிட்டு இல்ல சிரிக்கிறா..’

அன்று முழுவதும் அவளுக்கு அதே சிந்தனைதான்.. வீட்டில் வந்து இறங்கியிருந்த விருந்தினர் கூட்டத்திற்காக அவர்களின் கிராமத்திலிருந்து வரவழைக்கப் பட்டிருந்த

தற்காலிக சமையல்காரம்மாவிடமும்.. வீட்டு வேலை-யாளிடமும் செய்ய வேண்டிய பதார்த்தங்களையும்.. வேலைகளையும் சொல்லிவிட்டு.. அவள் மகள்மீதே கண்ணாக அங்கேயே சுற்றிச்சுற்றி வந்தாள்...

சிவதாணு மகனிடம் பேசாமல் முறைப்புக் காட்டிக் கொண்டிருந்தார்.. அவரைத் தேடிவந்து திருக்குறளுக்கான விளக்கம் கேட்டான் கண்ணதாசன்...

"ஏம்ப்பா.. தந்தை மகனுக்காற்றும் உதவி.. சபையில் முன்னிருத்தச் செயல்ன்னா என்னப்பா அர்த்தம்..?"

ஏதுமறியாதவனைப் போல இமைகளைக் கொட்டிய படி குறள் விளக்கம் கேட்ட மகனிடம் பேச அந்த தந்தைக்கு விருப்பமில்லைதான்... அவன் குறளைத் தவிர வேறு எதைப் பேசியிருந்தாலும்.. அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டு.. போடா.. நீயுமாச்சு.. உன் பேச்சுமாச்சு.. உன் பேச்சு எனக்குக் காய் என்று விரோதம் காட்டி விலகிச் சென்றிருப்பார்தான்...

அதற்கு வழியில்லாமல் அவன்தான் குறள் விளக்கம் கேட்டுவிட்டானே.. அவனே அத்தி பூத்ததைப் போல அவரிடம் குறள்விளக்கம் கேட்கிறான்.. அந்தத் தருணத்தை தவற விட்டால் அவர் சிவதாணு அல்லவே..

ஆதலினால் முகத்தை படு இறுக்கமாக வைத்துக் கொண்டு முறைப்புடன் அவர் குறள் விளக்கம் சொன்னார்..

"அப்பனாகப் பட்டவன்.. தான் பெத்த மகனை எதிலயும் முன்னாடி நிக்கச் செய்யனும்.. அதாகப்பட்டது..

அவன வளத்து.. ஆளாக்கி.. பெரிய படிப்பு படிக்க வைச்சு.. பெரிய ஆபிசராக்கி அழகு பாக்கனும். அதுக்குப் பின்னால அந்த மகனாகப் பட்டவன்.. அந்த ஏமாந்த சோணகிரியான அப்பன.. கால் காசுக்கும் மதிக்க மாட்டாங்கிறதெல்லாம் வேற விசயம்... அந்த மரியாதய எல்லாம் அப்பனாகப் பட்டவன் எதிர்பார்க்கக் கூடாது..”

இப்படியாகப்பட்ட திருக்குறள் விளக்கத்தை எந்த வித்தகரும் அருளியிருக்க மாட்டார் என்ற நினைவில் கண்ணதாசனுக்கு சிரிப்புத்தான் வந்தது.. அப்படிச் சிரித்து வைத்தால் சிவதாணு திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறிவிடுவார் என்பதினால் அடக்கிக் கொண்டு அடுத்த குறளுக்கு விளக்கம் கேட்டான்...

“மகன் தந்தைக்காற்றும் உதவி.. இவன் தந்தை எந்நோற்றான்.. கொள் எனும் சொல்ன்னா என்னப்பா அர்த்தம்...?”

“மகனாகப் பட்டவன் அவன முன்னுக்கு கொண்டு வந்த அப்பனுக்கு.. பெருமை சேர்க்கனும்னு அர்த்தம்.. அதாகப்பட்டது.. இப்பேற்பட்ட மகனப் பெற இவனோட அப்பன் என்னவெல்லாம் புண்ணியம் பண்ணியிருக்கானோ ஏழேழு ஜென்மத்துக்கும் தவம் பண்ணியிருக்கானோன்னு அர்த்தம்.. எங்கே.. வள்ளுவர் சொன்னதயெல்லாம் யாரு இங்கே காதில போட்டுக்கிறாங்க..? தலையெடுத்ததும் தகப்பன்காரன செல்லாக்காசாக்கி மூலையில தூக்கிப் போட்டுட்டு தான் ராஜ்ஜியம் கட்டி ஆளலாமுன்னுல்ல பாக்கறானுக...”

“எல்லாம் சரிதான்ப்பா.. அப்பனுக்கும்.. மகனுக்கும் குறள் எழுதி வைச்ச வள்ளுவரு.. அப்பனுக்கும்.. மகளுக்குமான கடமைகளைப் பத்தி எந்தக் குறளும் எழுதலையா..?”

இப்படிக் கேட்ட மகனை சேர்த்து வைத்த கோபத்தை யெல்லாம் ஒன்று திரட்டி.. கண்ணகி மதுரையைப் பார்த்த பார்வையைப் போல எரிதணல் பார்வையினைப் பார்த்து வைத்தார் சிவதாணு...

“இப்புடி விதண்டாவாதம் பேசத்தான் விட்டவிடி காலயில திருக்குறளுக்கு விளக்கம் கேட்டு வந்து நின்னினயா..?”

“இல்லப்பா.. நிசமாத்தான் கேக்கறேன்.. என்னப் பெரிய படிப்பு படிக்க வைச்சீங்க.. அதே மேல்படிப்ப காவ்யா படிக்க ஆசைப்பட்டப்போ ஏன்ப்பா தடை போட்டிங்க..? அவளயும் சபையில முன்னிருக்கச் செய்திருக்கலாமில்ல..?”

“என்மேல குத்தம் சொல்றியா..?”

“இல்லப்பா.. தங்கச்சி பாவம்ன்னு சொல்ல வர்றேன்.. அவ ஆசைப்பட்ட படிப்புத்தான் கிடைக்கல.. வாழ்க்கையாவது கிடைக்கட்டுமே.. வள்ளுவரு அறத்துப் பால்.. பொருள் பாலை மட்டுமா எழுதினாரு..? இன்பத்துப் பாலையும் சேர்த்து எழுதலையா..? யான் நோக்க நிலம் நோக்கும்.. நோக்காங்கால்.. தான் நோக்கி மெல்ல நகும்ன்னு.. புருசன் பொண்டாட்டியப் பத்தியா அவர்

சொல்லி வைச்சாரு..? காதலன் காதலியைப் பத்தித்தான சொல்லி வைச்சாரு..?”

மகனின் கேள்வியில் முகம் மாறிப் போன சிவதாணு யோசனையுடன் அவன் முகத்தை கூர்ந்து பார்த்தார்...

“காவ்யா அந்தப் பையன காதலிக்கிறான்னா சொல்ற..?”

“அப்படியில்லாமலா அவரு வீடு தேடி வந்து பொண்ணு கேக்கிறாரு..?”

“இத்தன நாளா நான் கட்டிக் காப்பாத்தி வந்த மரியாதய காத்தில பறக்க விடச் சொல்றியாப்பு..?”

“எதுவும் பறக்காது.. அப்பா.. காவ்யா பெரிய இடத்தில வாக்கப்பட்டுப் போனா.. அதில உங்களுக்கு சந்தோசமில்லயா..?”

“பணங்காசைப் பாத்ததும்.. இனம் விட்டு இனம் பொண்ணுக் கொடுத்துட்டான் சிவதாணுன்னு நம்ம உறவுமொறை பேசும்...”

“நீங்க அதை யோசிக்கறிங்க.. நான் வேற ஒன்னை யோசிக்கறேன்...”

“என்னப்பு..?”

“நம்ம உறவு மொறையில பொண்ணக் கொடுத்தா அவங்க காவ்யாவ அடுப்பங்கரைக்குள்ள தான அடைச்சு வைப்பாங்க.. காவ்யாவ மேல படிக்க வைப்பாங்களா..? பெரிய பதவியில உக்கார வைப்பாங்களா..? அர்ஜீனுக்கு

பொண்ணக் கொடுத்தா அவரு அதைச் செய்வாரு.. அத்தோட காவ்யாவத்தான் நாம இனம் விட்டு இனம் பொண்ணு கொடுக்கப் போறோம்.. நான் அப்படியில்ல.. நம்ம இனத்தில.. நம்ம உறவுமொறையில.. உங்க மனசுக்கேத்தபடிதான் பொண்ணுக் கட்டுவேன்.. இத நான் கொடுக்கிற வாக்கா வைச்சுக்கங்க.. நம்ம வீட்டுப் பொண்ணுக்கு நல்ல வாழ்க்கை காத்திருக்கப்ப அத நாமளே தட்டி விடக் கூடாதுப்பா..”

சிவதாணுவை யோசிக்க விட்டு விலகி வந்து விட்டான் கண்ணதாசன்.. அவர் யோசித்தார்.. அர்ஜீனின் கண்ணியமான நடவடிக்கை... பண்பாடான பேச்சு.. ஆளுமையான தோற்றம்.. அயரவைக்கும் கம்பீரம் என்று அவர் மகன் அர்ஜீனைப் பற்றிய உயர் மதிப்பீடுகளை சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்தது...

## 207

*மீனாட்சி சொக்கநாதன் கல்யாணத்தில்..*
*உன்பக்கத்தில் நானிருக்க ஆசைகொண்டேன்...*

*“மதுரை மருக்கொழுந்து வாசம்..*
*என் ராசத்தீ..*
*உன்னுடைய நேசம்...”*

**ம**துரையின் நான் மாட வீதிகளில் இருந்த கடைகளில் உற்சாகமான பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன.. கூட்டத்தோடு நகர்ந்த அர்ஜீன் அன்று பட்டு வேட்டி.. பட்டுச் சட்டையில் இருந்தான்.. அவன் விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்றில் மனம் மயங்கினாள் காவ்யா.. அவன் விழிகள் சொல்லிய செய்தியை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.. ஆனாலும் அவன் அனுப்பிக் கொண்டிருந்த அந்த ரகசியசெய்தி அவளுக்கானது மட்டும் என்பதில் அவள் மனம் உவப்பாக இருந்தது..

அவள் அன்று அரக்கு வண்ணத்தில் பொடிப் பொடியான கட்டமிட்ட பட்டுப்புடவையில் அம்சமான அழகோடு இருந்தாள்.. கூட்டத்தில் நெரிபட்டதால் அவள் மேல் உதட்டில் அரும்பிய வியர்வைத் துளிகளில் அர்ஜீனின் மனம் மையம் கொண்டது.. அதைத் துடைத்து விட அவன் விரும்பினான்.. அது முடியாமல் போனதில் அவன் பார்வை அவளை வருடி மீண்டது...

தேவராஜன் வெறி பிடித்தவனைப் போல இருந்தான்.. அவனும் சித்திரைத் திருவிழா ஆரம்பித்த நாள் முதலாய் காவ்யாவின் குடும்பத்தினர் போகுமிடமெல்லாம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறான்.. ஒரு நொடி கூட அவனால் காவ்யாவின் பார்வையை சந்திக்க முடியவில்லை.. அதை வெகு எளிதாக செய்து கொண்டிருந்த அர்ஜீனின் மீது அவனுக்கு வெறி.. வெறியாக வந்தது..

துரியோதனனும் செல்வியும் அங்குதான் இருந்தார்கள்.. அவர்கள் கூட இருந்த தேன்மொழியின் கண்கள் கண்ணதாசனை பின் தொடர்ந்தபடி இருந்தன.. அவனும் அதை உணர்ந்தவனாக அடிக்கடி அவள் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தான்.. அவன் பார்வையைச் சந்திக்கும் நொடிகளில் தேன்மொழி தன் உடலுக்குள் மின்சார அதிர்வை உணர்ந்தாள்...

நேகா பல்லைக் கடித்தபடி பெண்புலியாய் கார்த்திக்கை முறைத்துக் கொண்டிருந்தாள்.. அவன் அதைக் கண்டு கொள்ளாமல் அம்புஜத்திடம் திருவிழாவைப் பற்றி அவனுக்குத் தெரிந்த விவரங்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தான்..

‘இப்ப.. இதுதான் ரொம்பவும் தேவை போல பேசிக்கிட்டிருக்கானே.. இவனென்ன தத்தியா..? இல்லை.. புத்திசாலியா..?’

கார்த்திக்கை எதனுடன் இணை கூட்டுவது என்று புரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தாள் நேகா..

பார்த்தசாரதியோ.. கார்த்திக்கின் காதுகளில் நேகா பொழிந்து கொண்டிருந்த வசை மாரியை.. காதல் வசன மாரியென்று கற்பனை செய்து கொண்டு துன்பப் பட்டுக் கொண்டிருந்தார்..

‘சரவணனுக்கு யோகம் அடிச்சிருமோ.. இவ அவன் வீட்டு மருமகளாகி விடுவாளோ..’ நினைக்கும் போதே அவருக்கு வயிறு எரிந்தது..

பாவனா காவ்யாவின் காதோரமாக அர்ஜீனைப் பற்றியும்.. கார்த்திக்கின் குரங்குச் சேட்டைகளைப் பற்றியும் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.. அவள் மஞ்சள் வண்ணத்தில் அரக்குக் கரையிட்ட பட்டுப் புடவையுடன் இருந்தாள்...

பெண்களின் கையில் மஞ்சள் குங்குமம்.. மாங்கல்யக் கயிறும் கொடுக்கப்பட்டன.. அவர்கள் அதைக் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.. மீனாட்சி திருக்கல்யாணம் வெகு விமரிசையாக நடக்க ஆரம்பித்தது.. சொக்கநாதர் மீனாட்சியின் சங்குக் கழுத்தில் திருமாங்கல்யக் கயிற்றைக் கட்டிய அதே தருணத்தில் கோவிலில் கூடியிருந்த பெண்கள் தங்கள் கழுத்தில் மஞ்சள் கயிற்றை கட்டிக் கொண்டார்கள்...

காவ்யாவும்.. பாவனாவும்.. கையிலிருந்த மாங்கல்யக் கயிற்றைப் பிடித்தபடி ஏதோ பேசிக் கொண்டிருந்த போது.. அர்ஜீனும்.. கார்த்திக்கும் அவர்களை அணுகினார்கள்.. நொடிப் பொழுதில் காவ்யாவின் கையிலிருந்த மஞ்சள் கயிற்றை அர்ஜீனும்.. பாவனாவின் கையிலிருந்த மஞ்சள் கயிற்றை கார்த்திக்கும் கைப்பற்றி.. அவர்களின் கழுத்துக் களில் கட்டி விட்டார்கள்..

அவள் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டிக் கொண்டிருந்த அர்ஜீனை திகைப்புடன் நோக்கினாள் காவ்யா.. பாவனாவோ அவள் கழுத்தில் கார்த்திக் மஞ்சள் கயிற்றை கட்டி விட்டதில் அதிர்ந்திருந்தாள்.. என்னதான் வாழ்க்கையை இலகுவாக எடுத்துக் கொண்டு கலகலப்பாக வளைய வந்தாலும் அவளும் பெண்தானே.. அவளால் எதிர்பாராமல் நடந்த அந்த நிகழ்வினை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை..

"அர்ஜீன்.."

"கார்த்திக்.."

பார்த்தசாரதியும்.. சுமதியும் கோபக்குரல்களை எழுப்பினார்கள்.. கண்ணதாசன் அதை எதிர்பார்க்கவில்லையென்பதை மாறிப் போன அவன் முகமே காட்டிக் கொடுத்தது.. இருந்த போதிலும்.. கோபமாக பாய்ந்த சிவதாணுவையும்.. அவனது உறவினர்களையும் அவன் தடுத்து நிறுத்தி விட்டான்...

"எதைப் பேசறதா இருந்தாலும் வீட்டில் போய் பேசிக்கலாம்.. இது கோவில்.."

அவன் கண்டிப்பில் அவர்கள் அடங்கினாலும்.. அனைவரின் விழிகளிலும் கொந்தளிப்பு இருந்தது...

**அது** விசாரனைக் கமிசனைப் போலவே இருந்தது.. கூட்டப் பட்டிருந்த குடும்பப் பஞ்சாயத்தில் பஞ்சாயத்து தலைவராக சிவதாணுவும்... உதவித் தலைவராக கண்ணதாசனும் பொறுப்பேற்றிருந்தார்கள்.. வாதி.. பிரதிவாதிகளாக அர்ஜீன், கார்த்திக் ஒருபக்கமும்.. பார்த்தசாரதியும் சுமதியும் எதிர் பக்கமுமாக நின்றிருக்க.. மையப் பகுதியில் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறை மிரட்சியுடன் தொட்டுப் பார்த்தபடி காவ்யாவும் பாவனாவும் நின்றிருந்தார்கள்..

சிவதாணு அதுநாள்வரை முறுக்காத மீசையை முறுக்கியபடி பார்த்தசாரதியைப் பார்த்து கர்ஜித்தார்..

"உங்க மகன் செஞ்சிருக்கிற காரியத்தைப் பார்த்திங்களா ஓய்..?"

“அதைப் பார்த்துத் தொலைத்ததினாலே தானே இங்கே வந்து நிற்கிறேன்..?”

இல்லாவிட்டால் இங்கே வந்து மனிதன் நிற்பானா என்ற தோரணையில் பார்த்தசாரதி பேசி வைக்க.. சிவதாணுவின் உறவினர் ஒருவர் சிவந்த விழிகளுடன் பார்த்தசாரதியை உறுத்துப் பார்த்தார்...

“என்ன மச்சான்.. பட்டணத்துக்காரரு பேச்செல்லாம் ஒரு தினுசா இருக்கு..? நம்ம பேச்சு எப்படியிருக்கும்ன்னு காட்டிரலாமா..?”

அவர் முதுகுக்குப் பின்னால் கையை விட.. ஆனந்தி பயந்து போனாள்..

“டாடி.. கீப் கொயட்..” தகப்பனின் காதோரமாக முணுமுணுத்தாள்...

“ஏம்மா..?” பார்த்தசாரதி அடங்குவேனா என்று அடம் பிடித்தார்...

“அந்தாளு முதுகுக்குப் பின்னாலே எதையோ எடுக்கப் பார்க்கிறாரு..” மகள் எச்சரித்தாள்..

“வியர்வையைத் துடைக்க கர்சீப்பை எடுப்பானாயிருக்கும்..”

அலட்சியமாகச் சொன்ன பார்த்தசாரதி... அந்த மனிதர் கைக்குட்டைக்குப் பதிலாக அருவாளை எடுக்கவும் அரண்டே போனார்..

“இதை எதுக்கும்மா சட்டைக்குள்ள பதுக்கி வைச்சிருக்கான்..?”

“அது அப்படித்தான்.. இது அவங்க ஊரு.. அனாவசியா வார்த்தையை விடாதீங்க...”

அருவாளை எடுத்த மனிதர்.. அதைக் கையில் தேய்த்துக் கூர்மையை பரிசோதித்தபடி பார்த்தசாரதியை பார்த்த பார்வையில்.. அவசியத்துக்கு கூட வாயைத் திறக்கக் கூடாது என்ற முடிவுக்கு அவர் வந்துவிட்டார்...

“என்ன அர்ஜீன்.. இப்படிப் பண்ணிட்டிங்க..?”

முறைப்பாய் முகத்தை வைத்துக் கொண்டு தாழ்ந்த குரலில் அர்ஜீனுடன் சண்டை போடும் பாவனையில் விளக்கம் கேட்டான் கண்ணதாசன்..

“வேற என்ன செய்யலாம்ங்கறிங்க..? நீங்க சொன்னபடி நான் என் குடும்பத்தோடு வந்து உங்க வீட்டில உட்கார்ந்து உங்க தங்கையை பெண் கேட்டு விட்டேன்.. உடனே கல்யாணத்துக்கு நாள் குறித்துரலாம்ன்னு உங்க வீட்டில காலண்டரை கையில் எடுத்தாங்களா..? இல்லையே.. என்னவோ தேசம் விட்டு தேசம் வந்து பெண் கேட்டு விட்டதைப் போல உங்க அப்பாவும்.. அம்மாவும் இந்த முழி முழிக்கிறாங்க.. இவங்களாவது பரவாயில்லை.. உங்க தங்கை என்னடான்னா நீங்க பெண் கேட்டுட்டா நான் உடனே உங்களுக்கு கழுத்தை நீட்டி விடனுமா..? நீங்க பெண் கேட்டதாலே உங்க அப்பா பேசின பேச்சு மாறிவிடுமான்னு லெக்சர் கொடுக்கிறா.. இவங்களை கன்வின்ஸ் பண்ணி.. அதுக்கப்புறமா உங்க தங்கையை கன்வின்ஸ் பண்ணி.. அவ கழுத்தில நான் தாலியைக் கட்டறதுக்குள்ளே ஓல்டு மேனாகிடுவேன்.. அதான்..

யூத்தா இருக்கிறப்பவே மேரேஜ் பண்ணி இந்த வாழ்க்கையை வாழ்ந்து விடனும்னு தடாலடியா இப்படியொரு காரியத்தைப் பண்ணினேன்.. அது தப்பில்லங்க..”

“உங்களுக்கு நியாயத்தை சொல்லிட்டிங்க.. உங்க தம்பி செஞ்ச காரியத்துக்கு என்ன நியாயத்தைச் சொல்லப் போறிங்க..? பாவனா எங்களை நம்பி எங்க வீட்டுக்கு விருந்தாளியாய் வந்த பொண்ணு.. நாளைக்கு அவங்க அப்பாம்மா கேக்கிற கேள்விக்கு யாரு பதில் சொல்றது..? நீங்களா பதில் சொல்லப் போறிங்க..? நாங்கள்ல பதில் சொல்லனும்..?”

“அவன் கதையே வேறங்க.. சித்தி மனசில அந்த நேகாவை இவனுக்கு மேரேஜ் பண்ணி வைத்துரனும்னு தோணிருச்சு.. அவங்க பெண் கேட்டு தராத காவ்யாவை நான் மேரேஜ் பண்ணிக்கிட்டா அது அவங்களுக்கான தோல்வின்னு அவங்க நினைக்கிறாங்க.. பதிலுக்குப் பதிலா.. எங்க டாடி மருமகளாக்கிக்கனும்னு ஆசைப்பட்ட நேகாவை அவங்க வீட்டு மருமகளாக்கிக்கிட்டா.. எங்களை ஜெயித்த மாதிரி இருக்கும்ன்னு அவங்க கணக்கு போடறாங்க.. பயலுக்கு தப்பிக்கும் மார்க்கம் தெரியலை.. பட்டுன்னு பாவனா கழுத்தில் தாலியைக் கட்டிட்டான்..”

“அதுக்கு பாவனாவோட சம்மதம் வேணுமா.. வேணாமா..?”

“வேணும்தான்.. இந்தப் பாவனாவும் சும்மாயிருக் கனுமில்ல.. யு ஆர் ஸோ ஹேண்ட்சம்ன்னு கார்த்திக்கிடம்

சொல்லியிருக்கிறா.. போதக்குறைக்கு.. இவன் காதுபட.. கார்த்திக்கிற்கு என்னடி குறை.. அவரை மேரேஜ் பண்ணிக்கிற பெண் லக்கிடின்னு காவ்யாவிடம் சொல்லி யிருக்கிறா... இவனுக்கு இது போதாதா..?"

"இதை அவங்க அப்பாம்மாவிடம் நான் சொல்ல முடியுமா..?"

"நான் சொல்றேன்.. பாவனாவுக்கு இந்த மேரேஜில் சந்தோசம்தான்.. கார்த்திக் அவசரப்பட்டதிலயும் ஒரு அர்த்தமிருக்கு.. சித்தப்பா.. சித்தி சொல்கிறதை செய்து விடுகிறவர்.. நேகாவை சைட் அடிக்கலாம்.. மேரே ஜெல்லாம் பண்ணிக்க முடியாதுன்னு கார்த்திக் சொல்கிறான்.. எனக்கும் அவ எங்க குடும்ப உறவுக்குள்ளே மேரேஜ் பண்ணிக்கிட்டு உறவுக்காரியா மாறிப் போகிறதில விருப்பமில்ல..."

இதில் கண்ணதாசனுக்கும் உடன்பாடு இருந்தது.. சிவதாணு சப்தம் போட.. உறவுக்காரர்கள் ஒன்று கூட.. அவன் அனைத்துக்கும் சமாதானம் சொன்னான்.. நடந்து விட்ட நிகழ்வை மாற்ற முடியுமா என்று அன்னபூரணியிடம் கேட்டான்.. அவளைக் காவ்யாவின் கண்ணீர் முகம் கரைத்து விட்டது.. ஒருவழியாக மலையேறிய மனிதர்கள் மலையிறங்கினார்கள்...

"ஆனாலும் இது அவசரக் கல்யாணம்ப்பா.. முறப்படி பத்திரிக்கை அடிச்சு ஊரக் கூட்டி நடத்தினாத்தான நம்ம புள்ளைக்கும் பாதுகாப்பு..?"

முரட்டு மீசைக்காரர் மீசை மேல் கைபோட்டு பார்த்தசாரதியைப் பார்த்தபடியே உறும.. அவர் எதற்கு வம்பு என்று மகனே பதில் சொல்லட்டும் என்று வாயை இறுக மூடிக் கொண்டார்...

“என்னோட மேரேஜீம் சரி.. கார்த்திக்கோட மேரேஜீம் சரி.. முறைப்படி கிராண்டா சென்னையில நடக்கும்.. அதுக்கு நான் கேரண்டி...”

அடுத்த நாள் அழகர் ஆற்றில் இறங்கும் நாள் வந்தது.. கடுகு விழக்கூட இடமில்லாத வைகையாற்றுக் கரையில் அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவைப் பார்க்க போனபோது அர்ஜீனை காவ்யாவின் விழிகள் தேடின... அவன் அதே பட்டுவேட்டி சட்டையுடன் அவர்களின் வரவுக்காக காத்திருந்தான்... அவளின் கண்களின் மின்னலில் அருகே வந்தவன் அவள் காதோரமாக...

“மதுரைக்கு மாப்பிள்ளையாகிட்டேண்டி.. கோட்டும்.. சூட்டுமா வந்தா நல்லாயிருக்காது.. ஜீன்ஸ் பேண்டும்.. கார்கோ சட்டையுமா வந்தாலும் தோதாயிருக் காது.. அதான் உன் கண்டாங்கி பட்டுப் புடவைக்கேத்த மாதிரி நானும் வேட்டி... சட்டைக்கு மாறிட்டேன்.. எப்புடி ஐயா.. அழகரப் போல அழகாயிருக்கேனா..? நீயே சொல்லுடி.. நீதான்.. கள்ளழகரோட அழகப்பத்தி காவியம் சொல்கிறவளாச்சே...”

கண்சிமிட்டியவன் அழகாகத்தான் இருந்தான்.. சிகப்புக் கலரில் மஞ்சள் கட்டம் போட்ட பட்டுப் புடவையும்.. சிகப்புக் கலர் ஜாக்கெட்டுமாக.. மதுரையின்

தமிழ் மகளாக தலையில் மல்லிகையும்.. நெற்றியில் சிகப்புப் பொட்டுமாக மிளிர்ந்த காவ்யாவின் பக்கத்தில் கூட்டத்தை சாக்காய் வைத்து ஈஷிக் கொண்டான்.. அவன் கைவளைவிற்குள் அவள் இருந்ததை நேகாவின் கண்கள் பொறாமையுடன் பார்த்தன...

சித்திரைத் திருவிழா முடிந்ததும் அர்ஜீன் வாக்குக் கொடுத்தபடி அவனுடைய திருமணத்தையும்.. கார்த்திக் பாவனாவின் திருமணத்தையும் வெகு விமரிசையாக நடத்திக் காட்டினான்..

# 208

*நான் சொல்லாத பொழுதினிலும்...*
*நீ எனையுணர ஆசைகொண்டேன்...*

**அ**ர்ஜீன் அவளை நெருங்கினான்.. மனம் படபடக்க.. காவ்யா பின் வாங்கினாள்.. அவளது கைவிரல்கள் நடுங்கின.. அறையில் பரவியிருந்த மலர்களின் வாசனை அவள் நாசிக்குள் நுழைந்து ஏதோ செய்தது.. கட்டிலைப் பார்த்தாள்.. மல்லிகை மலர்கள் அதில் பரந்து விரிந்து பரப்பப் பட்டு அவளைப் பார்த்துச் சிரித்தன...

“மதுரை மல்லிடி..” கண்சிமிட்டினான் அர்ஜீன்...

“என் மனசை மயக்கினவளை இந்த மல்லிதான் அடிக்கடி நினைவுபடுத்தி இதமாக கொன்னுச்சு.. அதான்.. பழி தீர்க்க.. இன்னைக்கு இதை ஒரு வழி பண்ணிரனும்ன்னு கட்டில் பூரா பரத்திட்டேன்.. ஆறு கூடைடி.. ஸ்பெசலா ஆர்டர் பண்ணி.. மதுரையில இருந்து வரவழைச்சேன்...”

அவன் போதையுடன் அவளை விழுங்கி விடுபவனைப் போல பார்வையில் மேய்ந்தபடி.. சொல்லச் சொல்ல.. காவ்யாவுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.. அவனது பார்வையில் உடல் சூடேறியவள்...

‘வெட்கம் கெட்ட மனிதன்.. பாக்கிற பார்வையைப் பார்..’ என்று மனதுக்குள் செல்லமாக திட்டித் தீர்த்தாள்.. அந்த வெட்கம் கெட்டவனின் பார்வையால் ஒன்றும் அவள் சிரமப்பட்டு விடவில்லை.. மாறாக அவன் பார்வை சொல்லிய செய்திகளில் எதிர்பார்ப்புதான் அவள் உடலில் கிளர்ந்து எழுந்தது...

கட்டிலைச் சுற்றித் தொங்க விடப்பட்டிருந்த மல்லிகைச் சரங்கள்.. இடைவெளியில்லாமல் நெருக்கமான திரையைப் போல கட்டிலைச் சுற்றித் தொங்கியதில்.. கட்டில்.. பூக்களால் செய்யப் பட்ட.. பூக்கட்டிலைப் போலவும்.. பூங்குடிலைப் போலவும் காட்சியளித்தது...

“வா.. காவ்யா..” தாகத்துடன் கரம் விரித்தான் அர்ஜீன்...

அந்தக் கைகளுக்குள் புகுந்து கொள்ள வேண்டு மென்று மனம் துடித்தாலும் வெட்கம் அதைத்

தடுத்ததினால்.. கண்களில் கள்ளத்தனத்துடன் கூடிய எதிர்பார்ப்புமின்ன கன்னம் சிவக்க.. பின் வாங்கினாள் காவ்யா...

“பின்னாலேயே போனா.. எங்கேடி போக முடியும்..? இந்த நான்கு சுவருக்குள்ள மாட்டிக்கிட்டு இருக்கடி காவ்யா.. தப்பித்து ஓட உன்னால முடியாது.. இனித் தப்பிக்கவும் நான் விடமாட்டேன்..” போதையுடன் அவளை நெருங்கினான் அர்ஜீன்...

காவ்யாவின் கால்கள் நடுங்கின.. அவள் அவனை விட்டுத் தப்பித்துப் போக நினைக்கிறாளா..? இனி அப்படி நினைக்க முடியுமா..?

அவன்தான் அவள் கழுத்தில் தாலியைக் கட்டி.. அவளை சிறை பிடித்து விட்டானே.. அவள் மனதில் எழுந்த ஆசையுணர்வுகளுக்கு அணை போட வேண்டிய அவசியமில்லாமல் செய்து விட்டானே..

காவ்யாவின் கழுத்தில் மின்னிய புத்தம்புது மஞ்சள் கயிறு அவள் அவனின் புதுமனைவியென்று உணர்த்த.. விலங்குகளை உடைத்த வேட்கையுடன் அவளை நெருங்கினான் அர்ஜீன்...

பின்வாங்கியவள் அதற்கு மேல் போக முடியாமல் சுவர் தடுக்க.. அதில் சாய்ந்து நின்றவளின் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பில் அவன் கள் தேடும் வண்டானான்...

“இனி எங்கேடி ஓடுவ..?”

அவன் ஆவேசத்துடன் அவளை ஆக்ரமித்ததில் அவன் கைகளுக்குள் அவள் அகப்பட்டுக் கொண்டாள்..

இறுக்கித் தழுவி.. எழும்புகள் நொறுங்கும் அளவிற்கு அவனது ஆசையை வெளிப்படுத்தியவன்.. அவள் காதோரமாக குனிந்து...

*"என்னை விட்டு ஓடிப் போக முடியுமா..?*
*நாம் இருவரல்ல..*
*ஒருவர் அது தெரியுமா..?"*

என்று பாடினான்...

காவ்யா கிறங்கிப் போனாள்.. எங்கோ வான்வெளியில் பறப்பதைப் போல அவளுக்கு இருந்தது.. மாதக் கணக்கில் அடக்கி வைத்திருந்த ஆசைகள் எல்லாம் அணையுடைத்த வெள்ளமாக கரையுடைத்து ததும்பியதில் அவனது சட்டைக் காலரை இறுக்கிப் பிடித்து.. அவன் முகத்தை அவள் முகம் நோக்கி வளைத்தாள்..

"காவ்யா.."

கள் தேடிய வண்டானவன்.. கள்ளுண்ணப் போகும் வண்டாக ஆவலுடன் அவள் இதழ் தேடிக் குனிந்தான்.. அவன் இதழ்கள் அவள் இதழ்களில் அழுந்தப் பதிந்து இறுக்கிக் கொண்டதில் அவள் வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன...

"ஹம்மா.."

இதமான அந்த இம்சையைத் தாங்க முடியாமல் அவள் மனதுக்குள் தவித்து.. கண்மூடி அவன்மீது சரிந்தாள்..

“இதுக்கே இப்படின்னா.. இன்னும் எத்தனையோ இருக்கேடி...” அவனது ஆண்மை ததும்பும் குரல் அவள் காதோரமாக கிசுகிசுத்தது...

“வேண்டாம்..” பலவீனமான அவளது மறுப்பை லட்சியம் செய்யாமல் அவன் கைகள் அத்துமீறி.. அவளது உடல் முழுவதும் பிரவேசிக்கத் தொடங்கின..

அர்ஜீனின் கைகள் முன்னேறின.. காவ்யா கண்மூடிக் கிறங்கினாள்.. அவள் தோளில் படிந்த அவன் கைகள் அணைத்து இறுக்கி முன்னேறியதில் அவள் உடலில் இனம் புரியாத இம்சை தோன்றியது.. அடிவயிறில் கிளர்ந்து எழுந்த அந்த இம்சை அவள் உடலின் அனைத்துச் செல்களிலும் ஆக்ரமித்தபோது அவள் தன் வயமிழந்து அவன் மேல் சாய்ந்தாள்.. அதற்காகவே காத்திருந்தவன் அவளை இறுக்கித் தழுவி இழுத்து தன்னோடு பிணைத்துக் கொண்டான்...

“ஹ...” தாள முடியாத தவிப்புடன் அவள் அரற்றினாள்...

அவளின் அந்தத் தவிப்பில் அவனுக்குள் இருந்த ஆவேசம் கட்டவிழ்ந்தது.. அவன் முரட்டுத்தனமாக அவள் முகம் பற்றி திருப்பி அவள் முகம் நோக்கிக் குனிந்தான்.. அவள் முகத்தோடு அவன் முகம் வைத்த அந்த நொடியில் அவள் இமையிரண்டும் கண்களை மூடிக்காவல் செய்தன...

“எத்தனை மாதமா படுத்தி எடுத்தடி...”

அவன் தாபத்தில் விளைந்த கோபத்துடன் அவளை தன்னுள் புதைத்துக் கொண்டான்.. புதையுண்டு

போனவளுக்கு அவனது ஆவேச அணைப்பில் மூச்சுத் திணறினாலும்.. விடுபட மனதில்லாமல் தானும் சேர்ந்து புதைந்து போனாள்..

அவன் கைகள் தடைகளை உடைத்தன.. அவன் தொட அவள் கிறங்கி நிற்பது ஒன்றும் புதிதான ஒன்றில்லைதான்.. ஆனால்.. இது போன்ற சொந்தத்துடன் எந்தவிதக் குற்றவுணர்வுகளும் தடைபோடாமல்.. மனம் பிணைத்த தளைகளிலிருந்து விடுபட்டு ஒருவரை யொருவர் ஆக்ரமிக்கத் துடிக்கும்.. இந்தத் துடிப்பு அவளுக்குப் புதிது...

அவள் இதழ்மீது இதழ் புதைத்தவன் விடுவிக்க மனமில்லாமல் நீண்ட நேரமாய் அங்கேயே தங்கிவிட.. அவளுக்குள் 'ஹோ'வென்ற சப்தத்துடன் பேரலை ஒன்று எழுந்து நின்றது...

அவன் முதுகினில் படர்ந்த அவளது கைகள் பற்று கோலைத் தேடிப் படரும் கொடியாய் அவன் முதுகெங்கும் பரவிப் படர்ந்த போது எழுந்த இதமான இம்சையில் அவர்கள் இருவருமே சேர்ந்து வதைபட்டார்கள்...

சுகமான வதை அது.. அவளுக்குப் பிரியமானவன் அவளுக்குப் பிரியமான வகையில் அவளை வதைத்துக் கொண்டிருந்த வதை அது.. அவனுக்குப் பிரியமானவளை அவனுக்குப் பிரியமான வகையில் அவன் தண்டித்துக் கொண்டிருந்த தண்டனை அது...

அவன் கைகளுக்குள் சிறைபட்டவளுக்கு அது சிறையாகத் தோன்றவில்லை.. அவன் தண்டனையைத் தாங்கிக் கொண்டவளுக்கு அதிலிருந்து விடுபட மனமில்லை..

அவள் தோள்களை அழுத்தி அவன் பிடித்திருந்த தால் உண்டான வலி.. இன்பமான வலியாக அவளைத் தீண்ட.. அவள் கிறங்கித் தவித்தாள்..

நீண்ட நெடுநேரத்திற்குப் பின்னால் அவள் இதழ்களை விடுவித்தவனின் கண்களில் திருப்தி தெரிய வில்லை.. இன்னும் வேண்டும் என்ற தீயின் தாகம் தெரிந்தது..

தீராத தாகம் அது.. என்று அவன் நான் மாடக் கூடலின் வீதியொன்றில் அந்தத் துடுக்குத்தனமான பெண்ணைச் சந்தித்தானோ.. அன்று அவன் மனதில் தோன்றிய தாகம் அது.. என்று அவள் தோள் தொட்டு இழுத்து அணைத்து.. யாருமில்லா வேனுக்குள்ளே.. அவள் காதோரமாக 'ஐ லவ் யு..' என்று கிசுகிசுத்து அவன் காதலைச் சொன்னானோ.. அன்று தோன்றிய தாகம் அது..

அவன் மனம் கவர்ந்த மகராசி.. உடனடியாக அவன் காதலை ஒப்புக் கொள்ளாமல் ஆறு மாதங்களுக்கும் மேலாக அவனை அலறவிட்டாள்.. கடைசியில் அவன் கனடா கிளம்பப் போகிறான் என்று தெரிந்ததும் அலறியடித்துக் கொண்டு அவள் காதலைச் சொன்னாள்.. திரும்பி வந்து உன்னைப் பெண் கேட்பேன் என்று உறுதி கொடுத்து விட்டுப் போனவனால் அவன் கொடுத்த

உறுதியைக் காப்பாற்ற முடியவில்லை.. அவள் விலகிச் சென்றாள்.. விடாமல் அவளைத் தொடர்ந்து.. அனைத்து எதிர்ப்புகளையும் மீறி அவளை அவன் வெற்றி கொண்டான்...

அவன் தொடும் தொடுகையைத் தாங்க முடியாமல்.. கிளர்ந்து.. தளர்ந்து.. அவன் மார்பில் முகம் புதைத்தவளை அள்ளிக் கொண்டான் அர்ஜீன்.. அவன் கைகளில் பூமாலையாய் கிடந்தவளை ஏந்தியபடி கட்டிலை அடைந்தவன்.. மலர்சரங்களின் திரையை விலக்கி.. அதில் அவளைக் கிடத்தினான்.. பூமாலையாய் கட்டிலில் வீழ்ந்தாள் காவ்யா...

“எங்கேடி போவ..?”

கேள்வியுடன் அவள் மேல் விழுந்தவனைக் கட்டிக் கொண்டன அவளது கரங்கள்.. அர்ஜீன் அவளது கலைந்திருந்த தலைமுடியில் முகம் புதைத்து புரட்டி.. அவள் சூடியிருந்த மல்லிகை மலரின் வாசனையை முகர்ந்து மேலும் அதைக் கலைத்தான்..

“ம்ஹா...” மூச்சை இழுத்துப் பிடித்தவன்...

“பூமேல படுத்திருந்தாலும்.. பெண்டாட்டி வைத்திருக்கிற பூவுக்கு மட்டும் மணம் அதிகம்டி...” என்று கிறங்கினான்...

பதில் சொல்ல முடியாத காவ்யா.. பட்டு வேட்டி.. பட்டுச் சட்டையில் இருந்தவனைக் காதலுடன் பார்த்தாள்.. வெகு அருகாமையில் தெரிந்த அந்த பிடிவாதக்காரனின் முகம் அவளை மயக்கியது...

“என்னடி.. பார்க்கிற..?” புருவங்களை உயர்த்தியவனின் தலைமுடியில் விரல் விட்டுக் கலைத்தவள்..

“மயக்கறிங்க...” என்று சொல்லி விட்டாள்..

“ஏய்ய்ய்...” அவன் விழிகள் மின்னின...

“நான்தான் மயங்கிப் போய் கிடக்கிறேண்டி..” அவள் மேல் கவிழ்ந்தான்...

“மயங்கிக் கிடக்கிற ஆளைப் பாரேன்...” காவ்யா புரண்டு நகர்ந்தாள்...

“நானுண்டு என் வேலையுண்டுன்னு தேமேன்னு இருந்தவ மனசைக் கலைச்சு.. ஒரு வழியாக்கிட்டு பேசற பேச்சைப் பாரேன்..” அவள் விழிகளில் காதல் கலந்த தாபம் மிளிர்ந்தது..

“இப்ப எதுக்குடி விலகிப் படுக்கிற..? இது விலக வேண்டிய நேரமில்லை காவ்யா..” அர்ஜீன் வெறிகொண்ட வேங்கையாக அவளை இழுத்துக் கொண்டான்...

மீண்டும் அவள் மீது கவிழ்ந்தவனின் கரையுடைத்த முத்தங்களிலும்.. காதோர முணுமுணுப்புகளிலும்.. அவள் தன் வயமிழந்தாள்.. அர்ஜீனின் கைகள் முன்னேறின.. அவள் தோள் தடவி.. சேலை தொட்ட அந்த நொடியில் அவள் கண்மூடி.. அவன் கைகளுக்குள் அவளை ஒப்படைத்தாள்.. அர்ஜீன் அவள்மேல் படர்ந்தான்.. அவன் மனதில் மோகத்தீ பற்றிக் கொண்டது.. காவ்யாவின் அருகாமையும் அவளைத் தொடும் தொடுகையும் எல்லையற்ற இன்பத்தை அள்ளியள்ளி வழங்கிக்

கொண்டிருக்க.. அவளைத் தழுவி தன் தாபத்தைத் தீர்த்து மோகத்தீயை அணைக்கும் முயற்சியில் வெகு தீவிரமாக ஈடுபட்டான் அர்ஜீன்...

அவனுக்குப் பிரியமானவளும் அதற்கு இசைந்து கொடுத்தாள்.. காதோரம் அவன் விடுத்த ரகசியக் கிசுகிசுப்பான வேண்டல்களை.. வெட்கத்துடன் முதலில் மறுத்தவள்.. அவனது கெஞ்சலில் நடுக்கத்துடன் அவன் கேட்டதைக் கொடுத்தாள்.. முன்னேறிய அவனது கைகள் உணர்த்திய புது உலகத்தில்.. அதிர்வும்.. நாணமும் கலந்த கலவையான உணர்வுகளுடன் அவனுடன் பிரவேசித்தாள் காவ்யா.. அவன் தழுவல்கள் ஓயவில்லை.. அவன் தாபமும் தீரவில்லை.. இந்த அளவுக்கா அவன் அவளைத் தேடியிருக்கிறான் என்று மூச்சுத் திணறிப் போனாள் காவ்யா...

அவளுக்கு பேசுவதற்கான நேரத்தையே அவன் கொடுக்கவில்லை.. அவன் பேசிய பேச்சுக்களும்.. காதோரமான கிசுகிசுப்பாக.. அதுவரை அவள் அறிந்திராத புதுவகையான மொழிகளாக இருந்தன.. அவனது சுடுமூச்சுக்கூட.. அவள் அது வரை உணராத மாய உலகத்தை அவளுக்கு அடையாளம் காட்டியது...

காவ்யாவின் மீது மஞ்சள் பொடியும்.. சந்தனமும் கலந்த நறுமணம் கமழ்ந்தது.. அவள் சூடியிருந்த மல்லிகையின் வாசனை அதை அதிகரித்தது.. அவள்மீது முகம் பதித்தவனின் நாசி... அவளது அந்த பிரத்யேக நறுமணத்தில் கிறங்கி முகம் விலக்காமல் பிண்ணிப் பிணைச் செய்தது..

அர்ஜீன் அவளோடு பின்னிப் பிணைந்தான்.. நகர்ந்து கொண்டிருந்த அந்த மணித்துளிகளில் அவன் அவளைச் சூறையாடினான்.. வேட்டையாடும் வேங்கையின் தீவிரம் அவன் செயல்பாடுகளில் இருந்தது.. அவள் புயலில் சிக்கிய பூங்கொடியானாலும்.. அதைப் பற்றிய மனத்தாங்கலில்லாமல்.. அவனால் வேட்டையாடப் படுவதை விரும்பி இசைந்து கொடுத்தாள்.. களைத்துத் துவண்ட போதும்.. அவன் கைகளை அவள் மறுக்கவில்லை.. அர்ஜீனுக்கு கேட்டது கிடைத்தது.. இருந்தும் அவனுக்கு திருப்தி என்பது ஏற்படவே இல்லை.. அவளை விடுவிக்காமல் தன் வேட்டையை அவன் தொடர்ந்து கொண்டிருந்தான்... அவன் வேட்கைக்கு அவள் இசைந்து கொண்டிருந்தாள்...

களைத்து.. அவளைக் கலைத்து.. ஒருவழியாக விலகிப் படுத்தவனின் முகத்தில்.. திருப்தி நிலவியது.. காவ்யா புரண்டு படுத்து செல்போனின் திரையைப் பார்த்தாள்.. அதிகாலை நான்குமணி என்றது அது.. அர்ஜீன் அவளின் முதுகோடு ஒட்டிப் படுத்து அவள் இடுப்பில் கரம் போட்டு இறுக்கிக் கொண்டான்.. அவள் காதோரமாக அவன் முகம் பதித்ததில் உணர்ந்த மீசையின் உராய்வில் அவள் கிளர்ச்சி கொண்டாள்..

“என்னடி பார்க்கிற..?” அவன் கிசுகிசுத்தான்...

“ம்ம்ம்.. விடிஞ்சுருச்சு...” அவள் வெட்கத்துடன் முணுமுணுத்தாள்...

“அதுக்குள்ளேயா..?” அவன் அதிருப்தியுடன் கேட்டான்..

அவனது கேள்வியில் அவளுக்கு வெட்கம்... வெட்கமாக இருந்தது.. தலையணையில் முகம் புதைத்துக் கொண்டாள்.. அவன் முகம் அவள் கூந்தலில் பதிந்ததை உணர்ந்தவளின் தேகம் சூடேறியது..

“காவ்யா...”

அவளை ஆண்டு முடித்த திருப்தியுடன் அவன் அழைத்தான்... அவனது அந்த அழைப்பு சொல்லிய அர்த்தங்களில் அவள் உருகிக் கரைந்தாள்.. அவள் இதயம் படபடத்தது...

“தூக்கம் வருதா..?”

விடிகின்ற வேளையில் அவன் கேட்ட கேள்வியில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.. இரவு முழுவதும் அவளைத் தூங்க விடாமல் ஆக்ரமித்திருந்தவனின் கேள்வியை அவள் மனம் விரும்பி ரசித்தது...

“விடியப் போகுது.. இப்பவும் தூக்கம் வருதான்னு என்ன கேள்வி..? பின்னே..? தூக்கம் வராதா..?” அவள் பொய் கோபத்துடன் அவன் முகம் பார்க்காமல் கேட்டாள்..

அவளால் அவன் முகம் பார்க்க முடியவில்லை.. அதை உணர்ந்தவனாக அவன் நகைத்தான்.. அவள் இடுப்பில் கிடந்த கரம் அவளை இழுத்து இறுக்கிக் கொள்ள அங்கே மறுபடியும் அவனது வேட்டையாடல் ஆரம்பமானது..

அதிகாலையின் வெளிச்சம் ஜன்னலில் பரவுவதை அவர்கள் இருவரும் பார்த்தார்கள்.. கண்மூடி அவன் மார்பில்

தலை வைத்துக் கொண்டவளை அரவணைத்துக் கொண்ட அர்ஜீன்.. அவள் முடிகோதி உச்சந்தலையில் முத்தமிட்டான்..

“நினைக்கவேயில்ல..” நம்ப முடியாத பிரமிப்புடன் சொன்னாள் காவ்யா...

“எதை..?” அவள் முடி கோதியபடி வினவினான் அர்ஜீன்..

“உங்க பொண்டாட்டியா.. உரிமையுடன் குடும்பம் நடத்துவேன்னு..” காவ்யாவின் விழிகள் உதிர்த்த கண்ணீரை அவன் மார்பு உணர்ந்தது..

“அழுகிறயா..?” அர்ஜீன் கண்டிப்புடன் அவள் முகம் நிமிர்த்திப் பார்த்தான்...

“இல்லை..” மறுத்தவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவள் சொன்னதை பொய்யென்று சொன்னது...

“முட்டாளாடி நீ..? என் காவ்யா தைரியமானவன்னு நினைத்துக்கிட்டிருக்கேன்.. நீயென்னடான்னா சந்தோசமா இருக்க வேண்டிய நேரத்தில அழுவாச்சியாய் இருக்கிற..?”

“சந்தோசமா இருந்தாச்சு பாஸ்...” அவள் வெட்கத்துடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்...

“இப்ப விடிஞ்சுருச்சு.. நான் ரூமை விட்டு வெளியே போயாகனும்..”

“அப்படி எதுவும் சட்டமிருக்கா..?” எழுந்து கொள்ள முயன்றவளை இறுக்கிக் கொண்டான் அர்ஜீன்...

"ராத்திரியில தூங்கினா.. பகலில் விழிக்கனும்னு சட்டமிருக்கு.. அது உங்களுக்குத் தெரியாதா..?" அவன் மீசையை முறுக்கி விட்டு அவள் சிரித்தாள்...

அந்த சிரிப்பில் கலந்த கண்ணீர் துளிகளை துடைத்து விட்டான் அர்ஜீன்...

"அழுதது போதும் காவ்யா.. இப்ப நீ என் வொய்ப்.. சிரித்துக்கிட்டேயிருக்கனும்.. அதுதான் எனக்குப் பிடிக்கும்." அவள் கன்னம் தட்டி மென்மையாகச் சொன்னான்...

"நீங்க மட்டும் துணிஞ்சு நின்னு என் கழுத்தில தாலியைக் கட்டாமல் இருந்திருந்தா..?" நடுக்கத்துடன் கேட்டாள் காவ்யா...

"காலம் முழுவதும் நான் மேரேஜ் பண்ணிக்காம இருந்திருப்பேன்.." இலகுவாகச் சொன்னான அர்ஜீன்..

"நிஜமாவா..?"

"பின்னே..? நீ மட்டும் இன்னொருத்தனுக்கு கழுத்தை நீட்டிருவியா..? காலம் முழுவதும் நீ கன்னியாவே இருக்க நினைச்சபோது நான் மட்டும் அப்படியிருக்கக் கூடாதா..?"

'என் அர்ஜீன்..!'

பேச முடியாமல் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் காவ்யா..

# 209

*பனி விழும் இரவினிலே - நான்..*
*உனில் விழ ஆசைகொண்டேன்...*

**கா**வ்யாவின் உடல் நடுங்கியது.. அணிந்திருந்த கம்பளிக் கோட்டையும் தாண்டி.. ஊசிகளாய் அவள் உடலைத் துளைத்த அந்தக் குளிரில் அவள் நடுங்கினாள்.. கைகளைத் தேய்த்து கன்னங்களுக்கு அந்தச் சூட்டை அவள் அனுப்பிக் கொண்டிருந்த போது.. அவள் கைகளை எடுத்து தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான் அர்ஜீன்..

“என்னடி பண்ற..?” அவன் கண்கள் அவளை தாகத்துடன் பார்த்தன...

“குளிருது..” வெட்கத்துடன் அவள் முணுமுணுத்தாள்..

“குளிருதுன்னா உன் புருசனிடம் அதைச் சொல்லனும்.. அதை விட்டுவிட்டு நீயாய் கைவைத்தியம் பண்ணிக் கொள்ளக்கூடாது..” அவளை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி அவன் சொன்னான்...

“நீங்க என்ன டாக்டரா..?” அவன் பார்வையின் வேகம் தாங்காமல் உதட்டைக் கடித்தபடி அவள் சொன்னாள்...

"ம்ம்ம்.. டாக்டர்தான்.. இப்ப உனக்கு என்ன வேணும்..?"

"ஒன்னும் வேணாம்..."

"குளிருதுன்னா..?"

"இல்லை.. இப்பக் குளிரலை.."

"அதுக்குள்ளே குளிர் பறந்து போச்சா..?"

"ஆமாம்.. அப்படித்தான்.."

"எங்கே பறந்து போச்சு..?"

அவன் விடாமல் அவளை இழுத்து அணைத்து.. அவள் முகத்தோடு முகம் பதித்தான்.. அவன் உதடுகளின் வெப்ப ஸ்பரிசத்தில் அவள் முகமும் சூடானது.. அவனது மூச்சுக் காற்றின் வெப்பத்தில் குளிர்ந்திருந்த அவளின் காது மடல்கள் சூடை ஏற்றன.. சில்லிட்டிருந்த அவளின் கைவிரல்களில் அவன் விரல்கள் பிணைந்ததில்.. அவளின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. அவன் கைகளுக்குள் அவள் புகுந்து கொண்ட போத.. தன் கோட்டை விரித்து அவளை அதற்குள் அடக்கி மூடிக் கட்டிக் கொண்ட அர்ஜீன்.. தன் உடல் வெப்பத்தை அவள் உடலுக்கு இடம் மாற்றியபடி அவள் காதோரமாக குனிந்து...

"காவ்யா.." என்று தாபத்துடன் அழைத்தான்..

"ம்ம்ம்ம்..."

"ஐ லவ் யு டி.."

"நானும்தான்..."

“என்ன நீயும்தான்..?”

“த்ச்சு.. நானும் உங்களைக் காதலிக்கிறேன்...”

“அதைச் சொல்ல வேண்டியதுதானே..? நானும் தான்னு ஏன் ராகம் பாடுற..? இன்னும் என்னடி வெட்கம்..?”

அவன் அழுத்திச் சொன்ன ‘இன்னும்..’ என்ற வார்த்தையில் அவள் உடல் சூடாகிப் போனாள்.. கிளர்ச்சியுடன் அவன் முகம் பார்க்க முடியாத வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்தாள்..

வெட்கி அவனில் புதைந்த மனைவியின் முதுகைச் சுற்றிப் பரவிப் படர்ந்த அவன் கரங்கள்.. அவளை அடைந்து ஆண்டு விட்ட வெற்றிப் பெருமிதத்துடன் அவளை இறுக்கிக் கொண்டன...

அவர்களைக் கடந்து சென்றவர்கள்.. அவர்களின் நெருக்கமான நிலையைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.. அவர்கள் அதைவிட அதிக நெருக்கத்துடன் இருந்ததைக் கண்ட அர்ஜீன் காவ்யாவின் காதோரமாக அதைச் சொல்லிச் சிரித்தான்...

“போதுமே.. இதைப் பத்திப் பேசினா.. உங்களுக்கு வெல்லக் கட்டியைப் போல இனிக்குமே.. இன்னைக்குப் பூராவும் பேசிக்கிட்டே இருப்பீங்களே..” காவ்யா வெட்கத்துடன் விலகி நின்றாள்...

“இப்பக் குளிர் குறைஞ்சிருச்சா..?” அவன் கண்சிமிட்டினான்...

“நீங்க அதிலேயே இருங்க...” அவள் கன்னம் சிவந்தாள்..

அவர்கள் ஒருவர் இடுப்பில் ஒருவர் கை போட்டுக் கொண்டவர்களாக ஒட்டி உரசியபடி நடக்க ஆரம்பித்தார்கள்..

“உங்க அப்பா என்னிடம் பேசறதே இல்லை..”

“நீ அவரிடம் பேசறதில்லைன்னு சொல்லு.. நான் கேட்பேன்னு முந்திக்கிறயா..?”

காவ்யா மௌனம் சாதித்தாள்.. அவளின் புருவச் சுளிப்பில் அவளால் எதையும் மறக்க முடியவில்லை என்பதை அர்ஜீனால் புரிந்து கொள்ள முடிந்தது...

“நான் உன்னிடம் எதையாவது கேட்டேனா..? நீயாய் ஏன் கில்ட்டியாய் ஃபீல் பண்ணிக்கிற..? ஹனி மூன் கொண்டாட வந்திருக்கோம்.. இந்த நேரத்தில் எதைப் பேசனுமோ அதைப் பேசு.. அதை விட்டுட்டு தேவை-யில்லாத பேச்சுக்களையெல்லாம் ஏன் பேசற..?”

“இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிச்சிருக்கக் கூடாது...”

“உன் சம்மதத்தை யாருடி கேட்டா..? நீ பினாத்தற பினாத்தலை தாங்க முடியாமத்தானே நான் அதிரடியாய் தாலியைக் கட்டினேன்..”

“அதில சிக்கினதினாலதான் நான் இந்தக் கல்யாணத்தில சிக்க வேண்டியதாப் போச்சு..” காவ்யாவின் குரலில் தெரிந்த அலுப்பில்

“அதில் உனக்கு ரொம்பவும் வருத்தம் போல..” என்று ஒரு மாதிரியான குரலில் சொன்னான் அர்ஜீன்...

காவ்யா பேசவில்லை.. அமைதியாக வந்தாள்.. அவள் மனம் சிணுங்கியதை அர்ஜீனால் உணர்ந்து கொள்ள முடிந்தது.. ஆனாலும் அவன் அவளைச் சமாதானப் படுத்த முனையவில்லை.. அவள் பேச்சில் அவன் கோபம் கொண்டிருந்தான்.. தேனிலவுக்கு வந்த பின்பும் எப்படி அவள் இப்படிப் பேசலாம் என்று கொதித்தான்...

"என் கூட நடந்த மேரேஜில் சிக்காமலிருந்தா உனக்கு ரொம்பவும் வசதியாய் இருந்திருக்குமில்ல..?"

அவன் கேட்ட விதத்தில் அவள் மனம் துணுக்குற்றது.. எதற்காக இப்படியொரு கேள்வியைக் கேட்கிறான்...

"எதுக்கு வசதியாய் இருந்திருக்குமாம்..?"

"வேற ஒருத்தனுக்கு கழுத்தை நீட்ட வசதியாய் இருந்திருக்காதா..?"

அவன் கேள்வி அவள் மனதில் 'சுருக்'கென்று முள்ளாய் பாய்ந்தது.. அவள் கோபத்துடன் அவனை விட்டு விலகி நடந்தாள்.. ஹோட்டல் அறைக்கு திரும்பிய போது அவர்கள் இருவருமே ஒருவரிடம் ஒருவர் பேசவில்லை.. அர்ஜீன் உணவு வகைகளை அறைக்கே வரவழைத்தான்.. காவ்யா எதையும் சாப்பிடாமல் கட்டிலின் மூலையில் சுருண்டு கிடந்தாள்.. குளியலறைக்குப் போய் முகம் கழுவி விட்டு வந்த அர்ஜீன் சுருண்டு கிடந்தவளைப் பார்த்தான்.. கோபத்துடன் அதட்டினான்...

"ஏய்ய்.. எழுந்திருடி.. சாப்பாடு வந்திருக்கு.."

"எனக்கு வேணாம்.."

"ஏன் வேணாம்.. நீ வாய்க்கு வந்ததைப் பேசுவ.. அதை ஏன்னு கேட்டா.. சாப்பிட மாட்டியா..?"

"யாரு வாய்க்கு வந்ததைப் பேசினது..? நீங்களா..? இல்லை.. நானா..?"

"என்கூட நடந்த மேரேஜ்.. உனக்குச் சிக்கலா..?"

"அப்படின்னு நான் சொன்னேனா..?"

"இதில சிக்காம இருந்திருந்தா பெட்டர்ன்னு நீ சொல்லலை..?"

"வேற யாருக்காவது கழுத்தை நீட்ட நினைச்சிருந்-தியான்னு நீங்க சொல்லலை..?"

"நீ சொல்லவும்தான் நான் சொன்னேன்.."

"நான் சொன்னதுக்கு இதுதான் அர்த்தமா..?"

"வேற எது அர்த்தம்..? என்னை மேரேஜ் பண்ணிக் கிட்டதில் உனக்கு இத்தனை வருத்தமா..?"

"எனக்கொன்னும் அப்படியில்லை.. உங்களுக்கே அது நல்லாத்தெரியும்.. உங்க அப்பாவுக்குத்தான் வருத்தம்..."

"ஏய்ய்... காவ்யா..."

அவனின் ஆறுதலான வார்த்தையில் காவ்யா உடைந்து அழுதாள்.. அவளை மடியில் போட்டுக் கொண்ட அர்ஜீன்.. அவள் முதுகைத்தட்டிச் சமாதானப் படுத்தினான்.. அவள் தேம்பினாள்..

“உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க.. உங்களுக்கு கழுத்தை நீட்டலைன்னா... நான் வேற ஒருத்தருக்கு கழுத்தை நீட்டிருவேனா..?”

“ம்ப்ச்.. அப்படியில்லைடி.. சும்மா சும்மா அப்படியே நீ சொன்னா எனக்கும் கோபம் வருதில்ல...”

“வரும்.. வரும்.. ஏன் வராது..? அண்ணன்கிட்ட நீ தேன்மொழியைக் கல்யாணம் பண்ணிக்க.. பிள்ளைகளைப் பெத்துக்குடு.. அதுகளை வளர்த்துக்கிட்டு நான் காலம் பூராவும் கன்னியாவே காலம் கழிச்சுர்றேன்னு சொன்னேன்.. அது உங்களுக்குத் தெரியுமா..?”

“தெரியாது தான்..”

அர்ஜீன் மனம் சிறகடிக்கச் சொன்னான்.. அவன் மீதான அவனின் காதலியின் பிரியத்தில் அவன் மனம் நனைந்து போயிருந்தது.. அவள் அப்படித்தான் சொல்லியிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்தான் அவளாவது.. அவனை விட்டு வேறு ஒருவனை மணக்க நினைக்கிறதாவது.. ஆனால் கோபம் வந்து விடும் போது.. காதலின் ஊடல் இதையெல்லாம் சிந்தித்துப் பார்ப்ப-தில்லையே..

“உன் அண்ணன்கிட்ட இப்படிச் சொல்லியிருக்கயே.. அவர் என்ன சொன்னார்..? ஆஹா.. அப்படியே செய்கிறேன் தங்கச்சின்னு சொல்லிட்டுத்தான் வேற வேலை பார்த்தாரா..?”

“நீ கல்யாணம் பண்ணிக்கிட்டு.. உன் புருசனோட மணமேடையில வந்து நின்னு நாத்தனார் முடிச்சைப் போடறதா இருந்தா நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்..

இல்லேன்னா எனக்கும் கல்யாணம் வேணாம்ன்னு சொல்லிருச்சு...”

“அதானே பார்த்தேன்.. ஆமா.. யாரு அந்த தேன்மொழி...?”

“சொன்னா உங்களுக்கு கோபம் வரும்...”

“நீ சொல்லலைன்னாலும் கோபம் வரும்...”

“அந்த தேவாங்கு இருக்கானில்ல.. அவனோட தங்கச்சி...”

“வாட்..? துரியோதனின் மகளா..?”

“அதை இப்படியும் சொல்லலாமில்ல..”

“ஏண்டி.. உன் அண்ணனுக்கு காதல் பண்ண வேற பெண்ணே கிடைக்கலியா..?”

“அண்ணன் ஒன்னும் காதல் பண்ணல.. அந்தப் பொண்ணுதான் அண்ணன் மேல ஆசைப்படுது.. அதனால தான் அண்ணனும் அந்தப் பொண்ணு மேல ஆசைப்படுது..”

“இரண்டும் ஒன்னுதானே...”

“எனக்குத் தெரியலை...”

“உனக்கு எதுதான் தெரிந்திருக்கு..?”

அர்ஜீனின் கண் சிமிட்டலில் அவர்களுக்குள் தோன்றியிருந்த ஊடல்.. சூரியனைக் கண்ட பனித்துளியைப் போல மறைந்து விட்டது.. முகம் சிவந்த காவ்யாவை கிறக்கத்துடன் பார்த்த அர்ஜீனுக்கு வயிற்றுப் பசி மறந்து விட்டது.. அவன் அவளை நெருங்கினான்.. வெட்கத்துடன்

முகத்தை மூடிக் கொண்ட அவள் விரல்களை விலக்கி அவள் முகத்தில் முகம் வைத்தான்.. அவள் மேல் படர்ந்து பரவினான்... கிளர்ச்சியுற்ற அந்த இருவரும் ஒருவரிடம் ஒருவர் அடைக்கலமானார்கள்.. கிளர்ச்சி தணிந்து விலகி எழுந்தபோதுதான் வயிற்றுப் பசி அவர்களுக்கு உறைத்தது..

சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அவன் இதமாகச் சொன்னான்..

“டாடிக்கு நீ வேண்டாத மருமகள்தான்.. நான் இல்லைன்னு சொல்லலை.. அதுக்காக அவரை வேண்டாம்ன்னு நாம தள்ளி வைச்சிர முடியுமா..? முடியாதில்ல..? அவரை எதிர்த்து.. அவர் முன்னாடியே உன்னைப் பெண் கேட்டு.. தாலியும் கட்டினேன்.. நம்ம மேரேஜை கிராண்டா நடத்தியும் காண்பிச்சேன்.. இதுபோதும்டி... நீ அவரை எதிரியாகப் பார்க்காதே...”

## 210

### உனக்காக நான் துடிப்பதையே - நீ உணர ஆசைகொண்டேன்...

**கா**வ்யா ஒன்றும் பார்த்தசாரதியை எதிரியாய் பார்க்கவில்லை.. அவர்தான் அவளை எதிரியாகப் பார்த்தார்.. நேருக்கு நேராகப் பார்க்கும் போது அவர் பார்வையில்

வெளிப்படும் வெறுப்பில் காவ்யா மனம் துடித்தாள்.. ஒரு அளவிற்கு மேல் அவளால் அர்ஜீனிடம் அதைப் பற்றிய புகாரை கூற முடியவில்லை.. அதனால் மனதில் போட்டுப் புழுங்கியபடி அதை மறைத்தபடி நடமாடினாள்.. கூடுமானவரை பார்த்தசாரதியை நேரடியாகப் பார்ப்பதை தவிர்த்து விடுவாள்.. பார்த்தால்தானே அவரின் உதாசீனம் அவளைப் பாதிக்கும்..? பார்க்கா விட்டால் எந்த வம்பும் இல்லையே.. அவள் அப்படி விலகிப் போனால் அவர் 'திமிர்' என்று மனதுக்குள் கொதித்தார்....

நேகா குரூப் ஆஃப் கம்பெனி கை நழுவிப் போய் விட்ட வருத்தம் அவருக்கு...

நேகாவின் கோபம்தான் அளவு கடந்ததாக இருந்தது.. அர்ஜீனும் கார்த்திக்கும் அவ்வளவு எளிதாக அவள் கையை விட்டு நழுவிவிடுவார்கள் என்று அவள் நினைத்தும் பார்க்கவில்லை.. பார்த்தசாரதி ஒருநாளும் காவ்யாவை தன் மருமகளாக ஏற்றுக் கொள்ள மாட்டார் என்று மனதார அவள் நம்பினாள்.. அந்த நம்பிக்கை உடைந்து சுக்கு நூறாகிப் போனது.. ஒன்று போல.. ஒன்றுவிட்ட அண்ணனும் தம்பியும்.. தோழிகளை மணந்து கொண்டதில் அவள் மனம் அதிகம் பாதிப்பை அடைந்தது...

'அர்ஜீன்தான் அந்தக் காவ்யாவை காதலித்து தொலைத்திருந்தான்.. இந்த கார்த்திக்கிற்கு என்ன வந்தது..? அவன் எதற்காக அந்த பாவனாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்..?'

அதுதான் அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது..

அர்ஜீனாவது அவள் இருந்த பக்கமே திரும்பிப் பார்த்ததில்லை.. கார்த்திக் அப்படியில்லையே.. அவன் நேகா இருந்த பக்கம் மட்டும்தானே பார்த்து வைத்தான்.. நேகாவை அவன் பார்த்த பார்வையில் கோடியில் ஒரு பங்கைக் கூட பாவனாவை அவன் பார்த்திருக்க மாட்டான்..

இத்தனைக்கும்.. அவனைப் பெற்ற தாயான சுமதிக்கு நேகாவின் மீது நோக்கம் இருப்பது அவனுக்குத் தெரியும்.. அவனுடைய தந்தையோ.. சுமதி நேகாவைப் பற்றிச் சொல்லிய அடுத்த வினாடியிலேயே..

“யாரைடி சொல்கிற..? நேகா குருப் ஆஃப் கம்பெனியோட எம்.டியையா சொல்கிற..? தீனதயாளனின் மகளையா சொல்கிற..?” என்று அடையாளம் கண்டு பிரமிப்பில் ஆழ்ந்து விட்டார்...

அர்ஜீனின் வீட்டில் பார்த்தசாரதி மட்டும்தான் நேகாவிற்கு ஆதரவாக இருந்தார்.. கார்த்திக்கின் வீட்டில் அப்படியில்லாமல் அவர்களின் குடும்பத்தில் இருந்த அனைவரும் நேகாவிற்கு ஆதரவாக இருப்பதில் மனதுக்குள் கர்வம் கொண்டிருந்தாள்...

‘அப்படிப்பட்ட கார்த்திக்கா என்னை மறந்துட்டு பாவனா கழுத்தில தாலியைக் கட்டினான்..?!’

நேகாவிற்கு இது படுதோல்வியாக இருந்தது.. அர்ஜீன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான் என்பதை அவள் நன்கு அறிவாள்.. அவனுடனான அவளின் திருமணம் என்பது கனவு.. அது ஒருநாளும் கை

கூடாது என்பதும் அவளுக்குத் தெரியும்.. என்றாலும் அவனின் மனதிலிருந்த ஆசையும் நிறைவேறக் கூடாது என்பதற்காகவே அவள் வேலை மெனக்கெட்டு மதுரைக்கு வந்தாள்.. கார்த்திக்குடன் பரிச்சயத்தை உண்டு பண்ணிக் கொண்டாள்.. காவ்யாவை அவன் கைபிடிக்க உபாயம் சொல்லிக் கொடுத்தாள்.. ஆனால் அவனோ அண்ணன் சாமியாக இருந்தான்.. அவனின் உபாயத்தை ஓர் நொடியில் ஊதித் தள்ளிவிட்டான்.. பாவனாவுடன் அவனுக்கு திருமணமாகி விட்ட இந்த நொடியிலும் கூட நேகாவால் அதை நம்பவே முடியவில்லை...

'இந்த அர்ஜீனுக்கும் காவ்யாவுக்கும் இடையிலாவது காதல் இருந்துச்சு.. இந்த கார்த்திக்கிற்கும்.. பாவனாவுக்கும் இடையில் என்ன இருந்துச்சு..?'

எதுவுமே இல்லாமல் ஒருவன் தன் வாழ்க்கையை தீர்மானிப்பானா என்றிருந்தது.. நேகாவிற்கு.. அதையே பாவனா கார்த்திக்கிடம் கேட்டபோது அவன்..

"த்ரில் இருக்கிறதே.." என்று கண்சிமிட்டினான்...

"திரிலா.."

"யெஸ்.. மைடியர்.. த்ரில்தான்.. திடிர்ன்னு உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன் பார்.. அப்ப நீ அதிர்ந்து போய் முழிச்சயே.. அது ஒரு த்ரில்தான்.. அந்தக் கல்யாணம் சட்டரீதியான கல்யாணமா மாறுமா மாறாதான்னு நாம மனசு படபடக்க நின்றோமே.. அது ஒரு த்ரில்தான்.. இப்படிப்பட்ட கல்யாணத்துக்குப் பின்னாலே நமக்குள் காதல் வந்திருக்கே இதுவும் ஒரு த்ரில்தான்..."

“பார்றா.. சாருக்கு இப்படியெல்லாம் ரொமான்ஸ் பண்ணத் தெரியுமா..?”

“இதுக்கு மேலேயும் தெரியும்..”

“ஓ.. நான் என்னவோ நீங்க ரொமான்ஸ் பேசி பெண்களை கிணற்றுக்குள்ளே தள்ளி விடறதில மன்னன்னு நினைத்துக்கிட்டு இருக்கேன்.. இங்கே கதை வேற மாதிரி இருக்கே...”

“கிணற்றுக்குள் தள்ளி விடறதா..? யார்.. அண்ணி இதைச் சொன்னாங்களா..?”

“என்னே உங்க அண்ணன் பக்தி... இத்தனை நாள் காதலியாய் தெரிந்த காவ்யா ஒரே செகண்டில் அண்ணியாராய் ஆகி விட்டாளே... அட.. அடா.. அசத்தறேள் போங்க...”

கலகலப்பாய் வாரிய பாவனாவை ஆசையுடன் பார்த்த கார்த்திக்...

“இதை.. இதை.. இதைத்தான் நான் லைக் பண்ணினேன்..” என்றான்..

“எதை..? இந்தச் செயினையா..?”

“வாய்தாண்டி உன்னை வாழவைக்குது.. உன்னோட இந்த ஹியூமர்.. இதைத்தான் நான் லைக் பண்ணினேன்னு சொன்னேன்...”

“அப்ப காவ்யாவை லைக் பண்ணினது..?”

“அது அப்ப.. இது இப்ப..”

"நாளைக்கு யாரை சார் லைக் பண்ணுவீங்க..?"

"இனி எப்பவுமே நீ மட்டும்தாண்டி.. உண்மை-யிலேயே உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் பாவனா.."

கார்த்திக்கின் வார்த்தைகளில் உண்மை இருந்தது.. அதை அறிந்திருந்த பாவனா தன் கைவிரல்களை அவன் விரல்களுடன் கோர்த்துக் கொண்டாள்..

"என்னவோ போங்க கார்த்திக்.. அத்தைக்கும்.. மாமாவுக்கும் பிடிக்காத மருமகளாய் இருக்கிறேனோன்னு மனதுக்குள்ள ஒரு ஃபீலிங்..."

"பாட்டிக்கு பிடித்த பேத்தியாய் இருக்கிறல்ல..?"

"அது ஒன்றுதான் என் மனசுக்கு நிம்மதியாய் இருக்கு.."

"பாட்டிக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு காவ்யா.. அவங்கதான் அண்ணனுக்கும் காவ்யாவுக்கும் இடையில எதுவோ இருக்குன்னு முதன் முதலா கண்டுபிடிச்-சிருக்காங்க... அதை எங்க வீட்டில சொல்கிறதுக்கு முன்னாலே நான் என் மனதிலிருக்கிற எண்ணத்தை சொல்லிட்டேன்.. ஆறோடு ஓடம் போனா... தானா கரையேறிரும்ன்னு நினைச்சுக்கிட்டு அவங்கவங்க போக்குப்படி போகிறதை வேடிக்கை மட்டும் பார்த்-தாங்களாம்.. கடைசியில ஓடம் தானா கரையேறிருச்சுடா பேராண்டின்னாங்க..."

"ஷி இஸ் ஜீனியஸ்.. உங்க பாட்டிக்கு தெரியாத விவரமில்லை... ரியலி ஷி இஸ் எ சூப்பர் பாட்டி.."

“அந்த சூப்பர் பாட்டியாலேயே... கரையேறிய ஓடங்களிலே ஒரு ஓடமா நானும் இருப்பேன்னு கண்டு பிடிக்க முடியலையாமே..”

“சார் யாரு..?”

“அதைத் தெரியாமலா என்கூடக் குடும்பம் நடத்தற..?”

கார்த்திக்கின் புருவங்கள் உயர்ந்ததில் கிளர்ந்து அவன் மார்பில் முகம் புதைத்தாள் பாவனா.. அவள் முதுகைச் சுற்றி வளைத்தவன் அவள் காதுகளில் லேசாக கிசுகிசுத்தான்.. அதில் முகம் சிவந்தவள்..

“ராஸ்கல்..” அவன் மார்பில் குத்தினாள்..

அவள் கைகளை இழுத்து அதில் முத்தம் பதித்த கார்த்திக்...

“ஒன்றை மனதில் வைத்துக்க பாவனா.. அம்மாவும்.. டாடியும் என்மேல் உயிராய் இருக்கிறவங்க.. நான் உன்மேல் வைத்திருக்கிற ஆசையைப் பார்த்து மெல்ல.. மெல்ல உன்மேல் பாசம் வைக்க ஆரம்பித்து விடுவாங்க.. அதுவரை பொருமையாய் இரு...” என்றான்

“ஆகட்டும்..” வாக்களித்தாள் பவனா..

எதையோ நினைத்துக் கொண்டவளாக அவன் முகத்தை அண்ணாந்து பார்த்து.. இமை சிமிட்டியபடி...

“நிஜமாகச் சொல்லுங்க.. என் மேலிருந்த ஆசையினால் தாலியைக் கட்டினீங்களா.. இல்லை அந்த

நேகாவைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டி வந்துரு மோங்கிற பயத்தினாலே தாலியைக் கட்டினீங்களா..?”

“ஊம்..?” யோசிப்பதைப் போல பாவனை செய்த கார்த்திக்...

“முதலாவதை விட இரண்டாவது காரணத்தினாலே தான் அதைச் செய்தேன்னு தோணுது..” என்றான்..

“என்னது..?” விலகப் போன பாவனா அவன் கண்களில் மின்னிய கள்ளச்சிரிப்பைக் கண்டு கொண்டாள்..

“யு... யு...”

வார்த்தைகள் வராமல் செல்லக் கோபம் கொண்டவளை அணைத்துக் கொண்ட கார்த்திக்..

“இரண்டும்தாண்டி...” என்றான்..

**நே**காவிற்கு திருமணம் முடிந்து விட்டது... அவளுக்காக வரிசைகட்டி காத்திருந்த கோடிஸ்வரர்களில் ஒருவனை தீனதயாளன் தேர்ந்தெடுத்து விட்டார்.. அவளைக் கரம் பிடித்தவன் முகத்தில் எதையோ சாதித்து விட்ட வெற்றிப் பெருமிதம் பொங்கி வழிந்தது.. நேகா அவனை கண்டு கொள்ளவே இல்லை.. வரவேற்பு மேடையில் ‘எனக்கெல்லாம் நீ இணையா..?’ என்ற செருக்கோடு நின்று கொண்டிருந்தவளிடம் அவன்தான் வலியவலியப் பேசினான்.. அவள் பக்க நண்பர்களையும்.. உறவிணர்களையும் அவள் அறிமுகப் படுத்தி வைக்காத போதும் வலியப் போய் விசாரித்து கை குழுக்கினான்.. அவன் பக்க உறவினர்களையும்.. நண்பர்களையும் அவள்

கண்டு கொள்ளாமல் நின்ற போதும் அதை அவன் கண்டு கொள்ளாமல்.. அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.. அவள் 'அப்படியா..' என்ற பாவனையில் தலையைக் கூட ஆட்டவில்லை.. இருந்தும் அவன் அவள் முகத்தை பருகு.. பருகென்று பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தான்...

மேடையில் நடக்கும் நாடகத்தைப் பார்த்த கார்த்திக்..

"தப்பிச்சேண்டா சாமி.." என்றான்..

"இவளுக்கு காலம் பூரா சேவை செய்ய வசமான அடிமையொருத்தன் கிடைச்சுண்டாண்டி காவ்யா..." என்றாள் பாவனா..

"இருக்கலாம்.. ஆனா காலம் இவளையும் மாத்தலாம் பாவனா.. ஒருநாள் இல்லைன்னா ஒருநாள் அவன் அன்பை இவளும் புரிந்துக்கலாம்.." என்று யோசனையுடன் சொன்னாள் காவ்யா..

"ஆனாலும் உனக்கு இவ்வளவு பேராசை ஆகாதுடி.." பாவனா சிரித்தாள்...

அர்ஜீனுக்கு மனைவியின் பதிலில் அவள் மீதான காதல் அதிகரித்தது.. அவன் அவளை மேலே படிக்கச் சொன்னான்.. அவன் அதைச் சொல்வான் என்று எதிர்பார்த்திராத காவ்யா விழிவிரித்தாள்..

# 211

## நீ செல்லும் பாதையிலே... நான் வரவே ஆசைகொண்டேன்...

“என்னது..?!!” பிரமித்தாள்...

“எதுக்கு இத்தனை ஆச்சரியப் படறவ..?” மதுரை பாஷையில் பேசிக் கண்சிமிட்டினான் அர்ஜீன்..

“அப்படியே மதுரைக்காரனாய் ஆகிட்டேடா..” ஆனந்தி மெச்சினாள்..

“காவ்யாவும் சென்னைப் பெண்ணா ஆகனுமில்ல..? அதனால அர்ஜீன் சொல்கிறபடி மேலே படிக்கச் சொல்லு..” சுந்தரி தூண்டினாள்..

“இப்பப் போய் எப்படிப் படிக்கிறது அத்தை..?” தயங்கினாள் காவ்யா...

“ஏன்..? இப்ப என்ன ஆச்சு..?”

“கல்யாணம் ஆகிருச்சே...”

காவ்யா சொன்னதும் சுந்தரியும்.. ஆனந்தியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.. அவர்கள் எதற்காக அப்படிச் சிரிக்கிறார்கள் என்று காவ்யாவிற்கு புரியவில்லை.. அவள் அர்ஜீனைப் பார்த்தாள்.. அவன் அவள் கன்னம் தட்டினான்..

‘அத்தையும்.. அண்ணியும் இருக்கிறாங்க.. இப்பப் போய் என்ன வேலை செய்கிறார்ன்னு பாரு..’ காவ்யா கணவனை முறைத்தாள்...

“இதுக்கெல்லாம் அவனை முறைத்தேன்னா வேலைக்கு ஆகாது.. இதெல்லாம் ஜீஜீபி.. உன் அண்ணன் இதுக்கு மேலேயும் அட்டூழியம் பண்ணுவாரு..” ஆனந்தி தம்பியின் பக்கமாக பேசினாள்...

“என்னவோ போங்கண்ணி.. எனக்கு இதெல்லாம் சரியாய் வரும்ன்னு தோணலை...”

“எல்லாம் வரும்.. உனக்குப் படிக்கப் பிடிக்குமா.. பிடிக்காதா..?”

“ரொம்பப் பிடிக்கும்...”

காவ்யாவின் வார்த்தைகளில் கைநழுவிப் போன நிறைவேறாத அவளின் கனவு தெரிந்தது.

“அப்புறமென்ன.. இப்ப சான்ஸ் கிடைச்சிருக்கு.. அதை யுடிலைஸ் பண்ணிக்க வேண்டியதுதானே..?”

“ஆனாலும் அண்ணி.. கல்யாணமான பின்னாலே வீட்டைக் கவனிக்காம படிப்புன்னு வெளியே போய் வர்றது சரியாய் வருமா..?”

“அம்மா.. இது வேலைக்கு ஆகாது.. நீங்களே உங்க மருமகளுக்குப் புரிய வையுங்க.. என்னாலே முடியாது.. எப்படிடா அர்ஜீன்.. இந்தப் பிடிவாதக்காரியோட பேச்சு வார்த்தை நடத்தற..?”

“என்னக்கா செய்கிறது..? காதலித்துத் தொலைத்துட்டேனில்ல..?”

அக்காளும்.. தம்பியும் கூட்டுச் சேர்ந்து கொண்டு காவ்யாவை கலாய்க்க ஆரம்பிக்க.. சுந்தரி சிரித்தபடி அவர்களின் முதுகில் ஒரு போடுபோட்டாள்..

“ஏண்டா.. என் மருமகளை கேலி பண்றிங்களா..?”

“உங்க மருமக இப்படிப் பேசினா கேலி பண்ணாம என்ன செய்வாங்களாம்..?”

“விடுடா.. சொன்னாப் புரிஞ்சுக்கப் போறா..”

சுந்தரி மருமகளிடம் இதமாக எடுத்துச் சொல்ல ஆரம்பித்தாள்..

“இங்கே பாரு காவ்யா.. இந்த வீட்டில் நீ சமையல் பண்ணப் போகிறயா..?”

“இல்லை..”

“மேல் வேலைகளைப் பார்க்கப் போகிறயா..?”

“இல்லை...”

“தோட்டத்தைக் கவனிக்கப் போகிறயா..? அதை நீ செய்வேன்னு எனக்கும் தெரியும்.. ஆனாலும் அதற்குன்னு தோட்டக்காரன் இருக்கிறான்.. உனக்கு எப்படியெல்லாம் தோட்டத்தை மாற்றியமைக்கனும்னு தோணுதோ.. அதையெல்லாம் அவனிடம் சொன்னா போதும்.. ஜீபூம்பா பூதம் போல உடனடியா அதைச் செய்து முடித்திருவான்..”

“அத்தை..”

“சொல்லும்மா...”

“இத்தனை வேலைகளையும் செய்ய வேலையாள் இருக்கிறாங்கதான்.. வீட்டுப் பெண்களுக்கு அதிகமான வேலையில்லைதான்.. இருந்தும் ஏன் நீங்க மேலே படிக்கலை..?”

காவ்யாவின் கேள்வியில் சுந்தரியின் விழிகளில் மெச்சுதல் வந்தது.. கூடவே சன்னமான மெலிதான சோகத் திரையொன்றும் தெரிந்தது...

“உன் மாமா என்னைப் படிக்கச் சொல்லலையே...”

சுந்தரியின் வார்த்தைகளில் அவளையும் மீறி துயரம் வெளிப்பட்டுவிட அவள் அதைச் சமாளித்துக் கொண்டு புன்னகை செய்தாள்.. அவளின் விழிகளில் பிரதிபலித்த சோகத்தில் அர்ஜீன் முகம் இறுகினான்.. ஆனந்தி மௌனமானாள்..

“பட் ஒன்திங் காவ்யா.. என் அப்பாம்மா என்னை மேலே படிக்கத்தான் சொன்னார்கள்.. அப்பப் பார்த்து உன் மாமா பெண் கேட்டு வந்தாரா.. எனக்கு அவரைப் பிடித்துப் போச்சு.. டிகிரி படித்திருக்கோமே.. இதற்கு மேல் எதுக்கு படிப்புன்னு தோணிப் போச்சு.. நான் கல்யாணத்துக்கு ஓகே சொல்லிட்டேன்.. அதுக்குப் பின்னாலே என்னோட சுதந்திரம் என் கையிலிருந்து உன் மாமா கைக்கு தானாப் போயிருச்சு.. நான் கொடுக்கலை.. அவரா அதை எடுத்துக்கிட்டார்...”

என்ன சொல்வதென்று தெரியாமல் காவ்யா பரிதவித்தாள்.. இது துயரம்.. பெண்களுக்கு இழைக்கப்

படும் அநீதி.. காலம் காலமாய் இதை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெண்களின் மீது திணித்தே வந்திருக்கிறார்கள்.. அந்தச் சிறியவர்களும்.. பெரியவர்களும்.. ஆண்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள்...

'எப்போதிருந்து இந்த அடக்குமுறை பெண்களின் மீது பிரயோகிக்கப்பட ஆரம்பித்தது..?' காவ்யா யோசித்தாள்..

அணில்.. ஆடு என்ற போதனை ஆரம்பித்த காலத்திலிருந்தே இதையும் போதிக்க ஆரம்பித்து விட்டார்கள்.. என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

என்று கையேட்டில் உள்ள படங்களில் 'அம்மா சமைக்கிறாள்..' என்று அடுப்பங்கரையில் புகையின் மத்தியில் விறகுக்கட்டையில் தீயைக் கொண்டுவர ஊது குழலை ஊதிக் கொண்டிருக்கும் அம்மாவின் அடையாளமாக அந்தப் படத்தைப் போட்டார்களோ.. அன்றே அடிமைத்தளையை அனைவரின் மனதிலும் அவர்கள் திணிக்க ஆரம்பித்து விட்டார்கள்..

'அப்பா பேப்பர் படிக்கிறார்..' என்று ஈஸிசேரில் முதுகு வலிக்காமல் சாய்ந்து அமர்ந்து எந்தவித பொறுப்புக்களோ.. தளைகளோ இல்லாமல் சுகமாக வெளியுலக விவரங்களை வாசிக்கும் உரிமை பெற்றவராக ஆணின் அடையாளத்தை காண்பித்தார்களோ.. அன்றே அவர்களின் பிறப்புரிமை விட்டுச் சிறகடிப்பது... பெண்களின் பிறப்புரிமை விட்டுக்குள் சிறைபடுவது என்ற அடிமைத் தளையை அவர்கள் நிர்ணயித்து விட்டார்கள்...

அக்கா வீடு பெருக்குவாள்.. தம்பி பம்பரம் விடுவான்.. இதுபோன்ற படங்கள் இளம் பிஞ்சுகளின் மனதில் பதிந்து..

பெண்பிள்ளைகள் வீட்டு வேலைகளைச் செய்யப் பிறப்பெடுத்துவர்கள்.. ஆண்பிள்ளைகள் சுதந்திரமாக விளையாடும் உரிமை கொண்டவர்கள் என்று அழிக்க முடியாத பிரகடனமாக மாறிப் போய் விடுகிறது..

இப்போது அது போன்ற படங்கள் இல்லையென்றாலும் அவை உருவாக்கிய எண்ணங்கள் இல்லாமல் போகவில்லையே.. அதைத்தான் சுந்தரி தன் வார்த்தைகளில் கொட்டிக் கொண்டிருந்தாள்..

“உன் மாமாவோட கம்பெனிக்கு இதுவரை நான் விரல் விட்டுச் சொல்கிற அளவுக்குத்தான் போய் வந்திருக்கிறேன்.. அது கம்பெனி ஆரம்பித்த நாளைக் கொண்டாடும் பங்சனா இருக்கும்.. மற்றபடி நான் கம்பெனிக்குள் நுழைவதை அவர் விரும்பமாட்டார்...”

“உங்களுக்கு அந்த விருப்பம் இருந்ததா அத்தை..?”

“இல்லைன்னு சொல்ல முடியாது.. பட்.. உன் மாமா விரும்பலைங்கிறதுக்காக எனக்கும் விருப்பமில்லாமலே போயிருச்சு.. உனக்கு அப்படியில்லை.. அர்ஜீன் ஃபாரின் போக வேண்டிய சமயங்களில் நீ அவனோட இடத்தில இருந்து கம்பெனியைக் கவனிச்சுக்கனும்னு அவன் நினைக்கிறான்.. வேற வழியுமில்ல. அப்படித்தான் இருந்தாகனும்.. அதுக்கு இந்தப் படிப்பு போதாதும்மா.. நீ இன்னும் கொஞ்சம் படித்தாகனும்...”

“அண்ணி மேலே படிக்கலையே அத்தை.. கம்பெனிக்கும் போகிறதில்லையே..”

இதைக் கேட்ட ஆனந்தி சிரித்தாள்.. அர்ஜீனைப் பார்த்து..

“டேய்.. நீ கேள்வியின் நாயகியை மேரேஜ் பண்ணியிருக்கிறடா..” என்று சொன்னாள்...

“இல்லேண்ணி.. நான் என்ன சொல்லவர்றேன்னா..”

“நீ ஒன்னும் சொல்ல வேண்டாம்.. உன் மனதில் எதுக்காக இந்த அளவுக்கு கில்ட்டி கான்ஷியஸ் வருது காவ்யா..? என் கதையே வேற காவ்யா நான் உன்னை விட அதிகமாகவே படிச்சிருக்கேன்.. மேரேஜ் ஆன புதிதில் சத்யாவுடன் கம்பெனிக்கு போயிருக்கேன்.. அதோட அட்மினிஸ்ட்ரேசனைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்.. அவர் பக்காவா என்னை டிரெயின் பண்ணி வைத்திருக்கிறார்.. இப்ப சரண்.. சாரான்னு இரட்டை வால்கள் வந்துட்டதாலே... என்னாலே அதிகமா கம்பெனிக்குப் போக முடியலை.. பட்.. அவரோட கம்பெனியில ஈக்குவல் ஷேர் எனக்கும் இருக்கு.. போர்டு மீட்டிங் போட்டா நான் போயாகனும்.. எனக்குத் தேவையான படிப்பு இருக்கிறதாலே நான் மேரேஜிக்கு அப்புறமா படிக்கலை.. ஆனா உனக்கு அப்படியில்லை.. அர்ஜீனோட கம்பெனியை ஹேண்டில் பண்ணனும்னா நீ இன்னும் கொஞ்சம் படித்தாகனும் காவ்யா...”

மெல்ல.. கருணையாகத் தோன்றாமல் மேலே படிப்பது காவ்யாவின் கடமையென்ற எண்ணத்தை அவள் மனதில் அவர்கள் கொண்டு வந்தார்கள்.. காவ்யா உற்சாகத்துடன் எம்.ஸி.ஏ படிக்க ஆரம்பித்தாள்.. அவள்

வயதுப் பெண்கள் அங்கே படித்துக் கொண்டிருந்ததில் அவளது உற்சாகம் அதிகமானது...

அர்ஜீன் அவளைக் கம்பெனிக்கு அழைத்துச் சென்றான்.. அவளுக்கு ஒரு பதவியைக் கொடுத்தான்.. காலையில் கம்பெனி.. மாலையில் படிப்பு என்று காவ்யா தன் உலகத்தை பிஸியானதாக மாற்றிக் கொண்டாள்.. அர்ஜீன் வெளிநாடுகளுக்குப் போகும் போது சில சமயங்களில் இவளும் அவனுடன் சேர்ந்து போய் வருவாள்.. முக்கியமான வேலைகள் இருந்தால் அவன் வரும்வரை அவன் இல்லாத குறையே தெரியாமல் கம்பெனியை பார்த்துக் கொள்வாள்..

அவளின் உலகம் வண்ணமயமானதாக மாறிப் போனது.. அவளின் நிறைவேறாத ஆசைகள் நிறைவேற ஆரம்பித்திருந்தன...

# 212

***என்குரல் கேட்டு நீ வரவே...***
***ஏக்கத்துடன் ஆசைகொண்டேன்...***

**வா**சல் தெளித்துக் கோலம் போட்டாள் தேன்மொழி.. புள்ளி கோலத்தில் அவள் நிபுணத்துவம் பெற்றவள்.. தெருவை அடைத்து அவள் போடும் புள்ளி

கோலத்திற்கு அந்தப் பகுதியில் ரசிக கூட்டமே உண்டு.. தேர்கோலம்.. மயில் கோலம்.. விசிறிகோலம் என்று ஒவ்வொரு நாளும்.. ஒவ்வொரு விதமாக அவள் கோலம் போடுவாள்...

அன்றும் அதுபோல கோலம் போட்டு முடித்து விட்டு.. கோலத்தின் நடுவில்.. சாண உருண்டையொன்றை வைத்து.. அதன்மீது பூசணிப்பூ ஒன்றைச் செருகி வைத்தாள்..

“இப்படிக் கோலம் போட்டா எப்படி தெருவைக் கடக்கிறதாம்..?”

அவள் காதில் வந்து விழுந்த குரல் பரிச்சயமானதாகத் தோன்ற.. அவசரமாக நிமிர்ந்து பார்த்தாள்.. பார்த்தவள் இமைக்காமல் விழி விரித்து அப்படியே அமர்ந்து விட்டாள்..

கோலம் போடுவதற்காக இழுத்துச் செருகியிருந்த சேலைக் கொசுவமும்.. அவள் மண்டியிட்டு குனிந்திருந்த கோலமும்.. காலையிலேயே மார்கழி நீராடியதில் விரித்து விடப் பட்டிருந்த கூந்தலும்.. அவள் நெற்றியில் துலங்கிய அரக்கு வண்ணப் பொட்டின் கீழிருந்த குங்குமத் தீற்றும் அவனைச் சொக்குப் பொடி போட்டு சுண்டியிழுத்தன...

அவன்... கண்ணதாசன்..! அவளிருந்த வீட்டுப் பக்கம்.. ஏன்.. தெருவின் பக்கமே காலடி வைக்காதவன்..

அன்று வந்திருந்தான்.. அவனுடைய காரை அவன் தள்ளி நிறுத்தியிருந்ததை அப்போதுதான் அவள் கவனித்தாள்...

‘இந்த நாள்.. இனிய நாள்..’ என்று அவளுக்குத் தோன்றியது.. எங்கோ ஒரு பட்ஷி கூவிக் கொண்டுப் பறந்ததில் அவள் இதயமும் சேர்ந்து சிறகடித்தது..

எழுந்து கொள்ளத் தோன்றாமல் பிரமிப்புடன் அமர்ந்து விட்டவளை அவன் வெகு பிரியத்துடன் கவனித்தான்.. அவன் மீதான அவளின் காதலை அவள் உணர்த்திய விதத்தில் அசையாத அவனது இரும்பு மனமும் அசைந்தது...

“என்ன..? எனக்கு வழி விட மாட்டியா..?”

அவன் கேள்வியில் அவள் கலைந்து எழுந்தாள்.. அவள் எழுந்து நின்ற போது இடுப்பைத் தாண்டித் தொங்கிய அவளின் கூந்தலில் அவன் பார்வை பதிந்தது..

***‘தோகை இளமயில்..***
***ஆடி வருகுது...***
***வானில் மழை வருமோ..?’***

அவன் மனதில் பாடல் வரிகள் தோன்றின...

“வாங்க...”

அவள் வீட்டுக்கு அவன் வந்திருக்க மாட்டான் என்பதை அறிந்திருந்தும் அவள் அந்தச் சொல்லை உதிர்த்தாள்...

“நான் அடுத்த தெருவில் இருக்கிற ஆசாரி வீட்டுக்கு வந்தேன்...”

உன் வீட்டுக்கு வரவில்லை என்பதை மறைமுகமாகச் சொன்ன அவனது வார்த்தைகளில் மலர்ந்திருந்த அவள் முகம் கூம்பியது..

“வழியில் உன் கோலத்தைப் பார்த்தேன்.. எத்தனை அழகான கோலம்..! எவ்வளவு மெனக்கெட்டு நீ போட்டிருப்ப..? இது மேல கார் டயரை விட்டுக் கோலத்தைக் கலைக்க மனம் வரலை.. அதான் காரை அங்கேயே நிறுத்திட்டு.. இதைத் தாண்டிக் கடந்து போகலாம்ன்னு இறங்கி வந்தேன்...”

அவன் விளக்கம் சொன்னான்.. அதற்காகத்தான் நீ இறங்கி வந்தாயா என்று அவள் மனம் கரைந்தாள்...

‘எனக்காக வரலையா..?’

அவள் விழிகளின் பரிதவிப்பில் நகரமுடியாமல் அவன் அங்கேயே தேங்கி நின்றான்.. மனதுக்குள் குடியிருப்பவனை அவ்வளவு கிட்டத்தில் பார்த்து விட்டதில் அவளுக்குள் தோன்றியிருந்த படபடப்பை அவனால் உணர முடிந்தது.. அவ்வளவு மென்மையான பெண்ணின் மனதில் இருந்தும் அவளிடம் நின்று பேச முடியாத சங்கடம் அவனுக்குள் இருந்தது...

“போய் வரவா..?”

அவள் முகம் பார்க்காமல் அவன் கேட்டான்.. அவள் முகம் பார்த்தால்.. அந்தக் கேள்வியில் அவள் படும் துயரத்தையும் பார்க்க நேரிட்டு விடும்.. அதைப் பார்த்த பின்பு கடந்து போவதில் உள்ள சிரமத்தை அவனே அறிவான்..

அவன் கல் அல்ல.. அவனுக்கும் ஒரு மனம் இருந்தது.. அதில் ஆசை இருந்தது.. அந்த ஆசை..

அவன்மீது ஆசைகொண்ட மென்மையான பெண்ணொருத்தியிடம் மையம் கொண்டிருந்தது..

*‘உன் மீது கொண்ட ஆசை..*
*உத்தமியே மெத்தையுண்டு..*
*சத்தியமாச் சொல்லுறேண்டி..*
*தங்க ரத்தினமே..*
*தாள முடியாது கண்ணே..*
*பொன்னு ரத்தினமே...’*

இந்தப் பாடலை அர்ஜீன் காவ்யாவிடம் பாடிக் கொண்டிருந்ததை அவன் ஒருமுறை கேட்க நேரிட்டது...

அப்போது காவ்யா.. அர்ஜீனுடன் மறுவீட்டு விருந்துக்கு வந்திருந்தாள்.. மாடியறையில் இருந்த அவர்களை சாப்பிட அழைத்து வரச்சொல்லி அன்னபூரணி சொன்னதால்.. தங்கை கணவனை மரியாதையுடன் அழைத்து வருவதற்காக அவன் காவ்யாவின் அறைக்குச் சென்றான்.. கதவு முடியிருந்தது.. தட்டுவற்காக அவன் கையை உயர்த்திய போது அந்தப் பாடல் கேட்டது.. அப்படியே தயங்கி நின்று விட்டான் கண்ணதாசன்..

அர்ஜீனுக்கு இது போன்ற பாடல்களைக் கூடப் பாடத்தெரியும் என்பதை அன்றுதான் அவன் அறிந்தான்..

காதல்தான் யாரையும் மாற்றி வைத்து ஆட்டிப் படைக்கும் சக்தி வாய்ந்ததாயிற்றே.. அது திணிக்கும் ஆசை வலையில் சிக்கியவர்களின் மனதில் எங்கிருந்தோ ஆசைகள் வந்து வித்தாக விழுந்து முளைப்பதை யாரால் தடுக்க முடிந்திருக்கிறது..?

அந்தப் பாடல்... இந்த நேரத்தில் கண்ணதாசனின் மனதில் வந்து ஏன் ஒலிக்கிறது என்று தெரியாமல் அவன் திகைத்தான்..

“தாராளமா போயிட்டு வாங்க.. அதுக்கு முன்னால எங்க வீட்டுக்குள்ள ஒரு எட்டு வந்து உட்காந்து ஒரு தம்ளரு காபித் தண்ணிய தொண்டையில ஊத்திக்கிட்டு மகராசனா போயிட்டு வாங்க.. நாங்க வேணாம்ன்னு சொல்லலையே...”

அசையாமல் நின்றிருந்த தேன்மொழியா இவ்வளவு தைரியமாக வார்த்தைகளை உதிர்க்கிறாள் என்ற ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான் கண்ணதாசன்.. அவள் இதழ் அசைக்கவில்லை...

‘வேற யாரு பேசறது..?’

அவளின் பின்னாடி தெரிந்த வாசல்படியில் செல்வி தெரிந்தாள்.. இறங்கி வந்து மகளின் அருகே நின்றவள்..

“இது என்ன உங்க எதிரிக்காரரக வீடா தம்பி..? வாசல் வரைக்கும் வந்தவரு வாசலோடு போனா.. அக்கம் பக்கத்தில எங்கள என்னன்னு நினப்பாங்க..? உறவு மொறைக்கு ஒரு வாயி காபித்தண்ணி கூடக் கொடுக்க வக்கில்லாத குடும்பம்ன்னு எங்கள நினைச்சுப்புட மாட்டாங்களா..?” என்று சண்டைக்கு வந்தாள்..

“ஐயோ அத்த.. அப்படியில்ல.. நானு அடுத்த தெருவில..”

“ஆசாரி வீட்டுக்கு வந்தீங்க... எங்க வீட்டுக்கு வரலை... இதத்தான தேனு கிட்ட சொல்லிக்கிட்டு இருந்தீங்க..? எங்காதிலயும் அது விழுந்துச்சு தம்பி.. ஆசாரி வீட்டுக்குப் போனா உறவு மொற வீட்டில காபித் தண்ணியக் குடிக்காமப் போகனுமுன்னு ஏதாச்சும் சட்டமிருக்கா..?”

“அதில்ல அத்த...”

“பூசாரி வீட்டுக்குப் போனாத்தான் ஆயிரத்தைஞ்சு சட்ட திட்டமிருக்கும்.. ஆசாரி வீட்டுக்கு போறதில அப்படியெதுவும் சட்டமில்ல.. அதனால வீட்டுக்குள்ளார வந்து உக்காந்து ஒரு வாயி காபித்தண்ணிய குடிச்சுப்புட்டு அதுக்கப்புறமா நீங்க ஆசாரி வீட்டுக்கு போங்க.. ஆரு வேணாம்கிறது..?”

அமைதியின் சிகரமான தேன்மொழியின் தாயார் இந்த அளவுக்கு வாயாற்றல் படைத்தவளாக இருப்பாள் என்று கண்ணதாசன் நினைத்தும் பார்த்ததில்லை.. அதுவரை அவனிடம் நேருக்குநேர் நின்று செல்வி பேசி அவன் கேட்கும் சந்தர்ப்பங்கள் அவனுக்கு நேர்ந்ததில்லை.. உறவினர்களின் வீட்டு விசேங்களில் அவனைக் கண்டால் சேலை முந்தானையை இழுத்துப் போர்த்தி.. பவ்யமாக நலம் விசாரித்து விட்டுச் செல்லும் செல்வி இவ்வளவு வாய்த்திறமை உடையவளா..?

அதுவரையில் அன்னபூரணிதான் அதுபோன்ற ஆற்றலை உடையவள் என்று நினைத்திருந்த கண்ணதாசனின் அந்த நினைவு தகர்ந்தது..

‘ம்ஹூம்.. மதுரைக்கார பொண்ணுகளுக்கு வாய்ச் சவடால் அடிக்க சொல்லியா தரனும்..? இது யாரு ஆட்சி செய்கிற ஊரு..? மீனாட்சி ஆட்சி செய்கிற ஊராச்சே..’

“என்ன தம்பி.. அப்புடியே நிக்கிறீக..? காபித் தண்ணிக் குடிக்கத்தான கூப்பிட்டேன்.. கசாயம் குடிக்கச் சொல்லியா கூப்பிட்டேன்..? சும்மா வாங்க தம்பி...”

அதற்கு மேலும் தெருவில் நின்று வழக்கடித்தால் நான்கு பேர் நின்று வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடுவார்கள் என்று கண்ணதாசனுக்குத் தோன்றியது.. அப்போதே பக்கத்து வீட்டு வாசலிலும்.. எதிர் வீட்டு வாசலிலும்.. கோலம் போட்டுக் கொண்டிருந்த பெண்கள் வேடிக்கை பார்க்க ஆரம்பித்திருந்தார்கள்...

‘இருந்தாலும்.. அந்தத் துரியோதனனும்.. தேவராஜனும் இருக்கிற வீட்டுக்குள்ள கால் பதிக்கிறதா..?’

கண்ணதாசனுக்கு தயக்கமாக இருந்தது.. இந்த நினைவை நிறுத்த அவனால் முடியவில்லை.. அது தேன்மொழியின் வீடு என்று அவனால் நினைக்க முடியவில்லை.. அதையும் தாண்டி.. அவளுடைய தகப்பனின் நினைவும்.. தமையனின் நினைவும்... அவர்கள் அவன் தங்கைக்கு செய்த அநியாயங்களின் நினைவுகளுமே அவன் முன் வந்து நின்றன..

“இருக்கட்டும் அத்தை.. காபித் தண்ணி எங்கே ஓடிறப்போகுது..? இன்னொரு நாள் வந்து குடிச்சிட்டாப் போச்சு...”

அவன் முகம் இறுக.. தேன்மொழியின் முகம் பார்க்காமல் சொல்லிவிட்டு நகர முயன்றான்...

“இதுக்குன்னு இன்னொரு நாளைக்கு நாள் குறிச்சுட்டு வருவீங்களா..? யாருக்கு காது குத்தப் பாக்கறிங்க மருமகனே..! எனக்கு சின்னவயசிலேயே அழகர் கோவிலில வைச்சு.. ஊருக்கே வெத்தல பாக்கு வைச்சு அழச்சு காது குத்தியாச்சு...”

செல்வி அவனைப் போக விடுவேனா என்று மல்லுக்கு நின்றாள்..

# 213

*அசைகின்ற என் மனதை – நீ*
*ஆட்கொள்ள ஆசைகொண்டேன்...*

**தா**ய் அறியாத சூள் உண்டா..?

எதற்கும் அசையாத தேன்மொழியின் மனதில் கண்ணதாசனைக் கண்டதும் வருகின்ற அசைவைப் பற்றிச் செல்வி அறிந்திருந்தாள்...

அவனைக் கண்டதும் மகளிடம் தோன்றும் பரபரப்பு.. அவனிருக்குமிடம் தேடி அலைகின்ற அவள் பார்வை.. அவன் நகரும் போதெல்லாம் அவனுடன் சேர்ந்து நகர்கின்ற

அவளின் விழியசைவு.. என்று அனைத்தையும் அந்தத் தாயின் மனம் அறிந்து வைத்திருந்தது..

இருந்தும் செல்வி என்னதான் செய்வாள்..?

என்று துரியோதனனின் மனதில் பகை சூழ்ந்ததோ.. பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற வன்மம் வந்ததோ.. அன்றே அவர் தான் தேன்மொழிக்குத் தந்தை என்பதை மறந்து விட்டார்...

"ஒரு மனுசணாப்பட்டவரு.. பெத்த பொண்ணுக் கேத்த மாப்பிள்ள அந்த வீட்டில இருக்கிறாரே.. அவருக்கு பொண்ணக் கட்டிக் கொடுக்க பேச்சு வார்த்த நடத்துவோம்ன்னு நினக்கிறத விட்டுப்புட்டு அந்த வீட்டில இருக்கிற அருமையான பொண்ண.. தன்னோட ஆகாவழிப் பயலுக்கு பொண்ணு கேட்டு.. இருக்கிற உறவு முறையை அத்து விடலாம்ன்னு நினைப்பாரா..? உங்க அப்பாவ.. உன் தறுதல அண்ணன் அப்புடி நினைக்க வைச்சுப்புட்டானே தேன்மொழி.."

இதைச் சொல்லி அவள் புலம்பாத நாளில்லை.. மற்ற புலம்பலுக்கெல்லாம் தாயைத் தேற்றும் தேன்மொழி.. இதற்கு மட்டும் எதையும் சொல்லாமல் மௌனமாக இருந்து விடுவாள்.. அவள் மனதின் வலி கண்களில் தெரிவதைக் காணும்போது செல்வியின் பெற்ற வயிறு பதறித்துடிக்கும்..

அவள் வீடு தேடிப் போய் பேச முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்த போது.. அவளின் மகள் மனதில் குடியிருப்பவனே தெய்வாதீனமாக அவள் வீட்டு வாசலில்

வந்து நிற்கிறான் எனும்போது அவள் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடுவாளா..?

“இந்தா பாருங்க தம்பி.. நீங்க ஆம்பளைங்க.. அடிச்சுக்குவீங்க.. புடிச்சுக்குவீங்க.. உங்களுக்குள்ளே ஆயிரமிருக்கும்.. எனக்கு அதைப் பத்தியெல்லாம் கவலையில்லை.. உங்க அப்பா எனக்கு ஒன்னுவிட்ட அண்ணன் முறையாகனும்.. உங்க அம்மாவோ.. எனக்கு ரெண்டு விட்ட தாய்மாமான் மகளாகனும்.. இம்புட்டு நெருங்கின சொந்த பந்தமா இருந்துக்கிட்டு நீங்க வாசலோடு போனா எனக்கு அது மருவாதையாயில்ல.. என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கிறதா இருந்தா.. இது என் வீடுன்னு நீங்க நினைக்கிறதா இருந்தா.. ஒரு எட்டு உள்ளார வந்துட்டுப் போங்க.. இல்ல.. எனக்கு உங்க மனசுல கொடுத்திருக்கிற மருவாதை அவ்வளவு தான்னா நீங்க வழியோட போங்க.. இதுதான் நான் பொழைச்ச பொழைப்புன்னு நானும் என் பொழைப்பைப் பார்த்துட்டுப் போறேன்...”

செல்வியின் வருத்தமான வார்த்தைகளை அதற்கு மேல் வளரவிட கண்ணதாசனுக்கு மனமில்லை.. அவன் சட்டென்று வீட்டுக்குள் போகத் திரும்பி விட்டான்.. தேன்மொழியின் முகம் மலர்ந்தது.. அவள் சிட்டாக வீட்டுக்குள் பறந்து விட்டாள்.. புள்ளி மானைப் போலக் குதித்துக் கொண்டு அவள் ஓடிய வேகத்தில் அசைந்தாடிய அவளின் கூந்தலோடு சேர்ந்து அவன் மனமும் ஊஞ்சலாடியது...

'நான் அவ வீட்டுக்குள்ள வாரதில அவளுக்கு இம்புட்டுச் சந்தோசமா..?'

இந்த ஒன்றிற்காகவே மனதில் எத்தனை பகை இருந்தாலும் அவற்றை மறந்துவிட்டு அந்த வீட்டில் உட்கார்ந்து எழ வேண்டுமென்று அவனுக்குத் தோன்றி விட்டது..

'இது தேவராஜன் இருக்கிற வீடு மட்டுமா..? என் தேன்மொழியும் இங்கேதான் இருக்கிறா..'

அவன் மனது சமாதானமடைந்தது.. அவனை முன்னறையின் சோபாவில் அமரச் செய்த செல்வி.. அவசரமாக மின் விளக்கையும்.. மின் விசிறியையும் போட்டு விட்டாள்..

பளீரிட்ட விளக்கு வெளிச்சம் அதிகாலையில் இருளை விரட்டியடித்து அந்த அறையில் சூழ்ந்தது.. மின்விசிறியின் குளிர்ந்த காற்று அவன்மேல் இதமாக படிந்தது...

அர்ஜீனுக்கு அவன் வீட்டில் செய்யப்படும் உபசாரங்களை செல்வி கண்ணதாசனுக்கு செய்ததில் அவன் மனதில் அந்த வீட்டின் மாப்பிள்ளையாகி விட்டதைப் போன்றதொரு உணர்வு வந்தது.. அந்த நினைவு தந்த சுகத்துடன் சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டவனின் நாசியில் காபியின் மணம் நுழைந்தது...

'அதுக்குள்ளே காபி போட்டுட்டாளா..?'

ஆச்சரியப் பட்டுப் போனான் அவன்.. கையில் காபித் தம்ளரும் அடியில் டபரா செட்டுமாக வந்த தேன்மொழி.. வெட்கத்துடன் செல்வியிடம் காபியை நீட்டினாள்...

“நல்ல புள்ள போ.. எனக்கா காபி கொண்டு வந்த..? தம்பிக்குத்தான கொண்டு வந்த..? அங்க கொடுக்காம இங்கே கொடுத்தா என்ன அர்த்தம்..?” செல்வி மகளை சிலாகிக்கும் சிரிப்பைச் சிரித்தாள்..

அது என்னதான் காதலனாக இருந்தாலும்... நேரடியாக அவனிடம் காபி தம்ளரைக் கொடுக்கத் தயங்கும் நாணத்துடன் பெண்ணை வளர்த்திருக்கும் வார்ப்பைப் பற்றிய சிலாகிப்பு..

தேன்மொழி நாணத்துடன் கண்ணதாசனிடம் காபிதம்ளரை நீட்டினாள்.. அவள் கைவிரல்கள் நடுங்குவதைக் கவனித்தான் அவன்.. விரித்து விடப்பட்டிருந்த கூந்தலை தளர்வாகப் பின்னி.. அவள் அதில் மல்லிகைச் சரத்தை வைத்திருப்பதையும் அப்போது தான் அவன் கவனித்தான்..

‘ஆறே நிமிசத்தில காபியையும் போட்டு.. தலை வாரிப்பின்னல் போட்டு.. பூவும் வைத்துக்கிட்டு வந்துட்டாளே.. எப்படி.?’

மனதுக்குள் வியந்தபடி காபித் தம்ளரை அவன் வாங்கிக் கொண்டான்...

தேன்மொழி செல்வியின் பின்னால் மறைந்து நின்று கொண்டாள்.. தாயின் முதுகுக்குப் பின்னாலிருந்து..

பாதி மறைந்தும்.. மறையாமல் அவள் எட்டிப் பார்த்த அழகில் மனம் லயத்தபடி காபியை உறிஞ்ச ஆரம்பித்தான் கண்ணதாசன்..

“ஆசாரி வீட்டில் என்ன வேலை தம்பி..?” செல்வி விசாரித்தாள்...

“காவ்யாவுக்கு வளைகாப்பு செய்யனும்.. அதுக்கு தங்க வளையல் செய்ய ஆர்டர் கொடுத்திருக்கேன்..” பதில் சொன்னான் கண்ணதாசன்..

‘காவ்யாவுக்கு வளைகாப்பு..?’

மகளைப் பார்த்த செல்வியின் மனம் சங்கடப்பட்டது.. தேன்மொழியும் காவ்யாவும் ஒரே வயதுதான்.. அவள் மணம் முடித்து வளைகாப்புவரை வந்து நின்று விட்டாள்.. தேன்மொழியோ இன்னமும் மார்கழி நீராடி மனம் கவர்ந்த மணாளனுடன் சேர்த்து வைத்து விடும்படி அந்த மாயக் கண்ணனிடம் வேண்டிக் கொண்டிருக்கிறாள்..

“காவ்யாவுக்கு கல்யாணமாகி வருசம் ரெண்டு ஆச்சே... தம்பி இப்பத்தான் வளைகாப்புன்னு வந்து நிக்குதா..?”

“மாப்பிள்ளை அதை மேலே படிக்கச் சொல்லிட்டாரு.. அவரோட கம்பெனி பொறுப்பையும் அது கையில் கொடுத்துட்டாரு.. ரெண்டையும் பார்த்ததினால குழந்தை பெத்துக்கறதை அவங்க தள்ளிப் போட்டிருந் தாங்க.. இப்பவும் மாப்பிள்ளையோட அம்மா சத்தம் போட்டதினால தான் வளைகாப்பு வரைக்கும் வந்திருக்காங்க..”

பொதுவாகச் சொன்ன கண்ணதாசனின் வார்த்தை களில் பெருமை தொனித்தது.. தேன்மொழி அதை மௌனமாக கவனித்துக் கொண்டிருந்தாள்.. செல்விக்கு ஏக்கமாக இருந்தது..

அவர்களுக்கு இருந்த வசதிக்கும்.. வாய்ப்புக்கும்.. கண்ணதாசனுக்கு இணையான படிப்பும்.. உத்தியோகமும்.. வசதி வாய்ப்பும் நிறைந்த மாப்பிள்ளைகளைப் பெற்றவர்கள் வரிசை கட்டி தேன்மொழியைப் பெண் கேட்டார்கள்தான்.. ஆனால் தேன்மொழி மசியவில்லையே...

"எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்ப்பா.." என்று சொல்லி விட்டாள்...

"ஏம்மா..?" துரியோதனனின் புருவங்கள் முடிச்சிட்ட போது...

"ஒருவேளை.. அண்ணனுக்கு கல்யாணமாகி.. மதினியோட மணமேடையில நின்னு தாலியெடுத்துக் கொடுக்கனும்னு என்தங்கச்சி நினைக்குதோ.. என்னவோ.." என்று தேவராஜன் அந்தப் பேச்சை திசைமாற்றிவிட்டான்..

"உன் கூடப் பொறந்தவ... அப்படியெல்லாம் பாசமலரை மலரவிட மாட்டாடா ராசா.. வீண் கனவு காணாத.." செல்வி கோபமாகச் சொன்ன போதிலும்.. மகளின் திருமணத்தை முடித்து வைக்க அவளுக்கு எந்த வழி வகையும் தென்படவில்லை...

தேவராஜனுக்கு பெண் கிடைக்கவில்லை.. துரியோதனனின் செல்வச் செழிப்பில் மயங்கிப் பெண் கொடுக்க முனைந்தவர்கள் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்

களாக இருந்தார்கள்.. அந்தப் பெண்களில் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் தேவராஜனுக்கு விருப்பமில்லை.. அவன் கை நீட்டிய படித்த நகர்ப்புறப் பெண்களில் ஒருத்திக்குக்கூட அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதில் விருப்பமில்லை...

இப்படியே அவன் திருமணம் தள்ளிக் கொண்டே போனது.. அதைத்தவிர வேறு பேச்சைப் பேச அவனும் விடவில்லை.. தேன்மொழி நிம்மதியாக அவளுண்டு.. கண்ணதாசனைப் பற்றிய நினைவுகளுண்டு என்று காலம் கழிக்க ஆரம்பித்து விட்டாள்...

'என்மக இப்புடி உருகுறாளே.. இந்தத் தம்பி மனசுல அதப்பத்தின நினப்பு கொஞ்சமாவது இருக்கா..' வெகுண்டாள் செல்வி..

தங்கையின் வெற்றிகரமான மண வாழ்வைப் பற்றிப் பேசுகிறவன்.. கண்ணுக்கு முன்னால் அவனையே நினைத்துக் கொண்டு.. கன்னியாக காலம் கழிக்கும் தேன்மொழியைப் பற்றி நினைத்துப் பார்க்க வேண்டாமா..?

"ம்ஹீம்.. எதுக்கும் கொடுப்பினை இருக்கனும்.." என்றாள் அவள்..

"ஏன் அத்தை அப்புடிச் சொல்றிங்க.?"

"இல்ல.. என் மக வயசும்.. உங்க தங்கச்சி வயசும் ஒன்னுதான்.. அதுக்குக் கல்யாணமாகி வருசம் ரெண்டு ஆகப் போகுது.. இப்ப புள்ளத்தாச்சிப் பொண்ணா.. தலைப்பிரசவத்துக்கு தாய்வீட்டுக்கும் அது வரப் போகுது..

என் மகளப் பார்த்தீங்களா.. கேட்டு வர்ற மாப்பிள்ளை களயெல்லாம் புடிக்கலைன்னு சொல்லிக் கல்யாணத்தை தட்டிக் கழிச்சுக்கிட்டே இருக்குது..”

செல்வி மனதின் ஆற்றாமை தாங்காமல் புலம்பிவிட.. அவள் முதுகுக்குப் பின்னால் மறைந்திருந்த தேன்மொழி..

“த்ச்சு அம்மா...” என்று கண்டனக் குரல் எழுப்பி அதை ஆட்சேபித்தாள்..

கண்ணதாசனும் அதை அறிந்திருந்தான்தான்.. ஐ.பி.எஸ் படித்திருந்த அவனது பங்காளியொருவன் தேன்மொழியைப் பெண் கேட்டுப் போகப் போவதாக கண்ணதாசனிடமே சொல்லியிருந்தான்.. கண்ணதாசனின் மனம் துணுக்குற்றது.. அந்தப் பங்காளி வீட்டுக்கு ஒற்றை மகன்.. கிராமத்தில் தோட்டம்.. துரவு.. தோப்பு என்று சொத்து பத்து அதிகமுள்ளவன்.. கண்ணதாசனுக்கு இணையான வசதி கொண்டவன்..

“என்னன்னு தெரியலைடா கண்ணா.. அந்தப் புள்ள எதிரிக்காரனப் பாக்கறதப் போல என்ன வெட்டவா.. குத்தவான்னு பாத்துக்கிட்டே காபித்தண்ணிய நீட்டுச்சு.. இருந்தும் நம்ம உறவு மொறையில் இந்தப் புள்ளதான் களையான முகத்தோட, கண்ணுக்கு லட்சணமா, கட்டிக்கிற மொறையில் இருக்கிற புள்ளையாச்சேன்னு பேசாம இருந்திட்டேன்.. மத்ததெல்லாம் நமக்கு தங்கச்சி மொறையா இருந்து தொலைக்குதுகளே.. அந்தப் புள்ளயோட அப்பனும் டவுனில் ஜவுளிக்கடை.. சொந்தவீடு.. சொந்த ஊரில பரம்பரையாவந்த நிலம்

நீச்சுன்னு வசதியாப் பொழைக்கிறாரு.. நமக்கு ஏத்த இடம்ன்னு அப்பாம்மா சொன்னாங்க.. கடைசியில பாத்தா அந்தப் பொண்ணுகட்டிக்கிட்டு இருந்த சேலையில் தீப்பிடிச்சிருச்சுச்சாம்... சகுனம் சரியில்லை.. மாட்டேன்னு சொல்லி விட்டுட்டாங்க...”

## 214

### எங்கேயோ என்குரல் கேட்டால் – நீ எனைநினைக்க ஆசைகொண்டேன்...

**எ**தனால் தேன்மொழி கட்டியிருந்த சேலையில் தீப்பிடித்தது என்பதை உடனடியாக கண்ணதாசனால் உணர்ந்து கொள்ள முடிந்தது...

“இத்தனைக்கும் அந்தப் பொண்ணு நல்லாத்தான் நின்னுக்கிட்டு இருந்துச்சுப்பா.. நல்ல விதமாத்தான் நடந்து போச்சு... கரெக்டா... குத்து விளக்குக்கு பக்கத்தில கால் இடறி எப்படி விழுந்துச்சுன்னு தெரியலப்பா.. விழுந்த புள்ள பேசாம விழுந்து தொலைக்காம குத்துவிளக்கை குப்புற கவுத்துக்கிட்டு விழுந்து வைச்சுத் தொலைச்சிருச்சு.. எங்க வீட்டுப் பெரிசுகளுக்கு இம்புட்டுக் கிடைச்சாப் பத்தாதா..? சகுனம் சரியில்லைன்னு ஏரக்கட்டிக்கிட்டு ஊரப் பாக்கக் கிளம்பிருச்சுக...”

இந்தச் செய்தியை இன்னொரு பங்காளி சொன்னான்.. அவன் சென்னையில் கஸ்டம்ஸ் ஆபிசராக வேலை பார்ப்பவன்.. பார்க்கவும் அழகாக இருப்பான்.. அவனே அப்படிச் சொன்னபோது..

‘அவள் எனக்கானவள்...’ என்ற உணர்வில் கண்ணதாசனின் மனதில் வெற்றிப் பெருமிதம் எழுவதை அவனால் தடுக்க முடியவில்லை...

“ஆணழகனா இருந்தா என்ன..? அரசனாவே இருந்தா என்ன..? அவ என்ன விட்டுட்டு வேற ஒருத்தன திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா...” என்று ஆண்மையின் கர்வம் அவன் மனதில் பொங்குவதை அவனால் அணை போட்டு நிறுத்த முடியவில்லை...

தேன்மொழி அந்த ஆனந்தங்களை அவனுக்குக் கொடுத்தாள்.. இருந்தும் அதைப்பற்றி அவனிடம் சொல்ல முடியாமல்.. அவனைப் பார்க்கவும் வழியில்லாமல் விலகியிருந்தாள்..

அவள் மனதின் வலிகளைப் பற்றிய குற்ற உணர்வு அவனுக்குள் எழுந்து கொண்டுதான் இருந்தது.. ஆனால்.. துரியோதனனின் வீட்டுக்குப் பெண் கேட்டுப் போவதா என்ற சங்கடத்துடன் அவன் நாள்களைக் கடத்தினான்...

“ஏன்ப்பா... அதான் தங்கச்சி கல்யாணம் முடிஞ்சிச்சில்ல... இனியாச்சும் நீ கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு எனக்கொரு மருமகளைக் கொண்டு வந்து நிறுத்தலாமில்ல..?” அன்னபூரணி ஆதங்கப்பட்டாள்...

“தங்கச்சி கல்யாணம்தான் முடிஞ்சிருக்கு... அது மகனுக்கு தாய்மாமனா நான் உட்கார்ந்து காது குத்தி முடிச்சிட்டேனா..?”

“ஆத்தி.. என் மகனுக்கு இருக்கிற ஆசையைப் பாரேன்.. ஏனப்பு.. அந்த காதுகுத்தை பொண்டாட்டிய பக்கத்திலே வைச்சுக்கிட்டு நடத்தி முடிச்சா ஆகாதா..?”

“அது எதுக்கும்மா..? எந்தங்கச்சிக்கு நான் செய்யற சீர்வரிசைக்கு வர்றவளுக்கு கணக்குச் சொல்லனுமா..?”

“ஆமாப்பு.. எலிக்கு பயந்துக்கிட்டு.. சட்டி பானையை வாங்காம இரு.. எலி உருட்டுதேன்னு அச்சப்பட்டுக்கிட்டு இருந்தா.. அடுப்படியில பொங்கிச் சாப்பிட முடியுமாப்பு..? அது பாட்டுக்கு அது.. இது பாட்டுக்கு இது...”

“எதுவோ எங்கிட்டோ இருக்கட்டும்மா.. எனக்கு எந்தங்கச்சிதான் முக்கியம்.. வர்றவ மெதுவாவே வரட்டும்..”

இப்படிப் பேசியே அன்னபூரணியின் வாயை அடைத்து விடுவான் கண்ணதாசன்.. அவள் மகளிடம் ஆதங்கப்பட்டாள்.. காவ்யா அர்ஜீனிடம் தமையனின் காதலை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்தாள்...

“அதுக்கு என்ன செய்யலாம்ன்னு சொல்லுற..?” அர்ஜீன் கேள்வி கேட்டான்...

“இதென்னங்க கதையாய் இருக்கு.. அண்ணனோட காதலைப் பற்றி உங்ககிட்டச் சொன்னேனா இல்லையா..?”

“நானும் உன் அண்ணனுக்கு காதல் பண்ண துரியோதனனின் மகள்தான் கிடைத்தாளான்னு கேட்டேனா இல்லையா..?”

“புரியலை.. தேன்மொழி துரியோதனனின் மகளாய் பிறந்துவிட்ட கொடுமைக்காக அவளை என் அண்ணன் காதலிக்கக் கூடாதா..? கல்யாணம் செய்துக்கவும் கூடாதா..?”

“இந்த விளையாட்டுக்கே நான் வரலை காவ்யா..”

“இப்ப என்னதான் சொல்லவர்றீங்க..?”

“அந்த தேவராஜன் நமக்கு உறவுக்காரனாய் மாறுவதில் எனக்கு விருப்பமில்லை...”

அர்ஜீன் பட்டுக் கத்தரித்ததைப் போல அவன் மனதைச் சொல்லி விட்டான்.. தேன்மொழி துரியோதனனின் மகளாய் இருந்ததிலிருந்து தேவராஜனின் தங்கையாக எப்போது மாறினாள் என்ற கேள்வி காவ்யாவின் மனதில் எழுந்தது.. அர்ஜீன் தேவராஜனை காவ்யாவை விரும்பியவன் என்ற கோணத்தில் பார்ப்பதை புரிந்து கொண்டபின்னால் அது பற்றிய பேச்சை எடுக்கும் துணிவு காவ்யாவிற்கும் வரவில்லை...

அவள் தன் வாழ்க்கையை வாழும் ஆசையில்.. தமையனின் காதலை மறந்தே போனாள்.. தானாக அந்தப் பேச்சை எடுக்க முன்வராத கண்ணதாசனும் தேன்மொழியைப் பெண் கேட்டுப் போக முடியாமலும்.. அதே சமயத்தில் அவளை மறந்து வேறொரு பெண்ணை

மணக்க முடியாமலும் இருபக்க நெருக்கடியில் அல்லாடிக் கொண்டிருந்தான்..

“எடுத்து வைச்சாலும் கொடுத்து வைக்கனும்னு இதுக்குத்தான் தம்பி சொல்லுறது... பொண்ணு பாக்க வர்றப்ப பேசாமத்தான் இருப்பா.. அவங்க முன்னாடி வந்து போறப்ப எதையாச்சும் செய்து வைச்சிருவா.. வந்தவங்க சகுனம் சரியில்லன்னு ஓடிப் போயிருவாக.. இப்புடியே கதை போச்சுன்னா.. தேன்மொழியை பொண்ணு பாக்க வர்ற மாப்பிள்ளைகளுக்கு அவளைப் பிடிக்கலைன்னு பட்டம் கட்டி விட்டுருவாங்க.. இவதான் பொண்ணு பாக்க வர்ற மாப்பிள்ளைகள பிடிக்காம பத்தி விடறான்னு ஊருக்குத் தெரியுமா..? இல்ல.. உறவு மொறைக்குத்தான் தெரியுமா..”

செல்வி புலம்பியதில் என்றும் போல அன்றும் குற்றஉணர்வு எழும்ப உதட்டைக் கடித்துக் கொண்டு விட்டத்தை வெறித்தான் கண்ணதாசன் தேன்மொழிக்கு மனம் தாங்கவில்லை...

“ஏம்மா.. நம்ம குறையைச் சொல்லிப் புலம்பத்தான் வழியோட போனவரக் காபித்தண்ணியக் குடிச்சுப்புட்டு போங்கன்னு சொல்லி வீட்டுக்குள்ள கூப்பிட்டியா..? நீ கொடுத்த காபித்தண்ணிய ஒருவாய் அவரு குடிச்சிருப் பாரா..? உன் புராணத்தச் சொல்லியே காபித் தண்ணிய ஆற வைக்கறியே.. அவருக்கு ஆயிரம் வேலை இருக்கும்மா.. உன் புலம்பலுக்கு ‘ஊம்’ கொட்டத்தான்... விட்ட விடிகாலையிலே அவர் வீட்டை விட்டு கிளம்பி வந்தாரா..?” என்று சன்னமான குரலில் தாயை கடிந்து கொண்டாள்...

அவளின் கரிசனத்தில் சட்டென்று அவள் முகம் பார்த்தான் கண்ணதாசன்.. அவள் பேச்சு நின்றுவிட்டது.. உதட்டைக் கடித்தபடி முகத்தில் நாணச்சிகப்புடன் நிலம் பார்த்தாள் அவள்.. அவளது அந்த வெட்கத்தை அள்ளிப் பருகியது அவனது பார்வை...

“அத்தை சொல்றது புலம்பல் இல்ல.. அவங்க மனதோட ஆற்றாமை.. அதைக் குத்தம் சொல்கிறதுக்கு உனக்கோ.. எனக்கோ உரிமையில்லை..” என்றான் கண்ணதாசன்...

“ஏன் இல்லை..? பேசுற பேச்சு நம்மப் பத்தினதா இருந்தா குத்தம் சொல்லித்தான ஆகனும்..” மெதுவான குரலில் சொன்னாள் தேன்மொழி..

பொதுவாகப் பேசுவதைப் போல அவள் ‘நம்ம’ என்று கூறியதை செல்வி வித்தியாசமாக எடுத்துக் கொள்ள வில்லை.. ஆனால் அந்தச் சொல்லைப் புரிந்து கொண்ட கண்ணதாசன் ஆழமாக ஓர்முறை தேன்மொழியை நோக்கி விட்டு பார்வையை விலக்கிக் கொண்டான்...

“இப்புடித்தான் இந்தப் புள்ள பேசுது தம்பி... இது செய்யறது குத்தமில்லயாம்... நான் புலம்பறதுதான் குத்தமாம்..” செல்வி புகார் சொல்லிக் கொண்டிருந்தபோது.

“யாருகிட்ட.. யாரைப் பத்திக் குத்தம் சொல்லிக் கிட்டு இருக்கிறவ..?” என்று கேட்டபடி மாடியிலிருந்து இறங்கி வந்தார் துரியோதனன்...

ஹாலில் இருந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்த கண்ணதாசனைப் பார்த்ததும் முதலில் அவருக்கு பேச்சே வரவில்லை..

‘இவன் எப்படி இங்கே..’

அவர் வீட்டுக்குள் அவன் வரமாட்டானே என்ற நினைவுடன் கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டவருக்கு காட்சி மாறவில்லை.. உண்மையிலேயே கண்ணதாசன் தான் அங்கே உட்கார்ந்திருக்கிறான் என்பதை உணர்ந்ததும் அவருக்கு கையும் ஓடவில்லை.. காலும் ஓடவில்லை..

அவர் வீட்டுக்கு கண்ணதாசன் வந்திருக்கிறானா..?!

“வாங்க.. வாங்க..” அவர் அவசரமாக வரவேற்றார்...

‘அப்பாடி..! இப்பவாவது இந்த மனுசர் பொம்பளப் புள்ளயப் பெத்த அப்பன் மாதிரிப் பேசறாரே..’ செல்வி நிம்மதியடைந்தாள்...

“ம்ம்ம்...”

அந்த முணுமுணுப்பையும் தேன்மொழிக்காவும்.. செல்விக்காகவும் முணுமுணுத்து வைத்த கண்ணதாசன் எழுந்து கொள்ளப் போனான்..

“என்ன தம்பி.. அதுக்குள்ள எழுந்திருச்சுட்டிங்க.. வராதவரு வந்திருக்கீங்க.. ஆற அமர பேசிட்டுப் போகாம.. அதுக்குள்ள என்ன அவசரம்ன்னு கிளம்பறிங்க..” துரியோதனன் அவனைத் தடுத்தார்...

“நான் இங்கே வரனும்னு வரலை.. அடுத்த தெருவில இருக்கிற ஆசாரி வீட்டில நகை செய்யக் கொடுத் திருந்தேன்.. அதை வாங்கிட்டுப் போகப் போயிக்கிட்டு இருந்தேன்.. அத்தை வாசலில் பார்த்துட்டு ஒருவாய் காபித்தண்ணியக் குடிச்சிட்டுப் போங்கன்னு சொன்னாங்க.. தட்ட முடியலை.. உள்ளாற வந்தேன்..” இறுகிய முகத்துடன் விளக்கம் சொன்னான் கண்ணதாசன்.

“அட இருக்கட்டும் மாப்பிள்ள.. உங்க அத்தை சொன்னாத்தான் கேட்பீங்களா.. மாமன் சொன்னா கேக்க மாட்டிங்களா..?” சட்டென்று மாப்பிள்ளை உறவுமுறைக்கு துரியோதனன் தாவி விட்டார்...

கண்ணதாசனுக்கு என்னவோ போல இருந்தது.. எவர் முகத்தை நினைத்துப் பார்த்தாலே அவனுக்கு வேம்பாக கசக்கிறதோ.. அவர் முகத்தை சொந்தத்துடன் பார்த்துப் பேசிப்பழக அவனுக்கு முடியாது போல தோன்றியது...

துரியோதனன் அதை உணர்ந்து கொண்டவராக பேசினார்..

“நீரடிச்சு நீர் விலகாது மாப்பிள்ளை.. புத்திகெட்ட தனமாய் சில செயல்களை செஞ்சுட்டேன்.. வயசானாலே புத்தி மாறிரும்ன்னு சொல்லிவைச்சது என் விசயத்தில சரியாப் போச்சு.. நடந்ததை மறந்திருங்க.. வேணும்னா நான் துரியோதனன் இரு கரம் கூப்பியபோது அவர்களுக்குள் இருந்த பகை தானாக விலகி ஓடிவிட்டது.. மன்னிப்புக் கேட்டுக்கறேன்..”

# 215

## தென்றலெனும் தேரேறி... நீவரவே ஆசைகொண்டேன்...

தலைவாரிப் பின்னலிட்டு.. பின்னலில் பூதைத்து.. நெற்றியிலே நெற்றிச்சுட்டி.. கைகளிலே.. கங்கணம் என்று மணப் பெண்ணைப் போன்ற அலங்காரத்துடன் ஹாலின் நடுமையத்திலிருந்த சோபாவில் அமர வைக்கப்பட்டாள் காவ்யா...

மேடிட்டிருந்த அவள் வயிற்றை ஆசையுடன் பார்த்த வண்ணம் வந்திருந்த விருந்தினர்களிடம் பேசிக் கொண்டிருந்தான் அர்ஜீன்.. நொடிக்கொரு தரம் அவன் பார்வை.. காவ்யாவின் மீது படிந்து விலகியது.. அவளது கண்களும் அவனைத்தான் தேடிக் கொண்டிருந்தன.. என்பதில் அவன் விழிகள் மின்னின..

உறவினர் வீட்டுப் பெண்களும்.. விருந்தினராக வந்திருந்த பெண்களும் காவ்யாவிற்கு வளையல்களை போட்டு விட்டு.. கன்னத்தில் சந்தனம் தடவி நலங்கு வைத்தார்கள்.. அன்னபூரணி அழைத்து வந்திருந்த மதுரை சமையல்கார அம்மாள் தன் கைவரிசையைக்

காட்டி பதினைந்து வகையான சாத வகைகளை தயார் செய்திருந்தாள்..

வெண்பொங்கல்.. சர்க்கரைப் பொங்கல்.. புளிச் சாதம்.. எழுமிச்சை சாதம்.. தக்காளிசாதம்.. தயிர்சாதம்.. காய்கறி பிரியாணி.. புதினாச் சாதம்.. நெய் சாதம்.. பருப்புச் சாதம்.. காய்கறி புலாவ் சாதம்.. பிரைடு ரைஸ்.. கேரட் சாதம்.. பீட்ரூட் சாதம்.. உருளைக்கிழங்கு மசியல் சாதம்.. என்று பிளந்து கட்டியிருந்தாள்..

உப்பும்.. உறைப்புமான உணவு வகையில் வந்திருந்த விருந்தினர்கள் சாப்பாட்டைப் பாராட்டிப் பேசினார்கள்.. அதில் அன்னபூரணியின் முகம் மலர்ந்து விட்டது...

வளைகாப்பு முடிந்ததும் காவ்யா பெற்றோருடன் கிளம்பத் தயாரானாள்.. மாடியிலிருந்த அவர்களின் அறையில் அவள் துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த போது.. கதவு திறந்தது... அர்ஜீன் உள்ளே வந்தான்.. துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த காவ்யாவை குற்றம் சாட்டும் பார்வை பார்த்தான்...

“இது தேவையே இல்லாத ஜர்னி...”

“எங்க பக்கம் இது தேவையான ஜர்னி.. தலைப் பிரசவம் தாய் வீட்டில்தான் நடக்கனும்பாங்க.. அதுதான் முறைன்னு சொல்வாங்க.. உரிமைப் பிரச்னையைக் கிளப்புவாங்க.. எதை விட்டுக் கொடுத்தாலும்.. வாழையடி வாழையாய் தொடர்ந்துக்கிட்டு வர்ற முறையை மட்டும் விட்டுக் கொடுக்க மாட்டாங்க..”

மூச்சிரைக்கப் பேசிய மனைவியின் அருகில் வந்து அவள் முகத்தை நிமிர்த்தி அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான் அர்ஜீன்...

"எதுக்காகடி இப்படி மூச்சிரைக்க லெக்சர் கொடுக்கிற..?" கோபத்துடன் கேட்டான்...

"வேற எதுக்காக..? எல்லாம் இந்த முதலாளியை விட்டுவிட்டு ஊருக்குப் போகிறதுக்குத்தான்.." அவன் கட்டையின் பொத்தான்களைத் திருகியபடி சொன்னாள் காவ்யா...

"அப்பயும் சரி.. இப்பயும் சரி.. நீ விட்டுவிட்டு ஓடுகிறதிலேயே குறியாய் இருக்கடி.." அர்ஜீன் குற்றம் சாட்டினான்..

அவனைவிட்டு கோபத்துடன் விலக முயன்றாள் காவ்யா.. அவன் கை அவளைப் பிடித்து நிறுத்தியது... அவள் உர்ரென்று முகத்தை திருப்பிக் கொண்டாள்...

"இப்ப எதுக்காக முகத்தைத் திருப்பிக்கிற..?" அர்ஜீன் கடுமை காட்டினான்...

"இந்த ரெண்டு வருசத்தில எத்தன தடவ உங்கள விட்டுவிட்டு என் பிறந்த வீட்டுக்கு ஓடியிருக்கேன்..?"

"காவ்யா.."

"நீங்கதான் என் கழுத்தில தாலியக்கட்டி உங்க வீட்டில கொண்டு வந்து விட்டுவிட்டு.. பிளேன் மேல பிளேனா ஏறிப் பறந்துக்கிட்டே இருப்பீங்க.. நான் இந்த உலகம் சுற்றும் வாலிபனுக்கு கதவைத்திறந்து விடற

வீட்டுக்காரியா.. தேமேன்னு உங்க கம்பெனியையும்.. வீட்டையும் கவனிச்சுக்கிட்டு இருப்பேன்...”

“உங்க கம்பெனியா..? நம்ம கம்பெனின்னு சொல்லுடி..”

“இப்ப அதிலதான் குறைச்சல் வந்துருச்சு...”

“வேற எதில குறைச்சல் வந்திருக்குது..? நீயே சொல்லு...”

“அது எப்படி என்னை நீங்க அப்படிச் சொல்லலாம்..? சான்ஸ் கிடைச்சா இதை ஒன்னைச் சொல்றதையே வழக்கமா வச்சிருக்கீங்க..”

“பின்னே என்னடி..? சென்னையில் இல்லாத வசதியா..? இங்கே என் மகன் பிறந்தா ஆகாதா..?”

“மகள் பிறந்தா என்ன செய்வீங்க..?”

“குட்டிக் காவ்யான்னு பெயர் வைத்துக் கொஞ்சுவேன்..”

“பின்னே எதுக்காக மகன்னு சொன்னீங்க...”

“யதார்த்தமா வாயில வந்ததுதாண்டி.. இதில பெமினிசத்தைப் பேச ஆரம்பிச்சுராதே..”

“பேசறதெல்லாம் நீங்க பேசிருங்க.. நாங்க பதில் பேசினா உடனே பெமினிசம் பேச ஆரம்பிச்சுட்டேன்னு பட்டம் கட்டுங்க...”

“கோவிச்சுக்காதேடி..”

அர்ஜீன் அவள் கன்னத்தில் மூக்கை உரசிக் கொஞ்சினான்..

“ஒன்றும் வேண்டாம்..” செல்லமாக சிணுங்கினாள் காவ்யா...

“என்ன வேண்டாம்..” அர்ஜீன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்...

மேடிட்ட அவள் வயிறு அவனைத் தடுத்து நிறுத்தியதில் குனிந்து அவள் வயிற்றில் முத்தம் கொடுத்தான்...

“கேட்டுக்கடா குட்டி.. உன் அம்மா என் பேச்சை கேட்க மாட்டேங்கிறா..”

“இப்பவே மகன்கூடக் கூட்டணி போட்டாகிறது..?”

“நீ மட்டும் மகன்னு சொல்லலாமா..?”

அவன் சிரிக்க.. அவளும் கூடச் சேர்ந்து சிரித்தாள்.. தாய்மையின் பொழிவுடன் நின்றவளின் மீது.. அவனது ஆசை பெருகியது...

“காவ்யா..”

“ம்ம்ம்...”

“ஐ லவ் யு..”

“இதையே எத்தனை தடவை சொல்வீங்க..?”

“காலம் முழுவதும் சொல்வேன்..”

அவன் முகத்தை அண்ணாந்து பார்த்த காவ்யாவின் கண்களில் காதல் வழிந்தது... அவன் மார்பில் தலை சாய்த்து.. தோளைத் தழுவிக் கொண்டாள் அவள்...

தாய்மைப் பொழிவுடன்.. மார்பில் தலைசாய்த்து நின்ற மனைவியின் கூந்தலைக் கோதி.. அவள் நெற்றியில் முத்தம் கொடுத்தான் அர்ஜீன்.. அவளைத் தாயாக்கி வாழ்வினுக்கொரு அர்த்தம் கொடுத்த அவளது கணவனின் மீத அவளது ஆசை பெருகியது...

*"நான் கேட்டேன்...*
*நீ தந்தாய்...*
*தாலாட்டும் தாயானேன்..."*

மெதுவான குரலில் பாடினாள்... அர்ஜீனின் அணைப்பு இறுகியது...

*"நான் பார்த்து..*
*தோள் சேர்ந்து...*
*சீராட்டும் தாயானேன்..."*

அவள் தொடர்ந்து பாடியதில் அவன் மனக்கண்ணில் அவன் குழந்தையைச் சீராட்டும் காவ்யா தோன்றினாள்..

*"நீயின்றி.. என் மகவெங்கே..*
*என் நன்றி..*
*உந்தனுக்கே..."*

அவன் முகம் பார்த்து அவள் பாடிய போது.. அவனுக்கு வானில் பறப்பதைப் போல இருந்தது.. குனிந்து அவள் இதழ்களில் இதழ் பதித்தான்.. அவள் கண்களை மூடிக் கொண்டாள்...

அவள் கண்களில் இருந்து பெருகிய நீரில் அவன் கன்னம் நனைந்தது.. அந்தக் கண்ணீர் எதற்காக என்று அவனும் கேட்கவில்லை.. அவளும் சொல்லவில்லை...

அங்கே வார்த்தைகளால் விவரிக்க இயலாத உணர்வின் பேரலையில் அவர்கள் நனைந்திருந்தார்கள்...

அவர்கள் மனம் மட்டுமே அங்கே பேசின...

**கா**ர் சீரான வேகத்துடன் ஓடிக் கொண்டிருந்து.. அர்ஜீனின் தோள்மீது சாய்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள் காவ்யா.. மனைவியின் உறக்கத்தைக் கலைக்காமல் மிதமான வேகத்துடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் அர்ஜீன்...

"அம்மா.. நான் காவ்யாவை விட்டு விட்டு வந்துடறேன்.."

அவன் மதுரைக்குக் கிளம்பத் தயாரான போது.. இது தெரிந்த விவரம்தானே என்ற ரீதியில் புன்னகை செய்தாள் சுந்தரி...

"நினைச்சேண்டா.. நீயாவது.. உன் பெண்டாட்டியை தனியா பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைக்கிறதாவது.." ஆனந்தி கிண்டல் செய்தாள்...

"ஏன் சொல்ல மாட்ட..? உனக்கென்ன.. உள்ளூரிலேயே பிறந்த வீடு.. அத்தான் பெயருக்குத்தான் பிரசவத்துக்குன்னு உன்னை இங்கே அனுப்பி வைத்தார்.. மறுநாளில் இருந்து அவரும் நம்ம வீட்டுக்கே குடி வந்திட்டார்.. நீங்க ஜாலியா விருந்து கொண்டாடி குழந்தையையும் பெற்று எடுத்துக்கொண்டு உங்க வீட்டுக்குப் போனிங்க.. எனக்கு அப்படியா..? அத்தானுக்கு அமைந்ததைப் போல என் மாமனார் வீடு உள்ளூரிலேயா அமைந்திருக்கு..? மதுரையில இல்ல அமைந்திருக்கு..?"

“ஏண்டா.. நீயும் அங்கேயே தங்கி விருந்து கொண்டாடிட்டு பிள்ளையைப் பெற்று பெயர் வைத்து தூக்கிக்கிட்டு வர வேண்டியதுதானே..? யார் தடுத்தது..?”

“என் வேலை தடுக்குதேக்கா.. அத்தான் மாமனார் வீட்டிலே விருந்து கொண்டாடினாலும் தினமும் கரெக்டா கம்பெனி வேலையைக் கவனிக்கக் கிளம்பிப் போய் விடுவார்.. நானென்ன செய்கிறதாம்..?”

“உனக்கு மதுரையில என்ன வேலையா இல்லை..? இதுக்கு முன்னாலே.. மதுரைக் கடையே கதின்னு.. சென்னையை மறந்து இருந்தவன்தானேடா.. நீ.. இப்ப மட்டும் என்னவந்ததாம்.. மதுரைக் கடையை கவனிச்சுக்க வேண்டியதுதானே..?”

“ஹி.. ஹி.. அது வந்து..”

அர்ஜீன் வழிய.. சத்தியமூர்த்தி மனைவியைப் பார்த்து...

“அதெல்லாம் அந்தக் காலம் ஆனந்தி.. அப்ப உன் தம்பி காதல் போதையில இருந்தார்.. இப்ப அப்படியில்லை யில்ல..” என்று விளக்கம் சொன்னான்...

“போதை இறங்கி விட்டதா...?”

தனியாக அகப்பட்ட கணவனை முறைத்தாள் காவ்யா...

“யார் சொன்னது..? உன் மேல கொண்ட ஆசை தீரவே தீராதுங்கிறப்ப.. போதை எப்படி இறங்கும் காவ்யா..” அவன் குழைந்தான்..

“உள்ளூரில மாமனார் வீடு வேனும்னா அந்த நேகாவை கட்டியிருக்க வேண்டியதுதானே..” அவள் சீறினாள்..

“அடிப்பாவி..” அவன் அலறினான்..

# 216

## காதலென்னும் போதையினை – நீ கைவிடாமலிருக்க ஆசைகொண்டேன்...

**கா**வ்யாவுக்கு மகன் பிறந்திருந்தான்... பேரனைப் பார்க்க சுந்தரியுடன் பார்த்தசாரதியும் வந்திருந்தார்.. தொட்டிலில் கிடந்த பேரனைப் பார்த்தவர்.. லேசான தயக்கத்துடன்...

“அர்ஜீன் ஜாடை” என்று சுந்தரியிடம் சொன்னார்...

“அர்ஜீன் அப்படியே உங்க ஜாடை..” என்று சிரித்தாள் சுந்தரி...

அர்ஜீனின் திருமணத்திற்குப் பின்னால்.. பார்த்த சாரதியிடம் விரோதம் பாராட்ட வேண்டிய அவசியம் அவளுக்கு இல்லாமல் போய் விட்டது.. அவளும்.. ஆனந்தியும்தான்.. நினைத்ததை சாதித்து விட்டார்களே.. இதில் தோற்றுப் போனது பார்த்தசாரதிதானே.. அவர்மீது விரோதம் பாராட்டுவதில் அவளுக்கு புதிதாக என்ன கிடைத்து விடப் போகிறது..?

அவள் பழையபடி அவரிடம் கலகலப்பாக பேசிப் பழக ஆரம்பித்தாள்.. பார்த்தசாரதிதான் சில நாள்கள் வரை உம்மென்று முகத்தை தூக்கிவைத்துக் கொண்டு வீட்டுக்குள் வளைய வந்தார்.. காவ்யாவிடம் ஒற்றை வார்த்தை கூடப் பேசமாட்டார்.. ஆனால்.. அவருக்கும் சேர்த்து வைத்து சுந்தரியும்.. ஆனந்தியும் காவ்யாவிடம் பேசித் தள்ளி விடுவார்கள்.. அதனால் மாமனார் பேச வில்லையே என்ற மனக்குறையே அவளுக்கு வராது..

கோவிலுக்கும்.. உறவினர்.. தெரிந்தவர்களின் வீட்டு விசேசங்களுக்கும் சுந்தரி காவ்யாவை தன்னுடன் அழைத்துச் செல்வாள்.. ‘என் மருமகள்..’ என்று வாயாற அவள் சொல்லிப் பெருமைப்படுவதில் பார்த்தசாரதியின் பாராமுகம் பற்றிய மனத்தாங்கல் காவ்யாவின் மனதிலிருந்து மறைந்து விடும்..

நாளடைவில் அவருடன் பேசாமலிருக்கப் பழகிக் கொண்டாள் காவ்யா.. சுந்தரி வீட்டில் இல்லாத நேரங்களில் பார்த்தசாரதி வீட்டிற்கு வந்து விட்டால்.. உடனடியாக சமையல் வேலை செய்யும் சரோஜாவிடம் காபி கலக்கச் சொல்லி அவருக்கு காபி அனுப்பி வைத்து கவனித்துக் கொள்வாள் காவ்யா.. ஆனால்.. மறந்தும் அந்த வேலையை அவளே நேரடியாகச் செய்ய மாட்டாள்...

அப்படிபட்ட அவளின் மாமனார்.. அவளுடைய மகனைப் பார்க்க வந்திருந்ததில் அவளுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.. பேரனின் முகஜாடையில் அவர் மகிழ்ந்து போவதைக் கண்டவளுக்கு ஆச்சரியம் அதிகரித்தது...

“உடம்பைப் பார்த்துக்கம்மா...”

கிளம்பும் போது அவர் காவ்யாவின் முகம் பார்த்துச் சொன்னார்.. அவள் கண்கள் விரிந்தன..

அர்ஜீனிடம் அதைப்பற்றி அவள் சொன்ன போது...

“இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு..? இட் இஸ் கொயட் நேச்சுரல்..” என்றான் அவன்..

“என்னால் அப்படி எடுத்துக்க முடியலை...”

“ஏன் எடுத்துக்க முடியலை..? உன் மனசில் பழைய பகை அப்படியே இருக்குது காவ்யா.. அவர் நடந்ததை மறந்துட்டார்.. நீ மறக்கலை.. பிராப்ளம் இதுதான்...”

“உங்களுக்கு இது பிராப்ளமாத்தான் தோணும்.. ஏன்னா உங்கப்பா.. என்னை பாதிச்சவர்.. நான் பதிக்கப் பட்டவ...”

“ஷட் அப் காவ்யா.. பகையை வளர்த்துக்கிட்டே இருக்கிறது நல்லதில்ல...”

“யாருக்கு..?”

“யாருக்கோ..”

“உங்களுக்கு நல்லதில்லைன்னு சொல்லுங்க...”

“ஆமாம்.. அதுக்கு இப்ப என்னங்கிற..? ஷி இஸ் மை டாட்.. அவருக்காக உன்னை விட்டுக் கொடுத்தேனா..? சொல்லு.. உனக்காக அவரை மட்டும் எப்படிடீ நான் விட்டுக் கொடுப்பேன்..?”

ஊமை கோபத்துடன் காவ்யா முகம் திருப்பிக் கொண்டாள்.. அர்ஜீனும் கோபத்துடன் இருந்தான்.. அறையை விட்டு வெளியேற நினைத்த போது.. அறைக்குள் துரியோதனனும்.. செல்வியும் வந்தார்கள்.. அவர்கள் பின்னாலேயே தேன்மொழியும் வந்தாள்.. அர்ஜீனைப் பார்த்ததும் துரியோதனன் தயங்கி நின்றார்...

இந்த மனிதர் பண்ணி வைத்த வேலைகளுக்கு இவர் கூடவெல்லாம் முகம் கொடுத்துப் பேச வேண்டுமா என்ற கோபத்துடன் அவரை முறைத்தான் அர்ஜீன்...

“எப்படி இருக்கீங்க..?” அவர் நலம் விசாரித்தார்...

“ம்ம்ம்..” பல்லைக் கடித்தபடி முணுமுணுத்தான் அர்ஜீன்...

“குழந்தையைப் பார்க்க வந்தோம்...”

“ம்ம்ம்..”

செல்வி அவரைப் போல தயங்கி நிற்கவில்லை.. குனிந்து தொட்டிலில் படுத்திருந்த குழந்தையைப் பார்த்தவள்...

“அப்படியே அவங்க அப்பா ஜாடை..” என்றாள்...

அதில் அர்ஜீனின் முகம் மலர்ந்தது.. கையில் கொண்டு வந்திருந்த நகைப் பெட்டியைத் திறந்து அவள் தங்கச் சங்கிலியை எடுத்துக் குழந்தையின் கழுத்தில் போட்டு விட முனைந்த போது அர்ஜீன் புருவங்களை உயர்த்தினான்..

“வாட் இஸ் திஸ் காவ்யா..?”

அவனது கோபத்தில் காவ்யாவுக்குள் பதட்டம் ஏற்பட்டது.. தேன்மொழியின் முகம் சுணங்குவதை அவள் கவனித்தாள்...

அவளுடைய அண்ணனை நேசிக்கும் பெண்.. அவளுடைய வருங்கால ‘அண்ணி..’ அவளுக்கு நாத்தனாரின் குழந்தைக்கு சீர் செய்ய உரிமை இல்லையா..?

“செயின் அழகாயிருக்கு அத்தை...”

அவள் சங்கிலியை கையில் வாங்கி அழகு பார்ப்பதைப் போல பார்த்தாள்.. தேன்மொழியின் சுணங்கிய முகம் மலர்ந்தது...

“இருக்கட்டும் அத்தை.. அப்புறமா போட்டு விடறேன்.. இப்ப நர்ஸ் குழந்தையை குளிப்பாட்ட வருவாங்க...”

“அப்படியா..?” செல்வி சந்தோசமாக தலையை ஆட்டினாள்..

அதற்குள் அன்னபூரணி வந்துவிட.. அவர்கள் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.. துரியோதனனின் தன்மையான பேச்சிற்கு பலன் இருந்தது.. அன்னபூரணி கோபத்தை மறந்து அவரிடம் இயல்பாக சொந்த பந்தங்களைப் பற்றிய பேச்சுக்களைப் பேசலானாள்.. அடிக்கடி அவள் பார்வை தேன்மொழியின் மீது படிந்து மீண்டது..

‘அருமையான பெண்..’ சிலாகித்தவள் அவளையு மறியாமல்...

“தேன்மொழிக்கு எப்பக் கல்யாணம்..?” என்று கேட்டு விட்டாள்..

“அண்ணியப் போல மாமியார் கிடைத்தா நாளைக்கே கல்யாணத்தை வைத்துவிட வேண்டியதுதான்..” கிடைத்த வாய்ப்பை இறுகப் பற்றிக் கொண்டாள் செல்வி...

“குணமான மருமக கிடைச்சா நானென்ன வேணாம்ன்னா சொல்லப் போறேன்..” அன்னபூரணி மறைமுகமாக பச்சை கொடியை பறக்கவிட்டாள்...

“அதத்தான் நானும் சொல்றேன் அண்ணி.. அடிச்சுக் கிட்டாலும்.. பிடிச்சுக்கிட்டாலும்.. உறவு மொறை போல ஆகுமா..? உங்க அண்ணன் எதப் பேசியிருந்தாலும்.. அதை மனசில வைச்சுக்காதீங்க.. பேசினது யாரு..? உங்க பெரியப்பன் மகன்தானே.. மன்னிச்சு மறந்துருங்க அண்ணி..”

“இதென்ன அண்ணி பெரிய பேச்செல்லாம் பேசறிங்க.. அண்ணன் எனக்கு பெரியப்பா மகன்னா நீங்க எனக்கு யாரு..? அத்தை மகதானே.. உங்ககிட்ட முறைச்சுக் கிட்டு நான் என்னத்தை அள்ளிக்கிட்டுப் போகப் போறேன்..? என்ன ஒன்னு.. உங்க மகன்தான் பழுது படிக்க பேசிக்கிட்டு அலையுதுன்னு கேள்விப்பட்டேன்.. அதான் மனசில கொஞ்சம் அறுக்குது..”

“அவன் கிடக்கிறான் தறுதலைப்பய.. சேக்காளி சகவாசம் சரியில்ல அண்ணி.. அத மனசில வைச்சுக்கிட்டு எங்கள தள்ளி வச்சிராதீங்க.. மகன்தான் அப்படி.. மக தங்கம்...”

“அதை நீங்க சொல்லித்தான் நாங்க தெரிஞ்சுக்கனுமா.. அண்ணி..?”

“எனக்கு அந்தக் காலத்திலே என் பிறந்த வீட்டிலே இருநூறு பவுன் நகை போட்டு விட்டாங்கண்ணி.. அதை முனை முறியாம அப்படியே வைச்சிருக்கேன்.. தேனோட அப்பா அவர் பங்குக்கு முந்நூறு பவுனு நகையை மகளுக்காக செய்து வைச்சிருக்கார்.. ஐநூறு பவுனு நகையோடதான் என் பொண்ணு பொறந்த வீட்டில இருந்து புகுந்த வீட்டுக்கு வருவா..”

“நகையை யாரு கேட்டது அண்ணி.. அது குணத்துக்கு முன்னாலே எந்தச் சீர் நிக்கும் சொல்லுங்க..”

அவர்கள் திருமணம் முடிவாகிவிட்டதைப் போலவே பேசிக் கொண்டார்கள்.. கண்ணதாசன் வந்த பின்பும் அந்தப் பேச்சு தொடர்ந்ததில் அவன் முகத்தில் வெளிச்சம் பரவியது.. அவனும்.. தேன்மொழியும் ரகசியப் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்...

அவர்கள் கிளம்பிப் போனதும்.. அன்னபூரணி தெரிந்தவர் வீட்டுப் பெண் பிரசவத்திற்காக அதே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லி விட்டு.. அந்தப் பெண்ணை பார்த்து விட்டு வருவதற்காக போய்விட்டாள்.. அவள் திரும்பி வரும் வரைக்கும் தங்கை குழந்தையை கையில் ஏந்திக் கொஞ்சிக் கொண்டிருந்தான் கண்ணதாசன்.. அவனையே பார்த்துக் கொண்டிருந்த அர்ஜீனின் புருவ மத்தியில் சுளிப்பு வந்திருந்தது.. தற்செயலாக நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்த

கண்ணதாசன் அதில் தெரிந்த ஏதோ ஒன்றில் திகைத்து விட்டான்...

“என்ன மாப்பிள்ளை..?”

“ஐ ஹேட் தட் துரியோதனன்..”

அர்ஜீன் பட்டென்று சொல்லி விட்டான்.. கண்ணதாசனின் முகத்தில் இருந்த உற்சாகம் மறைந்து விட்டது.. காவ்யா பதட்டத்துடன் தமையனை நோக்கினாள்.. அவன் முகம் இருண்டதில் அவள் மனம் பதறியது..

“உங்களுக்கு அவரைப் பிடிக்காதுன்னா.. எனக்கும் அவரைப் பிடிக்காது மாப்பிள்ளை..” கண்ணதாசன் நிதானமாகச் சொன்னான்..

“அண்ணா..” குறுக்கே பேச முயன்ற காவ்யாவை தடுத்துப் பேசினான்..

“இல்லம்மா.. எனக்கு நீதான் முக்கியம்.. உன் புருசனுக்கு ஒருத்தங்க வேண்டாதவங்கன்னா.. எனக்கும் அவங்க வேண்டாதவங்கதான்...”

“ஆனா.. அண்ணா.. தேன்மொழி..?”

“அவளும் யாரும்மா..? அந்தத் துரியோதனனின் மகதான..? எனக்கு அவளும் வேண்டாம்..”

கண்ணதாசன் குழந்தையைப் படுக்கவைத்து அதன் பிஞ்சு விரல்களில் முத்தமிட்டு விட்டு அறையை விட்டு வெளியேறினான்.. காவ்யாவின் அதிர்ந்த விழிகள் அர்ஜீனைப் பார்த்தன.. அவனோ தோள்களைக் குலுக்கினான்..

“நான் ஒன்றும் உன் அண்ணனைக் கட்டாயப் படுத்தலையே...”

‘இவன் என் அர்ஜீனா..’ காவ்யா மனம் வெறுத்தாள்..

# 217

## *நித்தம் வரும் சூரியனாய்... நீ வரவே ஆசைகொண்டேன்...*

“இப்ப என்னதாண்டி சொல்ற..?”

“உங்க கூட நான் வரமுடியாதுன்னு சொல்றேன்..”

தீர்மானமாகச் சொன்ன காவ்யாவின் வார்த்தைகளைக் கேட்ட அர்ஜீனின் முகம் பயங்கரமாய் மாறியது...

“காவ்யா..” அவன் கர்ஜித்தான்...

அவள் அஞ்சவில்லை.. அவன் முகத்தைப் பார்க்காமல் ஜன்னல்வழி தெரிந்த தோட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தாள்...

“நீ வரலைன்னா நான் என் மகனைத் தூக்கிக்கிட்டு போயிருவேன்..”

“தாராளமா தூக்கிக்கிட்டுப் போங்க.. இவன் உங்க மகன்.. உங்க சொத்து.. நான் தடுக்க மாட்டேன்..”

அவளின் பிடிவாதத்தில் அவன் தாடை இறுகியது.. தொட்டிலில் படுத்தபடி.. கட்டைவிரலைச் சுவைத்துக் கொண்டிருந்த மூன்று மாதக் குழந்தையைப் பார்த்தான்.. அவனோ.. தகப்பனைக் கவனிக்காமல் கை கட்டை விரலை விட்டுவிட்டு.. கால் கட்டை விரலை சுவைக்க முடியுமா என்று காலைத் தூக்கி வாயில் வைக்கும் பகீரத பிரயத்தத்தை மேற்கொண்டிருந்தான்.. மகனின் அந்தச் செய்கையில் அர்ஜீன் தன்னை இழந்தான்...

'இந்தப் பச்சை மண்ணைத் தூக்கிக்கிட்டு போன்னு சொல்கிறாளே.. ராட்சசி..' அவன் மனம் காவ்யாவைத் திட்டித் தீர்த்தது...

"அவன் தான் என் மகன்.. என் சொத்து.. அப்ப நீ யாருடி..? நீ என் பெண்டாட்டியில்லையா..? என் சொத்தில்லையா..?" துளைக்கும் பார்வையுடன் கேட்டான்..

காவ்யா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவனது கேள்வி கிளப்பிய கிளர்ச்சியில் அவள் மனம் அலைமீது துரும்பாக சலயனப்பட்டு ஓய்ந்தது.. இருந்தும் அவள் திரும்பவில்லை.. அவன் முகம் பார்க்கவில்லை...

"காவ்யா.." அவளைத் தொடப் போனான் அர்ஜீன்..

"என்னைத் தொடாதீங்க.." பட்டென்று அவன் கையைத் தட்டி விட்டாள் காவ்யா...

"ஏய்ய்.." அவன் விழிகளில் தீப்பொறி பறந்தது..

“நீங்க இந்த அளவுக்கு இரக்கமில்லாதவரா இருப்பீங்கன்னு நான் நினைத்தே பார்க்கலை.. உங்க மேல ஆசை வைத்தேனேன்னு இருக்கு..”

“இப்ப அதில என்னடி குறையைக் கண்டுட்ட..?”

“உங்க காதல்தான் உயர்த்தி.. மத்தவங்க காதலெல்லாம் தாழ்ச்சியானதா..? உங்க காதல் நிறைவேறனும்.. மத்தவங்க காதலில் தோத்துப் போகனுமா..? கண்டிசனா போடறிங்க..? என் அண்ணன் உங்க வார்த்தைக்குக் கட்டுப்படாட்டி என்ன செய்யறதாய் இருந்தீங்க..? என்னை தள்ளி வைக்கிறதாய் இருந்தீங்களா..?”

“உன்னையேண்டி நான் தள்ளி வைக்கனும்..? உன் அண்ணனைத்தான் தள்ளி வைக்கனும்...”

“ஓ.. இதைச் சொல்லித்தான் என் அண்ணனை மிரட்டி வைச்சிருக்கீங்களா..? பேஷ்.. பேஷ்.. ரொம்ப நன்னாயிருக்கு..”

“காவ்யா..”

“ச்சீ.. என் பெயைரச் சொல்லாதீங்க.. உங்களுக்கு அதுக்கான அருகதையில்லை.. மனுசரா நீங்க..?”

“ஏய்ய்...”

அவளை அடிக்கக் கை ஓங்கி விட்டான் அர்ஜீன்.. அவள் பேசிய வார்த்தைகளில் அவன் உடல் நடுங்கியது.. தொட்டிலில் படுத்திருந்த குழந்தை கால் கட்டை விரலை எட்டித் தொட முயலாமல் அழ ஆரம்பிக்க.. அந்த அழுகைச் சப்தத்தில் அவன் நிதானித்தான்..

‘என்ன காரியம் செய்ய இருந்தேன்.. பச்சை உடம்புக்காரி.. இவளை அடிக்க கை ஓங்கினேனா..?’

அவனுக்கு அவன் மீதே வெறுப்பு வந்தது...

“ச்சீ.. மனுஷியாடி நீ..? எப்பப் பாரு.. வரமாட்டேன்.. வரமாட்டேன்கிற.. பிடிவாதம்தான்.. தாலி கட்டி குடும்பம் நடத்தி.. பிள்ளை பெற்ற பின்னாலும் இந்தப் பாட்டுத் தானா..? என்னைக்குடி நீ என்னை முக்கியம்ன்னு நினைச் சிருக்க.. உனக்கு என்னைவிட உன் அண்ணன்தானே முக்கியமாய் போயிட்டான்..?”

“அவன் இவன்னு பேசாதீங்க..”

“அப்படித்தாண்டி பேசுவேன்.. என் பெண்டாட்டியை என்கிட்டயிருந்து பிரிக்கிறவனுக்கு மரியாதை ஒரு கேடா..?”

“நீங்க மட்டும் என்ன செய்தீங்க.. அண்ணனோட காதலியை அதுகிட்டயிருந்து பிரிக்கலை...”

“பழிக்குப் பழி வாங்கறயாடி..?”

“ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?”

“முடிவா என்னதாண்டி சொல்ற..?”

“என் அண்ணன் வாழாத வாழ்க்கையை நான் வாழ முடியாது...”

“ஊரில் வேற பெண்ணா இல்லை..?”

“உங்களுக்கும் அது பொருந்தும் தானே..? ஏன் நேகாவை கட்டியிருக்க வேண்டியதுதானே..? எதுக்காக காவ்யா.. காவ்யான்னு என் பின்னாலே அலைஞ்சீங்க..?”

“அந்தக் கொழுப்புத்தானேடி உனக்கு..? ஆமாண்டி.. நான் காவ்யா.. காவ்யான்னு உன் பின்னால அலைஞ்சேன் தான்.. அதுக்குத்தான் நீ அள்ளி அள்ளிக் கொடுத்துட்டியே.. என்னைக்காவது என்மேல நம்பிக்கை வைச்சிருக்கியாடி..? கனடாவில இருந்து ஓடி வந்தேன்.. இக்கட்டான நிலைமையில நின்ன.. உன்னை மீட்கத்தான் விசாரிக்க ஆரம்பிச்சேன்.. விட்டியா நீ..? என்மேல நம்பிக்கை இருந்திருந்தா அந்த இடத்தை விட்டு அசையாம அங்கேயே நீ நின்னிருப்படி.. உனக்கு என்மேல நம்பிக்கையில்லை.. உன் அண்ணன் வந்ததும் அவன் பின்னாடி போயிட்டே..”

“அதுக்காகத்தான் மனதிலே வன்மம் வைத்து என் அண்ணன் வாழ்க்கையைக் கெடுக்கறிங்களா..?”

“காவ்யா...”

“வேண்டாம்.. என் அண்ணன் மனசில அந்த தேன்மொழி மேல ஆசையிருக்கு.. அண்ணனை விட அதிகமான ஆசையை தேன்மொழி அண்ணன் மேல வைச்சிருக்கு.. இவங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழறதுக்கு.. என் வாழ்க்கைதான் தடையாய் இருக்குன்னா அந்த வாழ்க்கையே எனக்கு வேண்டாம்..”

“நான் உனக்கு வேண்டாமாடி..?”

“இதையே நானும் உங்களைக் கேட்கலாமில்ல..? பேசாம போயிருங்க.. இந்தப் பேச்சுக்கு ஒரு முடிவிருக்காது..”

அந்த இரவு வேளையிலே காவ்யாவின் அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியேறினான் அர்ஜீன்.. படியேறி வந்த கண்ணதாசன்..

“என்ன மாப்பிள்ளை..? இந்த நேரத்திலே எங்கே போகிறிங்க..?” என்று கேட்டான்..

“சென்னைக்கு..”

“சென்னைக்கா..? நாளைக்கு காலையிலே உங்க வீட்டிலயிருந்து காவ்யாவையும்.. குழந்தையையும் அழைத்துக்கிட்டுப் போக உங்க வீட்டு ஆளுக புறப்பட்டு வந்துக்கிட்டு இருப்பாங்க.. இப்பப் போய் நீங்க மட்டும் தனியா சென்னைக்குப் போனா அது நல்லாயிருக்குமா மாப்பிள்ளை..?”

“இருக்காதுதான்.. ஆனா என்னங்க செய்கிறது..? உங்க தங்கைதான் என்கூட வரமாட்டேன்னு சொல்லிட்டாளே.. அதுக்கப்புறமா அவங்க கிளம்பி வந்து என்ன செய்கிறது..? எல்லாமே வேஸ்ட்தான்.. அவங்களுக்கு போன் போட்டு கிளம்ப வேண்டாம்ன்னு சொல்லிக்கறேன்.. நீங்க வழியை விடுங்க..”

“பொறுங்க மாப்பிள்ளை உங்களுக்கும் காவ்யாவுக்கும் இடையில் என்னதான் பிரச்னை..?”

“நீங்கதான் பிரச்னை..?” எரிச்சலுடன் சொன்னான் அர்ஜீன்..

“என்னது..?”

“யெஸ்.. எனக்கு அந்த துரியோதனையும் பிடிக்காது.. அவர் மகனையும் பிடிக்காது.. நீங்க அவங்க வீட்டுப் பெண்ணை மேரேஜ் பண்ணிக்கிட்டா அவங்க நம்ம ரிலேட்டிவ்ஸா ஆகிருவாங்க.. அதுக்கப்புறம் இந்த வீட்டில் எந்த பங்சன் நடந்தாலும் அவர்களும் வந்து நிற்பாங்க..

நாங்களும் வந்து நிற்போம்.. ஒருத்துரையொருத்தர் ஃபேஸ் பண்ணிக்கனும்.. இதையெல்லாம் யோசித்துத்தான் நான் அந்தப் பெண் வேண்டாம்ன்னு சொன்னேன்.. அது உங்க தங்கைக்கு குற்றமாத் தோணுது.. வாட் கேன் ஐ டு..?”

“நான் பேசறேன்.. நீங்க வாங்க..”

“நோ கண்ணதாசன்.. உங்க வார்த்தைக்காக நான் பால்கனியில் வெயிட் பண்றேன்.. நீங்க வேணும்னா உங்க தங்கையிடம் பேசிப் பாருங்க...”

கண்ணதாசன் காவ்யாவைத் தேடிப் போனான்.. கண்ணில் வழிந்த கண்ணீரை துடைத்தபடி குழந்தையை மடியில் போட்டு சமாதானப் படுத்திக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்ததும் அவன் மனதில் இரக்கம் வந்தது...

“நீ செய்வது சரியா காவ்யா..” என்றான்..

“நீ செய்கிறது மட்டும் சரியாண்ணே..” பதிலுக்கு அவள் கேட்டாள்..

“மாப்பிள்ளை சென்னைக்கு போறேன்கிறார்..”

“போகட்டும்..”

“அவங்க வீட்டு ஆளுகளை கிளம்பி வர வேணாம்ன்னு சொல்லப் போகிறாராம் காவ்யா...”

“சொல்லட்டும்..”

“இது என்ன பிடிவாதம் காவ்யா.. அவர் சென்னைக்குப் போய் விட்டா.. உனக்கு இங்கே என்ன வேலை..?”

“ஏன் அண்ணே.. கல்யாணமானவுடனே நான் உனக்கு அன்னியமா போயிட்டேனா.. என்னையும்.. என்

குழந்தையையும் நீ பாரமா நினைப்பியா..? பார்த்துக்க மாட்டியா..?”

“ஆனா.. அது எதுக்கு காவ்யா..? உன் வீட்டுக்காரர் தங்கமானவர்..”

“தேன்மொழியும் தங்கமானவதான்..”

“காவ்யா...”

“நீ தேன்மொழியோட வாழ்கிறதா இருந்தா நான் அவர்கூட வாழச் சொன்னைக்கு கிளம்பிப் போகிறேன்.. இல்லைன்னா இங்கேயே இருந்துடறேன்.. நீயே அவரிடம் கேட்டுச் சொல்லு...”

கண்ணதாசன் கெஞ்சிப் பார்த்தான்.. மிஞ்சிப் பார்த்தான்.. அதட்டிப் பார்த்தான்.. அடங்கிப் பார்த்தான்.. ஊஹீம்.. காவ்யா மசியவே இல்லை.. தோல்வியடைந்தவனாய் வந்தவனை பால்கனியில் உலாவிக் கொண்டிருந்த அர்ஜீன் நிமிர்ந்து பார்த்தான்...

## 218

*யார் தடுத்தும் நிற்காத...*
*வேகம் கொள்ள ஆசைகொண்டேன்...*

“**கெ**ட்டி மேளம்.. கெட்டி மேளம்..”

கூட்டத்திலிருந்த பெரியவர் ஒருவர் குரல் கொடுத்ததும் கெட்டி மேளம் முழங்கியது.. நாதஸ்வர ஓசையுடன் அய்யர் மந்திரங்களை ஓதினார்...

“மாங்கல்யம் தந்துனானே.. பொண்ணு கழுத்திலே தாலியைக் கட்டுங்கோ...”

அவரின் உத்தரவில் கண்ணதாசன் தாலியை எடுத்துத் தேன்மொழியின் கழுத்தில் கட்டினான்.. தேன் மொழிக்குப் பின்னால் முகமெல்லாம் பூரிப்பாக நின்று கொண்டிருந்த காவ்யா.. நாத்தனார் முடிச்சைப் போட்டு விட்டாள்.. அதை முன்வரிசையில் முகம் இறுக உட்கார்ந்திருந்த அர்ஜீன் பார்த்துக் கொண்டிருந்தான்..

‘கடைசியில் இதிலயும் இவதான் ஜெயிச்சுட்டா.. காதலிச்ச காலத்தில் காதல் சொல்ல நாள் கடத்தி அதில ஜெயிச்சா.. அதுக்குப் பின்னாலே என் கூட வரமாட்டேன்னு சொல்லி அதிலயும் ஜெயிச்சா.. இப்ப குழந்தையைப் பெத்த பின்னாலயும் அதையே திரும்பவும் சொல்லி இதிலயும் ஜெயிச்சுட்டா..’ பல்லைக் கடித்தான்..

அன்று கண்ணதாசன் தோல்வியோடு காவ்யாவின் அறையைவிட்டு வெளியே வந்ததும் அவன் முகக் குறிப்பிலிருந்து என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட அர்ஜீன்...

“என்ன சொல்கிறா..? வரமாட்டேன்னு சொல்லிட் டாளா..?” என்று நிதானமாகக் கேட்டான்..

புயலின் அமைதியை உள்ளடக்கியிருந்த அவனின் அந்தக் குரலில் கண்ணதாசன் பதறிவிட்டான்..

“அப்படியில்ல மாப்பிள்ள.. அதுக்கு கொஞ்சம் முடியல போல இருக்கு.. கொஞ்ச நாளைக்கு இங்கே ரெஸ்ட் எடுத்துட்டுத்தான் வரட்டுமே...”

“ஓஹோ.. அங்கே வந்து மேடம் வெட்டி முறிக்கப் போகிறாங்களா..? இதெல்லாம் தட்டிக் கழிக்கற கதை கண்ணதாசன்.. அவளுக்கு என்னைவிட நீங்க முக்கியமாப் போயிட்டிங்க.. அதான் உண்மை...”

“ஆனா மாப்பிள்ளை.. எனக்கு என்னைவிட என் தங்கச்சியோட வாழ்க்கைதான் முக்கியம்.. நீங்க காவ்யா மேல கோபப்படக்கூடாது..”

“ம்ப்ச்.. உங்களுக்கு என் கோபம் புரியாது.. போங்க.. போய் உங்க தங்கையிடம் சொல்லுங்க.. அர்ஜீன் அவளோட அண்ணன் துரியோதனனின் மகளை மேரேஜ் பண்ணிக்கிறதுக்கு சம்மதிச்சுட்டான்.. அவ என் கூடக் கிளம்பி வர ரெடியாகலாம்ன்னு சொல்லுங்க...”

“மாப்பிள்ளை..”

“என்ன செய்கிறது..? இது நானா ஆசைப்பட்டு தேர்ந்தெடுத்துக்கிட்ட வாழ்க்கை.. இப்ப பிரிஞ்சு நின்னா காலம் முழுவதும் என்டாடி இதையே சொல்லிக் காண்பித்துக் கிட்டு இருப்பாரு.. அதுக்கு நான் இடம் கொடுக்க முடியாது.. இவளையும் என் குழந்தையையும் அழைத்துக்கிட்டுப் போக அவங்க கிளம்பி வந்துக்கிட்டு

இருக்காங்க.. இப்பப் பார்த்து இவ என் கூட வரலைன்னு சொல்கிறான்னு.. அவங்களைத் திரும்பிப் போக சொன்னா என் குடும்பத்தில என் மரியாதை என்னவாகிறது..? இது எனக்கு பிரஸ்டிஜ் இஷ்யு.. இந்த ஒரு காரணத்துக்காகவே இதுக்கு நான் சம்மதிக்கிறேன்..”

அர்ஜீன் படிகளில் இறங்க முற்பட... கண்ணதாசன் வழி மறித்தான்..

“அதான் அண்ணனும் தங்கையும் கூட்டணி போட்டுக்கிட்டு நினைத்ததை சாதிச்சிட்டிங்கள்ல.. இன்னும் எதுக்காக என் வழியை மறிக்கறிங்க..?”

“எங்கே போகிறிங்க..?”

“ஐ நீட் ரெஸ்ட்.. ஹோட்டல் ரூமுக்குப் போகிறேன்..”

“மாமனார் வீட்டை வைத்துக்கிட்டு இந்த ஊரில் நீங்க ஹோட்டல் ரூமில் தங்கினா நாலு பேர் நாலு விதமா பேசுவாங்க மாப்பிள்ளை...”

“அதுக்காக.. உங்க தங்கச்சி இருக்கிற ரூமில போய் படுத்துத் தூங்கச் சொல்கிறிங்களா..? என்னால அது முடியாது கண்ணதாசன்...”

என்னடா இது என்றிருந்தது கண்ணதாசனுக்கு.. அவனுடைய தங்கை அர்ஜீனுக்கு யார் என்ற கேள்வி மனதில் எழ.. மானசீகமாக தன் தலையில் அடித்துக் கொண்டான் அவன்...

“உங்களுக்குப் புண்ணியமாப் போகும் மாப்பிள்ளை.. உள்ளே போய் தூங்குங்க.. அம்மாப்பா எழுந்து வந்து விட்டா வம்பு...”

“யாருக்கு..?”

இப்படிக் கேள்வி கேட்டால் கண்ணதாசன் என்ன பதிலைச் சொல்லுவான்.. உங்களுக்குத்தான் என்று வீட்டு மாப்பிள்ளையிடம் கூறமுடியுமா..? அதனால் அழமாட்டாத குறையாக...

“வேற யாருக்கு வம்பு வரும் மாப்பிள்ளை.. எல்லாம் எனக்குத்தான் வரும்.. எதுக்காகடா வீட்டு மாப்பிள்ளை வெளியே போய் தங்குறாரு.. நீ என்னத்தை சொல்லி வைச்சன்னு அம்மா பிலுபிலுன்னு என்னைப் பிடித்து உலுக்கி எடுத்து ஒருவழி பண்ணிரும்...”

“அப்பவும் உங்க மேலதான் உங்க அம்மா தப்புச் சொல்லுவாங்க.. உங்க தங்கை மேல ஒரு குற்றமும் சொல்ல மாட்டாங்க..”

அர்ஜூனின் கோபத்தில் அவனை என்ன சொல்லி வீட்டில் நிறுத்துவது என்று தெரியாமல் தலைமுடியை பிய்த்துக் கொண்டான் கண்ணதாசன்.. ‘பளிச்’ என்று ஒரு யோசனை அவன் மனதில் உதயமாக...

“மாப்பிள்ளை..” என்றான் அவசரமாக..

“என்ன..?”

“நீங்க ஏன் அந்த ரூமில் தங்கிக்கக் கூடாது..”

அவன் விரல் நீட்டிய திசையில் மாடி ஹாலில் இருந்த விருந்தினர் அறையான மூன்றாவது அறை இருந்தது...

"உங்களுக்கு காவ்யாவின் ரூமில் தூங்கக் கூடாது.. அவ்வளவு தானே.. அந்த ரூமில் தூங்குங்க.. அம்மாவிடம் நான் எதையாவது சொல்லிச் சமாளித்துக்கறேன்.."

"எதைச் சொல்வீங்க..?"

"அது என் கவலை..."

"ஆக மொத்தம் எனக்கு அந்த துரியோதனனின் வீட்டுச் சம்பந்தம் பிடிக்கலைங்கிறதை மட்டும் சொல்ல மாட்டிங்க.."

"இப்பவும் சொல்கிறேன்.. உங்களுக்கு விருப்ப மில்லைன்னா தேன் மொழியின் கழுத்தில் நான் தாலிகட்ட மாட்டேன்.."

"வினையோடு கூடப் பிறந்திருக்கிற தைரியமா..? நீங்க அந்தப் பெண் கழுத்தில தாலியைக் கட்டலைன்னா.. நான் தாலிகட்டின என் பெண்டாட்டி என்கூட வாழ வரமாட்டேன்னு சொல்றாளே..."

"மாப்பிள்ளை..."

"போங்க போய் ஆக வேண்டியதைப் பாருங்க.. மேரேஜீக்கு முதநாளில் தான் நான் என் பெண்டாட்டி பிள்ளையோடு வந்து நிற்பேன்.. அதை விட்டுட்டு.. ஒரு வாரத்துக்கு முன்னாடியே உங்க தங்கையை அனுப்பி வைக்கச் சொன்னீங்கன்னு வைங்க.. நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது.."

அர்ஜீன் கோபம் குறையாமல் விருந்தினர் அறையில் தூங்கப் போனான்.. கண்ணதாசன் சொன்ன செய்தியில் காவ்யா ஊருக்குக் கிளம்பத்தயாரானாள்..

“காவ்யா..” கண்ணதாசன் கவலைப்பட்டான்...

“நீ என்ன சொல்ல வர்றேன்னு எனக்குப் புரியுது.. போண்ணே.. போயி உன் மாப்பிள்ளை சொன்னதைப் போல ஆகவேண்டிய வேலையைப் பாரு..”

“அவர் கோபமா இருக்கிறாரே..”

“இருக்கட்டும்.. புருசன் பெண்டாட்டிக்குள்ளே சண்டை வர்றதெல்லாம் சகஜமான ஒன்னு.. இது என் பிரச்னை.. நான் பார்த்துக்கறேன்...”

“இப்படியே அவர் கோபமா இருந்துட்டாருன்னா..?”

“என்ன கெட்டுப் போச்சு..? ஒரு காலத்திலே அவர் மேல ஆசையை மட்டும் வைச்சுக்கிட்டு காலம் பூராவும் கன்னியாவே இருந்துடறேன்னு நான் சொல்லலையா..? இப்ப அதுபோல இல்லை.. அவர் கட்டின தாலி என் கழுத்தில் இருக்கு.. அவரோட புள்ளை என் கையில் இருக்கான்.. இதுக்கு மேலே வேற என்ன வேணும்..?”

காவ்யா திடமாகப் பேசினாள்.. மறுநாள் அழைக்க வந்த குடும்பத்தினருடன் அவளும் அர்ஜீனும் கிளம்பிப் போனார்கள்...

கண்ணதாசன் கவலைப்பட்டான்... அர்ஜீனின் விருப்பமின்மையை மீறி தேன்மொழியைப் பெண் கேட்க

அவனால் முடியவில்லை.. ஆனால்.. காவ்யாவினால் அது முடிந்தது..

“வர்ற தை மாசம் முத முகூர்த்தத்தில் உனக்கும்.. தேனுக்கும் கல்யாணம் நடக்கனும்.. இல்லைன்னா.. மாசி மாதம் பொட்டி படுக்கை யோட நான் நிரந்தரமா நம்ம வீட்டுக்கு வந்துருவேன்.. எது வசதின்னு நீயே முடிவு பண்ணிக்க..”

கண்ணதாசன் திருமணத் தேதியை முடிவு பண்ணினான்.. அன்னபூரணியின் முகத்தில் மகிழ்ச்சி தவழ்ந்தது.. மகள் திருமணமாகி குழந்தை.. குடும்பமென்று வாழ்கிறாள்.. மகனுக்கு திருமணமாகி மருமகள் வீட்டிற்கு வரப்போகிறாள்.. அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

திருமணத்திற்கு சொன்னதைப் போலவே முதல்நாள் தான் அர்ஜீனும் காவ்யாவும் வந்து இறங்கினார்கள்.. மாமனார் வீட்டில் கேள்வி கேட்க வழியில்லாமல் வெளிநாட்டுக்குப் போயிருந்தான் அர்ஜீன்..

“என்ன காவ்யா இது..?” என்ற அன்னபூரணியிடம்..

“அவர் ஃபாரின் போயிட்டாரும்மா.. அவரில்லாம நான் மட்டும் தனியா வந்து இறங்கினா நீ வீட்டுக்குள்ள என்னை விடுவியா..?” என்று கேள்வி கேட்டு மடக்கி விட்டாள் காவ்யா..

திருமணத்திற்கு முதல் நாள் நலங்கு வைக்கும் போதே.. தேவராஜன் காவ்யாவை சுற்றி வர ஆரம்பித்து விட்டான்.. அவனுக்கு காவ்யாவிடம் கேட்பதற்கு நிறைய

கேள்விகள் இருந்தன.. சொல்வதற்கு நிறைய செய்திகள் இருந்தன...

“குத்துவிளக்கு எங்கே காவ்யா..? அத்தை கேக்குது..”

“அந்த மேடையில ஓரமா ஒரு நாற்காலியைப் போடலாமா..”

“அம்மா உன்னைக் கூப்பிடுது காவ்யா.. சீரைப் பத்திப் பேசனுமாம்...”

“எங்க பெரியம்மா உன்னைப் பாத்ததில்லயாம்.. பாக்கனும்னு சொல்லுது..”

அனைத்துக்கும் வேறு வழியில்லாமல் காவ்யா பதில் சொல்வதை பல்லைக் கடித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜீன்... அவனுக்கு காவ்யாவின் மீதான கோபம் இன்னும் அதிகமாக கனன்றது.. என்று அவள் அவனுடன் வர மறுத்தாளோ.. அன்றிலிருந்தே அவன் அவளுடன் அதிகமாகப் பேசுவதில்லை.. குழந்தையுடன் அவளை சென்னை வீட்டில் சேர்ப்பித்தவுடன் வெளிநாட்டுக்கு பறந்து விட்டான்.. காவ்யா போனில் பேச முயன்றால் ‘ஸ்விட்ச் ஆஃப்’ என்ற பதில்தான் வந்தது.. காவ்யாவும் விட்டுப் பிடிக்கும் மனநிலையில் இருந்ததால் அதை கண்டு கொள்ள வில்லை.. அவளுக்கு கண்ணதாசனின் மனம் போல திருமணம் நடக்க வேண்டும் என்பது மட்டுமே குறிக்கோளாக இருந்தது.. அர்ஜீன் வெளிநாட்டிலிருந்து வந்தவுடன் அவர்கள் குடும்பத்துடன் கிளம்பி கண்ணதாசனின் திருமணத்திற்கு வந்து விட்டார்கள்..

திருமண வீட்டில் காவ்யாவை முன்னிருத்தி நிறைய வேலைகள் இருந்ததால் அவள் சுந்தரியிடம் மகனைக் கொடுத்து விட்டு இங்கும் அங்குமாக ஓடியாடி வேலைகளைக் கவனிப்பதும்.. ஓடிவந்து மகனைக் கவனிப்பதுமாக இருந்தாள்..

அப்படி ஒருமுறை வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு நின்றவளிடம் தேவராஜன் எதையோ கேட்க.. அவள் குழந்தையுடன் சென்று அவன் கேட்டதை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.. அந்தச் சமயம் பார்த்து அந்தப் பக்கமாக வந்த அவனது நண்பன் குழந்தையிடம் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்த தேவராஜனிடம்...

“யாருடா இது..?” என்று விசாரிக்க.. அவன் உடனே

“எங்க குழந்தைதாண்டா..” என்று சொல்லிவிட்டான்

அதைக் கேட்டபடி அங்கேவந்த அர்ஜீனின் முகம் பயங்கரமாக மாறிப் போனது.. முறைப்பாக பார்த்தவனிடம்..

“ஹி..ஹி.. எங்க வீட்டுக் குழந்தைன்னு சொன்னேண்ணே..” என்று சமாளித்தான் தேவராஜன்..

“அண்ணனா..?” அர்ஜீன் முகம் சுளிக்க..

“இனிமே நாம எல்லாம் ஒன்னுக்குள்ள ஒன்னு தானண்ணே.. நீங்க என் தங்கச்சியோட நாத்தனா புருசன்னா.. எனக்கு நீங்க அண்ணன் முறைதான ஆகனும் அண்ணே..” என்று வினயமாக எடுத்துரைக்கவும் செய்தான்..

‘இது என்னடா தலைவலியாய் இருக்கு..’ காவ்யா நொந்து போனாள்...

ஒருவழியாய் திருமணம் முடிந்தது.. காவ்யா நாத்தனார் முடிச்சைப் போட்டு விட்டு நிம்மதியுடன் நிமிர்ந்தாள்.. மணமேடையிலிருந்து இறங்கியவளிடம் தேவராஜன் எதையோ சொல்ல.. அவள் மாடியேறினாள்.. தேவராஜன் இடைவெளி விட்டு அவளைப் பின்தொடர்ந்ததில் அர்ஜீனுக்கு சந்தேகம் தட்டியது.. அவன் அவர்களைப் பின் தொடர்ந்தான்..

காவ்யா இயல்பாக.. மாடியிலிருந்த மணப்பெண்ணின் அறைக்குள் நுழைய.. அவள் பின்னாடியே தேவராஜனும் நுழைந்து விட்டான்.. அதிர்ந்து விழித்தாள் காவ்யா.. திருமணத்திற்கு வந்திருந்தவர்கள்.. மணமேடைக்கு முன்னால் குழுமியிருக்கும் போது தனியே தேவராஜனிடம் அகப்பட்டுக் கொண்ட பயம் அவள் கண்ணில் தெரிந்தது.. அவள் ஜாக்கிரதையாக பின்னே நகர.. தேவராஜன் முன்னேறினான்..

## 219

*உன் மடியில் நான் சாய்ந்து...*
*இளைப்பாற ஆசைகொண்டேன்...*

“இதுக்குத்தானேடி சொன்னேன்..?” அர்ஜீன் உறுமினான்...

அவன் காலடியில் அடித்துத் துவைக்கபட்ட நிலையில்.. எழுந்து கொள்ள முடியாத அரை மயக்க நிலையில் கிடந்தான் தேவராஜன்...

“இவனைப் பத்தி உன்னைவிட எனக்கு நல்லாத் தெரியும்டி.. இவன் மனுசனில்ல.. மிருகம்.. இவன் தங்கையை உன் அண்ணனுக்கு மேரேஜ் பண்ணி வைத்தா இது போல வினை வரும்னுதானேடி நான் வேண்டாம்ன்னு அடிச்சுக்கிட்டேன்.. என் பேச்சைக் கேட்டியா..? என்னவோ உன் அண்ணனின் காதலைத் தட்டிப் பறிக்க நினைச்ச துரோகியைப் போலயில்ல என்னைப் பார்த்த..? எத்தனை நாள் நாம் விலகி நிற்க முடியும்..? ஏதாவது ஒரு நாளில் இதுபோல பங்சனில் எல்லோரும் ஒன்றா மீட் பண்ணித்தானே ஆகனும்..? அப்ப இவன் வேலையைக் காட்டாம இருப்பானா..? அதுக்காகத்தானே நான் சொன்னேன்..?”

“நான் புரிஞ்சுக்கலைங்க..” காவ்யா கேவினாள்...

“இப்பச் சொல்லு.. நான் நோட் பண்ணிக்கிட்டு இருக்கப் போய் பின்னாடியே வந்து சேர்ந்தேன்.. இல்லைன்னா..?”

“இவன் குடலை உறுவி மாலையாப் போட்டிருப்பேன்..”

மனைவியின் பதிலில் லேசான புன்னகையை சிந்தினான் அர்ஜீன்.. அவள் அதைச் செய்வாள் என்று நிச்சயமாக அவனுக்குத் தெரியும்தான்.. இருந்தாலும் அதற்குப் பின்னால் நேரும் பின் விளைவுகளைப் பற்றிய சிந்தனை அவனுக்குள் எழுந்தது...

“நீ அதைச் செய்தால் என்னென்ன வரும்ன்னு நான் சொல்லித்தான் நீ தெரிந்துக்கனுமா..? படிச்சவதானே நீ..? இவன்மாதிரி ஆள்களிடம் விலகி நிற்கக் கத்துக்கனும் காவ்யா..”

“தேனுங்க.. அவ என் அண்ணன் மேல வைத்திருந்த ஆசை தூய்மையானதுங்க.. காதலிச்ச எனக்குத்தான் அதன் வலி எப்படிப் பட்டதுன்னு தெரியும்.. நீங்க கிடைக்க மாட்டிங்கங்கிற நிலை வந்தப்ப என்மனசு எப்படித் துடிச்சதுன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?”

“ஆமாமாம்.. நான் யாரோ ஒரு வழிப்போக்கன்.. எனக்கு உன் காதலைப் பற்றியும் அது தந்த மனவலியைப் பற்றியும் எதுவும் தெரியாதுதான்..”

“இல்லைங்க.. நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை.. நான்பட்ட மனவலியை தேன்மொழியும் படக் கூடாதுன்னு நினைச்சேன்.. எனக்காக என் அண்ணன் எவ்வளவோ செஞ்சுச்சு.. அதுக்கு நான் என்ன செஞ்சேன்..? அதோட காதலைக் காப்பாத்திக் கொடுக்கிறதையாவது நான் செய்யனுமா வேணாமா..?”

காவ்யாவின் கேள்வியில் இருந்த நியாயம் புரிய.. இருகை நீட்டி அவளை அழைத்தான் அர்ஜீன்.. தரையில் சுருண்டு கிடந்த தேவராஜனைப் பற்றிக் கவலைப் படாமல் அர்ஜீனின் கைகளுக்குள் பாய்ந்தாள் காவ்யா.. விசும்பிய வளின் முடிகோதி அவளின் உச்சந்தலையில் முத்தம் பதித்து.. பார்த்துக் கொண்டிருந்த தேவராஜனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் அர்ஜீன்...

“போகுது விடு.. இனி உன் பிறந்த வீட்டுக்கு நீ வருகிற வேலையை விட்டுவிடு..” அமர்த்தலாக குண்டைத் தூக்கிப் போட்டான் அர்ஜீன்...

“என்னது..?” காவ்யா அதிர்ந்தாள்...

“நோ அதர் வே காவ்யா.. இவன் உறவாக இருக்கிற உன் பிறந்த வீட்டுக்கு இனி உன்னை நான் அனுப்ப மாட்டேன்.. இது இல்லைன்னா அது.. திஸ் இஸ் மை பாலிஸி.. உன் அண்ணனை இவன் தங்கையை மேரேஜ் பண்ணிக்க விடக் கூடாதுன்னு நான் நினைத்ததுக்கு காரணமே நாம இங்கே வந்து போகனுமேங்கிறதுதான்.. இது முடியாமப் போச்சு.. இனிமேல்.. இந்த வீட்டுக்கு நீ வந்து போகாமலிருக்கிறதுதான் நல்லது.. அதையாவது நீ ஃபாலோ பண்ணு...”

“ஆனா.. அம்மா.. அப்பா.. அண்ணன்...”

“அவங்க உன்னை சென்னையில வந்து பாக்கட்டும்..”

“என்னங்க இப்படிச் சொல்றிங்க..?” காவ்யாவின் கண்களில் நீர் தளும்பி விட்டது...

“ஊஹீம்.. நீ எதைச் சொன்னாலும் நான் கன்வின்ஸ் ஆக மாட்டேன்.. உன் பிறந்த வீட்டை விட்டு நீ விலகி நிற்கனும்னா.. நிற்கனும்தான்.. இது என் கட்டளை...”

அர்ஜீன் கண்டிப்பாக சொல்லிக் கொண்டிருந்த போது..

“தேவையில்லை..” என்று அறைவாசலில் குரல் கேட்டது...

அர்ஜீனின் மார்பில் சாய்ந்த நிலையிலேயே காவ்யா திரும்பிப் பார்த்தாள்.. அறைவாசலில் தேன்மொழி நின்று கொண்டிருந்தாள்.. மாலையும்.. கழுத்துமாக.. மணப்பெண் அலங்காரத்துடன் உள்ளே வந்து நின்றவள் தரையில் சுருண்டு கிடந்த தமையனை வெறுப்புடன் பார்த்தாள்.. பின்.. நிமிர்ந்து அர்ஜீனைப் பார்த்துச் சொன்னாள்..

“காவ்யா அவ பிறந்த வீட்டை விட்டு விலகி நிற்க வேணாம்ண்ணே.. அதுக்குப் பதிலா நான் என் பிறந்த வீட்டைவிட்டு விலகி நிற்கிறேன்...”

“அண்ணி...”

காவ்யா அர்ஜீனை விட்டு விலகி தேன்மொழியின் கையைப் பிடித்தாள்.. பிடித்த கையை இறுக்கிக் கொண்டாள் தேன்மொழி....

“நீ நல்லாயிருக்கனும் காவ்யா.. நான் உன் அண்ணனுக்கு பெண்டாட்டியாகனும்னு நீ போராடினதை உன் அண்ணன் எனக்கும் சொல்லிட்டாரு.. எதுக்காக உன் புருசன் என்னைக் கட்டிக்க வேணாம்னு தடுக்கிறாருன்னு நினைச்சுப் பார்த்தேன்.. எனக்குத் தெரிஞ்சு வரைக்கும் உன் புருசன் தங்கமான மனுசர்.. இருந்தும் என்னை வேண்டாம்ன்னு அவர் சொல்லியிருக்காருன்னா ஏதோ விசயம் இருக்கனும்னு நினைச்சேன்.. அது என்னன்னு நேத்துச் சாயங்காலத்திலேயே எனக்கு தெரிஞ்சிருச்சு...”

அவள் மீண்டும் தரையில் கிடந்த தேவராஜனை முறைத்துப் பார்த்தாள்.. அவள் முகத்தில் வேதனை படிந்தது..

“என் தலைவிதியைப் பார்த்தியா.. நீயும் நானும்.. தங்கச்சி மீனாட்சிக்கு சீர் கொண்டு வர ஆத்தில இறங்கின அழகர் இருக்கிற மதுரையிலதான் பிறந்து வளர்ந்தோம்.. உனக்கு அந்த அழகரைப் போலவே அண்ணன் அமைஞ்சு போனாரு.. எனக்கு வாய்ச்ச அண்ணனைப் பார்த்தியா..? இதுகூட பொறந்த கொடுமைக்காக நான் ஆசைப்பட்ட மனுசர் என் கழுத்தில தாலியைக் கட்ட யோசிக்க வைச்சிருச்சு..”

“அண்ணி...”

“நேத்து சாயங்காலத்தில இருந்தே இது ஆடற ஆட்டத்தைப் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன்.. ரங்க ராட்டினம் சுத்தினதைக் கணக்கா உன் பின்னாலேயே இல்ல சுத்திக்கிட்டு இருந்துச்சு.. அப்பவே ‘கெதுக்’கின்னு இருந்துச்சு.. ஆஹா.. இதுக்குத்தான் நம்ம காவ்யாவைக் கட்டின அண்ணன் நம்மளக் கட்டிக்க வேணாம்ன்னு மச்சினன்கிட்டச் சொல்லியிருக்காரு போலன்னு கண்டு பிடிச்சிட்டேன்.. சுத்தி நம்ம உறவு மொறைக இங்கிட்டும் அங்கிட்டும் வளைய வந்ததினால நிம்மதியா இருந்தேன்.. இப்ப அப்படியில்ல.. எல்லாரும் அங்கே கூடியிருக்க உன்ன மட்டும் மாடிப்பக்கம் அனுப்பிட்டு இது தொடுத்துக்கிட்டு வாரதைப் பாத்ததும் எனக்கு மனசு பதறிருச்சு.. அதனால தான் பாத்ரூம் போகனுமுன்னு சொல்லிட்டு இங்கே ஓடியாந்தேன்.. மத்தவங்ககிட்ட இந்தக் கொடுமையை

எப்படிச் சொல்றது..? நல்லவேளையா எனக்கு முன்னாலேயே அண்ணன் வந்திட்டாரு.. இவரு சொல்றது சரிதான் காவ்யா.. பிறந்த வீட்டை விட்டு பிரிஞ்சுதான் இருக்கனும்.. அது நீயில்ல.. நான்தான்...”

“ஆனா அண்ணி.. உங்க அப்பாவும்.. அம்மாவும் உங்கமேல உயிராய் இருக்காங்களே...”

“இருக்காங்கதான்.. கூடவே உள்ளூரிலயும் இருக்காங்க.. உன்னைப் போல வெளியூரில என் பிறந்த வீடு இல்லையே.. தினமும் என்ன வந்து பார்த்துட்டுப் போங்கன்னு சொன்னா பார்த்துட்டுப் போகப் போறாங்க.. நான் அங்கே போனாத்தான இது இங்க வரும்.. இனிமே ரெண்டு குடும்பத்துக்கிடையே எந்தவிதப் போக்குவரத்தும் வேணாம்.. அப்பாம்மாவை தள்ளி நிக்கச் சொன்னா நின்னுருவாங்க.. ஆனா.. அது எதுக்குன்னு பாக்கறேன்.. நமக்குப் பகை இதுதானே.. எங்கம்மா அப்பாயில்லையே.. அதனால இனிமே எங்க வீட்டுப் பக்கம் அண்ணன் வரக்கூடாதுன்னு கட் அண்ட் ரைட்டா சொல்லிறப் போறேன்.. அதுக்கு அவங்க முகம் சுணங்கினா எனக்கு அவங்களே வேணாம் காவ்யா.. அதுக்கு ஒப்புக்கிட்டு அவங்க மட்டும் வந்து போகிறதா இருந்தா வந்து என்னைப் பார்த்துட்டுப் போகட்டும்.. இல்லைன்னா விலகி நிக்கட்டும்.. ஆனா எந்தக் காலத்திலயும் நான் அங்கே போக மாட்டேன்...”

காவ்யா தேன்மொழியைக் கட்டிக் கொண்டாள்.. இவ்வளவு குணவதியா இந்தப் பெண்..? என்று அர்ஜீன் ஆச்சரியப் பட்டுப் போனான்..

220

*எங்கிருந்தோ ஆசைகளை...*
*மனம் உரை ஆசைகொண்டேன்...*

**தி**ருமணத்திற்கு வந்திருந்த அம்புஜம் பாட்டி.. சரவணன் குடும்பத்தினர் வகையறா ஊருக்கு கிளம்பிக் கொண்டிருந்தார்கள்.. மருக்கொழுந்து தன் கணவன் குமாருடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தாள்.. காரணம் கேட்ட காவ்யாவிடம்...

“பாரு பாப்பா இந்த மனுசன... நம்ம ஐயாவுக்கு பொம்ளப்புள்ளதான் பொறக்கும்கிறேன்.. இவரு இல்ல.. ஆம்பளப் பையன்தான் பொறப்பான்கிறாரு..” என்று பஞ்சாயத்து வைத்தாள்...

காவ்யா திரும்பிப் பார்த்தாள்.. புதுமனைவியின் காதோரமாக ரகசியம் பேசிக் கொண்டிருந்தான் கண்ணதாசன்..

‘இன்னும் முதலிரவே முடியலை.. அதுக்குள்ளே பிறக்கப் போகிற குழந்தை என்ன குழந்தையாய் இருக்கும்ன்னு பந்தயம்கட்டி இவங்க சண்டை போட்டுக்கிறாங்க..’ அவளுக்கு சிரிப்பு வந்தது...

அவளையே விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தபடி அருகில் வந்த அர்ஜீன் அவள் காதோரமாக குனிந்தது...

“இந்தச் சிரிப்பை இத்தனை நாளாய் எங்கேடி ஒளிச்சு வைச்சிருந்தே...?” என்று கேட்டான்...

மருக்கொழுந்தும்.. குமாரும்.. பந்தயம் கட்டியதை மறந்து போனவர்களாக அவர்களை வேடிக்கை பார்க்க ஆரம்பிக்க..

“போதுமே..” என்று வெட்கச் சிகப்புடன் விலகி நின்றாள் காவ்யா..

“ஏண்டி..?” அர்ஜீனின் கண்களில் ஏமாற்றம் வந்தது.

“ஐயா சாமி.. புதுமாப்பிள்ளையும் புதுப் பொண்ணுமே அடக்கி வாசிக்கிறாங்க.. நீங்க என்னவோ நேத்துத்தான் கட்டிக்கிட்டதைப் போலத் துள்ளிக்கிட்டு வர்றீங்க.. பொறுமையா இருக்கப் பாருங்க..” அவள் முகம் முழுவதும் சிரிப்பாக உள்ளே ஓடிவிட்டாள்...

நெருங்கிய உறவினர்கள் தவிர மற்றவர்கள் அவரவர் ஊருக்கு.. அவரைக்காயும் சோறுக்கு.. என்று கிளம்பிப் போய்விட.. விழாநாள் முடிந்த ‘வெறிச்’சென்ற சூழல் அங்கே தென்பட்டது...

அன்றைய இரவில் என்றும் இல்லாத அளவில் அர்ஜீனிடம் நெருக்கத்தை காண்பித்தாள் காவ்யா.. அர்ஜீன் தேன்குடித்த வண்டானான்.. கள் குடித்த புலியானான்..

“ஏய்ய்.. என்னடி இந்த அளவுக்கு இரக்கம் காட்டற..?”

கிறங்கிப் போனவனின் கைகளுக்குள் இசைந்து கொடுத்தவள்..

“ஒரு குற்ற உணர்வுதான்..” என்றாள்...

“குற்ற உணர்வா..? யு மீன் கில்ட்டி கான்ஸியஸ்..?”

“ம்ம்ம்.. நீங்க தேன்மொழியைக் கட்டிக்க வேணாம்ன்னு சொன்னதுக்குப் பின்னாலே இந்தக் காரணம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியாம போயிருச்சு.. உங்களைத் தப்பா நினைச்சுட்டேன்.. அந்த குற்ற உணர்வுதான்..”

“இப்படி அள்ளிக் கொடுக்க வைக்கிறதாக்கும்..? பரவாயில்லை போ.. இப்படிக் கருணை காட்டறதா இருந்தா உன்னிடம் வம்பிழுத்துக்கிட்டே இருக்கலாம் போல இருக்கே...”

“செய்வீங்க.. செய்வீங்க...”

“ஏன் காவ்யா.. உன்னிடம் ஒன்று கேட்கனும்..”

“கேளுங்க...”

“ஒருவேளை.. இதுதான் விவரம்ன்னு நான் சொல்லியிருந்தா.. நீ தேன்மொழி வேண்டாம்ன்னு உன் அண்ணனிடம் சொல்லியிருப்பியா..?”

“ஊஹீம்.. அதுக்குப் பதிலா என் பிறந்த வீட்டை வேண்டாம்ன்னு சொல்லியிருப்பேன்.. அதுதானே நீங்க கொடுத்த செகண்ட் ஆப்சன்..?”

அர்ஜீன் ஆச்சரியத்துடன் மனைவியைப் பார்த்தான்.. அவள் பிறந்து வளர்ந்த ஊரின் மண்வாசனையில் அவள் மனம் லயித்திருப்பதை அவன் அறிவான்... அந்த பிறந்த ஊரையும்.. பிறந்த வீட்டையும் அவள் தள்ளி வைப்பாளா..?

“ஏய்ய்..”

“ஆமாங்க.. அண்ணனின் காதல் நிறைவேறனும்.. அதுமேல ஆசைப்படற பொண்ண அது கட்டிக்கனும்.. அதுக்காக நான் பிறந்த ஊரையும்.. பிறந்த வீட்டையும் பிரிஞ்சு நிற்கனும்னா அதுக்கும் நான் தயார்தான்...”

“காவ்யா...”

அவள் மீதான காதல் பெருகியதில்.. அவள் முகம் முழுவதும் முத்தங்களைப் பதித்தான் அர்ஜீன்..

‘என்ன மாதிரியான தங்கை இவள்..!’

காவ்யாவின் தன்மை மீதான அவனது ஆசை அதிகமானது..

“ஐ லவ் யு காவ்யா...”

“ஐ லவ் யு டு..”

அவளின் கிசுகிசுப்பான பதிலில் அவன் கிளர்ந்தான்.. அவளில் புதைத்தான்.. அவர்கள் பின்னிப் பிணைந்தார்கள்.. மறுநாள்... மறுவீட்டு விருந்துக்கு அழைக்க வந்த துரியோதனனின் முகத்தில் ஈயாடவில்லை.. அவரிடம் தேன்மொழி அனைத்தையும் சொல்லியிருந்தாள்.. அவரும் செல்வியும் அர்ஜீனைச் சந்தித்து கைகூப்பி மன்னிப்பு கேட்டார்கள்...

“உங்க மகன் பண்ணின தப்புக்கு நீங்க என்ன பண்ணுவீங்க... பட்.. இனியொருதரம் இதுபோல நடந்தா அவனை உயிரோட விடமாட்டேன்.. அதை மனதில் வைத்துக்கங்க..” என்று சொல்லிவிட்டான் அர்ஜீன்...

கண்ணதாசன் மறுவீட்டு விருந்தை நாசுக்காக மறுத்ததில் இருந்து அவன் காதுக்கும் விவரம் போயிருந்தது தெரியவந்தது.. எதையும் மறைக்காமல் முதலிரவிலேயே கணவனிடம் தன் அண்ணன் செய்த தவறை சொல்லிவிட்ட தேன்மொழியின் நேர்மைமீது அர்ஜீனுக்கு அபிமானம் ஏற்பட்டது..

“உன் அண்ணனின் செலக்சன்.. சோடை போகாத தாய் இருக்கு காவ்யா.. ஷி இஸ் கிரேட்...” என்று மனைவியிடம் மெச்சினான்..

“எனக்கு டிரெயினிங் போட்டிருக்காங்க மாமா.. இன்னைக்கே நாங்க கிளம்பியாகனும்.. அதனால மறுவீட்டு விருந்துக்குன்னு வரமுடியாது...”

“அதுக்கென்ன மாப்பிள்ள.. நாங்க சீரையும்.. மறுவீட்டு பலகாரத்தையும் இங்க கொண்டு வந்து இறக்கிடறோம்..” என்ற துரியோதனனின் முகத்தில் ஈயாடவில்லை...

‘டிரெயினிங்’ என்ற போர்வையில் தேநிலவு கொண்டாட சிங்கப்பூருக்கு கிளம்பிவிட்டான் கண்ணதாசன்.. தேன்மொழிக்கும் அவனுக்குமான அந்த தேனிலவு பயணத்தை அர்ஜீன்தான் ஏற்பாடு செய்து அவனது கல்யாணப் பரிசாக மைத்துனனுக்கு கொடுத்திருந்தான்...

“ஒரு மாதம் கண்ணதாசன்.. வீட்டை மறந்து.. வேலையை மறந்து.. என்ஜாய் பண்ணுங்க..” என்று சொல்லியிருந்தான்...

புதுமணத் தம்பதிகள் தேநிலவுக்கு கிளம்பினார்கள்.. அவர்களை அனுப்பி வைத்துவிட்டு அர்ஜீனும் மனைவியுடன் கிளம்பினான்..

“போயிட்டு வரேம்மா.. போயிட்டு வரேன்ப்பா...”

கையசைத்து விட்டு குழந்தையுடன் காரில் ஏறி கணவனின் பக்கத்தில் அமர்ந்த மகளைப் பெருமையுடன் பார்த்தபடி அன்னபூரணியும்.. சிவதாணுவும் விடை கொடுத்தார்கள்..

காவ்யாவின் மனதில் எல்லையற்ற நிம்மதி விரவியிருந்தது.. எங்கிருந்தோ ஆசைகள் வந்து அவள் மனதில் மையல் கொண்டதில் அவள் அல்லாடிய அனைத்துத் துயரங்களும் கானல் நீராய் மறைந்து போக.. அவள் ஆசையை கைப்பற்றிக் கொண்டவளாய் கணவனின் தோள் சாய்ந்து கண்மூடிக் கொண்டாள்..

கடந்து போன தெருவின் முனையிலிருந்த கோவிலில் திருவிழாக் கொண்டாட்டம் தெரிந்தது.. ஒலிபெருக்கியில் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது...

*“மதுரை குழுங்க.. குழுங்க...*
*நீ நையாண்டி பாட்டுப் படி..”*

பாடல் தேய்ந்து காற்றோடு மறைய கார் சென்னையை நோக்கி விரைந்தது...

- முற்றும் -


லட்சுமி பாலாஜி பதிப்பகம்